# அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

## 22 வது மகாநாடு

## 1967

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

University of Jaffna
324.2
AKI
249865(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ARCHIVES

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

324.9548
AKI
ARCHIVES
249865
249865
324.2
AKI
University of Jaffna
249865
Library
9.9548
AKI.

## 22 வது ஆண்டு மகாநாட்டு மலர்

நாவலர் அரங்கு
பருத்தித்துறை
25, 26, 27 ஆவணி, 1967.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வெளியீட்டுக் குழுவினர்

✱

திருவாளர் சு. இ. கனகநாயகம்
,, தா. சங்கரப்பிள்ளை
,, நாவேந்தன்
,, இ. நாகராஜன்
,, குமார் பொன்னம்பலம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமைக் காரியாலயம்
51, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்

கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம், 1707-67.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் :

தா. சங்கரப்பிள்ளை

நூலகம்
பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்புச் சபைத் தலைவர்



**ந. நடராசா**

பருத்தித்துறை நகரசபைத் தலைவர்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் இருபத்திரண்டாம் ஆண்டு நிறைவு விழா எமது நகரத்திலே கோலாகலமாகக் கொண்டாடப்படுவது பருத்தித்துறைத் தொகுதி மக்களுக்குப் பேருவகையளிக்கிறது.

எனது நீண்டகால அரசியல் வாழ்விலே கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக '' தமிழர் உரிமைகளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட அரசியற் கட்சியாகிய '' தமிழ்க் காங்கிரஸ் கொள்கைகளிலே தளராது நின்று, இன்று எமது நகரத்திலே இவ்விழாவைக் கொண்டாடி வெற்றி காண்பது பெரும் மகிழ்ச்சியதாகும்.

இவ்விழாவிலே கலந்து கொள்ளும் கட்சிப் பிரமுகர்களுக்கும், கௌரவ அங்கத்தினர்க்கும், அனுதாபிகளுக்கும், ஏனைய அன்பர்களுக்கும் கட்சியின் சார்பிலும் பருத்தித்துறை நகர சார்பிலும் எனது உளங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

பருத்தித்துறை,
25-8-67.

ந. நடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம் மகாநாட்டு மலர்

அகம், ஆகம், இகம், ஈசன் என்னும் இவை உறவுற்று இனிதி யைந்தே மனித வாழ்வு உலகத்திடையே ஊக்கமுடன் ஓங்குகிறது. வாழ்வு எவ்வாறு செவ்வனே குறைபாடேதுமின்றி ஆக்கப்படவேண்டு மென்பதை உலகத்தோர் சிந்திப்பர். இதுகாறும் உலகில் வாழ்ந்த மாந்த ரின் சீரிய சிந்தனையினதும் ஆக்கச் செயல்களினதும் பயனே இப்புவியில் நாம் காணும் வனப்பும் சிறப்புமாகும்.

ஒரு தனி மனிதன் தனது வாழ்க்கையை நடத்துவதற்கு என்னென்ன தேவையெனக் கருதுகிறன். இடம், பொருள், ஏவல் என்பனவற்றையும் இவற்றை இயக்கும் ஈசன் அருளையும் பெறவல்லவா முயற்சி செய்கிறன். அது போலவே ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கும் வளம் பல பெருக்குவதற்கும் பரந்த அறிவுடைய தேசாபிமானி ஆசைப் படுகிறன். இதுவே உண்மையான தேசத் தொண்டின் அடிப்படை நோக்க மாக அமையவேண்டும். இவ்வியல்புகளையுடைய தேசாபிமானியின் திருத் தொண்டினுல் அன்றே ஒரு நாடு பலவகையிலும் முன்னேறி முழுமையான வனப்பையும் செழிப்பையும் பெறமுடியும்.

அரசியல் துறையில் உழைக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கி ரஸின் வருடாந்த மகாநாட்டின்போது மலர் ஒன்றை வெளியிடுவது ஒரு வழக்கமாக வரவுங்கூடும். அவ்வாறு வருடாவருடம் வெளியிடப்படும் மலர் எவ்வாறு அமையவேண்டுமெனச் சிந்தனை செய்தோம். எவர்க்கும் பாரபட்ச மின்றியும் எவ்வகையான நாட்டமின்றியும் நன்மை பயக்குங் கருத்துக்கள் எங்கிருந்து வந்தாலும் அதனை ஏற்கும் பண்புடைய பெரும்பாலான பொது மக்களுக்கு எமது கருத்துக்கள் பயன்படுவதையே நோக்கமாகக் கொண் டுள்ளோம். அரசியற் கட்சி ஈடுபாடில்லாதவர்களுக்கும் மற்றும் எத்திறத் தார்க்கும் எங்கிருந்து வரினும் பொருள் தெரிந்து பேணும் இயல்பினர்க் கும் இம்மலர் தரும் கருத்துக்கள் பயனுள்ளனவாக அமைய வேண்டும் என்றும் கருதினேம்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு இடம், பொருள். ஏவல் ஆகிய மூன்றை யும் பெருக்கவேண்டும். வசிக்கத் தகாத காடுகளை வெட்டி நீர் நிலையங்களைக் கட்டி இடத்தைப் பெருக்கிக்கொள்ளலாம். வேலை வாய்ப்புக்களை உண்டாக்கி வேலையில்லாதவர்க்கு வேலையையும் வேலைக்குத் தகுந்த தொழில் நுட்பக் கல்வியை மாணவர்க்குதவி, ஏவலெனக் குறிக்கப்படும் தொழிலாளரையும், அவர் தம் ஓயாத முயற்சியால் விளையும் பொருளையும் பெருக்கிக்கொள்ளலாம். இம்மலரில் வெளியிடப்படும் கட்டுரைகள் வாயிலாக நமக்குத் தேவை யான பொருளாதார விருத்தியையும் கல்வியின் சீர்திருத்தங்களையும் கைத்தொழில், கமத்தொழில், கடற்றொழில் வளர்ச்சிகளையும் பற்றி கல்வித் துறையில் நுண்ணறிவாளரின் கருத்துக்களையும் புத்திமதிகளையும் பெற்றுத் தந்திருக்கின்றேம், இதனுல் மக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்னும் நம்பிக்கையுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு சென்றாலும் உத்தியோகமில்லையென்னும் கூச்சல் காதினை அடைக்கும். உத்தியோகமென்றால் என்னவென்று எமது மக்கள் தம்மனத்தில் சித்திரிக்கின்றார்களென்றால் அரசாங்கத்தின்கீழ் அல்லது தனியார்துறை வியாபார தாபனங்களின் கீழ் வெள்ளையுடை அணிந்து உடல் முயற்சி எதுவுமின்றி களைக்காமல் வியர்க்காமல் நாள்களைப்போக்கி முப்பதாம் நாள் ஒருசில ரூபாய்களைச் சம்பளமாகப் பெறுவதையே. இம்மனப்பான்மையை எம்மிடையே பரப்பி வந்தது அன்னியராட்சியே. அன்னிய ஆட்சிக் காலத்தில் எமது இடத்தை எம் தேச ஏவலாளரைக்கொண்டு தமது நன்மைகளுக்குப் பொருட்களை விருத்தி செய்யும்போது எமக்குச் சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன. உத்தியோகமென்ற சமஸ்கிருத பதத்தின் கருத்து முயற்சி; நாம் பயின்றுவந்த கல்வி இன்னொருவரின் கீழ் பணியாற்றும் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தது. மற்றவர்க்கு ஒரு பணியாளனாக அல்லது எழுது வினைஞனாவதற்கு இதுகாறும் எமது கல்வி பெரும்பான்மையாக உதவியது. அதனாற்றான் உத்தியோகமில்லையென்ற கூச்சல் எழுகின்றது.

தம்முயற்சியினால் தாம் நயம் பெறுவதற்கு வழிகாண வேண்டுமென்னும் எண்ணம் நம்மக்களிடையே இல்லை. தமது ஆற்றலையும் தமது அறிவையும் கொண்டு தாமாக ஒரு முயற்சியைக் கைக்கொள்ளுவதுமில்லை. இந்த நோக்கத்துடன் என்ன தொழில் செய்யலாமென மக்கள் ஐயம் அடையக்கூடும்.

பஞ்ச பூதங்களில் முக்கியமாக எமது உணர்ச்சிகளுக்குத் தெற்றெனத் தோன்றுவனவும் உற்பத்திக்கு மூலப்பொருள்களாக உதவுவனவும் நிலமும் நீரும் இவ்விரண்டினும் நாம் செய்யக்கூடிய தொழில்கள் கமத்தொழிலும், கடற்றொழிலும், இவைகளுக்குத் தேவையான உபகரணங்களை உற்பத்தியாக்கும் கைத்தொழிலும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உதவும் கைத்தொழில்களுமேயாகும். தனித்தனி ஆராய்ந்து பார்த்தால், கைத்தொழில்கள் எண்ணிலடங்கா. இம்மலரில் யாம் வெளியிடும் கட்டுரைகள் இந்நோக்கத்தை ஓரளவுக்குத் திருப்தி செய்யுமென நம்புகிறோம்.

ஒரு அரசியற் கட்சி மகாநாட்டின் போது வெளியிடப்படும் இம்மலர் ஓரளவிற்கு அரசியல் விஷயங்களைக் கொண்டதாகாதெனின் குறைபாடுடையதெனச் சிலர் கொள்வாரெனக் கருதி சில அரசியற் கருத்துக்களைமட்டும் இங்கு வெளியிட்டுள்ளோம். அங்ஙனமாயினும் எம்மாலியன்றவரை மாற்றுக்கருத்துடையார் மாட்டும் எமது அரசியற் கருத்துக்களை அரசியல் அறநெறிவழிநின்றே எடுத்துரைத்துள்ளோம்.

வரலாற்றுத் தொடர்பு நிகழ்ச்சிகளையும் ஆராய்ந்து அறிந்து மெய்யெனக் கண்டவைகளையே இங்கு அனுமதித்துள்ளோம். எமது கட்சியின் சீரிய கொள்கைகளும் இலட்சியங்களும் காலகாலமாக நிலைத்துநின்று தமிழ் மக்கள் அனைவருக்கும் அவர் தம் வருங்கால சந்ததியினருக்கும் பயன்படுவகையில் அமையவேண்டுமென ஆசையுற்றோம்.

மகாநாடுகளும் அவற்றோடிணைந்த நிகழ்ச்சிகளனைத்தும் காலகதியில் மக்கள் நினைவை விட்டகலவுங்கூடும். அங்ஙனமாகா வண்ணம் மக்களிதயங்களில் என்றும் அவை வாடாது மலர்ந்து நிற்கும் வகையில் அரிய கருத்துக்குவியல்களைப் பொதிந்து வைத்துள்ள களஞ்சியமொன்று எம்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையே மிளிர வேண்டுமென்றும் அவாவுற்றோம். இவ்விழைவுகளின் பெறு பேறே இம்மலர்.

மரபுவழிநின்று நமது முன்னோரின் சிறந்த பண்புகளைப் போற்றுவதே எமது சீரிய கடனுகும். அங்ஙனமாய மரபாக்கத்தை இம்மலர் வாயிலாக நிறைவேற்ற முற்படுகிறோம்.

எமது குறிக்கோளை மேற்கொண்டு பல பெரியார்கள் காலவிரயத்தைக் கவனியாது, இம்மலராக்கத்துக்குப் பல்லாற்றானும் பேருதவி புரிந்துள்ளனர். அவர்களனைவர்க்கும் என்றென்றும் மறவா நன்றி. இன்னும் முகமலர்ச்சியுடன் இம்மலருக்கு விளம்பரங்களை உதவிய வர்த்தகப் பிரமுகர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றி.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் இம்மலரைத் தமது சொந்தக் காரியமாகக் கருதி, தமக்குரிய பலன்களையுங் கருதாது சிறந்த முறையில் அச்சிட்டுதவிய கலைவாணி அச்சகத்தாருக்கும் எமது நன்றி.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 22 வது ஆண்டு மகாநாட்டின் ஞாபகமாக இம்மலரை ஈழமாதாவின் மக்களுக்கு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம்.

202, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,
25-8-67.

தா. சங்கரப்பிள்ளை,
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | | .... | 1 |
| 1. | தமிழ்த்தாய் | .... | 2 |
| 2. | தமிழ் வாழ்க! | .... | 3 |
| 3. | அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கீதம் | .... | 5 |
| 4. | எம்மொழி | .... | 9 |
| 5. | தலைமையின் மாட்சி | .... | 11 |
| 6. | அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | .... | 18 |
| 7. | கமத்தொழில் மறுமலர்ச்சி | .... | 21 |
| 8. | மலைநாட்டுத் தமிழரும் குடியுரிமையும் | .... | 25 |
| 9. | வழி நடைச்சிந்து | .... | 27 |
| 10. | வேலையின்மையைப் போக்க | .... | 29 |
| 11. | எமது தொழிற்சங்கங்கள் | | |
| 12. | தேவேந்திர முனையும் பருத்தித்துறையும் சேர்ந்ததே ஈழம் | .... | 32 |
| | | .... | 33 |
| 13. | எதிர்காலக் கல்வி | .... | 38 |
| 14. | வாழ்வு மலர வைப்பமே | .... | 39 |
| 15. | மாவட்ட சபைகள் | .... | 49 |
| 16. | கடற்றொழில் அபிவிருத்தி | .... | 53 |
| 17. | வேலைவாய்ப்பின்மை பற்றிய சில கருத்துக்கள் | .... | |
| 18. | இராமநாதன் இந்துப்பல்கலைக் கழகமும் இந்துப்பல்கலைக் கழகமும் — I | .... | 60 |
| | (ஸ்ரீமான் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மரண சாதனம்) | ... | 64 |
| | இராமநாதன் பல்கலைக் கழகமும் இந்துப் பல்கலைக்கழகமும் — II | .... | 65 |
| 19. | ஐ. நா. வில் திரு. ஜீ. ஜீ. | .... | 68 |
| 20. | தமிழ்ப் பிரதேசத்தில் தொழில் முன்னேற்றமும் அதற்கான வழிவகைகளும் | .... | 70 |
| 21. | ஒன்றுதானில்லை | .... | 76 |
| 22. | தமிழர்கள்! | | 78 |
| 23. | பண்டிற் மாளவியா கூற்று | | |
| 24. | எங்கள் தலைவர் | | |
| 25. | உடுப்பிட்டி சிவா | | |
| 26. | கர்மவீரர் சிவா | | |
| 27. | அகில இலங்கைத் காங்கிரஸ் கொழும்புக்கிளை, ,, திருகோணமலைக்கிளை, ,, உடுவில்கிளை. | | |
| 28. | நன்றி | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் தலைவர்




ஜீ. ஜீ. பொன்னம்பலம்
(Q. C. பா. உ.)

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மு. சிவசிதம்பரம்
(பா. உ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிப முன்னணித் தலைவர்



தா. சிவசிதம்பரம் (பா. உ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெரும் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறன்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!

— பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ்க!

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம்வீசி
இசை கொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

— மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைத்
# தமிழ்க் காங்கிரஸ் கீதம்

(இயற்றியவர்: வழக்கறிஞர் நம. சிவப்பிரகாசம் அவர்கள்)

அகிலமும் புகழுயர் தேசமெம் இலங்கை
அன்னையே வாழ்க பல்லூழி
மகிதல மிகமகிழ் தமிழின மங்கை
மரபுடன் வாழ்க பல்லூழி

— வாழ்க, வாழ்க, வாழ்க!

மொழிஎம துயிரெனப் போற்றும் — இன
உரிமைகள் உறவே தொண்டாற்றும் — இலங்கைத்
தமிழ்க்காங் கிரஸ்தனி வாழ்க

— வாழ்க, வாழ்க, வாழ்க!

பரம்பரை மரபினிற் பைந்தமிழ் ஓங்க
பண்புடன் பணிபுரி கழகம்
அரசுயர் வரிசையும் உரிமையும் தாங்க!
அஞ்சலென் றுறுதிசெய் கழகம்

— வாழ்க, வாழ்க, வாழ்க!

தமிழினத் தனிப்பெருந் தலைவன் — பெரும்
அரசியல் அறிவினிற் புலவன் — நிகரில்
ஜீ. ஜீ. பொன்னம் பலவன்

— வாழ்க, வாழ்க, வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் எங்கணும் தமிழினம் வாழ
எம்மொழி உரிமைஅங் காக
நாளிலும் பொழுதிலும் உழைக்குமெம் கழகம்
நலம்பெற நிலவியே வாழ்க
வாழ்க, வாழ்க, வாழ்க!

ஆண்டுகள் இருபதின் மேலாய் — பார்
ஆளும்எம் மன்றத்தில் மேலாய் — புகழ்
அணிபெற விளங்குமிக் கழகம்
வாழ்க, வாழ்க, வாழ்க!

நானிற மணிக்கொடி நாட்டுவம் கூடி
நறுந்தமிழ் தென்றலிற் பாடி
வானவர் மலருடன் ஆசிகள் கூற
மங்கல மாய்க்கொடி ஏற

காங்கிரஸ் ஓங்கிடும் காட்சி — வெற்றி
காண்பதற் காகுமத் தாட்சி — இனி
காத்திடு வோமிம் மாட்சி
— அகிலமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மொழி

— இ. நாகராஜன் —

கடலைக் குடித்த குறுமுனியின்
கருத்திற் கலந்தே காசினியில்
வடவேங் கடம்முதற் குமரிவரை
மாண்பாய் வாழ்ந்த தெம்மொழியே.

முன்னாள் தனித்தே முகிழ்ந்துமுற்றி
மூவாப் புகழோ டுயர்ந்தோங்கிப்
பின்னாள் பலமா பிறமொழிகள்
பிறக்க அருள்செய் பெருமொழியே.

இனிமை தூய்மை இலங்கிடவும்
என்றும் பண்பு துலங்கிடவும்
தனிமை யாகித் தலைநிமிர்ந்தே
தழைத்தே ஓங்கிய தெம்மொழியே.

தலைஇடை கடைமா சங்கத்தில்
சான்றோர் ஆய்ந்து சால்புபெற
நிலையாய் இன்னும் நின்றுலவும்
நேரார் நெறிகொள் இனியமொழி.

சங்கம் இருந்தர சாண்டுயர்ந்து
சான்றோர் கடைந்தே அமுதாக்க
எங்கும் இனிமை இலங்கிடச்சீர்
ஏற்றங் கண்ட தெம்மொழியே.

இயலிசை நாடகம் இணைந்தொன்றி
இன்பக் கலைபல உருவாக்கி
உயரிய தாக உலகிடையே
ஓங்கி ஒளிரும் எம்மொழியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் அருளாற் கனிந்தோடும்
காலக் கடலின் எதிர்நின்றும்
படியில் இளமைப் பண்புடனே
பற்றிப் படரும் பண்டைமொழி.

பூவின் பொலிவும் பொன்சுடரின்
புதுமை ஒலியும் பொங்கிடநற்
பாவிற் பண்ணில் படர்ந்தெழிலின்
பக்குவம் கண்ட பண்டைமொழி.

கன்னிக் கவினைக் கொண்டெந்தக்
கால நிலைக்கும் பொருந்தியெழில்
துன்னிச் சுரர்போல் துஞ்சாது
துலங்கும் எங்கள் தூயமொழி.

பொதிகைத் தென்றற் புகுந்தாடி
பொங்கு காவிரிப் புனலாடி
விதியின் புயலில் விளையாடி
விளங்கும் விந்தை மொழியாகும்.

தேரை முல்லைக் கொடிவளரச்
சிந்தை உவந்தே வழங்குமுயர்
பாரி பண்பால் பயன்பெற்ற
பாவலர் வளர்த்த பண்புமொழி.

தலையை அரிந்தே தம்பிகையிற்
தந்தே புலவர் தரித்திரத்தின்
நிலையை நீக்க நெஞ்சங்கொள்
நேரார் குமணன் காத்தமொழி.

சேர சோழ பாண்டியரின்
சிந்தை கொண்டு நிறுவிநிதம்
நேரும் நிலையும் பெற்றென்றும்
நெறியைக் காத்த அறிவுமொழி.

நால்வகைப் பொருளும் நனிதேங்க
நானில மக்கள் உய்திடமுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலை அருளிய வள்ளுவனால்
பாரிய புகழ்கொள் பசுமைமொழி.

மூவர் தந்த தேவாரம்
முருகார் திருவா சகத்தோடு
நாவில் இனிக்கும் திருப்புகழும்
நலமாய்த் தந்த நல்லமொழி.

நீரின் எதிரே நீந்திநின்றும்
நெருப்பில் எரியா நிலைபெற்றும்
சீரிற் தோய்ந்து செழிப்புற்றும்
தெளிவோ டிலங்கும் தெய்வமொழி.

வள்ளுவன் கம்பன் இளங்கோவின்
மாண்பால் மலர்ந்து மக்களுயர்
உள்ளக் கோவில் தனையென்றும்
உறையுள் எனவே கொண்டமொழி.

அன்புக் குரிய பொருளினையே
அடக்கி ஆற்றல் ஆக்கமுடன்
இன்புற் றெவரும் உய்வுபெற
ஏற்ற நூல்கள் இணைந்தமொழி.

முன்னைத் தெய்வ முழுக்கலைகள்
முழுமை பெற்றே முழுதுலகும்
துன்னிப் பெருமை துய்த்திடவே
துணையே செய்த தெம்மொழியே.

காலம் பலவைக் கடந்தின்றும்
கன்னிக் கவினே மாறாது
கோலங் கொண்டே குவலயத்தில்
குறியோ டொளிரும் நெறிமொழியே.

நாவலர் தந்த வசனநடை
நாளும் தழுவிக் காலமுடன்
மேவிப் புதுமை விந்தைகளை
விளைக்கும் மேன்மை யுடையமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி என்ற புத்துலகப்
பாவா ணன்றன் பாதையிலே
வீர நடைசெய் திளங்கவிஞர்
வெற்றி கண்ட தெம்மொழியே.

மரபின் மாண்மை மதித்துலக
வழியின் சிறப்பை மருவிநிதம்
விரையும் கால வேகமுடன்
விந்தை செய்யும் வெற்றிமொழி.

அமிழ்தம் எனும்பேர் அமைந்தமொழி
அன்பும் அறனும் ஆக்குமொழி
இமிழ்திரை சூழும் இகமீதே
என்றும் வெற்றி கண்டமொழி.

அன்னை மொழியை அகத்தினிலே
அமர்த்தி ஆன்ரோர் வழிநின்றே
இன்னிலம் மீதே என்றென்றும்
இறைஞ்சி ஏற்றம் காண்போம்நாம்.

✱ ✱ ✱ ✱

மொழியை நேசிக்கிறவன்
இனத்தை நேசிக்கிருன்:
இனத்தை நேசிப்பவனே
நாட்டை நேசிப்பவனுவான்.
நாட்டை நேசித்தால்
நாமெல்லோரும் ஒன்றென்ற
உணர்ச்சி உதயமாகும். அப்போது
நாம் - அவர் - என்ற பாகுபாடு
நிலைக்கவே நிலைக்காது -

—ஓர் அறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமையின் மாட்சி

தா. சங்கரப்பிள்ளை

உலகத்திற் சிறந்த சமயங்களின் வரலாற்றிலும் புராண இதிகாச வரலாறுகளிலும் அவ்வக் காலத்து மக்களின் மனதில் உதித்து மக்களால் பெரிதும் போற்றப்படும் அரிய கோட்பாடுகளையும் நோக்கங்களையும் விருப்பங்களையும் மக்கள் அரிதென மதிக்கும் அறச் செயல்களையும் நிறைவேற்றுதற்கும் உரிய தேவர்களும் வீரர்களும் மனிதர்களும் தோற்றியிருக்கிறார்கள். மக்கள் மனதில் ஊன்றித் தொனிக்கும் ஆவலும் விருப்பமும் அவ்வக் காலத்துப் பேருருப் பெற்று மனித வடிவினதாய்த் தோன்றியிருக்கிறது.

சரித்திரத்திற் சமீபமான காலத்தை உற்று நோக்கின் சமயக் குறைகளை நீக்க நாயன்மார்களும் அடியார்களும் தோற்றினர். சமூகக்குறைகளை நீக்க வில்லியம் வில்ப போஸ், ஆபிரகாம்லிங்கன், மகாத்மா காந்தி போன்றவர்களும் எம்மத்தியிற் தோற்றியிருக்கின்றனர். எந்நாட்டிலும் மக்களின் மனதாற் சிருஷ்டிக்கப்படுமளவுக்குரிய மனிதனும் இம்மண்ணுலகிற் பிறந்திருக்கிறான்.

அவ்வித நிவாரண உருவமே தலைமைப் பீடத்தின் மேலெழுகின்றது. ஒரு குறிக்கோளையே தலைமையாகக் கொள்ளுவருமலர். தலைமை வகிப்பது மனிதனன்று. கொள்கையும் கோட்பாடுமே தலைசிறந்த தலைமைக் குரியன. அவ்வித மாட்சிமை அல்லது மாண்புடைமையைத் தான் என்றும் மக்கள் போற்றிப் புகழுவர்.

ஒரு கொள்கையையும் கோட்பாட்டையும் நோக்கத்தையும் சிரமேற் கொண்டு தொண்டாற்றும் ஒருவனே தலைவன். அக்கொள்கையினின்றும் பிறழ்ச்சியடைந்தோன் தலைமையை இழந்தவனாவான்,

இலங்கையின் அரசியலை உற்றுநோக்கினால் ஆங்கில ஆட்சியிருக்குங் காலத்தும் இலங்கை சுதந்திர நாடான பின்பும் சில கொள்கைகளைக் கடைப்பிடித்த கட்சிகள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் முக்கியத்துவம் பெற்றவை சமதர்மத்தை ஆதரிக்கும் லங்கா சமசமாசக் கட்சி, கொம்யூனிஸ் கட்சி, இன அடிப்படையில் உரிமைகள் கோரும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், சாதி ஒற்றுமை கொண்டு அரசு முறையை நாடும் ஐக்கியதேசியக் கட்சி, வகுப்புவாத அடிப்படையில் கூட்டாட்சி கோரும் இலங்கைத் தமிழரசுக்கட்சி, சிங்கள ஆதிக்கத்தைச் சிரமேற்கொண்ட சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவைகளே. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய இரண்டையும் ஒருவகையில் சேர்த்துக் கொள்ளலாம். இப்போது இலங்கையில் மூச்செடுத்துக் கொண்டுநிற்கும் சிறீ லங்கா சுதந்திரக்கட்சி, சிலவாண்டுகளுக்கு முன் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து போன ஒரு சிதறுசன்னமாகும். இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து போன ஒரு சிறு குழு வாகும்.

எமக்கொரு தலைவனில்லையா? என்று மக்கள் வருந்தும் நேரத்தில் மக்களின் மனதுக்கேற்பத் தெரிவு செய்யப்படும் ஒருவனே தலைமையிற் சிறந்த தலைவன்.

இராச்சியத்துக்கு முழு உரிமையும் பொறுப்புமுடைய ஓர் அரசனை—அவன் மந்திரியோ அல்லது தளபதியோ—அரசனைச் சிறையிலடைத்தமையையும், இராச்சியத்தைக் கைப்பற்றியமையையும் சரித்திர வாயிலாகக் கேட்டிருக்கின்றோம். அப்படியான ஒரு சூழ்நிலையில் மக்கள் திரண்டு போலியான மந்திரியையும் தளபதியையும் தாக்கி விடுதலை செய்வதையும் கேட்டிருக்கின்றோம்.

இதே போன்று தமிழ்க் காங்கிரஸிலிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் வேறு காரணங்களுக்காகத் தோற்றுவித்த அபிப்பிராய பேதங்களை முன் வைத்து, சிலர் பிரிந்து அபாண்டமான பிரசாரத்துக்குத் தலைமை தாங்கினர். பிரசாரத்தின் பெறுமதி உண்மையுடையதாயின்; அது நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறக்கூடும். அது உண்மையற்றதாயின் தலைமையும் பொய்த்துவிடும்.

தமிழரசுக் கட்சியினரென்றும் சமஷ்டிக் கட்சியினரென்றும் கூறப்பட்டு வந்தவர்கள் தோன்றிய காலந்தொட்டு தமிழ் மக்கள்முன் கூறிய கொள்கைகளும் திட்டங்களும் கோரிக்கைகளும் என்னவாயின? தமிழரசு எங்கே? தமிழ் எங்கே? சமஷ்டி எங்கே? இந்திய வம்சாவளியினர் பிரசா உரிமை எங்கே? குடியேற்ற எதிர்ப்பு எங்கே? சிந்தித்துப் பார்த்தால் இவையெல்லாம் உண்மையான கட்சிக் கோட்பாடுகளாக அமைந்திருந்தனவோ என்று கலங்க வேண்டியதாயிற்று. கொள்கைகளை எப்போது ஒருவன் கைவிடுகிருனே கொள்கைக்குரிய தலைமைப்பீடத்தையும் இழந்து விடுகிருன். "தலைமையை நாடும் எம் மனிதனும் அவ்விதம் தனது குறிக்கோள் மாறிவிட்டது என்பதையுணர்ந்து பிழையாய்ப் போயினவற்றை ஏற்றல் வேண்டும்" அதுவே உண்மைத் தலைவனின் பண்பும் உயரிய நடையுமாகும்.

இந்திய வம்சாவளியினரின் பிரசா உரிமையை உண்டு பண்ண வந்த ஒரு சட்டத்தை ஆதரித்தமையை விரோதமானதெனக் கதறியவர்கள்-பிரசா உரிமையையும் பறித்து பிரசா உரிமைக்குத் தகுதியானவராகிலுஞ் சரி அல்லவராகிலுஞ்சரி நாட்டைவிட்டு வெளியேற்றப்பட வேண்டுமென்ற சட்டத்தை ஆதரித்ததைக் காணும்போது கொள்கையாவது எது? திட்டமாவது எது என்றல்லவா முடிவு செய்யத் தோன்றுகிறது. எதை வேண்டுமாஞலுங் கூறிக் கொண்டு மக்களைத் தங்கள் பக்கம் திரட்டுவதில் அல்லவா முயற்சி செய்கிருர்கள்.

இவ்வண்ணம் வாய்மொழிச் சேவை செய்பவர்கள் மக்கள் முன்னின்று கூச்சலிட்டால் செவி சாய்ப்பாரா? செவி சாய்ப்பினும் எதிர்க்கவல்லவா எண்ணுவார்கள். இதுவரை மக்கள் உணரவில்லை என்ற கனவு உலகத்தில் அல்லவா இருக்கிருர்கள்.

கோட்பாட்டைச் சுழற்றி எறிந்த பின்பும் பிடிவாதமாக மக்கள் முன் நிற்கும் அவரைத்தொகையினுற் பெருமைகொண்ட அகங்காரமே பேருருவெடுத்த துரியோதனனுதிபர்களுக்கே ஒப்பிடலாம். அதான்று குறிச்சி புக்கமான் போலவும் குன்று முட்டிய குருவி போலவும் இடர்ப்படுவரென்பது திண்ணம்.

சமஷ்டி ஆட்சியே சிறந்தது என்றும் அதுவே தமது இலட்சியமென்றும் கூறியவர்களும் இன்னும் இதர கோரிக்கைகளே தமது குறிக்கோள் என்று கூறியவர்களும் பிரதமர் பண்டாரநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் ஒரு அற்ப சந்தர்ப்பத்திற்காக தமது கொள்கைகளை காற்றில் பறக்க விடவில்லையா? என்ன தலைமை! என்ன புத்தி! என்ன சித்தம்! ஏதாவது ஒன்றையேனும் பெறுவதற்காகத் தானும் தமது கொள்கையைக் கைவிட்டாலும் ஓரளவிற்கு பரிகார மென்றேனுங் கூறலாம்.

தலைமை என்னும் பொருளின் ஆசையினுல் சிலவேளை இதுவே எங்கள் கொள்கை என்று புதிதான ஒன்றைக் கூறவும் மனம் ஏவும். இப்படியுங் கூறிக் கொண்டு ஆணவ சங்காரத்தை நிகழ்த்துவதற்காகத் தொடர்ந்த வேலாயுதத்துக்கு ஒழித்தமை போன்ற சூரனின் பல ரூபங்களையும் கொள்ளலாம்.

ஆதலால் தமிழ் மக்களே விழித்திருந்து பாருங்கள். உற்றுணர்ந்து பாருங்கள். திருவள்ளுவரின் "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"-என்னுங் குறளைப் பற்றுக. பற்றுக பற்ருற்ருன் பற்றினை என்பதையும் கடைப்பிடியுங்கள். தம்வசதிக்காக தம் கூற்றை மாற்றுவோரை இகழுங்கள் வேண்டாப்பொருளை வீசுமிடத்துக்குத் தள்ளுங்கள். கொள்ளவேண்டிய இலட்சியங்களையே தலைமையாகக் கொள்ளுங்கள். கூறியதைத் தவருமல் கூறும் துணிவும் உண்மையுமே தலைமையின் மாண்பு என்பதனை மனதில் நிறுத்துங்கள்.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நிர்வாக சபையினரும் வரவேற்புச் சபையினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து ஆட்சி அதிகாரம் இலங்கை மக்களுக்குக் கைமாறும் பிரச்சினை முக்கியத்துவம் பெற்றிருந்த வேளையில்—அவ்வாறு ஆட்சி அதிகாரம் மாறும்போது தமிழ் பேசும் மக்களின் கடந்த காலத்து வரலாற்றுப் பெருமைக்கும் நிகழ்காலம் வகிக்கும் முக்கியத்துவத்துக்கும் ஏற்ற ஓர் அந்தஸ்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இலங்கையின் புதிய அரசியல் அமைப்பில் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், அவற்றைப் பெறுவதற்கும் வேண்டிய அரசியல் உணர்ச்சியை அவர்களிடையே பெருமிதப்படுத்திய தாபனம் தமிழ்க்காங்கிரஸ் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். தமிழ்ப் பேசும் மக்களது அரசியற் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் அவர்களது அரசியற் கோரிக்கைகளை வற்புறுத்துவதற்கும் இருந்த ஒரே ஒரு பொதுப் பீடம் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்தான் என்பதும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தமிழ் பேசும் மக்களது அரசியற் கோரிக்கைகளை சோல்பரிக் குழுவின்முன் சமர்ப்பிப்பதற்கு இத்தாபனமே முன் சென்றது. தமிழ்பேசும் மக்களது உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று அ. இ. த. காங்கிரஸ் வாதாடியமை இலங்கைத் தமிழ்பேசும் மக்களது அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் அத்தியாயமாகவிருக்கும். தமிழ்க்காங்கிரஸ் சோல்பரிக்குழு முன் அளித்த சாட்சியம் எத்துணை சிறந்ததென்பதற்கு அக்குழுவின் உறுப்பினர்கள் இங்கும் இங்கிலாந்திலும் தமது அறிக்கைகளில் கூறிய பாராட்டுரைகளே சான்றாகும். தமிழ் மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் என்பதை விசாரணைக் குழுவினர் ஏற்றுக்கொண்டனர். ஆனால், அத்தகைய பாதுகாப்பை அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஏற்படுத்தினால் போதுமானதென்று சிபார்சு செய்து பேசித் திருப்தியடைந்தனர். அதன் விளைவாக - அத்தகைய பாதுகாப்பொன்று இன்றைய அரசியல் சட்டத்தில் 29-வது பிரிவில் விளங்குவதைக் காணலாம். எமது வரலாற்றின் மிக இருள் சூழ்ந்த கட்டத்தில் பெரும்பான்மை இனத்தவரில் ஒருபகுதியினரது பிற்போக்கு இனவெறியோடு கூடியதுமான எண்ணங்களுக்கு அரசியல் சட்டத்தின் இருந்த 29வது பிரிவு ஓரளவு முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது.

ஆட்சி மாறிய காலத்திலிருந்து காங்கிரஸ் அங்கத்தவர் சிலரிடையில் உதித்த பிரிவினை மனப்பான்மையினாலும் அபிப்பிராய பேதங்களினாலும் புதிய வோர் கட்சி உருவாகியது. இதுதான் சமட்டிக்கட்சி.

கடந்த பத்து ஆண்டுகளாக சமட்டிக் கட்சி விரும்பிய அளவுக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவப் பலத்தைப் பொதுத்தேர்தல்களில் அடுத்தடுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்த போதிலும், அக்காலத்தில் தமிழ்பேசும் மக்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டது போலவும், மானபங்கம் செய்யப்பட்டது போலவும் அடக்கியாளப்பட்டது போலவும் இதற்குமுன் என்றுமே நடைபெற்றதில்லை. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன காணி உரிமை, உயிர், பாதுகாப்பு, தன்மானம் போன்றன யாவும் பறிபோயின. அவர்களில் ஒரு பிரிவினர்களுக்குக் குடியுரிமை வாக்குரிமைகளும் சட்ட விரோதமாக மறுக்கப்பட்டிருக்கின்றன. தமது தாய் மொழி மூலம் குழந்தைகள் கல்வி பயிலும் உரிமை பறிபோய் விடுமோவென்று அஞ்சவேண்டியிருந்தது. சட்டரீதியாகவும், மறை முகமாகவும் வெளிப்படையாகவும் பாரபட்சமாகவும் இறுமாப்புடனும், விளைவுகளைப் பற்றிய எவ்வித அச்சமுமின்றியும் செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. தனக்கென ஒரு மொழியும் பண்பாடும், தன்மானமும் உள்ள ஓர் இனமாக வாழ்வதற்கும் பேராபத்து நேர்ந்தது.

1956-ம் ஆண்டு தொடங்கி அடுத்தடுத்துப் பதவியேற்ற இரு அரசாங்கங்களினாலும் இந்தப் பாரபட்சமான இன நாசக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டன. பலமுள்ள பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த சமஷ்டிக்கட்சி, தமிழ்பேசும் மக்களின் பேரால் கிளர்ச்சிகளை நடாத்திக் காட்டியும் முந்திய அரசாங்கத்தின் போக்கில் எத்துணை மாற்றத்தையும் ஏற்படுத்த முடிய வில்லை. இரண்டாவது தடவை அவ்வரசாங்கம் பதவி ஏற்கத் தாமே காரணர் என்று பெருமைப் பட்டனர். ஆனால், அரசாங்கம் தன் கொள்கைகளை அமுல் நடாத்துவதில் தளர்வோ, தயக்கமோ காட்டவில்லை. தமிழ் மக்கள் தங்கள் உரிமை பறி போவதைக் கண்டு உணர்ச்சியின்றி அசிரத்தையோடு இருக்கவில்லை. அநீதியை எதிர்க்கவும் போராட்டங்களை நடத்தவும் ஏற்ற மன உறுதி இல்லாமலும் இருக்கவில்லை. ஆனால், வழி நடத்தியவர்கள் ஆற்றலற்றிருந்தமையால் மக்களுக்கு அவர்களால் பயன்கிட்டவில்லை. சிங்கள மக்களும் சிங்களத் தலைவர்களும் தமிழர்களுடைய இலட்சியங்களையிட்டும் எண்ணங்களையிட்டும், விசுவாசத்தையிட்டும் மிகவும் சந்தேகமுள்ளவர்களாகவும் அவநம்பிக்கை உள்ளவர்களாகவும் ஆகிவிட்டதே முக்கிய காரணம். மொழி உரிமையையும், முன்னேற்ற வாய்ப்புக்களையும் - நிர்வாக சேவையில் சம அந்தஸ்தோடு கூடிய உரிமைகளையும் தமிழ் பேசும் மக்கள் பெறவேண்டுமானால் ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்ட ஒரு கட்சியின் பேராலே தான் இக்கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் திடமாக நம்புகிறது. இதுதான் எமது காங்கிரஸ்சின் அடிப்படை இலட்சியமாகும்.

"சாதி, மொழி, சமயம் என்னும் வேறுபாடுள்ள மக்கள் தொகுதியினர் தன்மானத்தோடு எம்முன்னோரளித்த பொதுவான அருஞ் செல்வத்தில் சமபங்குடையவர்களாகவும் தம் சம அந்தஸ்தையும் சமவாய்ப்புகளையும் பெற்றவர்களாகவும் இந்நாடெங்கிலும் வாழத்தக்க ஓர் ஒன்றுபட்ட ஆட்சியை உடைய இலங்கையை உருவாக்குவதையே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனது இலட்சியமாகக் கொண்டு, அதற்காக இது காறும் முயன்று வந்தது போன்று, இனியும் அதையே இலட்சியமாகக் கொண்டியங்கும். அரசியற் சட்டத்தின் அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டால்; தமிழ் பேசும் மக்களின் இன்னல்கள் யாவும் மறைந்து விடுமென்று பரப்பப்படுகின்ற சிறு பிள்ளைத்தனமான சிந்தனையை, அதனால் வருங் கேடுகளை அடுத்து அடுத்து அனுபவித்துப் பாடம் படித்துத் தோல்வியடைவதற்கு முன்னரே, விவேகத்தோடு கைவிடுதல் நல்லது. பெரும்பான்மை இனத்தினர் சிறுபான்மை இனத்தவர் மீது பாரபட்சமாக நடக்க வேண்டுமென்று நினைத்தால் அரசியல் சட்டத்தின் அமைப்பு ஒற்றையாட்சியாயிருந்தாலென்ன சமட்டி முறையாயிருந்தாலென்ன அப்பாரபட்ச நடவடிக்கைகளை எதுவிதத்திலேனும் தடுக்க முடியாது மேலும் ஒரு சமட்டியல்லது பிரதேச சபை அமைப்பில் பொருளாதாரத்தில் பின் தங்கியதும் முன்னேற முடியாததுமான பிரதேசம் அளவற்ற கஷ்டங்களுக்குள்ளாகும்.

சமட்டி அரசியலின் கீழமையக் கூடிய தமிழ்ப் பகுதிகளுக்கு இப்பொழுதுள்ள அற்ப வாழ்க்கைத் தரத்தையோ சமூக பொது நல அவசிய சேவைகளையோ நடத்துவதற்குக் கூட வேண்டிய வருவாய் வசதிகளோ இயற்கை வளமோ இல்லை. இன்னும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை அளிக்கவல்ல பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு வேண்டிய மூலதனமில்லை. ஆகவே, பெரும்பான்மைச் சமூகத்தினர் சிறுபான்மை மக்கள் மீது காட்டும் வேறுபாடுகளைத் தவிர்க்கவோ, எமது இழந்த உரிமைகளை மீண்டும் பெறவோ, இன்றேல் பொருளாதாரத்தை விருத்தி செய்யவோ அந்த அரசியல் அமைப்பு எந்த விதத்திலும் உகந்ததல்ல.

சிங்களப் பொதுமக்கள் மனதில் ஆழமான சந்தேகங்களையும் அவநம்பிக்கையையும் உண்டாக்கி எமது மொழிக் கோரிக்கைகளையும் ஏனைய கோரிக்கைகளையும் நியாயமாகவும் கௌரவமாகவும் தீர்த்து வைப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு முட்டுக் கட்டை ஏற்படுத்தக் கூடாது. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைக் கோரிக்கைகளை அங்கீகரிக்கும் மனப்பான்மை சிங்கள மக்களில் போதிய அரசியலறிவும் புத்திசாலித்தனமும் உடையவர்களிடத்தில் இருக்கின்றதென்றும் நாம் திடமாகவும் மனப்பூர்வமாகவும் நம்புகிறோம்.

நன்மைக்கோ தீமைக்கோ சிங்கள மக்களோடு தமிழ் பேசும் மக்கள் ஒரே தாயகத்தில் வாழ வேண்டியவர்களாயுள்ளனர். ஆகவே, தங்கள் எதிர்கால நல்வாழ்வை இரு சமூகத்தினரும் ஒருமித்தே உருவாக்க வேண்டியதாயுள்ளது. இலங்கை மக்களனைவரையும் பெரிதும் பாதிக்கும் அதிமுக்கிய தேசிய பிரச்சனைகளில் சிங்கள மக்களுடன் தமிழ் பேசும் மக்கள் பரஸ்பர, நல்லெண்ணம், நட்பு என்ற அடிப்படையில் ஒத்துழைப்பதன் மூலம் தமது நியாயமான கோரிக்கைகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொள்ள வழியுண்டு.

## அடிப்படை உரிமைகள்:

கடந்த காலத்தில் இருமுறை பதவியேற்ற அரசாங்கம் சோல்பரி அரசியற்றிட்டத்தை வழிநடத்திய முறையிலிருந்து அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயம் ஒன்று அரசியல் அமைப்புச் சட்டத்திற் சேர்க்கப்படவேண்டியதன் அவசியம் தெளிவாகியுள்ளது. எனவே, கீழ்க்கண்ட அடிப்படை உரிமைகளை உறுதிப் படுத்தும் வகையில் அத்தியாயம் ஒன்றை அரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல் அமைப்புச் சட்டத்தில் சேர்ப்பிப்பதற்கு உழைப்போமென்ற உறுதியை தமிழ்க்காங்கிரஸ் அளிக்கின்றது.

i இனம், மதம், சாதி, கொள்கை என்ற வேறுபாடு பாராட்டாத வகையில் எல்லாப் பிரசைகளுக்கும் சட்டத்திற் சமத்துவமும் சமமான சட்டப் பாதுகாப்புமளித்தல்.

ii. இனம், மதம், சாதி, கொள்கை என்ற வேறுபாடுகள் காரணமாக அரசாங்கம் பாரபட்சம் காட்டாதிருத்தல்.

iii. அரசாங்கத்திலும் அரசாங்கத்தின் ஆதரவில் இயங்கும் கூட்டுத்தாபனங்களிலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் உத்தியோகங்களும் பதவி நியமனங்களும் பெறுவதற்கு எல்லாக் குடிமக்களுக்கும் சமவாய்ப்பளித்தல்.

iv. கருத்துரிமை மதஉரிமை, பேச்சுரிமை, அவையுரிமை, கூட்டுரிமை போன்ற உரிமைகள் எல்லோருக்கும் அளிக்கப்படல்.

v. இத்தீவின் எப்பகுதியிலும் சுதந்திரமாகப் போக்குவரவு செய்யவும் விரும்பிய வேலையைத் தேடிக் கொள்ளவும் சொத்துக்களை வாங்கவும் தாம் விரும்பிய ஒரு தொழிலையோ வர்த்தகத்தையோ வியாபாரத்தையோ மேற்கொண்டு நடாத்தவும் எந்தப் பிரசையும் சுதந்திரம் பெற்றிருத்தல்.

vi. இலங்கையில் வசிக்கும் தமக்கென ஒரு புறம்பான மொழியையும், பண்பாட்டையும் உடைய எந்தப் பிரிவினரும் அவைகளைப் பாதுகாத்துப் பேணும் உரிமையைப் பெற்றிருத்தல்,

vii. அரசாங்கப் பள்ளிக்கூடமெதிலும், அல்லது அரசாங்கத்திடமிருந்து உதவிபெறும் கல்விக்கூடமெதிலும் இனம், மதம், மொழி, குலம், கொள்கை என்ற அடிப்படையில் பாகுபாடெதுவுமின்றி எப்பிரசையும் சேர்க்கப்படுவதற்கான உரிமையளித்தல்.

viii. தம்தாய்மொழிமூலம் கல்விகற்கவும் சொந்தமொழிமூலம் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவும், அதே மொழியில் பதில் பெறவும், அரசாங்கத்துடன் சகல அலுவல்களையும் சுயமொழியிலாற்றவும் எப்பிரசைக்கும் உரிமையளித்தல்.

ix. குறிப்பிட்ட மொழியைப் பேசும், அல்லது சமயத்தைச் சார்ந்த சிறுபான்மை இனத்தவர் தமது விருப்பத்தின்படி ஒரு கல்வித் தாபனத்தை நிறுவி நடாத்த உரிமை பெற்றிருத்தல்.

x. மேற்குறிப்பிட்ட உரிமைகளைச் சட்டபூர்வமாக அமுல்நடாத்த எந்தப் பிரசையும் சுப்பிறீம் கோட்டுக்கு மனுப்பண்ணும் உரிமையைப் பெற்றிருத்தல். ஐ. நா. மனித உரிமைப் பிரகடனத்தை யாம் பெற்றுக் கொள்வதோடு, இலங்கை அரசியல் அதை ஏற்றுக் கொள்ள யாம் ஆவன செய்தல்.

## மொழி:

இலங்கையில் ஓர் அரசாங்க மொழியாகவும் தேசிய மொழியாகவும் தமிழ் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஆவன செய்வது காங்கிரசின் இலட்சியமாகும். சிங்கள மக்களுக்கு சிங்களம் எப்படியோ அதேபோல் தமிழ் பேசும் மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்குத் தம் தாய்மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முழுவதிலும் சிங்களத்துடன்தமிழ்சமத்துவம்பெறுவது. நீதி நிர்வாகம் போன்ற புதுநிர்வாகத் துறைகளில் தேசிய மொழிகள் ஆங்கிலத்தைப் போல் திறம்பட உபயோகிப்பதற்கான தகுதியைப் பெறும்வரை ஆங்கிலம் நீடித்து உபயோகிக்கப்பட வேண்டும். தமிழ்மொழி இந்நாட்டில் நிலையாக வாழ வேண்டுமானால் இருமாகாணங்களில் மட்டும் அதன் உபயோகம் ஒதுக்கப்படாமல், இந்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அதன் உபயோகம் அங்கீகரிக்கப்பட வேண்டும். இலங்கையில் எல்லாப்பகுதிகளிலும் தமிழ்மொழிக்கு உரிமைகிடைக்காவிடில் ஈற்றில் எந்த ஒரு பகுதியிற்றானும் அதற்கு இடமிருக்காது போய்விடும்.

## அரசாங்க ஊழியர்களின் உரிமைகள்:

அரசாங்க அலுவல்மொழி மசோதா பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட பொழுது, அதாவது; 1956ம் ஆண்டுக்கு முன் அரச சேவையில் சேர்ந்தவர் சிங்கள மொழித் தேர்ச்சியின்மையால் எவ்வித தகுதியுமில்லாதவரெனக் கருதப்படமாட்டாரெனவும் அவரை எவ்விதத்திலும் தண்டிக்கக் கூடாதெனவும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளல். புதுப் பிரவேசச் சிங்கள ஊழியர்கள் தமிழில் தேர்ச்சியடைய வேண்டும் என்ற நிபந்தனை இருந்தால் ஒழிய புதுப்பிரவேசத் தமிழ் ஊழியர்களை சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டுமென நிர்ப்பந்திக்கக்கூடாது என்பதற்காகவும் தமிழ்க் காங்கிரஸ் முயலும்.

## மலைநாட்டுத் தமிழர்:

இந்திய வம்சாவளியினராகிய பல இலட்சம் தமிழ் மக்களை நாடற்றவர்கள் என்று ஒதுக்குகின்ற செயலுக்கு முற்றுப் புள்ளிவைக்க வேண்டும். இலங்கையையே தமது தாய்நாடாகக் கொள்ள வேண்டும் என்ற விருப்புடையவர்களும் தமது தாய்நாடென்று வேறு எந்த நாட்டையும் உரிமையோடு அழைக்க முடியாதவர்களும் இலங்கை ஒன்றையே தாய்நாடாகக் கொண்டவர்களுமாகிய இவர்களை இந்நாட்டுக் குடிமக்களென ஏற்றுக்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

இந்திய வம்சாவளியினராகிய தமிழரைக் கட்டாயமாக நாடுகடத்துவதற்கான பிரயத்தனங்களை, அவை எவரது ஆலோசனையின் பேரில்எடுக்கப்பட்டதாயினும் சரி, நாம் முழுமூச்சுடன் எதிர்ப்போம். நாடுகடத்தல் என்ற அம்சம் இந்தியாவுடன் ஏற்படுத்தப்படும் எந்த உடன்பாட்டாலும் சேர்க்கப்பட்டிருப்பின் அது தாமாகவே இந்தியா திரும்ப விரும்புவோர்களைச் கட்டுப்படுத்த வேண்டுமேயன்றி,மற்றவர்களைக் கட்டுத்படித்தக்கூடாது அதே நேரத்தில் ஏனையோர்களுக்குச் சகல உரிமைகளும் உள்ள இலங்கைக் குடியுரிமை வழங்கப்படல் வேண்டும். அதை விடுத்துத் தனிப்பட்ட வாக்காளர் பட்டியலில் அவர்களைச் சேர்த்துத் தனித்த ஓர் இனத்தொகுதியினராக அவர்களை ஆக்கவும் கூடாதென்று வற்புறுத்துவோம்.

## சிறுபான்மைத் தமிழர்:

லகம் முழுவதும் முன்னேற்றப்பாதைகளை நாடி சமுதாய நல அரசியல்களை அமைத்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழ்மக்கள் மத்தியில் உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு வகுப்பினர் இருந்து வருவது சமுதாய அமைப்புக்கே ஒரு குறைபாடாகும். எனவே, பிறப்பினாலோ அன்றி சாதியினாலோ ஏற்படும் பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளையும் வசதியீனங்களையும் அகற்றுவதற்காக நாம் உழைப்போமென்று வாக்குறுதி அளிக்கின்றோம் கடந்த காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட குறைபாடுகளை அகற்றும் முகமாக சிறுபான்மைத் தமிழர்களுக்குக் கல்வி வசதி அளிக்கப்படுவதற்கும் அதிக வேலை வாய்ப்புகள் தேடிக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம்.

**கல்வி:**

அ. ஒவ்வொரு தமிழ்பேசும் குழந்தைகளுக்கும் பெற்ருர் நாட்டின் எந்தப் பகுதியில் வசித்தாலும் சரி அரிச்சுவடி தொடங்கி பல்கலைக் கழகம் வரை சிறந்த கல்வி ஊட்டப்படவேண்டும் என்பதற்காகவும்,

ஆ. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களைப் போல் தமிழ் பேசும் மாணவர்கள் சகல உரிமைகளும் பெறவேண்டும் என்பதற்காகவும்,

இ. தமிழ்பேசும் பிரதேசங்களில் பூரண வசதிகள் உள்ள முதல்தர பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும் என்பதற்காகவும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்றத்தில் முயற்சிகள் எடுக்கும்.

இந்து சமுத்திரத்தின் கழிநீர் என இலங்கை ஒதுக்கப்படாதிருக்க வேண்டுமாயின் உலகமொழியான ஆங்கிலம் இந் நாட்டின் எல்லாக் கல்விக்கூடங்களிலும் கட்டாய இரண்டாவது மொழியாகப் போதிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகங்களில் ஆங்கில வாயிலாக கல்விபயில விரும்புவோர்களுக்கு எல்லாவசதிகளும் அளித்தல் வேண்டும். ஒரே அச்சில் வார்த்தெடுத்த ஒருதரப்பட்ட கல்வி முறையை அ இ த. காங்கிரஸ் எதிர்க்கின்றது தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் கல்விக்கூடங்களில் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் உரிமை பெற்ரேருக்குரியதாக இருக்க வேண்டுமென்பதற்காக நாம் போராடுவோமென்று உறுதி கூறுகின்ரேம் சிறுபான்மை மதத்தினரும் மொழியினரும் கல்விக் கூடங்களை நிறுவி நடாத்துவதற்கான உரிமை பெற வேண்டுமென்பதற்காகவும் காங்கிரஸ் உழைக்கும்.

## பொருளாதார வளர்ச்சியும் வேலை வாய்ப்புக்களும்

1. வருவாய் தரும் போதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தாமையினுலும், 1956 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத் துறையில் தமிழ் பேசும் இளைஞர்கள் புகமுடியாத விதத்தில் அரசாங்கங்கள் கடைப்பிடித்த பாகுபாட்டுக் கொள்கையினுலும் தமிழ்ப் பேசும் மக்களிடையே வேலையின்மை அச்சந்தரும் நிலைமை அடைந்திருக்கின்றது. கல்வி கற்ற இளைஞர்களிடையே இன்று காணப்படும் வேலை இன்மைச் சிக்கலுக்கு நல்லதோர் முடிவு காணவேண்டுமாயின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் குறுகிய நிலப் பரப்பில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன் நில்லாது இலங்கையின் இதர பகுதிகளிலும் அவர்களுக்குப் போதிய வாய்ப்புக்களைத்தேடவேண்டும். அரசாங்க சேவை, அரசாங்கக் கூட்டு நிறுவனசேவை, தனியார்துறை போன்றனவற்றில் திறமை ஒன்றையே அளவுகோலாகக்கொண்டு வேலைகள் கொடுக்கப்பட வேண்டுமேயன்றி பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்காகச் சலுகை அளிக்கும் முன் நிபந்தனைகளை வகுத்து வேலை வாய்ப்புகள் வழங்கப்படலாகாது. 1953 ஆம் ஆண்டிலிருந்து இத்தீவு முழுவதிலும் குறிப்பாகத் தமிழ் மாகாணங்களில் கைத்தொழில் முன்னேற்றம் ஸ்தம்பித்து விட்டது. சீமெந்துத் தொழிற்சாலையை விஸ்தரிப்பதற்கென 1953 ஆம் ஆண்டிலேயே நிதி வசதியளிக்கப் பட்டிருந்தும் அத்திட்டம் நாளது வரை உருவாகவில்லை. சீனி, தேயிலை, உரம் என்பவற்றை உற்பத்தி செய்வதற்கு 1953-ல் பாராளுமன்றம் பணம் ஒதுக்கியிருந்தும் நாளதுவரை அவை நிறுவப்படாததோடு, தமிழ் பேசும் மக்களுள் பெரும் பகுதியினர் தம் சீவனோபாயத்துக்கு நம்பி வாழும் கடற்றொழிலும் நாளுக்கு நாள் வளர்ச்சியின்றித் தேங்கிக் கிடக்கிறது.

இந்நாட்டில் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலுவதோடு வேலையின்றி இருக்கும் எமது இளைஞர்க்ளுக்கு வேலை,வாய்ப்புக்கள் அளிக்கவும் மேற்கூறிய கைத்தொழில், விவசாயம், கடற்றொழிற்றுறைகளிலும் வேறுதொழிற்றுறைகளிலும் அபிவிருத்தித் திட்டங்களைச் செய்து முடிப்பதற்கு ஆவன செய்தல்.

## சர்வகட்சி மாநாடு:

மொழிப்பிரச்சனை இந்திய வம்சாவளியினர், குடியுரிமைப் பிரச்சனைகள், தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சனை, அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை என்பனவான தேசியப் பிரச்சனைகளைக் கட்சியோடு கட்சி பேரம் பேசித் தீர்க்க முடியாது. சிக்கல்களை கட்சியரசியலுக்கு அப்பாற்படுத்தி, ஒரு சர்வகட்சி மாநாட்டில் எல்லோரும் கட்டுப்பாடின்றியும் ஒழிவு மறைவின்றியும் அவைகளுக்கு முடிவு காணலாம்.

## அரசியல் சட்டத்தின் 29-ம் பிரிவு:

தமிழ்க்காங்கிரசின் கோரிக்கையின் விளைவாக சிறுபான்மை மக்களின் உரிமைகளைக் காப்பதற்கென சோல்பரிக் குழுவினரால் கொடுக்கப்பட்ட ஒரே ஒரு பாதுகாப்பான அரசியற் சட்டத்தில் 29-ம் பிரிவைப் பலவீனப்படுத்தவோ, மாற்றியமைக்கவோ, அல்லது அறவே அகற்றவோ இடந்தராவகையில் அதனைக் காப்போம்.

"நல்ல பண்புள்ள மனிதன் இந்த உலகில் இன்பமாயிருக்கின்றான். மறுமையிலும் இன்பமாயிருப்பான். இரண்டிலும் அவனுக்கு இன்பமே. தான் செய்த நல்ல காரியத்தை நினைக்கும்போது இன்புறுகிறான். நல்ல பாதையிலே செல்லும்போது இன்னும் அதிகமாய் இன்புறுகின்றான்."

—புத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமத்தொழில் மறுமலர்ச்சி

ஆர். ஸ்ரீசசீந்திரன்

"உண்டிகொடுத்தவர் உயிர் கொடுத்தவரே," என்பது சான்றோர் வாக்கு. இன மத வேறுபாடு எதுவுமின்றி நமக்கெல்லாம் உணவு கொடுத்து உயிர் காப்பவன் கமக்காரன். இத்தகைய மாண்புக்கும் மதிப்புக்கும் உரித்தான வேளாண்குடி மக்கள் பெரும்பான்மையினராக நீர்வளம், நிலவளம் இரண்டும் உடைத்தான எம் ஈழத்திருநாட்டிலே வாழ்ந்து வருகின்றனர். இருந்தும் எமது உணவுப் பொருள்களில் பெருந் தொகையை இன்று நாம் பிறநாடுகளிலிருந்தே பெறவேண்டி இருக்கிறது. எமது அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு வெளிநாட்டவர் கையை நம்பி வாழும் கேவல நிலை ஏன் ஏற்பட்டது? இது பற்றிய ஆராய்ச்சி இப்போதைக்கு வேண்டியதில்லை. எமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் வெளிநாட்டுச் செலவாணியை உறுஞ்சிக் கொள்வதுடன் எமது தன்மானத்திறகுப் பெரும் பங்கம் விளைவித்து வரும் இவ்வுணவுப் பொருள் இறக்குமதி நிறுத்தப்பட்டு இந்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணுதல் வேண்டும். இதுவே இன்றைய நமது ஆவலாகும். இவ்வாவலை நிறைவேற்றுதற் பொருட்டுத் திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையில் தேசிய அரசாங்கம் பலதரப்பட்ட முற்போக்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. உழவுத் தொழிலுக்குப் மிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டைத் தன்னிறைவுடையதாக்க மேற்படி தேசிய அரசாங்கம் எடுத்துவரும் முயற்சியில் தமிழ்ப் பேசும் மக்களின் கடமை யென்ன?

## தமிழன் உழைப்பு:

வேளாண்மையின் சிறப்பைப் பற்றித் தமிழனுக்கு எடுத்துக்கூற வேண்டியதில்லை. "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்" என்று பெருமிதங்கொண்டவன் தமிழன். இதனாலன்றோ நீர்வளங்குறைந்த பகுதிகளிற்கூட வான் மழை பொய்த்தாலும் முயற்சிதன் மெய் வருந்தக் கூலிதரும் என்ற நம்பிக்கையுடன் நிலத்தை உழுது விதைவிதைத்து, வளர்த்து, பயிர்உண்டாக்கி, தனக்கும் பிறருக்கும் உண்டி கொடுத்து வருகின்றான். கடும் உழைப்பினால் உயர்ந்த தமிழனால் உணவு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் பெருமளவில் கொடுத்துதவ முடியும். இதனை நன்கு உணர்ந்து அரசாங்கம் முதலில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## நீண்டநாட் குறை:

நீர்ப்பாசன வசதியின்மையே தமிழ் வேளாண்குடி மக்களின் நீண்ட நாளைய குறையாக இருந்து வருகின்றது. யாழ் மாவட்டத்தில் உள்ள பண்படுத்தப்பட்ட காணியின் நிலப்பரப்பு ஏறத்தாழ 23,000 ஏக்கர். சிறிய நீர்ப்பாசன திட்டங்களின் கீழ் ஏறக்குறைய 2,000 ஏக்கர் நிலம் வருகின்றது. எஞ்சிய 55,770 ஏக்கர் நிலமும் பயிர்ச் செய்கைக்கு மழை நீரையே முழுக்க நம்பியிருக்கின்றது. இந்த 55700 ஏக்கர் நிலத்திற்கும் போதிய அளவு நீர்ப்பாசன வசதி கிடைக்குமாயின் பயிர்ச் செய்கை மிக்க விருத்தியடையுமென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாமலே விளங்கும். தமிழ்ப்பகுதியிலுள்ள பண்படுத்தப்பட்ட விளைநிலங்களுக்குப் போதிய நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் அரசாங்கத்தின் முதற் கடனாகும். இதுபற்றி அரசாங்கத்திற்கு வற்புறுத்திக்கூற வேண்டியது நமது தமிழ் அரசியற் கட்சிகளின் பெரும் பொறுப்பாகும். இது விஷயத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மிகத் தீர்க்க தரிசனத்துடன் சில கோரிக்கைகளை அரசாங்கத்தினிடம் விடுத்துள்ளது. மகாவலி கங்கையை வடக்கே திருப்பவேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாக இக்கட்சி அரசாங்கத்தைக் கேட்டு வருகின்றது. இக்கோரிக்கையை ஆரம்பத்தில் எள்ளி நகையாடிய கட்சிகள் இன்று உரத்தக் குரலெழுப்புகின்றன. இது காங்கிரசின் தீர்க்கதரிசனத்திற்கு ஓர் உயரிய சான்றாகும். மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருமளவில் ஏற்படுத்துவதற்குத் தமிழ்க் காங்கிரஸ் வேறும் சில திட்டங்களைத் தீட்டியிருக்கின்றது. அவற்றுள் கீழ்க்கண்டவை சிலவாகும்:

(1) நீர் வளப் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.

(2) யாழ் குடா நாட்டில் விழும் மழை நீரை இயன்றவரை சேமித்து வைப்பதற்கான திட்டங்களை ஆக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தல்.

(3) மட்டக்களப்புப் பகுதியில் மதுறு ஓயா திட்டத்தை ஆரம்பித்தல்.

(4) உன்னிச்சைத்திட்டம், முத்திரையன் கட்டு, தன்னிமுறிப்ப, இராட்சஸ குளம் ஆகிய திட்டங்களைக் கட்டுதல்.

(5) மல்வத்து ஓயா திட்டத்தை விஸ்தரித்தல்.

(6) குழாய்க் கிணறுகளைத் தோற்றுவித்தல்.

இத்திட்டங்களனைத்துக்கும் உயிர் கொடுத்தால் நீர்ப்பாசனப் பிரச்சினை தமிழ்ப்பேசும் விவசாயிகளை வாட்டாது எனலாம்.

## கடனுதவி:

நீர்ப்பாசன வசதிகள் இருந்தால் மட்டும் வேளாண்மை சிறப்பாக அமைந்துவிடும் என்பதற்கில்லை. விவசாயிகளில் பெரும்பாலானோர் ஏழைகள். ஆகவே அவர்களுக்கு வேளாவேளைகளில் அரசாங்கம் போதிய கடனுதவி செய்ய வழிவகைகள் ஏற்படுத்த வேண்டும். அதே வேளை பயிர்க் காப்புறுதி (இன்சூரன்ஸ்) திட்டம் தமிழ்ப் பகுதிகளுக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படல் வேண்டும். இதனையும் தமிழ்க்காங்கிரஸ் தன் செயற்றிட்டங்களில் ஒன்றாகச் சேர்த்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

## நவீன முறைகள்:

நவீன விவசாய முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் விளைச்சலைப் பெருக்கலாம். இன்று இந்நாட்டில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரியாக 35 புசல் நெல் விளைகின்றது. இதனை 80 முதல் 115 புசல் வரை அதிகரிக்கச் செய்யலாம் என்பது ஆராய்ச்சியாளர்கள் முடிவு. இது சாத்தியமாக வேண்டுமாயின் கமத்தொழிலில் நவீன முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. வேளாண்மை பற்றிய ஆராய்ச்சிகளின் மூலம் ஏ 4 என்ற ஒருவிதரக விதை நெல் மூலம் உயர்ந்த அளவு விளைச்சல் உண்டாக்கலாம் என்பது தெரியவருகின்றது. இத்தர நெல் ஏக்கருக்கு 200 புசல் கூட அறுவடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது பற்றியெல்லாம் கமக்காரர் நன்கு அறிந்திருக்கும் பொருட்டு விஸ்தரிப்ப உத்தியோகத்தர்கள் பிரசாரஞ் செய்தல் வேண்டும்.

இதுபோன்ற இன்னும் பல திட்டங்களை உருவாக்கி கமக்காரருக்கு ஊக்கமளித்தல் வேண்டும். உடனடியாகக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) பண்படுத்தப்பட்டும் இதுவரை பயிரிடப்படாததுமான நிலங்களை உடனடியாகப் பயிர் உற்பத்திக்குக் கொண்டு வருதல்.

(2) குறைந்த செலவில் சிறந்த உரம் வழங்கப்படல் உரத்தைச் சேமித்து வைப்பதற்குப்போதுமான களஞ்சியங்கள் தமிழ்ப் பகுதிகளில் நிறுவப்படல்.

(3) நெல்லுக்கும் இதர உப உணவுப் பொருள்களுக்கும் குறைந்த பட்ச உத்தரவாத விலைத்திட்டமொன்றைக் கொண்டுவருதல் அவசியம்.

(4) கூட்டுறவு விவசாயத்தைப் பரப்புதல்.

(5) உணவுப் பொருட்கள் பழுதடையாது சேமித்து வைப்பதற்கு வேண்டிய களஞ்சியங்களை ஏற்படுத்தல்.

(6) விற்பனை வசதிகளை ஏற்படுத்தல்.

இவையனைத்தையும் தமிழ்க் காங்கிரஸ் கவனத்தில் கொண்டிருக்கின்றது. வேளா வேளைகளில் இவற்றுக்காகப் பாராளுமன்றத்தில் பாடு பட்டும் வருகின்றது. தொடர்ந்தும் அயராது உழைத்து வரும் என்பதில் ஐயமில்லை. எனினும் அக் கட்சி திட்டமிட்ட அளவுக்குச் செயலாற்ற முடியாமைக்கு பாராளுமன்றத்தில் அதற்கு இருக்கும் உறுப்பினர் பலமும், தமிழரிடையே கட்சி ரீதியாகக் காணப்படும் பிளவுகளுமே காரணங்களாகும். தமிழ் இனம் தன் வேற்றுமைகளை மறந்து தமிழ்க் காங்கிரஸ் திட்டங்களை ஒரு மனதாக ஏற்று, அவற்றுக்கு ஏகோபித்த ஆதரவையும், அவற்றுக்காகப் போராடுவதற்கு வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர் பலத்தையும் கொடுத்துதவுமேயானால் - தமிழ் வேளாண் குடிமக்களின் இன்றைய கனவுகள் யாவும் நனவுகளாகி அவர்களினதும் தமிழ்ச் சமுதாயத்தினது வாழ்வு மலர்ச்சியடையும் என்பதிற் சந்தேகமில்லை.

* * * *

## செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே — எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே — ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

—பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டுத் தமிழரும் குடியுரிமையும்

"ஆதவன்"

இலங்கைக்குச் சுதந்திரங் கிடைத்த பின்னர் இலங்கைப் பாராளுமன்றம், இலங்கைப் பிரசா உரிமை சம்பந்தமாக மூன்று சட்டங்களை இயற்றியிருக்கிறது. அவை வருமாறு:-

(1) 1948-ம் ஆண்டின் 18-ம் இலக்க இலங்கைப் பிரசா உரிமைச் சட்டம்.

(2) 1949ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இந்தியர் பாகிஸ்தானியர் பிரசா உரிமைச் சட்டம்.

(3) 1967ஆம் ஆண்டு 14ஆம் இலக்க இந்திய இலங்கை ஒப்பந்தச்(செயல் முறை) சட்டம்.

இலங்கைப் பிரசா உரிமைச் சட்டப்படி "இலங்கையிலே பிறந்தவருக்கு இலங்கைப் பிரசா உரிமை உண்டு". ஆனால் அவருடைய

(அ) தந்தை இலங்கையிற் பிறந்திருக்க வேண்டும்.

(ஆ) தந்தை வழிப்பாட்டனும் தந்தை வழிக் கொப்பாட்டனும் இலங்கையிற் பிறந்திருக்க வேண்டும்.

இலங்கையிற் பிறவாதிருந்தால் அவர் இலங்கைப் பிரசா உரிமை பெறுவதற்கு

(அ) அவர் தந்தையும், தந்தை வழிப் பாட்டனும் இலங்கையிற் பிறந்திருக்க வேண்டும். அல்லது,

(ஆ) தந்தை வழிப்பாட்டனும் தந்தை வழிக் கொப்பாட்டனும் இலங்கையிற் பிறந்திருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரந்தான் மலைநாட்டுத் தமிழர் தமது பிரசா உரிமையை இழந்தனர். கடந்த 60 வருடந் தொடங்கி நூறு வருடம்வரை இலங்கையில் வசித்தவர்கள் ஒன்றில் இலங்கையிற் பிறவாதவர்களாயிருக்கலாம் அல்லது அவர்களுடைய பாட்டன்மாரோ, கொப்பாட்டன்மாரோ இலங்கையிற் பிறவாதவர்களாக இருக்கலாம். அதன் பயனாக இலங்கைப் பிரசா உரிமைச்சட்டத்தின் கீழ் அவர்களுக்குப் பிரசா உரிமை கிடையாது.

இவ்வாறு இலங்கையில் உள்ள மலைநாட்டுத் தமிழர் பிரசா உரிமையை இழக்கச் செய்த இலங்கைப் பிரசா உரிமைச் சட்டத்தை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாரும் எதிர்த்தார்கள். திரு. பொன்னம்பலம் இச்சட்டத்தை எதிர்த்தது மாத்திரமன்றி அதற்கு மாருகவும் வாக்களித்தார். 1948 ஆம் ஆண்டின் ஹான்சாட் புத்தகத்தில் 1821 ஆம் பக்கம் தொடக்கம் 1861 ஆம் பக்கம் வரை இவ்விடயம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. விடயம் இவ்வாறிருக்க திரு. பொன்னம்பலம் மலைநாட்டுத் தமிழரின் உரிமைகளுக்கு மாருக வாக்களித்தார் என்று கூறுவது ஆதாரமற்ற வெறும் பொய்யாகும்.

1949-ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க இந்திய பாகிஸ்தானிய - பிரசா உரிமைச் சட்டம் இந்நாட்டின் பிரசா உரிமை சம்பந்தமாகச் செய்யப்பட்ட இரண்டாவது சட்டமாகும். இலங்கையில் வசிக்கும் இந்தியர், பாகிஸ்தானியரில் கலியாணமாகியவர் ஏழு வருடம் இலங்கையில் வசித்தால் பிரசா உரிமை வழங்கப் பெறுவரென்றும், கல்யாணமாகாதவர் பத்துவருடம் வதிந்தால் பிரசா உரிமை வழங்கப்பெறுவரென்றும் இச்சட்டம் விதித்தது. இலங்கை இந்தியக் காங்கிரசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ் காங்கிரசும் 5 வருடவாச நிபந்தனை போதுமெனக் கூறின.

இத்தச் சட்டம் மலைநாட்டுத் தமிழரின் பிரசா உரிமையைப் பறித்த சட்டமன்று. இது அவர்களுக்குப் பிரசா உரிமை வழங்கிய சட்டமாகும். முந்திய சட்டமே அவர்களின் உரிமையைப் பறித்த சட்டம். அச்சட்டப்படி அவர்கள் சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. அந்நிபந்தனைகள் கடுமையானவை. அவற்றைத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எதிர்த்தகோடமையாது அதற்கெதிராய் வாக்களித்துமிருந்தார்.

மேலும் 1949 ஆம் ஆண்டுச் சட்டம் பண்டிதர் நேருவின் அங்கீகாரத்தைப் பெற்ற சட்டமாகும். இச்சட்டத்தின் நிபந்தனைகள் பற்றி பண்டிதர் நேருவுக்கும் திரு. டி. எஸ். சேனநாயக்காவுக்குமிடையில் நீண்ட காலக் கடிதப் போக்குவரத்தும், பேச்சுக்களும் நடந்தன. ஆனால் ஈற்றில் சிறிய இரு விடயங்களில் இரு தலைவருக்குமிடையில் அபிப்பிராயபேதமிருந்த போதிலும் இச்சட்டத்தின் கீழ் பெரும் விகிதத்தினரான மலைநாட்டுத் தமிழர் பிரசா உரிமை பெறுவாரென்ற காரணத்தினால் பண்டித நேரு தாமதமின்றி இச்சட்டத்தைப் பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்குமாறு திரு. டி. எஸ். சேனநாயக்காவை வேண்டிக்கொண்டார். 8-9-48 இல் தேதியிட்ட கடிதமொன்றிலே பண்டிதர் நேரு பின்வருமாறு எழுதியிருக்கிறார். (இக்கடிதம் 1948 ஆம் ஆண்டின் 22-ம் இலக்கத் தொடர்பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

இம்மசோதாவிலுள்ள நிபந்தனைகளைப் பற்றி நீண்ட பேச்சுவார்த்தையை நான் நடத்த விரும்பவில்லை. இலங்கையிலுள்ள இந்தியர் விரைவில் பிரசா உரிமை பெறுவதற்கு ஒழுங்கு ஏற்படவேண்டுமென நான் விரும்புகிறேன். நாமிருவரும் எமது கருத்துக்களை வெளிப்படுத்தி விட்டோம்; இலங்கையிலுள்ள இந்தியரை மேலும் முடிவில்லாத நிலையில் வைத்திருக்க நான் விரும்பவில்லை. எனவே, இலங்கை இந்தியர் பிரசா உரிமை பெற உடனடியாகச் சட்டமியற்றுமாறு நான் மனமார வேண்டிக் கொள்ளுகிறேன்!

இக் கடிதத்தின்படி பண்டிதர் நேரு திரு. டி.எஸ்.சேனநாயக்காவை, சிறு விடயங்களிலே தமக்குள்ள அபிப்பிராய பேதத்தையுங் கவனியாது மனமார மசோதாவைப் பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்குமாறு வேண்டினர்.

மற்றொரு விடயமும் இத்தருணத்திலே சிந்திக்கப்பட வேண்டும். இலங்கை இந்தியக் காங்கிரசின் பொறுப்பு வாய்ந்த தலைவர்களான பெரிசுந்தரம், ஜோர்ஜ் மோத்தா போன்றவர்கள், இந்த மசோதா பாராளுமன்றத்திலே விவாதிக்கப்பட்டபோது இம்மசோதாவின் நிபந்தனைகளின்படி மலைநாட்டுத்தமிழரில் 75 வீதத்தினர் பிரசா உரிமை பெறக்கூடுமென்றும் அதற்காக மசோதாநேர்மையுடன் செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் அபிப்பிராயந் தெரிவித்தனர். பண்டித நேருவின் கீழ் செயலாற்றிய இந்திய வெளிநாட்டு அமைச்சு திரு. சேனநாயக்காவுக்கு 24-4-48 இல் எழுதிய கடிதத்திலே (இது 1948ம் ஆண்டின் 22-ம் தொடர்பத்திரமாகப் பிரசுரிக்கப்பட்டது) இம்மசோதாவின் நிபந்தனைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் "வாசத்தகைமையில்லாத இந்தியர் தொகை மிகக் குறைந்த வீதமாகவே யிருக்கும்" எனக் கூறிற்று.

எனவே, இந்திய பாகிஸ்தானிய பிரசா உரிமைச்சட்டம்.

(1) மலைநாட்டுத் தமிழரின் பிரஜா உரிமையை அகற்ற வந்ததன்று என்பதும்,

(2) வாசத்தகைமையுள்ள மலைநாட்டுத் தமிழருக்கு அது பிரசா உரிமை வழங்கக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்பதும்,

(3) தமிழ்க்கட்சிகள் கேட்ட கோரிக்கைகளுக்கும் இச்சட்டத்தில் கண்ட வாசத் தகைமைக்கும் இரண்டேயிரண்டு வருடம் அதிகமான தென்பதும்,

(4) பண்டிதர் நேருவின் அங்கீகாரத்தைப் பெற்றதென்பதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) பெரிசுந்தரம், ஜோர்ஜ், மோத்தா போன்ற பொறுப்புவாய்ந்த தலைவர்களாலும், இந்திய வெளிநாட்டு அமைச்சாலும். இம்மசோதா மலைநாட்டுத் தமிழர்களில் 75 வீதத்தினருக்குப் பிரசா உரிமை வழங்கக்கூடியதென்று கருதப்பட்டதென்பதும் தெளிவாகிறது.

1948 இல் அரசாங்கத்தைச் சேர்ந்த தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரும் திரு. ஜி ஜி. பொன்னம்பலமும் இந்த மசோதாவுக்கே வாக்களித்தனர். மேலே கூறிய ஐந்து திருப்திகரமான அம்சங்களைக் கொண்ட சட்டத்துக்குச் சம்மதமளித்தமைக்காக திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை நிதானபுத்தியுள்ள எவராவது குறைகூறுவார்களா?

இம்மசோதா சம்பந்தமாக மற்றுமொரு முக்கியமான விடயத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இது அடுத்த சட்டமான இந்திய இலங்கை உடன்படிக்கை (நிர்வாக)ச் சட்டத்தோடு பொருத்தமுடையது. இந்தியபாகிஸ்தானியச் சட்டப்படி, பிரசா உரிமைபெருத மலைநாட்டுத் தமிழர் இலங்கையை விட்டு வெளியேறவேண்டியதில்லை. அன்றியும் அவர்கள் பலாத்காரமாகவோ, வேறு வகையிலோ நாடுகடத்தப்படமாட்டார். இவ்விடயமாக திரு. டி. எஸ். சேனநாயக்கா, நேருஜிக்குத் திட்டமான வாக்குறுதியளித்துள்ளார். பண்டிதர் நேருவுக்கு 22-5-48 தேதியிட்டு திரு. டி. எஸ். சேனநாயக்கா எழுதிய கடிதத்திலே (இது 1948 தொடர்பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:- இலங்கைப் பிரசையாக விரும்பாத அல்லது இலங்கைப் பிரசா உரிமை பெருத இந்தியர், இலங்கையிலே இந்தியப் பிரசைகளாக இருக்கவும், தமது தொழில்களைத் தலையீடின்றி நடத்தவும் அனுமதிக்கப்படுவர்.

மலைநாட்டுத் தமிழரில் 75 வீதத்தினர் பிரசா உரிமை பெற இச்சட்டம் உதவுகிறதென திரு. பொன்னம்பலமும், பெரியசுந்தரம், மோத்தா முதலியவர்களும், இந்திய வெளிநாட்டு அமைச்சும் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. ஓர் இலட்சம் இருபத்தையாயிரம் பேரே இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டனர். இதற்குக் காரணமென்ன? யார் இந்த நிலைமையை உண்டாக்கியவர்கள்?

இந்தச் சட்டம் பாராளுமன்றத்திலே நிறை வேற்றப்பட்ட இரண்டு வருடத்துக்குள் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று சட்டத்தின் 5 ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. இவ்வாறு மக்கள் விண்ணப்பத்தை அனுப்பாது தடுத்த தாபனம் இலங்கை இந்திய காங்கிரஸ். சமட்டித் தலைவர்களின் தூண்டுதலினுலேதான் இவ்வாறு செய்தது. இலங்கை இந்தியக் காங்கிரஸ் இச் சட்டத்தைப் பகிஷ்கரித்தது. அதற்காகப் பயனற்றமுறையிலே ஒரு சத்தியாகிரகமும் நடத்திற்று. பின்னர் தமது செய்கை பயனற்றதென்பதை உணர்ந்து அதைக் கைவிட்டு, பதிவு செய்வதற்கு மலைநாட்டுத் தமிழரின் விண்ணப்பத்தை அனுப்பத் துவங்கியபோது 8 லட்சம் பேரின் விண்ணப்பங்களைக் கவனிக்க 6 மாதகாலந்தான் பாக்கியிருந்தது. அதனுல் விண்ணப்பங்களைச் சரியான தஸ்தாவேஜுகளுடன் அனுப்பமுடியாமற்போயிற்று. சட்டத்தை நர்வாகஞ் செய்த சாதிப்பற்றுள்ள உத்தியோகஸ்தர விண்ணப்பங்களில் உள்ள குறைகளைப் பெரிதுபடுத்திப் பல்லாயிரக்கணக்கான பத்திரங்களை நிராகரித்தனர். பகிஷ்காரத்திலும் சத்தியாக்கிரகத்திலும் நமது நேரத்தை வீணுக்காமல் மலைநாட்டுத் தமிழர் தலைவர்கள், பதிவு விண்ணப்பங்களைச் சரியான முறையிலே அனுப்ப உதவி புரிந்திருந்தால், பல்லாயிரக்கணக்கான இந்தியத்தமிழர்க்குப் பிரசா உரிமை கிடைத்திருக்கும். எனவே இந்தியத்தமிழரில் பல்லாயிரக்கணக்கானேர் பிரசா உரிமை பெருதிருந்தமைக்குக் காரணம் இலங்கை இநதியக்காங்கிரசும் அவர்களுக்குத் தூபம் போட்டுப் பயனற்ற சத்தியாக்கிரகததை நடத்தச் செய்த சமட்டித்தலைவர்களின் நடத்தையுமேயாகும். சட்டத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற பிரேரணை இலங்கை இந்தியக் காங்கிரசினர் விவாதித்த போது திரு. எஸ். தொண்டமான் இந்தப் பிரேரணையை எதிர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைநாட்டுத் தமிழர் பிரசா உரிமை விண்ணப்பங்களைத் தயார் செய்வதிலே தமது முழுக்கவனத்தையுஞ் செலுத்தவேண்டுமென்று வாதாடினுர். ஆனுல் பெரும்பான்மை வாக்கினுல் பிரேரணை நிறைவேற்றப்பட்டபடியால் திரு. தொண்டமான் அந்த முடிவை ஏற்றுக்கொண்டு செயல்புரிய வேண்டியதாயிற்று. தொண்டமானுடைய அரசியல் அறிவு நிறைந்த இக்கொள்கையைப் பொதுமக்களுக்கு முதன் முதல் எடுத்து விளக்கியவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமே. சென்ற பெப்ரவரி மாதம் பாராளுமன்றத்திலே இலங்கை இந்திய உடன்படிக்கை (நிர்வாக)க் கூட்டம் விவாதிக்கப்பட்டபோது திரு. பொன்னம்பலம் இவ்விடயத்தை எடுத்துக்காட்டினுர்.

இலங்கைப் பிரசா உரிமை சம்பந்தமான மூன்ருவது சட்டம் 1967 ஆம் ஆண்டின் 14 ஆம இலக்க இலங்கை இநதிய உடன்படிககை (நிர்வாக)ச் சட்டமாகும்.

இச்சட்டமானது 1948, 1949 ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட இலங்கைப் பிரசா உரிமை சமபந்தமான சட்டங்களைத் தொடர்ந்ததாகவோ, விளைவாகவோ வந்ததல்ல என்பதும் மலைநாட்டுத் தமிழரை முன்னைய பிரசாவுரிமைச் சட்டங்களினுல் நாடு கடத்துவதற்கு எவ்வித வழிவகையுமின்றியிருந்ததை முறியடிக்கும் வகையில் நாடுகடத்தலுக்குள்ளாக்கும் வகையில் புதிதாக இயற்றப்பட்டதென்பதும் வெளிப்படை. இச் சட்டப்படி 300,000 மலைநாட்டுத்தமிழர் நாடுகடத்தப்படுவர். எனவே. 4க்கு 7 வீதம் மலைநாட்டுத் தமிழர் நாடுகடத்தப்படுவர். இந்தியப் பிரசா உரிமை கோரி 7 பேர் விண்ணப்பஞ் செய்து நாடுகடத்தப்பட்டால் மூன்றுபேருக்கு இலங்கைப் பிரசா உரிமை வழங்கப்படும்.

மலைநாட்டுத் தமிழரை இந்தியாவுக்கு நாடுகடத்தல் செய்ய நிப்பந்தம் விதிக்கும் முதல் சட்டம் இதுதான். மலைநாட்டுத் தமிழரின் உரிமைக்காக முதலைக்கண்ணீர்வடித்த சமட்டிக்கட்சி, இந்தச் சட்டத்துக்குத் தனது சம்மதத்தை அளித்துள்ளது. "முன்னர் இந்திய பாகிஸ்தானிய பிரசா உரிமைச்சட்டத்துக்கு வாக்களித்துவிட்டார்கள். "ஐயோ, கொடுமை, கொடுமை" என்று சொல்லி ஒப்பாரி வைத்த சமட்டிக்கட்சி இப்போது மலைநாட்டுத்தமிழரில் அரைவாசிக்கு மேற்பட்டவர்களை இநதியாவுக்கு அனுப்பும் சட்டத்துக்கு மனமுவந்து ஆதரவளித்துள்ளது. இதனபயனுக இலங்கையிலுள்ள தமிழரின் பலத்தைக குறைக்கவுஞ் சம்மதித்தது. திரு. பொன்னமபலம் வாக்களித்துச் சமமதங்கொடுத்த இந்திய பாகிஸ்தான் பிரசா உரிமைச்சட்டம், மலைநாட்டுத் தமிழர் ஒருவரையாவது நாடு கடத்தும் நிலைமைக்குக் கொண்டுவரவில்லை. திரு. டி. எஸ். சேனுநாயகா நேருஜீக்கு எழுத்து மூலங் கொடுதத வாக்குறுதியைமேலே குறிப்பிட்டோம். அந்த வாக்குறுதியை மனத்தில் வைத்தே திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் அந்தக்காலத்தில் இந்திய பாகிஸ்தானிய பிரசா உரிமைச்சட்டத்துக்கு வாக்களித்தார். இந்த நிலைமையில் 525,000 மலைநாட்டுத் தமிழரை நாடுகடத்த வழிவகுத்த சட்டத்துக்கு சமட்டிக் கட்சிமனமுவந்து சம்மதமளித்து விட்டு, இந்திய பாகிஸ்தானிய பிரசா உரிமைச் சட்டத்துக்குத் தமிழ்க் காங்கிரஸ் வாக்களித்ததைக் கண்டித்துக் கொண்டிருப்பது, ஆடு நனைகிறதென்று ஓநாய் கண்ணீர்விட்ட மாதிரியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
22-ம் வருடாந்த மாநாடு

# வழி நடைச் சிந்து

தலைநி மிர்ந்த தமிழன் கண்ட
தனிமு தல்ஸ் தாப னம்
கலைமு திர்ந்த தமிழ ரொன்று
கலந்த தமிழ்க் காங்கி ரஸ் 1

பாளி மெந்தில் தமிழர் வீறு
பரவத் தோன்று தாப னம்
வாலி பனுய் மாறி யின்று
வளர்ச்சி பெற்ற காங்கி ரஸ் 2

மாசில் இரு பத்தி ரண்டு
வயசு வந்த தாப னம்
தேசி யஐக் கியத்தை யென்றும்
செப்பி வந்த காங்கி ரஸ் 3

நாடு புகழ் ஜீ. ஜீ. பொன்
நமக்க ளித்த தாப னம்
ஈடு கூற இயலா நல்ல
எங்கள் தமிழ்க் காங்கி ரஸ் 4

சிங்க ளவர் தமிழர் கூடும்
சிநேக பூர்வ தாப னம்
மங்க ளஞ்சேர் ஈழ மாதை
மகிழச் செய்த காங்கி ரஸ் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி மத பேத மின்றித்
தமிழர் சேர்ந்த தாப னம்
மேதி னியில் தமிழர் பண்பை
விளங்கச் செய்த காங்கி ரஸ் 6

சாந்தி தமிழ் மக்கள் பெறத்
தான மைந்த தாப னம்
காந்தி மகான் தந்த தூய்மை
கனிந்த தமிழ்க் காங்கி ரஸ் 7

செல்லு வோமே செல்லு வோமே
சேர்ந் தெமது தாப னம்
சொல்லு வோமே சொல்லு வோமே
தூய நாமம் காங்கி ரஸ் 8

பாடிப் பாடி நாடு வோமே
பார்பு கழ்நம் தாப னம்
ஆடி ஆடிக் கூடு வோமே
அரிய தமிழ்க் காங்கி ரஸ் 9

கொடி பிடித்து வீறு கொண்டு
கூடு வோமெம் தாப னம்
அடி மிதித்து நடந்து சென்று
அடைந் திடுவோம் காங்கிரஸ் 10

எமது ரிமை தமிழு ரிமை
என்றுங் கோருந் தாப னம்
நமது நட்பை இதர கட்சி
நாடித் கூடும் தாப னம் 11

இலங்கை யெங்கும் தமிழர் வாழ
ஏற்ற ஒற்றை ஆட்சி யில்
நலங்கள் யாவும் நாட்டி லெங்கும்
நமக்கு நல்குந் தாப னம் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

324.2
AK I
AR

# வேலையின்மையைப் போக்க

ஆர். ஸ்ரீதரன்

இன்று வடகீழ் மாகாணங்களிலே பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். பட்டதாரிகள், பொதுத்தராதரத் தேர்வில் சித்தியடைந்தவர்கள், அதற்குக் குறைவான படிப்புடையவர்கள் இப்படிப் பலதரப்பட்ட பிரிவினர் இந்த வேலையில்லா இளைஞர் குழாத்தில் காணப்படுகின்றனர். இவர்களின் எதிர்காலம் என்ன? இவர்கள் எதிர்பார்க்கும் விதத்தில் அரசாங்கத்திலோ அல்லது தனியார் துறையிலோ உத்தியோகங்கள் கிடைத்துவிடுமா? வேலையில்லாது தவிக்கும் இளைஞர்களை மட்டுமன்றி பெற்றோர்களையும், அரசியத் தலைவர்களையும் பெரிதும் வாட்டிக் கொண்டிருக்கும் சிக்கல் நிறைந்த கேள்விகள் இவை.

## வேலையின்மை

வேலையில்லாத் தின்டாட்டம் முழு இலங்கையிலும் காணப்படுகின்றது. ஆகவே இது வடகீழ் மாகாணங்களின் பிரத்தியேக பிரச்சினையல்ல. பல இலட்சக் கணக்கான வேலையில்லா இளைஞர்கள் நாடு முழுவதும் பரந்திருக்கும் நிலையில் இவர்கள் அனைவருக்கும் அல்லது பெரும்பாலானோருக்கு அரசாங்கத் துறையிலாவது, தனியார் துறையிலாவது வேலைகிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. இத்துறைகளில் ஒரு சிறு தொகையினருக்கு மட்டுமே வேலை வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். எஞ்சியோர் வேலையின்றித் தவிக்க வேண்டியது தானா?

## கமத்தொழில்

அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புகளை எதிர்பார்த்துக் கொட்டாவி விடுவதைத் தவிர்த்து இளைஞர்கள் வேறு துறைகளில் தமது கவனத்தைச் செலுத்துவது சாலச் சிறந்தது. வேறு எந்தத் தொழிலுக்கும் இல்லாத மதிப்பு இன்று கமத்தொழிலுக்கு இருந்து வருகின்றது. படித்த இளைஞர்கள் வேளாண்தொழிலில் இறங்குவது கௌரவக் குறைவு என்ற வீணை கேலிக்கிடமான மனப்பான்மையை விடுத்து,

"ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமென்றே-
ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக்
கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்ற ஔவைக்கிழவியின் கவிக்கொப்ப உழவுத் தொழிலின் சிறப்பை நன்குணர்ந்து செயலாற்றின் இன்றைய இளைஞர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவதோடு, நாட்டின் பொருளாதாரமும் சீரடையும்.

## பிரச்சினைகள் தீரும்

வடகீழ் மாகாணங்களில் கமத் தொழிலுக்குப் பயன்படுத்தக் கூடிய காணி பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன.



249865
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிலப்பரப்புக் காணியில் ஒரு பகுதி ஏற்கனவே பண்படுத்தப்பட்டதாகும். எஞ்சியவை காடுகளாக இருக்கின்றன. இந்நிலத்திற் படித்த இளைஞர்கள் பெரும் தொகையில் குடியேறிக் கூட்டுறவு முறையில் கமத் தொழிலை ஆரம்பித்தால் அவர்களது பிரச்சினைகள் தீர்ந்தாகிவிடும். நாட்டில் இன்று நிலவி வரும் உணவுத் தட்டுப்பாடுகளும் ஓரளவு குறையும்.

## குடியிருப்புத் திட்டங்கள்

இவையனைத்தையும் கருத்திற் கொண்டு இன்று இளைஞர் குடியிருப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. எமக்குக் கிடைத்துள்ள புள்ளி விபரங்களின்படி 1965 66ல் இந்நாட்டின் 18 மாவட்டங்களில் 27 இளைஞர் குடியிருப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1967-ல் ஆறு குடியிருப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன வென்றும், இன்னும் 11ஆரம்பிக்கப்படவிருக்கின்றனவென்றும் தெரியவருகின்றது. 3,500 ஏக்கர் நிலத்திற்கு மேலான காணிகளில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டங்களில் ஏறத்தாழ 2,000 இளைஞர்கள் குடியேறியுள்ளனர். இத் திட்டங்களில் கிளிநொச்சியில் 1957-ல் ஆரம்பிக்கப்பட்ட கனகபுரத் திட்டமே முதலாவது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாம். இத் திட்டத்தின் பின்னர் திரி ஆற்றுப் பகுதியிலும் விஸ்வமடுக்குளப் பகுதியிலும் இரு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் இன்று கொடுத்து வரும் பேரூக்கம் போல் தொடர்ந்து கொடுத்து வருவார்களேயானால் மேலும் குடியிருப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படலாம். இவ்விளைஞர்களுக்கு கமத் தொழிலுக்கு வேண்டிய தளபாடங்கள், டிராக்டர்கள் போன்றவை அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் நாளொன்றுக்கு ரூ. 1/50 வீதம்இரண்டு ஆண்டுகளுக்குப் படி வழங்கப்பட்டு வருகின்றது.

## பறிமுதல்

இன்று எமக்குத் தேவையான உணவுப் பொருள்களில் பெரும் பாலானவற்றை பிற நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்து வருகின்றோம். இதனால் அடிக்கடி உணவுப் பொருட்களுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. அத்துடன் எமது வெளிநாட்டுச் சேமிப்பும் செலவாகி நாட்டின் முன்னேற்றம் தடைப்படுகின்றது. இந்நிலையை மாற்றியமைக்கும் சக்தி எமது இளைஞர்கள் கைகளிலேயே இருக்கின்றது. இதனை விட தமிழ் இளைஞர்களுக்கு நாம் ஒன்றைக் குறிப்பாகச் சொல்ல வேண்டியிருக்கின்றது. இன்று தமிழரின் பாரம்பரிய நிலங்களில் பெருமளவு பறிபோய்விட்டது. பதவியா, பாவற்குளம், அல்லை, கந்தளாய். அம்பாறை போன்ற இடங்கள் யாவும் பறிபோய்விட்டன. இந்நிலை மாறி, தமிழரின் பாரம்பரிய இடங்கள் யாவும் தமிழருக்கே இருக்க வேண்டுமாயின் படித்த இளைஞர்கள் தாமாகவே முன் வந்து, கமத் தொழிலில் ஆர்வங்காட்டிக் குடியிருப்புத் திட்டங்களைப் பெருமளவு தோற்றுவிக்க அரசியல் தலைவர்களைத் தூண்டவேண்டும். தமிழ்க் காங்கிரஸ் இத் துறையில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. அதன் தேர்தல் விஞ்ஞாபனத்திற் கூட இதுபற்றி நன்கு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இக்குடியிருப்புத் திட்டங்களை இளைஞர்கள் அதிகமாக வரவேற்று ஆர்வங்காட்டினால் தமிழ்க் காங்கிரஸின் முழு ஆதரவும் அவர்களுக்குக் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொழிற்சங்கங்கள் சம்மேளன நிர்வாக சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தொழிற்சங்கங்கள்

விஜயன்

காலஞ் சென்ற திரு. ஏ. ஈ. குணசிங்கா அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மார்க்சிசவாதத் தலைவர்கள் 1940-ம் ஆண்டின் ஆரம்பகாலங்களில் இலங்கைத்தீவின் பல்வேறு பாகங்களிலும், தொழிற்சங்கங்களினால் பெறக்கூடிய நன்மைகளைப் பற்றிப் பிரசார இயக்கங்கள் மூலம் விளக்கித் தொழிலாளர் சங்கங்களை நிறுவத் தொடங்கலாயினர். தொழிலாளர்கள் தாங்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம் சாதியினர் என்ற பாகுபாடின்றி நல்ல சம்பளமும், வாழ்க்கை நிலைமைகளும் பெறலாமென்ற நம்பிக்கையில் இந் நிறுவகங்களினாற் கவரப்படலாயினர். இவ்வாறாக நிகழ்ந்ததிலிருந்து தொழிற்சங்கங்கள் இந்த நாட்டிற் தொழிலாளர்களினால் உருவாக்கப்படாது பொதுவுடைமை வாதிகளாகிய கொம்மியூனிஸ்டர் சமசமாசிகள் என்ற அரசியற் தலைவர்களால் ஆக்கப்பட்டன என்பதும் தெரியப்படுகின்றது.

அந்த ஆரம்ப நாட்களில் தொழிற்சங்க இயக்கங்களிற் சாதிப்பாகுபாடு இருக்கவேயில்லை; தொழிலாளர் வகுப்பினர் தங்களிடையே சாதிசமய பாகுபாடின்றித் தொழிற்சங்கங்களிற் தோழமை பூண்டு ஒன்று சேர்ந்து உழைக்கலாயினர். நல்ல சம்பளத்தையும் சேவைநிலைமைகளையும், பேச்சுவார்த்தைகளையும், போராட்டங்களையும் இணைத்துருவாக்கிய தொழிலாளர் சம்மேளன மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தனர்.

## தொழிலாளர் இயக்கத்திற்குத் துரோகம்:

மார்க்சிச அரசியற் தலைவர்கள் தங்களின் அதிகாரப் பேராசையினால் தொழிலாளர் இயக்கத்திற்கு 1964-ல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை ஏற்றுத் துரோகஞ் செய்யத் தொடங்கினர். தொடக்கத்தில் தொழிலாளரின் கூட்டொருமைப்பாடு பேசியும், சாதிசமூகப் பிரிவினைகளுக்கு வெறுப்புக்காட்டியும் வந்த இந்தத் தலைவர்கள் சிங்கள, பௌத்த தொழிலாளர்கள் என்று கோஷமிடத் தொடங்கலாயினர். சாதிப்பிரிவினைச் சுலோகங்களைக் கடைப்பிடித்துத்தான் அதிகாரத்திற்கு வரலாமென்று அவர்கள் உணர்ந்தனர். வெவ்வேறு தொழிற்சங்கங்களில் தலைமை பூண்டு நின்று உழைத்த தமிழர்கள் தளர்ச்சியடைந்தனர். இரத்தமும் வெயர்வையும் கண்ணீருஞ் சிந்திக் கட்டிக்காத்து உருவாக்கிய இந்தத் தொழிற்சங்கங்கள் தங்களுக்கும் தங்கள் சாதிக்கும் எதிராகப் பாவிக்கப்படுவதைக் கண்டனர்.

## பழிபாவத்திற்கு எச்சரிக்கையாயிரு:

துரதிர்ஷ்டவசமாக இலங்கைத் தொழிற்சங்க இயக்கத்தின் சாபக்கேடு என்னவென்றால் அச் சங்கங்களிற் பெரும் பான்மையானவை அரசியற் தலைவர்களாலும் கட்சிகளாலும் தாக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுவதினால், அவற்றின் கொள்கைகள் போராட்டங்கள் இவற்றைத் தங்களுக்குச் சாதகமாகச் சரிப்படுத்திக் கொள்ளுகிறார்களேயன்றி தொழிலாளரின் நன்மைக்காகப் பயன்படுத்துகின்றார்களல்லர் என்பதாகும். தொழிற்சங்க முறைகளினின்றும் அரசியலைப் பிரித்தல் முடியாதெனினும் தொழிற்சங்கம், தன்னை அரசியற் தலைவர்களுக்கும் அரசியற் கட்சிகளுக்கும் அடகுப் பொருளாக வைத்திருத்தல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் நலனிற் கவலை கொள்ளாது அவர்களைப் பயன்படுத்தி அதிகாரத்திற்கு வரவிரும்பும் அரசியல்வாதிகளுக்கு தொழிலாளர் வர்க்கத்தின் வெயர்வையும் கண்ணீரும் மகிழ்ச்சி மிக்க வேட்டைக்களமாக மாறியுள்ளன. தொழிற்சங்கங்களின் ஆட்சிப்பொறுப்புக் கடிவாளங்கள் அரசியல் வாதிகள் பிடியிலிருக்கும்வரை தொழிலுக்கொரு தொழிற்சங்கம் என்ற இலட்சியம் உண்மையான இலட்சியமாக அமையாது அந்த இலட்சியம் உண்மையானதாகிக் கைகூடுதற்குரிய காலம் அண்மையிலின்றி வெகு தூரத்திலேயே உளது. தொழிற்சங்க இயக்க அரசியற் தலைவர்களின் அரசியல் வேறுபாடுகள். இந்நாட்டில். தொழிலாளர் வர்க்கத்தை ஆயிரத்திற்கு (1000) மேற்பட்ட தொழிற் சங்கங்களாகப் பதிவு செய்யப் பிளவுபடுத்தியுள்ளன.

21 உரிமைக் கோரிக்கைகளை உருவாக்கியதும், இந்த 21 கோரிக்கைகளின் பேரில் கிளர்ச்சிப் பிரசாரம் நடாத்திய தலைவர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர் பதவி வழங்க வற்புறுத்தப்பட்ட கன்மையும், கடைசியாக அந்த 21 கோரிக்கைகளுக்குத் துரோகஞ்செய்த பான்மையும், இந்த நாட்டுத் தொழிலாளருக்கு, அமைச்சர் பதவி ஏற்றவுடன் செய்த கொடுமையும் இவையெல்லாம் சதிசெய்யும் அரசியல் வாதிகள் இந்த நாட்டுப் பற்பல தொழிற் சங்கங்கள் யாவற்றையும் தங்கள் உல்லாசப் பவனிக்குரியவையாக மாற்றிக் கொண்டமைக்குப் போதிய அத்தாட்சிக்குரியனவாகின்றன. இப்பொழுது இந்தப்போலித் தலைவர்கள், சாதாரண சிங்களத் தொழிலாளியை—சாதி ஒற்றுமையும் தேசிய ஐக்கியமும் நிறைந்த குரலோசையிலும் பார்க்க – சாதிப்பிரிவினைக் குரலே; கவரக்கூடுமென்ற நம்பிக்கையினால் அந்தவிதமான கிளர்ச்சியை எழுப்புவதில் முயற்சியாக இருக்கின்றனர்.

## தமிழ்த் தொழிலாளிக்குரிய உய்யும் வழி:

மேலே எடுத்துக்காட்டிய சந்தர்ப்பத்தில் தமிழ்த்தொழிலாளி மிகவும் தீர்க்கமான உறுதியான முடிவுக்கு அதாவது மார்க்சிச அரசியல் கட்சிகளின் இழிவான கைச்சரக்குகளான சிங்கள, பௌத்த ஆதிக்கமுள்ள தொழிற் சங்கங்களிற் தொடர்ந்து இருப்பதா அல்லது பிரிவதா என்ற முடிவுக்கு வருதல் வேண்டும்.

தொடர்ந்து இந்தத் தொழிற் சங்கங்களிருப்பதனால் தமிழ்த்தொழிலாளருக்கே உரிய தனிப்பட்ட குறைபாடுகளுக்கு, உதாரணமாக - சிங்களத் தேர்ச்சியும் இதனால் தமிழ் உத்தியோகத்தருக்கு ஏற்பட்ட அளவிறந்த முரண்பாடுகளும் தொல்லைகளுமாகிய இவற்றிற்குப் போதிய விமோசனம் பெறமுடியாது. பதவி உயர்வு, இடமாற்றம், கல்விச் சகாயநிதிகள், மற்றும் பயிற்சி வசதிகள், அரசாங்க அல்லது தனிப்பட்ட துறைகளில் ஏற்படும் வாய்ப்புகளிற் பாரபட்சங்காட்டல் என்பன இங்குநேர் எடுத்துக்காட்டாகும். இவ்வகைப்பட்ட பாரபட்ச முடிவுகளை மார்க்சிச வாதிகள் கட்டுப்பாட்டுக்குளடங்கிய சிங்கள ஆதிக்க சமாசத் தலைமைப்பீடம் எதிர்த்துப் போராட ஒரு போதும் முன்வராது; ஏனெனில் அவை கடைப்பிடிக்கும் சாதி அடிப்படைப் போக்கிற்கு முரணானது ஆகையால் என்க. உதாரணமாக மார்க்கிசவாதிகள் நடாத்தும் சிங்கள ஆதிக்கமுள்ள தொழிற்சங்கம்-ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் பழைய அரசாங்க உத்தியோகத்தர்களைச் சிங்களத் தேர்ச்சி பெறுதல் வேண்டுமென்று கட்டாயப்படுத்தி அப்பரீட்சைகளிற் சித்திபெறாதோரின் படியேற்றத்தை நிறுத்திச் சேவை நிபந்தனையில் மாற்றஞ் செய்தபோது எதுவித நடபடிக்கையும் எடுக்காதுவிட்டமை யாவரும் அறிந்ததே; ஆனால் 1966 ஜனவரி 8-ல் நியாயமான அளவு தமிழ் உபயோக மசோதாவை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்தது; ஏனெனில் மார்க்கிச அரசியற் கட்சிகள் அப்போது ஆட்சி செய்யும் அரசாங்கத்திற்கு எதிராகப் போர்தொடுக்குமாறு பணித்ததே காரணமாகும்.

இந்த விதமான தொழிற் சங்கங்களினின்றும் நீங்குவதால் இந்த அங்கத்தவர்கள் அடையும் சிறுநன்மைகளையும், சங்கங்கள் ஏற்படுத்திய பொது நலத்திட்ட நயங்களையும் இழத்தல் கூடும். மேலும் இந்தச் சங்கங்களிலிருந்து தமிழ் அங்கத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் விலகுவதால் அவை முற்றும் சாதிப்பாகுபாட்டில் இறங்குதல் கூடும். என்ருலும் ஓரளவிற்குத் தமிழ் அங்கத்தவர்கள் சாதிப்பிரிவுப் போக்குள்ள மார்க்கிச வாத தலைவர்களை நெருக்குதல் பண்ணி சாதி அடிப்படைப் பிரச்சினைகளிற் தலையிடாது இருக்க முயற்சிசெய்தலும் கூடும். எப்படியெனினும் பிளவுபட்ட குழுக்களை உருவாக்கல் தொழிலாளரின் வாதாட்டங்களை ஏலவே பெலவீனப் படுத்தியுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் தவிர்க்க முடியாத ஒருமுடிவுக்கு வருதல் கூடும். மார்க்கிசவாதிகளின் கட்டுப்பாட்டில் நடக்கும் இப்போதுள்ள சங்கங்களிற் தொடர்ந்திருந்து இந்தச் சங்கங்களிலிருக்கும் நடுத்தரமான பிரிவினருடன் நெருங்கிச் சேர்ந்து மார்க்சிச வாதக்கட்சிகளின் அரசியற்கையாட்களைத் தொலைத்துக் கட்டி உண்மையான சுதந்திரமான தொழிலாள வர்க்கத் தலைவர்களைத் தெரிந்தெடுக்க முயலுதல் வேண்டும். சங்கத்தலைவர்கள் சங்கங்களைத் தங்கள் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது. இந்த நிலைமை இந்த நாட்டுத் தொழிலாளர் வர்க்க மத்தியில் தமிழ்த் தொழிலாளியைச் சந்தேகமின்றிப் பிரிந்து நிற்க வழிவகை செய்யாது.

தமிழ்த்தொழிலாளி, இதே நேரத்தில், இயங்கிக் கொண்டிருக்கும் சங்கங்களில் தொடர்ந்து அங்கத்தவராக இருந்து கொண்டு தமிழ்த் தொழிலாளருக்கென தொழிற் சங்கங்களை உருவாக்கி மற்றும் சாதிப்பாகுபாடுடைய மார்க்சிச சமாசங்களில் எடுத்துக் கொள்ள முடியாத பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளச் சாதமாக வைத்துக் கொள்ளல் வேண்டும். இரு சங்க அங்கத்துவம் தவிர்க்க முடியாததொன்ருகும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தேசிய அரசாங்க சேவையாளர் தொழிற் சங்கச் சம்மேளனம், அகில இலங்கை ஐக்கிய தொழிற் சமாசச் சம்மேளனம்; இந்தச் சம்மேளனங்களில் இணைந்துள்ள மற்றும் தொழிற்சங்கங்கள் ஆதியன தமிழ்த் தொழிலாளர் தங்களுக்கு உரிமையான நீதி, நடுநிலைமை என்பனவற்றை அரசாங்கப் பொதுத்துறைகளிற் பெறுவதற்கு எடுக்கும் போராட்டங்களில உதவி செய்யவிரும்புகின்றன. தமிழ் அரசாங்க சேவையாளர் காங்கிரசும் பலவத பிரிவினராகிய தொழிலாளருக்கு மிகுந்த சேவைபுரிவதில் ஈடுபட்டுள்ளது. இந்த நாட்டுத் தொழிலாளரின் நலன்களுக்கு எங்களை நாங்களாகவே அர்ப்பணிக்கிரேம்; அவர்களுக்காகப் பாரபட்சம், நீதியினம் ஆதியன எங்கிருந்து – எந்த முறையில் வந்தாலும் எதிர்த்துப் போராடுவோம் என்று தீர்மானிக்கின்ரேம்.

*  *  *  *

"எவனும் முதலிற்ருனே நல்ல நடத்தையில் நிலைபெறவேண்டும்; பிறகுதான் பிறருக்கு உபதேசிக்கப் புறப்படவேண்டும். இத்தகைய அறிஞன் கலக்கமுறுவதில்லை."

— ஓர் அறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தேவேந்திர முனையும் பருத்தித்துறையும் சேர்ந்ததே ஈழம்"

(மகம்)

ஈழத்திரு நாட்டின் ஈடில்லாக் காங்கிரசு
என்றென்றும் வாழியவே
வாழ்வெமக் களித்திட வளர்தமிழ்க் காங்கிரஸ்
வளமுற்று வாழியவே! 1

கோலமுஞ் சீலமுங் கொண்ட தலைவர்கள்
கொள்கையில் மாற்றமின்றி
காலமெல் லாமுழைக்கும் கருத்துயர் காங்கிரஸ்
கவின் பெற்று வாழியவே! 2

வடக்குக் கிழக்கென்றே வாதங்கள் பேசாது
வளர்ந்திடு காங்கிரசே!
அடக்கு முறைதனக்கு அஞ்சாது தலைநிமிர்ந்து
ஆம்பணி புரிவதும் காங்கிரசே! 3

சிங்களர் செந்தமிழர் சிறந்தவிஸ் லாமியர்கள்
சேர்ந்துவாழ் ஈழத்திலே!
பங்கமி லாதுமக்கள் வாழ்ந்திடப் பணிபுரியும்
பண்பென்றும் ஓங்கிடவே! 4

தேவேந் திரமுனையும் திகழ்பருத் தித்துறையும்
சேர்ந்ததே ஈழமென்றே
பூவேந்தர் போற்றவே புந்தியிற் கொண்டது
புகழுடைக் காங்கிரசே! 5

★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாதர் முன்னணி காரிய நிர்வாக சபையும் வரவேற்புச் சபையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலக் கல்வி

எஸ். எஸ். சுந்தரம்

சீவனோபாயத்தை எவ்வாறு தேடலாம். வாழ்வை எவ்வாறு வாழ்வாங்கு வாழலாம் என்ற வாழ்க்கையின் இரு அடிப்படை நோக்கங்களையும் கல்வி முறை நிறைவேற்றும் என்று பொதுவாக மக்கள் எதிர்பார்க்கிறார்கள். எமது தாயகமாகிய இந்தியாவிலும் இலங்கையிலும் 19-ம் நூற்றாண்டின் இறுதி வரையிலும் அதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாகவும் கல்வி முறைக்கும் மேலே கூறிய நோக்கத்துக்கும் எதுவிதத் தொடர்புமில்லாதிருந்தது. இந்நூற்றாண்டுக் காலங்களில் நாம் அதே பொருட்களை அதே முறைகளில் எதுவித மாறுதலுமின்றி உற்பத்தி செய்துவந்துள்ளோம். சீவனோபாயத்துக்கு எமக்கு உதவிய அறிவு பாரம்பரியமானதேயன்றி கல்வி சம்பந்தப்பட்டதல்ல.

பின்னர் தனது தோட்டங்களோடும், வியாபாரத்தோடும் வர்த்தகத்தோடும் ஆங்கிலேயன் வந்து சேர்ந்தான். அவன் அனுபவித்த செல்வம் தேவர்களுக்கும் ஒருவேளை பல நூற்றாண்டுகளாக எமக்கு நேரிடை நட்புறவில்லாத அரச குடும்பத்தினருக்குமே சாத்தியமென்று எண்ணினோம். எது எவ்வாறிருப்பினும் வாழ்க்கைத் தரங்களைப்பற்றி அறிந்துகொள்ள எமக்கு வாய்ப்புக் கிடைத்தது.

வளர்ச்சியற்ற பொருளாதாரம் எம்மை பொதி மாடுகளாக்கியதால் ஆங்கிலேயனது வாழ்க்கைத் தரத்துக்குக் காரணமாகிய அறிவையும், ஆற்றல்களையும் அறிந்து பெற நாம் எதுவிதத்திலும் முயலவில்லை. மலிவாகக் கிடைக்கும் தொழிலாளிகள் மேல் முதலாளித்துவத்திற்குள்ள காதல் எமக்கு மோட்சமாக அமைந்தது.

ஓய்தல் ஒழிவின்றி உழைக்கத் தக்க தொழிலாளிகளை இந்தியா தந்துதவியது. இறையருள் எம்மை அத்துணை வறுமையினின்றும் காத்ததால் அவற்றைப் போலவே அடிபணியும் தொழில்களாலும் அத்துணைச் சிரமமில்லாத தொழிற்கலை தேர்ந்தெடுக்கக் கூடியதாக இருந்தது. நாம் லிகிதர் கணக்கரானோம். காலக்கிரமத்தில் வைத்தியர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் எஞ்சினியர்களாகவும் ஆனோம். நாம் வைத்தியர்களாகவும் வழக்கறிஞர்களாகவும் எஞ்சினியர்களாகவும் இருந்தாலும் எமது இலட்சியங்களிலும் பெறுபேறுகளிலும் லிகிதர்கள் கணக்கர்களிலிருந்து வேறுபடவில்லை. சொற்ப பணத்தைப் பெற்றுக் கொள்வதே எமது இலட்சியமாகவும் அப்பணத்தைக் கொண்டு மான்செஸ்டர், பேமிங்காம், ஷெவ்வீல்ட் போன்ற இடங்களிலுள்ள அவலட்சணமான தொழிற்சாலைகளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின்றும் வந்து குவியும் தேவபோக சரக்குகளில் எவற்றையெல்லாம் வாங்கலாம் என்பதே பெறுபேருகவுமிருந்தது. அலாவுதீனின் அற்புதவிளக்கை வைத்திருக்கும் மனிதன் பக்கிங்காம் அரண்மனையின் இரண்டாவது மாடியில் வசிக்கிருன் என்று எண்ணினேம்; அந்த எண்ணத்தோடு திருப்தி அடைந்தும் விட்டோம்.

இவ்வாறுதான் கல்வியென்ருல் சீவனேபாயத்தைப் பெறும் வழியென்ன என்ற நிலை ஏற்பட்டது. ஒருவர் ஒரு லிகிதராகவோ, கணக்கராகவோ ஆக விரும்பினுல் சொற்ப ஆங்கில அறிவு பெற்றிருக்கவேண்டும். அதோடு கூட்டக் கழிக்கத் தெரிந்திருக்க வேண்டும். எனவே, பள்ளிக்கூடங்கள் தேவைப்பட்டன. ஆனுல் பள்ளிக்கூடத்தை நிறுவுவதற்கு வேண்டிய சக்தியோ முனையும் ஆற்றலோ இல்லாதிருந்தது. இச்சமையத்தில் எமது மனேபாவத்தைப் புரிந்துகொள்ள முடியாத மிஷனரிமார் தேவையைப் பூர்த்தி செய்ய வசதியாக வந்து சேர்ந்தார்கள். இதில் அவர்களுக்கு இருந்த விருப்பம் எமக்குச் சாதகமாக இருந்தது. மிஷனரிமார் பள்ளிக்கூடத்தை நிறுவினுர்கள். நாங்கள் எமக்குத் தேவையான ஆங்கிலத்தையும் எண்ணையும் கற்றுக் கொண்டோம். பின்னர் பள்ளிக்கூடத்தைக் கட்டுவது மிகவும் சுலபமானது என்று தோற்றியதும் நாமும் ஒரு சில கட்டினேம்.

இப்பள்ளிக்கூடங்கள் எமக்குப் பணிபுரிந்துள்ளன. அவற்றிடமிருந்து நாம் எதிர்பார்த்தவை எல்லாவற்றையும் அவை கொடுத்துதவின. சொற்ப ஆங்கில அறிவைக் கொடுத்தன. அதிலும் சிறிதளவு அதிகமாக எண்களின் அறிவைத் தந்தன. எமக்கு வேலைகள் கிடைத்தன. அதிலும் பார்க்க முக்கியமானதாக இவ்வேலைகள் எமக்குப் பழக்கத்தைத் தந்தன. அறிவை அதன் உண்மையான கருத்தின்படி பெறுவதற்கு இப்பள்ளிக்கூடங்கள் உதவவில்லை. தொழில்களைக் கற்றுத்தரவில்லை. எதையும் மேற்கொண்டு செய்வதற்கு வேண்டிய மனேபாவங்களை வளர்த்து விடவில்லை. புதிய விடயங்களைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய உற்சாகங்களைத் தூண்டி விடவில்லை. ஆனுல் இவையெல்லாம் பள்ளிக்கூடங்களின் பிழையன்று. ஏனெனில், அவைகளை நிறுவியது இவைகளுக்காகவல்ல.

எமக்கு வேலைகள் தந்துதவ இப்போது ஆங்கிலேயன் இல்லையாகையால் நாம் வஞ்சிக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டது இயற்கையே. இவையெல்லாம் ஆங்கிலேயன் விட்ட பிழைகளால் நேர்ந்தவைகளே. அவன் நாசமாய்ப் போகட்டும் என்கிறேம். ஆனுல் அவன்கவலைப்படக் காணேமே. அப்படியானுல் அவனது பாஷை நாசமாய்ப்போகட்டும் என்கிறேம். அவனது பள்ளிக் கூடங்கள் நாசமாய்ப் போகட்டும் என்கிறேம். ஆனுல் இம் மனேபாவமும் எங்களுக்கு விமோசனம் அளிக்கவில்லையே. இனி நாம் என்ன செய்வது?

நாம் விசாரணைக் குழுக்களை ஏற்படுத்தலாம். அதைச் செய்துள்ளோம். ஏனெனில் அதைத்தான் எம்மால் செய்யமுடியும். முன்னைய அரசாங்க சபையினுல் நியமனம் பெற்ற தேர்வுக் குழுவினர் சமர்ப்பித்த அறிக்கை இதுகாறும் கல்வியையிட்டு வெளிவந்த மிகச் சிறந்த அறிக்கைகளுள் ஒன்ருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றது. ஆனல் அது எமக்குத் திருப்தி அளிக்கவில்லை. அதன் பின்னர் அத்துணைப் பேரறிவும் பேராற்றலும் வாய்ந்தவர்களடங்கிய பல விசாரணைக் குழுக்களைக் கண்டு விட்டோம். ஜயசூரியா விசாரணைக்குழு, கன்னங்கரா விசாரணைக்குழு, விஜயவர்த்தன விசாரணைக்குழு, நியூன்ஹாம் விசாரணைக்குழு, செனிவரத்தின விசாரணைக்குழு, குணவர்த்தன விசாரணைக்குழு இவையெல்லாம் போதாதென்று தேசியக் கல்வி விசாரணைக்குழு என்று அடுத்தடுத்துக் குழுக்களைப் பார்த்துள்ளோம். இதற்கு மேலும் எம்மால் ஏதாவது செய்ய முடியுமென்று யாரும் எதிர்பார்க்கலாமா? ஆனல் பிரச்சினை இன்னும் தீர்ந்த பாடில்லை. அதாவது கல்விமுறைக்கும் தொழில் வாய்ப்புக்கும் ஒரு தொடர்பை உண்டாக்க வேண்டியது ஒரு பிரச்சினை. கல்விக்கு இந் நாட்டில் ஏற்பட்ட துர்ப்பாக்கியம் மாட்டுக்கு முன்னல் வண்டியைக் கொண்டுபோய்ப் பூட்ட முயல்வது போன்றதோர் துர்ப்பாக்கியமாகும்.

கல்வி எமக்குத் தொழில் வாய்ப்பைத் தருவதில்லை. ஒரு தேசத்தின் இன மக்களின் முயற்சியும், புதியன கண்டு பிடிக்கும் ஆற்றலும் தொடக்கி வழிகாட்டும் ஆற்றலுமே வேலைவாய்ப்புக்களைத் தந்துதவும். இத்தகைய மக்களின் கையில் கல்வி ஒரு சிறந்த ஏவலாளி ஆகிவிடும். இத்தகைய மக்களின் மத்தியிற்ருன் கல்வியின் பயனக வேலைவாய்ப்புகள் வளரும். இத்தகைய மக்களின் மத்தியிற்ருன் கல்வி வளரும். ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவிலாண்டி என்ற மாதிரி எம்மைப்போல் கல்வியின் பேரில் பழியைச் சுமத்துவது ஐப்பானியர்கள் மத்தியில் நடக்குமா? அதை அவர்கள் அபசாரமெனக் கருதுவார்கள். அந்த எண்ணம் தூய்மையற்றது.

கடும் முயற்சியும் புதியவற்றைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆவலும் எமது இயற்கையில் காணப்படவில்லை. ஆனல் தற்போது எமது இயற்கை சாதிக்க முடியாத ஒன்றை எமது தேவைகள் சாதிக்கும் போற்தோற்றுகிறது. எமது கமத்தொழிலை அபிவிருத்தி செய்ய ஆராய்வு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். மீன் பிடிப்பதில் நவீன முறைகளைக் கையாண்டு பார்க்கிருேம். பாவனையாளருக்கு வேண்டிய சிலபொருட்களை உற்பத்தி செய்கிருேம். இவற்றை நாம் தொடர்ந்து செய்துகொண்டு போனேமானல் - இல்லை அது போதாது.- இன்னும் எவ்வளவோ அதிகம் உற்பத்தி செய்தோமானல் கல்வியைச் சபிப்பதை நிறுத்திக் கொள்வோம். கல்வியும் நமது தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

சக்தியைச் சமநிலைப்படுத்தும் உருளைகளைக் கண்டுபிடிக்கவேண்டுமென்றே மின்சத்தியைத் திரும்பவும் புதிதாகக் கண்டுபிடிக்கவேண்டுமென்றே நம்மை எவரும் எதிர்ப்பார்க்கவில்லை. உழைத்துப் பாடுபடவேண்டுமென்ற மனேதிடமும் எது எவ்வாறு செய்யப்படுகின்றது என்ற அறிவுந்தான் எமக்குத் தேவையானவை. கமத்தொழில், மீன்பிடித் தொழில், வேறும் கைத்தொழில்கள் என்பன இயங்கத் தொடங்கியவுடன் தொழிலுக்குகந்த கல்வி அதே வேகத்தில் இயங்க ஆரம்பிக்குமா தலால் கூடுதலாகப் பொறியியற் கல்லூரிகளையும், வர்த்தகக்கல்லூரிகளையும் தொழில்நுட்பக் கல்லூரிகளையும் கமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் கடற்றெழில் பாடசாலைகளையும் நிறுவுவதன் அவசியத்தை எவரும் வற்புறுத்த வேண்டிய அவசியமோ விசேடமான முயற்சிகளைமேற்கொள்ள வேண்டிய அவசியமோ ஏற்படாது. அத்தகைய கல்வி சீவனோபாயப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடும்.

இதற்கிடையில் நாம் லிகிதர்களையும், கணக்கர்களையும் தயாரித்தனுப்புவதற்கென நிறுவியுள்ள பிரமாண்டமான கல்வி நிறுவனங்கள் எங்கள் சீரழிந்த பொருளாதாரத்துக்குத் தாங்கொணாச் சுமையாகவே இருந்து வரும். இன்று ஏறத்தாழ ஒன்பதினாயிரம் பாடசாலைகள் எங்கள் மத்தியில் உள்ளன. எமக்கு இன்று தேவையான லிகிதர்கள், வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், எஞ்சினியர்களையும் தந்துதவ தொண்ணூறு பாடசாலைகளே போதுமானவை. எவ்வளவு வீண் செலவு?

கல்வி வாழ்க்கையின் தரத்தைப் பற்றிய பிரச்சினைக்கும் ஓரளவு தீர்வு கண்டு தரும் என்ற நம்பிக்கையே இந்தப் பெரிய வீண் செலவுக்குச் சமாதானமாகக் கொள்ளலாம்.

மிருகங்களிலிருந்து நாம் எவ்வாறு வேறுபட்டிருக்கின்றோம்? ஆதி கால மனிதனிலிருந்து நாம் எவ்வாறு வேறுபட்டிருக்கிறோம்? மேலைத்தேச மக்களிலிருந்து நாம் எவ்வாறு வேறு பட்டிருக்கிறோம்? உண்மையில் நாம் வேறுபட்டுத்தான் இருக்கிறோமா? அவ்வாறு வேறுபட்டிருப்பின் அதனால் ஏதாவது நன்மையுண்டா? அவ்வாறு வேறுபட்டிருக்க முடியுமா? எமது பாடசாலைகளில் நாம் இக்கேள்விகளைக் கேட்பதில்லை. எனவே இக்கேள்விகள் அனைத்துக்கும் நாம் விடை காணுவதில்லை. என்றாலும் விடைகாண முயன்றுதான் பார்க்கிறோம்.

பண்டுதொட்டு இன்றுவரை எமது தேசத்துக்குத் தெரிந்த கல்விமுறை இது ஒன்றுதான். இதில் நாம் நிபுணர்கள் ஆகிவிட்டோம். எமக்கு அதிகம் புத்தகப்படிப்பு அவசியமில்லை. ஆனால் அடிப்படை விடயங்களை அறிந்திருத்தல் அவசியமாகின்றது. எமக்குப் பாரம்பரியமான கிரியைகள் முற்றும் தேவையே எமது கோயில்கள் இத்தேவையைப் பூரணமாகப் பூர்த்தி செய்கின்றது. இது நூதனமாகப் படலாம். ஆனால் விளையாட்டு மைதானங்களில் கிரிக்கெட், கால்பந்தாட்டம் முதலியவைகளில் இதைத்தான் நாம் செய்கிறோம். எங்களுள் கூடிய கெட்டித்தனமுள்ளவர்களுக்கு ஏராளமான கவிதைகள், அதிக சங்கீதம், மட்டான கலைகள், அற்ப சொற்ப நடனம் முதலியன தேவைப்படும் எம்முள் வளர்ச்சி பெற்றவர்கள் சுயமாகச் சிந்திப்பார்கள்; தியானம் செய்வார்கள். எவருமே மனத்தைக் குழப்பிக் கொள்ள வேண்டாம். ஏனென்றால் சத்தியம் ஒன்றுதான். அதில் மாறுட்டம் ஏற்படாது. அடியார் நடுவுள் இருத்தலே இவையெல்லாவற்றிற்கும் சிகரமாகும்.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்றவர்கள் இத்தகைய கல்வி முறையே ஏனையவற்றிலும் பார்க்கச் சிறந்ததென்று கருதினர் என்றாலும்; ஒரு பாடசாலைக்கு விஞ்ஞான ஆய்வு கூடம் எத்துணை அவசியமோ அத்துணை ஒரு கோவிலும் அவசியம் என்பதை பாராளுமன்றத்தில் எடுத்துரைத்து ஏற்றுக் கொள்ளச் செய்வது சாத்தியமன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இந்த ஒன்பதினுயிரம் பாட சாலைகளைத் தொடர்ந்து வைத்திருப்ப தற்கு ஒரே ஒரு சமாதானம் அவை எமது பிள்ளைகளை வாழ்வாங்கு வாழக் கற்பிக்கின்றன என்ற ஒரு நம்பிக் கையே.

கல்வியையிட்டு இங்கே கூறப்பட்ட பொதுக்கருத்துக்கள் அனைத்தும் சிங்களர், தமிழர் என்ற பாகுபாடோ வேற்றுமையோ பாராட்டாது கூறப்பட் டவையாகும். இத்தகைய பாகுபாடுக ளையும் வேற்றுமைகளையும் தொடர்பு படுத்திக் கூறுவிடின்; இக்குறிப்பு முழுமை அடையாதுபோலும். சீவனோ பாயத்திலோ அல்லது வாழ்வாங்கு வாழ்வதிலோ ஒரு சிங்களவர் எந்த விதத்திலும் ஒரு தமிழரிலும் பார்க்க வேறுபட்டிருக்கவில்லை. இவ் விருவரிடையும் நாம் ஏதாவது பாகு பாடு காண முயன்ருல், அது மொழி சம்பந்தப்பட்டதாக விருக்கும். வேற் றுமை காண முயன்ருல் அது சரித்திரம் சம்பந்தப் பட்டதாகத்தான் இருக்கும்.

இந்த அற்ப பாகுபாடுகளும்வேற்று மைகளும் இத்துணை நம்பிக்கையின் மைக்கும், பொருமைக்கும் மனக் கசப் புக்கும் காரணமாய் இருப்பது தான் பெரிய துர் அதிர்ஷ்டம். அந்தோ! நாங் கள் வாழ்வாங்கு வாழ்வதற்குச் செய்யும் பிரயத்தனமும் வீண் செலவும் என்னே!

ஆங்கிலேயனுடைய உணவு மேசையி லிருந்து கீழ்விடுவதை சிறிது காலம் எம்மவர் எதிர் பார்த்திருந்திருக்கலாம். சனத்தொகை விகிதத்தின்படி சிங்கள வரிலும் பார்க்கத் தமிழரிடையில் விகி தர்களும், கணக்கர்களும் ஏன் வைத் தியர்கள், வழக்கறிஞர்கள், எஞ்சினி யர்கள் கூட - அதிகமாக இருந்தார் கள். இது எதேச்சையாக ஏற்பட் டது என்ற நியாயத்தைச் சிங்களவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

பொருமை நியாயம் காணத் தலைப் படாது. சட்டத்தை ஏற்றுக் கொள் ளாது. மேலும் அது தாழ்வு மனப் பான்மையாலும், பாதுகாப்பின்மையா லும், பயத்தினுலும் உண்டாகுமானுல் மிகவும் அபாயகரமானதாகிவிடும். ஆனுல் சிங்கள மக்களுள்ளும் ஒரு சில ராவது தமிழர்களை அவர்களது உண்மை யான நிலையில் அதாவது சீவனோபாயத் தைத் தேடிக்கொள்ளக் கஷ்டப்படுவ தோடு மற்றவர்கள் வாழ்வதையும் முழு மனதுடன் சம்மதிக்கும் ஒரு மக்களா கக் காணவேண்டும். ஆனுல் இந்த ஒரு சிலர் பேசாமடந்தைகள் போலிருக் கிருர்கள். கல்வி அமைச்சின் பெருமை தங்கிய தலைமைப்பீடங் கூட தமிழினம் முழுவதையும் ஒரு பெரிய சதிக்கும் பலாகக் கருதுவதுபோல் தெரிகின்றது.

தமிழர்கள் விழிப்போடு இருக்க லாம். நீதிக்காகத் தம்மால் இயன்றளவு போராடலாம், அந்நீதியை இயன்றளவு அம்பலப் படுத்தலாம். நலம் வருமென்ற நம்பிக்கையோடு இருக்கலாம். இருக்க வேண்டும்.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு மலர வைப்பமே!

"நாவேந்தன்"

ஈழத் தமிழர் வாழ்வு வீற
எழுந்து நின்று சிங்கமாய்
வேழ மொத்து மொன்ன லார்கள்
வெ(ல்)லற் கரிய வீரனாய்
வாழ வேண்டு மெனது சாதி
மாண்பு, வீர, தீரமென் (று)
ஆழி மோது சூறை யாகி
ஆர்க்கு மெங்கள ண்ணலின்! (1)

கண்ணி றைந்த மணிய தாகிக்
கருத் தணைந்த மன்றமாய்
உண்ணி றைந்து தமிழ ருள்ளம்
உயிர்நி றைந்து வப்பதாய்
எண்ணி றந்த சாத னைகள்
இயற்று கின்ற அற்புதப்
பண்ப மைந்த காங்கி ரஸ்சின்
பலமெ ழுந்து வீறுமால்! (2)

கொடி பிடித்துந் தடிபி டித்துங்
'குனிந்து' நின்ற கொள்கையர்
அடிப ணிந்து நின்ற பின்னும்
அரச ரென்ன லொக்குமோ?
முடிக விந்த மன்னர் முன்னும்
முழங்கு கின்ற கார்முகில்
இடி முழக்கி வந்த தின்று
இன்ப மாரி பெய்யவே! (3)

மொழியினிற் சமத்துவம்
முழங்குகின்ற தலைவனின்
பழியிலாத வரசியற்
பழுத்து நிற்குங் கற்பகஞ்
செழிதரக் கொணருகின்ற
செம்மலான ஜீ. ஜீயின்
வழியினியிற் றொடர்ந்து நின்று
வாழ்வு மலர வைப்பமே! (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட சபைகள்

'ஆதவன்'

ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு மாற்றம் அடைந்து புதியதோர் அமைப்பு உருவாவதற்கு அந்நாட்டில் நிலவிய சூழ்நிலைகள், வரலாற்றுக் கோட்பாடுகள், பொருளியல் நிலைமைகள் யாவுங் காரணங்களாக அமைகின்றன. இக்காரணங்களைக் கூர்ந்து அவதானிக்கு முன்னர், அத்தகைய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு பிறிதொரு நாடு பின்பற்ற முனைவது ஆபத்தானது. இலங்கையில் மாவட்ட சபைகள் நிறுவும் திட்டம், சில மேற்கு நாடுகளின் உள்ளூராட்சி முறையை, இலங்கையில் பின்பற்ற முனைவது போன்று உள்ளது. இலங்கையின் சூழ்நிலைகள், பொருளியல் நிலைமைகள் இம்மாற்றத்திற்குத் தகுந்ததா, இல்லையா என நேர்மையாகவும் பூரணமாகவும் ஆராயப்படவில்லை.

உள்ளூர் ஆட்சி நிர்வாகத்தில் இங்கிலாந்தின் 'கவுன்டி சபைகள்' நோர்வே நாட்டின் 'கவுன்டி பிரிவுகள்' பிரான்ஸ் தேசத்தின் 'திரந்தர சபைகள்' (பிறிபெக்ரியூர்கள்) ஆகியன அவ்வவ் நாடுகளின் உள்ளூர் ஆட்சி முறையில் முன்னணி வகிக்கின்றன. இவை சிறிய உள்ளூர் மன்றங்களை மேற்பார்வை செய்வதிலும் அவற்றின் இணைப்பு ரீதியான கடமைகளை ஆற்றுவதிலும் பெரும் தொண்டாற்றி வருகின்றன. அரசாங்கத்தின் அதிகாரங்களையும் கடமைகளையும் விஸ்தரித்து, பரவலாகப் பகிர்ந்து அளிப்பதற்கும் அவை உறுதுணையாக உள்ளன. எத்தகைய நாடுகளில் இப்படிப்பட்ட அமைப்பு முறை அமுல் நடத்தப்படுகின்றது?

1. பல நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்து உள்ளூராட்சி அமைப்பில் வளர்ச்சி அடைந்து அவைகள் பயனுள்ள சபைகள் என மரபு கொண்ட சில நாடுகளில்,

2. மொழி ரீதியாகவும், இன அடிப்படையிலும் ஒரே சமுதாயமாக வாழுகின்ற மக்களின் நாடுகளில்,

3. குறிப்பிட்ட இன மக்கள் வாழும் சில பகுதிகள் இயற்கை வளத்திலும் பொருளாதார வருமானத்திலும் பின்தங்கிய நிலையில் இருப்பதைத் தவிர்த்து, நாடு முழுமையும் சமமாகக் கருதி ஒரே விதமாக அபிவிருத்தி செய்யும் நாடுகளில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வகுப்பு வாதமும் இனத் துவேஷமும் தலைதூக்கி நிற்காத நாடுகளில்,

5. சனத்தொகையின் எண்ணிக்கையிலும் நாட்டின் விஸ்தீரணத்திலும் பெரிதாக விளங்குவதுடன்—பொருளாதாரத் துறையிலும் வளர்ச்சி அடைந்த காரணத்தால், அரசாங்கத்தின் அதிகாரங்களும் கடமைகளும் பரவலாகப் பகிர்ந்து அளிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள நாடுகளில் கையாளப்பட்டு வரும் இந்த உள்ளூராட்சி அமைப்பு இலங்கை போன்ற நாடுகளுக்கு ஏற்றதாக விளங்குமா?

1. அ. உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் நகரசபை முதல்வர்களும் பதவிநீக்கம் செய்யப்படும் நமது நாட்டில்,

ஆ. அடிக்கடி கலைக்கப்படும் சபைகள் ஒரு புறமும், சபை முதல்வரிடம் இருந்தும் அங்கத்தவரிடம் இருந்தும் மேலதிகச் செலவுப் பணம் அறவிடப்படுவது மறுபுறமும் இருக்கின்ற நமது நாட்டில்,

இ. நம்பிக்கை இல்லாப் பிரேரணைகள் மலிந்து காணப்படுகின்ற நமது நாட்டில் உள்ளூராட்சி விஸ்தரிப்புக்கு இடமும் உண்டோ? துர் ஆட்சி நடைபெறுவதை இவை சுட்டிக் காட்டுகின்றன அல்லவா? இவை மட்டுமல்ல,

2. இனத்திலும், மொழியிலும், சமயத்திலும் மக்களிடையே வேற்றுமை நிலவும் நமது நாட்டில்,

3. குறிப்பிட்ட இன மக்கள் வாழும் சில பகுதிகள் இயற்கை வளத்திலும் பொருளாதார வருவாயிலும் குன்றி இருக்க, நாடு பூராவும் சமமாக அபிவிருத்தி அடையாது இருக்கும் எமது நாட்டில்,

4. வகுப்பு வாதமும் இனத் துவேஷமும் அருவருக்கத்தக்க நிலையில் தலைதூக்கி நிற்கும் நமது நாட்டில்,

5. சனத்தொகையின் எண்ணிக்கையிலும், நாட்டின் விஸ்தீரணத்திலும் சிறியதாக விளங்குவதுடன் பொருளாதார வளர்ச்சி இன்மையினாலும் முன்னேற்றம் அடைந்த பெரும் நாடுகளைப் போன்று அரசாங்க அதிகாரங்களையும் கடமைகளையும் விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஏற்படாத எமது நாட்டில் முன்னர் குறிப்பிட்டது போல் பரந்த அடிப்படையிலான மேலைநாட்டு உள்ளூராட்சி அமைப்பு முறை அநாவசியமானது.

மாவட்ட சபை ஆட்சி அமைப்பை உடைய பிற நாடுகளில் சூழ்நிலைகள் நம் நாட்டில் நிலவும் சூழ்நிலைகளுக்குப் புறம்பானதாகவும் வேற்றுமை மிக்கதாகவும் விளங்குகின்றன. நேர்மையாகவும் நிதானமாகவும் இதனை ஆராயும் பொழுது நம் நாட்டில் தேசிய நலனுக்கும் இங்கு வசிக்கின்ற சிறுபான்மை மக்களுடைய நல்வாழ்விற்கும் மாவட்ட சபை ஆட்சி அமைப்பு பொருந்தாததும், அநாவசியமானதும், பாரதூரமான விளைவுகளைக் கொடுக்கக் கூடியதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது குன்றின் மேல் வைத்த விளக்குப் போன்று துலக்கமடைகிறது.

கடந்த 1928-ம் ஆண்டு டொனமூர் கமிஷன் இலங்கைக்கு வந்த காலம் முதலாக மாவட்ட சபைகள் போன்றதொரு அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது உண்மையாகும். அக்காலத்தில் மாகாண சபைகள் நிறுவப்பட வேண்டுமென கண்டி மக்கள் வலியுறுத்தினார்கள். கீழ் நாட்டுச் சிங்களவரின் பிடியில் இருந்து கண்டிப் பகுதிகளை மீட்பதே கண்டி மக்களின் அக் கோரிக்கைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. கண்டிப் பகுதிகளில் தம்மை நிலைநாட்டிக் கொண்ட கீழ் நாட்டுச் சிங்கள மக்களைப் புறக்கணித்து அவர்களை வேலை, வர்த்தகம், வியாபாரம், விவசாயம் ஆகிய துறைகளிற் கண்டிப் பகுதிகளில் பங்குகொள்ள விடாது மாகாண சபைகள் மூலம் தடுப்பதே கண்டி மக்களின் நோக்கமாக இருந்தது. கீழ்நாட்டுச் சிங்கள மக்கள் மேற்கொண்டு வந்த சகல தொழிற்றுறைகளையும் தமது கண்டி மக்களே செய்து பயனடைய வேண்டுமெனவும் அவர்கள் கருதினார்கள். ஆகவே மாவட்ட சபைகள் நிறுவப்பட்டால், "தமிழ்" பிரதேசத்தில் அல்லாத சகல மாவட்ட சபைகளும் இந்த விதமான புறக்கணிப்பையும் ஒதுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் அல்லவா? இதனால் தற்பொழுது அனுபவித்து வரும் வேலை வாய்ப்பு, சொத்து உரிமை, வர்த்தகம் முதலியவற்றை இழக்க நேரிடும் என்பதைத் தமிழர் உணர்கிறார்களா?

மாகாண அல்லது பிரதேச சபைகள் நிறுவப்பட வேண்டுமெனக் காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அடுத்துக் குரல் எழுப்பினார். இவர் சிங்கள மகா சபையின் ஸ்தாபகரும், சிங்களம் மட்டுமே சட்டத்தின் ஆக்கியோனும், தமிழருக்கு எதிரான அரசியலைக் கடைப்பிடித்தவரும் எனப் பெயர் பெற்றவர். இச்சபைகளை அமைக்க வேண்டுமென வாதாடிய அவரின் உள்நோக்குத்தான் என்ன? சிங்களப் பகுதிகளில் சிறப்புடன் வாழ்கின்ற தமிழரை அரசாங்க சேவை வர்த்தகம் வியாபாரம் போன்ற இன்னோரன்ன துறைகளில் இருந்து நசுக்கி ஒடுக்கவே அவர் இச் சபைகளை அமைக்கத் திட்டமிட்டார். இத்தகைய சபைகளை அமைப்பதன் மூலம் தமிழரை வடகிழக்கு மாகாணங்களுக்குள் சாதுர்யமாக ஒதுக்கவும் ஏனைய பகுதிகளைச் சிங்கள மக்களுக்காகப் பாதுகாக்கலாம் எனவும் அவர் கருதினார்.

திரு. பண்டாரநாயகாவிற்குப் பின்னர் மாவட்ட அல்லது பிரதேச சபைகளுக்கு சாதகமான வாதத்தைச் சமஷ்டிக் கட்சியினர் ஆரம்பித்தனர். சமஷ்டி ஆட்சி அமைப்பை இலங்கையில் ஸ்தாபிப்பதே சமஷ்டிக் கட்சியினரின் முதல் நோக்கமாக இருந்தது. அவர்களது திட்டங்களில் பிரதேச சபைகளோ மாவட்ட சபைகளோ இடம்பெறவில்லை, ஆனால் இவர்களது சமஷ்டிக் கோரிக்கைக்கு திரு. பண்டாரநாயகா இணங்க மறுத்து விட்டார். அதற்குப் பதிலாக தனது நெடுங்காலக் கனவான பிரதேச சபைகளை நிறுவுவதற்கு சமஷ்டிக் கட்சியினருக்கு ஆலோசனை கூறினார். இதனை அடுத்தே சமஷ்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியினர் பிரதேச சபைகளைக் கோர ஆரம்பித்தனர். சமஷ்டி அரசியல் அமைப்பிற்கு முதற்படியாக இப்பிரதேச சபைகள் அமையும் எனத் தமது ஆதரவாளரை ஏமாற்றவும் திருப்திப் படுத்தவும் முடியும் எனச் சமஷ்டிக் கட்சியினர் கருதினுர்கள். எனவே, அவர்கள் பிரதேச சபைகளை அமைப்பதற்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து பிரதேச சபைகள் பற்றிய வியாக்கியானம் செய்பவராக சமஷ்டிக் கட்சியினர் மாறினுர்கள். திரு. பண்டாரநாயகாவுக்குப் பின்னர் அரசாங்கம் அமைத்த ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இப்பிரதேச சபைகளை அமைப்பதற்குச் சமஷ்டிக் கட்சியினர் விடுத்த கோரிக்கையை நிராகரித்தார். பிரதேச சபைகளுக்குப் பதிலாக ஆகக் கூடியது மாவட்ட சபைகளையே வழங்க முடியும் எனவும் அவர் கருத்துத் தெரிவித்தார். வேறு ஒரு மார்க்கத்தையும் கடைப்பிடிக்க முடியாத நிலையில் இருந்த சமஷ்டிக் கட்சியினர், மேலும் ஒரு படி இறங்கி மாவட்ட சபைகளை ஏற்பதற்கு இணங்கினுர்கள். சமஷ்டி அரசியல் அமைப்பிற்கு மாவட்ட சபைகள் மிக நுண்ணிய முதற்படி என வியாக்கியானம் அளிக்கலாம் எனவும் அவர்கள் கருதினுர்கள்.

சமஷ்டிக் கட்சியினர் பிரதேச அல்லது மாவட்ட சபைகள் பற்றி வாதாடி வருவதன் காரணம் என்ன? முதலாவதாக, முன்னர் குறிப்பிட்டது போல சமஷ்டிக் கட்சியினரை எதிர்நோக்கிய சூழ்நிலைகள் இச்சபைகளுக்காக வாதாடுமாறு அவர்களை நிர்ப்பந்தித்தது. சமஷ்டி அமைப்பை பண்டாரநாயகா தம்பதிகள் வழங்க மறுத்து விட்ட காரணத்தால், இச் சபைகளை சமஷ்டிக் கட்சியினர் ஏற்றுக் கொண்டனர். இரண்டாவதாகத் தமிழ்ப் பகுதிகளில் உள்ள தமது வாக்காளரை ஏமாற்றக்கூடிய உபாயமாக இச்சபைகளை உபயோகிக்க அவர்கள் கருதினுர்கள். தமிழ் அரசை நிலைநாட்டுவோம் என வாக்காளருக்கு மார்பு தட்டிச் சத்தியஞ் செய்த சமஷ்டிக் கட்சியினர் பாராளுமன்றத்திற்கு ஏகோபித்து அனுப்பப்பட்டனர். ஆனுல், தமிழ் அரசைப் பெறமுடியாத காரணத்தால் தமது ஆசனங்களைப் பாராளுமன்றத்தில் காப்பாற்றிக் கொள்வதற்கு மக்களிடம் சமாதானம் கூறவேண்டிய நிலையில் இருந்தார்கள். ஆகவே, தம்பட்டம் அடித்துக் கூறிய சமஷ்டிக் கட்சியினர் தமிழ் அரசின் முதற்படி எனக் கூறுவதற்கு எதையாவது பெறவேண்டுமே என்ற நிலையில் இருந்தனர். எனவே வாக்காளரின் மனதைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக மாவட்ட சபைகள் தமிழருக்கு அழிவையும் நாசத்தையும் கொண்டு வரும் என நன்ருகத் தெரிந்த பொழுதும் அவற்றை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார்கள். மாவட்ட சபைகளை அமைப்பதால் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படுவார்கள் என்றும் அரசாங்க உத்தியோகம், வர்த்தகம், வியாபாரம் போன்ற பல துறைகளில் முன்னேடிகளாக விளங்கும் தமிழர் தமது வாய்ப்புகளை இழக்க நேரிடும் எனவும் சமஷ்டிக் கட்சியினர் உணர்ந்து கொள்ளாமல் இல்லை. ஆனுல் மாவட்ட சபைகள் அமைக்கப்பட வேண்டும் எனவும் அவை அமைக்கப்படும் எனவும் மார்பு தட்டிப் பெருங்குரல் எழுப்பிய காரணத்தால் இச் சபைகள் அமைக்கப்படாத பட்சத்தில் அடுத்த தேர்தலில் தாம் பதவியை இழக்க நேரிடும் என்பதையும் உணர்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழருக்கு நிரந்தரமான உரிமைகளைப் பெறுவதை விடுத்து தமது ஆசனங்களையே சமஷ்டிக் கட்சியினர் முக்கியமாகக் கருதினார்கள். அவர்கள் எதிர்நோக்கிய சூழ்நிலையில் தமிழ் இனத்திற்குப் பேரபாயத்தை விளைவிக்கக்கூடிய எதையுமே தமது ஆசனத்தைக் காப்பாற்றும் ஒரே நோக்கத்திற்காக ஏற்பார்கள்.

மாவட்ட சபைகளின் அமைப்பு என்ன? அதன் அதிகாரங்களும் கடமைகளும் யாவை? மாவட்ட சபைகள் மீது மத்திய அரசாங்கம் செலுத்தக்கூடிய அதிகாரம் எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது? இவைபோன்ற வினாக்களுக்கு அரசாங்க தரப்பின் பதிலை அறிந்தோமாயின் உத்தேச மாவட்ட சபைகள் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் இக்கட்டுரை எழுதியிருக்கலாம் ஆனால் குறிப்பிட்டுக் கூருத பொதுப்படையான கருத்துக்களையே அரசாங்க அதிகாரிகள் இதுவரைகாலமும் கூறியிருக்கிருர்கள். பட்டினசபைகளுக்கும், கிராமச் சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்கள் கூட உத்தேசமாவட்ட சபைகளுக்கு இருக்க மாட்டாதெனப் பிரதம மந்திரி பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். தற்பொழுது இயங்கி வரும் மாவட்ட இணைப்புக் குழுக்களுக்கு இடப்பட இருக்கும் பெயர் மாற்றந்தான் மாவட்ட சபைகள் என, அரசாங்கத்தின் தீர்மானத்தை உதவி மந்திரி எஸ். டி. எஸ். ஜெயசிங்கா பாராளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார். தற்பொழுது இயங்கி வரும் உள்ளூராட்சி மன்றங்களை மேற்பார்வை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாவட்ட சபைகளிடம் அதிகாரம் இருக்காது என உள்ளூராட்சி மந்திரி தெரிவித்துள்ளார். மாவட்ட சபைகள் தற்பொழுதுள்ள கச்சேரி அமைப்பு முறையை மாற்றி அமைக்காது என திரு. சா. வே. ஜே. செல்வநாயகம் கூறியுள்ளார். இங்கிலாந்தின் கவுன்டி சபைகளையும், கண்டி மக்களால் கோரப்பட்ட மாகாண சபைகளையும், திரு. பண்டாரநாயகாவினுல் யோசிக்கப்பட்ட பிரதேச சபைகளையும் உத்தேச மாவட்ட சபைகள் எவ்விதத்திலும் ஒத்திருக்கமுடியாது என்பதை மேற்கூறிய உத்தியோக பூர்வமான அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மேலும், மேற்கூறிய சபைகள் எவற்றுடனுவது மாவட்ட சபைகளைச் சமன் செய்து ஒப்பிட முடியாது என்பதையும் அரசாங்கக் கருத்துக்கள் தெளிவாக விளக்குகின்றன. எனவே, தளர்ச்சி ஏற்பட்டுள்ள ஒரு கட்சியின் பாராளுமன்ற ஆசனங்களைக் காப்பாற்றும் எண்ணத்துடன் உருவாக்கப்பட்ட அதிகாரமற்ற உபயோகமில்லாத விநோத அமைப்பு முறையாகவே உத்தேச மாவட்ட சபைகள் காட்சியளிக்கும்போல் தோன்றுகிறது. மாவட்ட சபைகள் மசோதா இன்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. மாவட்ட சபைகளுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் இன்றும் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் மாவட்ட சபைகளுக்குக் குறிப்பிட்ட சில அதிகாரங்கள் வழங்கப்படும் என வைத்துக் கொண்டு இத்தகைய அதிகாரங்களை உடைய இங்கிலாந்தின் கவுன்டி சபைகளுடன் அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

மாவட்ட சபைகள் தமிழ்ப்பகுதிகளில் அமைப்பது போலச் சிங்களப் பகுதிகளிலும் அமைக்கப்படும். தமிழ்ப் பகுதிகளில் உள்ள மாவட்ட சபைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படும் அதே அதிகாரங்கள் சிங்களப் பகுதிகளில் உள்ள மாவட்ட சபைகளுக்கும் வழங்கப்படும். மாவட்ட சபைகளின் அதிகாரத்திற்கும் தீர்ப்பிற்கும் என ஒதுக்கப்பட்ட விடயங்கள், பின்னர் மத்திய அரசாங்கத்தின் தலையீட்டுக்கு உள்ளாக மாட்டாது. அந்த விடயங்கள் குறித்து மாவட்ட சபைகளின் தீர்ப்பே இறுதியானதாக இருக்கும். ஆரம்பக் கல்வி முறையை மாவட்ட சபைகளின் பொறுப்பிலேயே விடப்படலாமென வைத்துக்கொள்வோம். சிங்களப் பகுதிகளில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளை மேற்கொண்டு நடத்தவோ அல்லது புதிய தமிழ் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கோ அப்பகுதி மாவட்ட சபைகள் ஒரு சதமேனும் செலவு செய்யமறுத்து விடலாம். தமிழ் மொழியில் கல்வி கற்பதற்கு சகல வசதிகளையும் அளிக்க வேண்டும் என இன்றைய நிலையில் மத்திய அரசாங்கம் சட்டப்படி கடமைப்பாடுடையது. மாவட்டசபைகளின் அதிகாரத்தின் கீழ் இத்தகைய விடயங்கள் பொறுப்பளிக்கப்பட்ட பின்னர், தமிழ்ப்பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கோ அப்பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு விருப்பமில்லாத மாவட்ட சபைகளை வற்புறுத்தவோ மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கமாட்டாது. வீதிகள் அமைத்தல், சிறிய விவசாயத் திட்டங்கள், சுகாதாரசேவை, மீன்பிடி உற்பத்தி ஆகியன மாவட்ட சபைகளின் அதிகாரத்தில் ஒப்படைக்கப்படுமாயின் இத்துறைகளில் ஈடுபட்டிருக்கும் ஈடுபடவிருக்கும் அரசாங்க, பொதுசன சேவையாளரை மாவட்ட சபைகளே தேர்ந்து எடுக்கும். இந்த நிலைமையில் சிங்களப் பகுதிகளில் உள்ள மாவட்ட சபைகளில் தமிழர் நியமிக்கப்படமாட்டார்கள் என்பதை நாம் எதிர் பார்க்கலாம். ஒவ்வொரு மாவட்ட சபையும் தனது தொகுதி மக்களுக்குத்தான் சலுகை வழங்கும். எனவே சிங்களப் பிரதேசங்களில் உள்ள மாவட்ட சபைகளில் சிங்களரே வேலை வாய்ப்புப் பெறுவார்கள். ஒரு மாவட்ட சபைக்கு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகாரங்கள் அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு அம்மாவட்டசபைப் பகுதியைச் சேராதவர்கள் வேலைவசதிகளை இழக்க நேரிடும். தமிழ்ப்பேசும் மக்களுக்கு இருக்கக்கூடிய 5 மாவட்ட சபைகளுடன் சிங்களப் பகுதிகளின் 17 மாவட்ட சபைகளை சீர்தூக்கி நோக்குகையில் தமிழ் வாலிபருக்கு வேலைவாய்ப்பு மிகவும் வரையறுக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் காண முடிகிறது. மாவட்ட சபைகளின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படும் பொழுது, அதாவது மத்திய அரசாங்கத்தின் கடமைகள் குறைந்து கொள்ளும் பொழுது, தமிழரின் எதிர்காலச் சுபீட்சம் மேன்மேலும் குறுக்கப்படுகிறது. மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தில் இக்கடமைகள் இருக்குமாயின் இலங்கையர் அனைவரும் அவர் எந்த இனத்தைச் சார்ந்தவராக இருப்பினும், எப்பகுதியைச் சேர்ந்தவராயினும், வேலை வாய்ப்பைப் பெறுவதற்குச் சமசந்தர்ப்பத்தை உடையவராக இருப்பார்.

மாவட்ட சபைகள் நிறுவப்படுமாயின் அரசாங்கப் உத்தியோகங்களைப் பொறுத்த மட்டில் மாத்திரமல்லாது தனியார் துறைகளிலும் வர்த்தகம், வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டிருப்போருக்கும் தொழில் வசதிகள் குன்றும். மேற்கூறிய துறைகளில் ஈடுபட்டிருப்போருக்கு அல்லது புதிதாக ஈடுபடும் எண்ணத்தை உடையவர்களுக்கு சிங்களப் பகுதிகளில் உள்ள மாவட்ட சபைகள் புதிய சட்டங்களை உருவாக்கலாம். அச்சட்டங்கள் அக் குறிப்பிட்ட மாவட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைப் பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவருக்கு மட்டும் லைசென்ஸ் பெற்றுக் கொள்ளும் உரிமையை வழங்கலாம். இச் சந்தர்ப்பத்தில் சிங்களப் பகுதிகளில் இத்துறைகளில் ஈடுபட்டிருக்கும் தமிழ் மக்கள் தமது மூட்டை முடிச்சுக்களுடன் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலைதான் ஏற்படும்.

மாவட்ட சபைகள் நிறுவப்பட்டால் தமிழர் தற்பொழுது அனுபவிக்கும் சமூக, பாவனை சேவைகள் பாதிக்கப்படுவதுடன் சீர்குலையவும் காரணமாக அமையலாம். இவை இருந்த இடம் தெரியாது மறைந்து போகவும் கூடும். தமிழ்ப்பகுதிகள் இயற்கை வளமும் பொருளாதார வருவாயும் அற்று இருப்பது பகிரங்க உண்மையாகும் இந்த நிலையில் சமூக பாவனை சேவைகளை நிலைநாட்ட தமிழ்ப் பகுதிகளில் உள்ள மாட்ட சபைகளிடம் போதியளவு பணம் இருக்க மாட்டாது ஆரம்பக் கல்வி முறையை மாவட்ட சபைகள் பொறுப்பேற்கும் பட்சத்தில், தமிழ்ப் பகுதிகளில் உள்ள மாவட்ட சபைகளில், புதிய ஆசிரியரை நியமிக்காவிடினும் தற்பொழுது ஆரம்பப்பாடசாலைகளில் உள்ள ஆசிரியருக்குத்தானும் சம்பளம் கொடுப்பதற்குப் பணம் இருக்கமாட்டாது. தமிழ்ப் பகுதிகளில் புதிய பாடசாலைகளை நிறுவுவதற்கும் தற்போதுள்ள பாடசாலைக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கும் தமிழ் மாவட்ட சபைகளுக்குப் போதுமான வருவாய் கிடைக்குமா? இதேபோல பொதுச் சுகாதார சேவை மாவட்ட சபைகளிடம் கையளிக்கப்படுமாயின் கிராமங்களில் சிகிச்சை நிலையங்கள் அமைப்பதற்கு, வைத்திய உபகரணங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு, டாக்டர்கள், தாதிகள் ஆகியோரின் செலவீனங்களுக்குத் தமிழ்ப் பகுதி மாவட்ட சபைகளிடம் நிதி திரளுமா? மேற்படி செலவீனங்களுக்கு மத்திய அரசாங்கம் மான்ய உதவி அளிக்கும் எனச் சமஷ்டிக் கட்சியினர் பதில் அளிக்கலாம். ஆனால், தமிழ்ப் பகுதி மாவட்ட சபைகளுக்கு மான்ய ஒதுக்கீட்டின் பொழுது பாரபட்சம் காட்டப்பட்டதா? நாட்டின் சகல பகுதிகளையும் சமமாகக் கருதி சமூக பொருளாதார சேவைகளை நிலைநாட்ட வேண்டிய கடமைப்பாடுடைய மத்திய அரசாங்கமே பல பாரபட்சமான. நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதை நாம் கண் கொண்டு பார்க்கவில்லையா? மாவட்ட சபைகளின் அதிகாரத்தினுள் இச் சேவைகள் கொண்டுவரப்பட்டால், அச்சேவைகளை நிலைநாட்ட வேண்டியது அச் சபைகளின் தலையாய கடனாகும். இச்சந்தர்ப்பத்தில் மத்திய அரசாங்கம் மேன்மேலும் பாரபட்சம் காட்டாது இருக்குமா? இவற்றை விட, தமிழ்ப் பகுதிகளில் உள்ள மாவட்ட சபைகளுக்கு மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் மான்யம் இரு காரணங்களில் தங்கி உள்ளது. அம் மாவட்ட சபைகளின் பகுதிகளில் அரசாங்கத்திற்கு வருமானத்தைக் கொடுக்கக் கூடிய பொருட்களின் உற்பத்தித் தொகை ஒரு காரணம். அம் மாவட்ட சபையின் பகுதியில் வாழும் சனத்தொகையின் விகிதம் மற்றைய காரணமாகும். இவ்விரு காரணங்களையும் கருத்திற் கொண்டே மத்திய அரசாங்கம் மான்யம் ஒதுக்கும். அதிக வருவாயை அரசாங்கத்திற்கு அளிக்கும் தேயிலை, ரப்பர், தென்னை, தமிழ்ப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. சனத்தொகையைப் பொறுத்த வரையிலும் தமிழ் மக்கள் சிங்கள மக்களின் ஒரு சிறு விகிதமாகவே உள்ளனர். ஆகவே, தமிழ்ப் பகுதி மாவட்ட சபைகள் சிங்களப் பகுதிகளிலும் பார்க்க மிகக் குறைவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
249865

மான்ய உதவியையே பெறமுடியும். விவசாயம், கைத்தொழில், மீன்பிடித்துறை
ஆகியனவற்றை அபிவிருத்தி செய்வதற்குத் தமிழ்ப்பகுதிகளில் உள்ள மாவட்ட
சபைகளிடம் போதுமான அளவு மூலப்பணம் இருக்கமாட்டாது. இது விடயத்
தில் மத்திய அரசாங்கங்கத்தின் உதவியை எதிர்பார்க்கவும் முடியாது. ஏனெ
னில் சிங்களப் பகுதிகளில் உள்ள மாவட்ட சபைகளின் வற்புறுத்தல் காரண
மாக மத்திய அரசாங்கம் தனக்குக் கிடைக்கக்கூடிய வருவாயைச் சிங்களப்
பகுதிகளிலேயே தீர்த்து விட்ட நிலையில் இருக்கும். ஆகவே மாவட்ட சபை
கள் அமைக்கப்பட்டால் சமூக பாவனை சேவைகளின் நிலை வீழ்ச்சி அடையும்
என்பது வெள்ளிடைமலை இதனால் கீழ்த்தரமான வாழ்க்கைக்கும் மேலோங்
கும் பஞ்சத்திற்கும் துன்பத்திற்கும் தமிழர் உள்ளாவார்கள் ஏனெனில் தமிழ்ப்
பகுதிகளில் இயற்கை வளமும் பண வருவாயும் இல்லை. தற்பொழுது இயங்கி
வரும் சேவைகளைத் தொடர்ந்து நிலைநாட்டவும், புதிய பொருளியல் திட்டங்
களை ஆரம்பிக்கவும் தமிப்பகுதிகளில் பணம் இல்லை. நிதி திரட்டவும் முடியாது.
தமிழரின் சனத்தொகை குறைவாக இருந்தலினாலும், அவர்களின் உற்பத்திக்
குறைவு காரணமாகவும் மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் மான்யம்
துன்பப்படத்தக்களவு குறைவாகவும் பற்றாத நிலையிலும் இருக்கும் இக்கார
ணங்களினால் தமிழர் துன்பத்திற்கு ஆளாவார்கள்.

பணப்பற்றுக்குறை காரணமாக, மிகவும் அத்தியாவசியமான சேவைகளை நிலைநாட்ட, தமிழ்ப் பகுதி மாவட்ட சபைகள் வரியிறுப்பாளரிடமிருந்து கூடிய விகிதத்தில் வரிகளை வசூலிக்க நிர்ப்பந்திக்கும். ஆகவே, மாவட்ட சபைகளை வைத்திருக்க வேண்டும் என்ற ஒரே சந்தோஷத்திற்காகத் தமிழர் தமது செல்வத்தை இழக்க நேரிடும்.

மாவட்ட சபைகள் நிறுவப்பட்டால், நிறுவப்பட இருக்கும் 22 மாவட்ட சபைகளில் 17 சபைகளில் "நியாயமான அளவு தமிழ் உபயோகம்" கூட இருக்க மாட்டாது. இப் 17 சிங்களப் பகுதிகளிலும் சகல விடயங்களுக்கும் சிங்கள மொழியே உபயோகத்துக்கு வரும். தமிழ் மொழிக்கு எவ்வித இடமும் அளிக்கப்படமாட்டாது. தமிழில் எழுதப்பட்ட கடிதங்களுக்குச் சிங்கள மாவட்ட சபைகள் தமிழிலே பதில் அனுப்பமாட்டா. நாடு முழுவதற்கும் பொறுப்பாக உள்ள மத்திய அரசாங்கம், காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் நியாயமானளவு தமிழ் உபயோகச் சட்டத்தின் பலனாக, நாட்டின் எப்பகுதியிலும் எந்த ஒரு அரசாங்க ஊழியருக்குத் தமிழில் எழுதப்பட்ட கடிதங்களுக்கு இன்றைய நிலையில் தமிழிலேயே பதில் அனுப்பக் கடமைப் பட்டுள்ளது. மேலும் அரசாங்க வெளியீடுகள் அனைத்தையும் தமிழிலும் வெளியிடுவதற்கும், தமிழ்ப் பிள்ளைகள் தமிழில் கல்வி கற்கவும் வசதி அளிக்கப் பட்டு உள்ளது. தமிழர் தமிழ் மொழியில் பரீட்சை எழுதி பொதுச்சேவையில் சேர்ந்து கொள்ளலாம். ஆனால் மாவட்ட சபைகள் அமைக்கப் பட்டால் 17 சிங்கள மாவட்ட சபைகளும் தமிழ்க் கடிதங்களுக்குத் தமிழில் பதில் அனுப்பமாட்டா. தமது அரசாங்க வெளியீடுகளைத் தமிழில் வெளியிடா. தமிழ்ப் பிள்ளைகள் தமிழில் கல்வி பெற வசதியளிக்க மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் பரீட்சை எழுதிய ஒருவருக்குத் தமது பகுதியில் வேலை வசதி அளிக்கமாட்டா. தமிழர் பெற்று வரும் பல சலுகைகளுக்குக் காரண மாக உள்ள பண்டாரநாயகாவின் நியாயமானளவு தமிழ் உபயோகச் சட் டத்தை மாவட்ட சபைகள் அழித்துவிடும் என்பது இதனால் புலனாகின்றது. 17 சிங்கள மாவட்டங்களிலும் சிங்களம் மட்டும் சட்டம் மேலோங்கி வளரும் ஏனைய 5 தமிழ் மாவட்டங்களிலும் அதன் வளர்ச்சி நியாயமானளவு தமிழ் உபயோகச் சட்டத்தைப் பொறுத்திருக்கும். இத்தகைய சூழ்நிலையில் 17 சிங்கள மாவட்டங்களில் உள்ள தமிழர் சிங்கள மொழியைக் கற்க நிர்ப் பந்திக்கப் படுவார்கள். இப்பகுதிகளில் உள்ள தமிழ்ப் பிள்ளைகள் சிங்கள மொழியிலேயே கல்வி பயில்வார்கள். காலகதியில் கடந்த 20 ஆண்டுகள் காலமாக சமஷ்டிக் கட்சியினரின் நீலிக்கண்ணீருக்குப் பாத்திரமான மலை நாட்டுத் தமிழர் உட்பட சகல தமிழ்ப் பேசும் மக்களும் சிங்கள இனத்து டன் ஒன்றிக் கலந்து விடுவார்கள். சிங்கள இனத்துடன் ஒன்று சேர்ந்த நீர்கொழும்பு சிலாபப் பகுதித் தமிழர் போல தமிழினம் என்றென்றும் அவர் களை இழக்க நேரிடும்.

முன்னைய பந்திகளில் குறிப்பிடப்பட்டவற்றின் சுருக்கம்.

1. தேசிய நலனுக்கும் இலங்கையிலுள்ள சிறுபான்மை இனத்தின் நலனுக்கும் மாவட்ட சபைகள் பொருந்தாததும் இலங்கைக்கு அனுவசியமானதுமாகும்.

2. கண்டியர் அல்லாதோரைக் கண்டியின் பாகங்களில் இருந்து விரட்டவே கண்டி மக்கள் 1928-ல் மாகாணசபைக்காக வாதாடினர்.

3. சிங்கள மாகாணங்களில் இருந்து தமிழரை விரட்டியடித்து வடகிழக்கில் ஒடுக்குவதற்காக பண்டாரநாயகா மாகாண அல்லது பிரதேச சபைகளைக் கோரினர்.

4. சமஷ்டிக் கோரிக்கைக்கு பண்டாரநாயகா தம்பதிகள் இணங்க மறுத்ததால் சமஷ்டிக் கட்சியினர் பிரதேச சபைகளுக்கும் இணக்கம் தெரிவித்தனர். அடுத்ததாகத் தேர்தலில் தமது ஆசனங்களைக் காப்பாற்ற வேண்டும் என் பதற்காக வாக்காளரிடம் தாம் ஏதோ ஒரு சாதனையை நிலைநாட்டி விட்ட தாகத் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் இருந்தனர். தமிழருக்குப் பாத கம் விளைவிக்கக்கூடிய எதையும் தமது ஆசனங்களை வைத்திருப்பதற்காக ஏற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

5. சிங்கள மாவட்டங்கள் பதினேழிலும் அரசாங்க சேவை, வர்த்தகம், ஏனைய தொழில்களை மாவட்ட சபைகள் சிங்கள மயமாக்கும்.

6. அரசாங்க சேவை, வர்த்தகம், வியாபாரம் ஏனைய தொழில்கள் 17 சிங்கள மாவட்டங்களிலும் தமிழருக்குத் தடைசெய்யப்படுவதால் தமிழ் மக்கள் தமிழ் மாகாணங்களுக்கு ஒதுக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தற்பொழுது அனுபவிக்கக்கூடிய சமூக பொதுப்பாவனைச் சேவைகளை
தற்பொழுது அனுபவிக்கக்கூடிய சமூக பொதுப்பாவனைச் சேவைகளை வேலை
மாவட்ட சபைகள் காரணமாக தமிழர் இழந்து பஞ்சத்தாலும், வேலை
யின்மையாலும், துன்பப்பட்டுக் கீழ்த்தரமான வாழ்க்கை நடத்துவர். தற்
போதுள்ள சேவைகளை நிலைநாட்ட அல்லது புதிய சேவைகளை ஆரம்பிக்கத்
தமிழ் மாவட்ட சபைகளிடம் பணம் இருக்கமாட்டாது.

8. மிகவும் அத்தியாவசியமான சேவைகளை நிலைநாட்ட வரியிறுப்பாளர் மேல
திக வரிகளை எதிர்நோக்குவார்கள்.

9. நியாயமான அளவு தமிழ் உபயோகம் 17 சிங்கள மாவட்டங்களிலும் மாவட்ட சபைகள் அமைப்பதனுல் மூலம் அழிந்துபோகும். உதாரணம்: தமிழ்த் தபால் களுக்குத் தமிழில் பதில் இல்லை. அரசாங்க பிரசுரங்கள் தமிழில் இருக் காது. தமிழில் கல்வி கற்க வசதி இல்லை. பொது சேவைப் பரீட்சை கள் தமிழில் நடத்தப்பட மாட்டா. 17 மாவட்டங்களிலும் சிங்களம் மட்டுமே தலைதூக்கி நிற்கும்.

10. மாவட்ட சபைகளை அமைப்பதால் 17 சிங்கள மாவட்டத்திலுமுள்ள தமிழர் கள் சிங்களம் படிக்க நிர்ப்பந்திக்கப்படுவர். தமிழ்ப் பிள்ளைகள் சிங்கள மொழியில் கல்வி கற்பர். காலகதியில் அப்பகுதித் தமிழர்-சிங்கள இனத் துடன் ஒன்றிக் கலந்துவிடுவர்.

*   *   *   *

அமைச்சு :

“பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்”

—தெய்வப்புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழில் அபிவிருத்தி

"துரை"

இலங்கையில் மீன் பிடித்தல் சுமார் 100 பாகங்கள் வரை ஆழமுள்ள கரையோர கடற் பகுதிகளுக்கு வரையறுக்கப்பட்டு இருக்கிறது. யாழ்ப்பாணம், காங்கேசன் துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் கடற்பகுதிகள் விசாலமுடையன. ஏனைய பகுதிகள் குறுகியதாகவே காணப்படுகின்றன. இக்குறுகிய பகுதிகள் 5 மைல் முதல் 18 மைல் வரை உள்ளன. மன்னருக்கும் யாழ்ப்பாணக் குடாவிற்கும் இடையில் உள்ள பகுதி மிகவும் விசாலமானது. இது தூத்துக்குடிக் கடற்பகுதியுடன் 100 பாகங்கள் ஆழம்வரை இணைகிறது. இப்பகுதி 11,800 சதுர மைல் விசாலமுடையது. இதில் 7,354 சதுர மைல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளது.

மொத்தப் பரப்பில் இப் பகுதி 62 சத வீதமாகும். இலங்கையின் கரையோரப் பகுதிகளில் 63-ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதல் 64-ம் ஆண்டு புரட்டாதி மாதம் வரை 87,779 தொன் மீன் பெறப்பட்டது எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இத் தொகையில் 70,030 தொன் மீனை வடக்கு கிழக்கு மாகாணங்கள் வழங்கின. இது மொத்த உற்பத்தியின் 79 சத வீதமாகும். வட, கிழக்கு மாகாணங்களின் உற்பத்தி விபரம் வருமாறு:-

| | இடம் | 10 பாகங்கள் வரை ஆழமுள்ள கரைப் பகுதியின் பரப்பு சதுர மைலில் | பிடிக்கப்பட்ட மீனின் நிறை (தொன்) |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் | 1777 * | 21658 |
| 2. | கல்முனை | 320 | 12946 |
| 3. | மட்டக்களப்பு | 474 | 10050 |
| 4. | மன்னர் | 945 * | 8499 |
| 5. | முல்லைத்தீவு | 750 | 5394 |
| 6. | காங்கேசன் துறை | 775 * | 3324 |
| 7. | அரிப்பு | 678 | 2639 |
| 8. | பருத்தித்துறை | 811 * | 2486 |
| 9. | திரிகோணமலை | 254 | 2433 |
| 10. | மூதூர் | 570 | 641 |
| | மொத்தம் | 7354 | 70070 |

* இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நடுத்தூரத்தில்

மீன்பிடிப் படகு மூலம் வருடம் சராசரியாக 600 தொன் மீன் ஆழ்கடலிலிருந்து பெற முடிகிறது. எனவே, 10 படகுகள் இருப்பின் 6000 தொன் மீனையே பெற முடியும். கரையோரப் பகுதிகளில் இக் காலவரையில் 90,000 தொன் மீனைப் பெற முடியும். ஆகையால் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுடன் ஒப்பிடுகையில் கரையோர மீன் பிடி முறை முன்னணியில் நிற்கிறது. இலங்கையின் மீன்பிடி அபிவிருத்தியும் இதனிலேயே தங்கியிருப்பது வெளிப்படையாகின்றது. மீன் அபிவிருத்தியின் 79 சத விகிதத்தை அளிக்கும் வடகிழக்கு மாகாணங்கள், தமது முறைகளை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையின் சுய தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். வடகிழக்கு மாகாணங்களின் மீன் பிடி அபிவிருத்தி சம்பந்தமாகப் பின்வரும் குறிப்புகளை அவதானிப்பது சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சுமார் [3½] தொன் எடையுள்ள 26 30 அடிவரை நீளமுள்ள யந்திரப் படகுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

2. வள்ளம், தெப்பம் போன்றவற்றிற்கு யந்திர சாதனம் அமைத்தல்.

3. நீர்கொழும்பில் உள்ள மீன்பிடிப் பயிற்சி நிலையம் போன்ற ஒரு நிலையத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்தல், வடகிழக்கு மீனவர்கள் தற்பொழுது தமிழில் தமது பயிற்சியைப் பெறுவதற்கு நீர்கொழும்புக்கே செல்ல வேண்டியுள்ளது. மேலும், படகின் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் பயிற்சி வழங்கல் வேண்டும்.

4. மீன்பிடித் துறைகளின் கேந்திர ஸ்தானங்களில் படகு யந்திரங்கள்பழுதுபார்க்கும் வேலைத் தளங்கள் அமைக்கப்படுவது சிறந்தது.

5. பருத்தித்துறை, மயிலிட்டி, கல்முனை; முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்குவசதி அளிக்கப்படுவதுடன் யாழ். நகரில் உள்ள தற்போதையநிலையை அபிவிருத்தி செய்தல்.

6. 'பீட்ரூ' பிரதேசம் என அழைக்கப்படும் 1000 சதுர மைல் விஸ்தீரணம் உள்ள கடல் பிரதேசம் மீனவரால் உபயோகிக்கப்படாது கன்னிப்பிரதேசமாகவே இருந்து வருகிறது. இப்பகுதி பருத்தித்துறைக்கும் காங்கேசன்துறைக்கும் அண்மையில் உள்ளது. இவ்விரு இடங்களில் ஒன்றை மீன்பிடித்துறைமுகமாக்கவேண்டியது அவசியம். மேலும் 70-80 அடி நீளமுள்ளதும் 200-250 குதிரைச் சக்தி கொண்டதுமான யந்திரப் படகுகள் மூலம் இப் பகுதியில் ஆழ்கடல் மீன்பிடிக்கலாம், வல்வெட்டித்துறைப் படகு உற்பத்திச் சாலையில், இப் படகுகளைத் தயாரிக்கலாம்.

7. வடகிழக்கு மீனவர்க்குத் தேவையான சகல வலைகள், நூல், மிதப்பிகள் ஆகியவற்றைத் தயாரித்து உடனுக்குடன் வழங்குவதற்கேற்ற தொழிற்சாலையை யாழ்ப்பாணத்தில் அமைத்தல்.

8. கொழும்புக்கு அனுப்ப முடியாத மீனைப் பதனிட்டு டப்பாக்களில் அடைப்பதற்கேற்ற தொழிற்சாலையை மன்னாரில் அல்லது யாழ்ப்பாணத்தில் அமைத்தல்.

9. குளிர்சாதன வசதி உள்ள மீன் சேமிப்புச் சாதனத்தை காங்கேசன்துறையில் நிர்மாணித்தல்.

## கடல் உப - பொருட்கள்

**கடற்பூச்சி:**

யாழ்ப்பாணத்தில் குறிப்பாகக் குடாக்களில் இவை காணப்படுகின்றன. சீன மக்களால் விரும்பி உண்ணப்படும் கடல் வாழ் கம்பளிப்பூச்சி வகைதான் இக் கடற்பூச்சிகள் பேச்-டி-மெர் என ஆங்கிலத்தில் வழங்கப்படும். இப் பூச்சிகளுககுத் தகுந்த சூழ்நிலைகளை அமைதது யாழ்குடாவில் இத் தொழிலை அபிவிருத்தி செய்யலாம். இத் தொழிலில் சம்பந்தப்பட்ட மீனவர்கள் சிறப்பாக வர்த்தகம் செய்கின்றனர். ஹொங்கொங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இப்பூச்சிகளுக்கு அதிக கிராக்கி உண்டு.

**கடற் செடிகள்:**

'சார்கசம்' என அழைக்கப்படும் மண்ணிறக் கடற்செடியில் இருந்து 'அல்ஜினிக் அசிட்' என்ற திராவகத்தைத் தயாரிக்கலாம். இத்திராவகம பசைப்பிடிப்பு உள்ளது. சிலாவததுறையை அணமிதத முததுக்குளங்கள் யாழப்பாணக் கரையைச சூழநத பகுதிகள், மண்டைதீவு, நயினாதீவு, புஙகுடுதீவு போன்ற தீவுப்பகுதிகளிலும இச்செடிகள் காணப்படுகின்றன. இத் திராவகத்தில இருந்து 'அலஜின்' என்ற உப்பு தயாரிக்கபபடுகின்றது. ஜாம், பழரசம், கேக், கஸ்ரட், வெண்ணெய்க் கட்டி, பால் மா போன்றவற்றைத் தயாரிப்பதற்கு இவ்வுப்பு உபயோகமாகிறது.

சஞ்சிப்பாசி என தமிழில் அழைக்கப்படும் 'சிரேசிலேரியா' என்ற கடற் செடியில் இருந்து 'அகர்' வத்திகள் தயாரிக்கப்படுகின்றன. இச்செடி கோடலியர் கரை, திரிகோண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை, மன்னார், பளைத்தீவு, இரணைதீவு, யாழ்ப்பாணக் குடா ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. பதப்படுத்தப்படாத காய்ந்த இக் கடற்செடிகளுக்கு மிக்க கிராக்கி இருக்கிறது. இச்செடிகள் பெருமளவில் யாழ்ப்பாணத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இச்செடிகளை வாங்குவதிலும் விற்பதிலும் இப் பகுதி மீனவர்கள் மேலதிக பணத்தைச் சம்பாதிக்கின்றனர்.

## இலங்கையில் உவர் மீன் பண்ணைகள்:

இலங்கையில் ஏறக்குறைய 300,000 ஏக்கர் உவர் நீர் பிரதேசம் உள்ளது. இதில் மூன்றில் ஒரு பகுதி கரையோர மரங்களாலும், செடிகளாலும், சிறு குடாக்களாலும் சூழப்பட்டுள்ளது. இவ் உவர்ப் பிரதேசம் விவசாயத்திற்கு உகந்தது அல்ல. எனினும் மீன் பிடி அபிவிருத்திக்கு இப் பகுதிகள் ஏற்றதாக அமைந்துள்ளன. இவை போன்ற பகுதிகளில் கூடிய அக்கறை காட்டும் இந்திய பசுபிச் நாடுகள் அதனால் அதிக லாபத்தை யும் பெறுகின்றன. இந்தோனேசியாவில் 3,00,000 ஏக்கர் மீன் வாவிகள் உள்ளன. பிலிப்பைன் தீவில் 2,50,000 ஏக்கர் உண்டு. பார்மோசாவில் 25,000 ஏக்கர் உண்டு. 2000 ஏக்கரோ ஹவாய் நகரில் இருக்கிறது. இப்பகுதிகளில் மீன்பிடி அபிவிருத்தியை நோக்குமிடத்து, பிலிப்பைன் தீவில் வருடம் 35,000 தொன் பால் மீன் பெறப்படுகிறது. ஆனால் குறைந்த பரப்பை உடைய பார்மோசா நகர் வருடம் 5,000 தொன் பால் மீனை நவீன உபகரணங்களுடன் கைப்பற்றுகிறது.

உவர் நீர் மீன் பண்ணை முறை நெற் சாகுபடியைப் பலவிதத்தில் ஒத்திருக்கிறது. மீன் வளர்க்கப்படும் சேற்றுக் குளங்களும் நெல் வயல்களும் சுமார் ஒன்றரை அடி நீரைத் தாங்குவதற்கு ஏற்றதாக அமைந்துள்ளன. ஆழமற்ற குளம், குட்டை, நீர்த்தேக்கங்கள் முதலியவற்றைச் சுற்றி வரம்பு கட்டுவதன் மூலம் உவர் நீர்க் குளங்கள் ஆக்கப்படுகின்றன. இப்படியாக உவர் மீன் குளங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர் அவ்வாறு அமைத்தற்கேற்ற சூழ் நிலையை உருவாக்க வேண்டியது அவசியமாகின்றது. தேவையான அளவு நீரைத் தேக்குவதற்கு ஆழமாக்கப்பட வேண்டிய பகுதியும் இதனால் புலனாகும். புதிய குளத்தை அமைப்பதற்குரிய செலவைக் குறைக்க வேண்டுமானால் அலைகள் அரித்த பகுதிகளையும் சதுப்பு நிலங்களையும் தேர்ந்தெடுப்பது சிறந்தது. களிமண் பற்றுடைய சேறு குளத்தின் தளம் இருக்க வேண்டும். கல்மண் நிறைந்த பூமி நீரை அதிக நாட்களுக்குத் தாக்குப் பிடிக்காது. அத்துடன் அத்தகைய தரையில் மீனினம் தமது உணவிற்கு முக்கியமாகத் தங்கயிருக்கும் பாசி வகைகள் வளர முடியாது. நிலம் எவ்வளவுக்கு எவ்வளவு பசளையுடையதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு பாசி வளர்ச்சிக்கு உதவி புரியும். இதனால் மீன் இனம் விருத்தி அடையும்.

வருடத் தேவைக்குப் போதிய அளவு மீன் இரை களத்தில் இருக்கிறதா எனக் கவனித்தல் வேண்டும். பாலை மீன் என தமிழில் அழைக்கப்படும் பால் மீன் மன்னார்க் குடாவில் ஏராளமாகக் காணப்படுகின்றன. இவற்றிற்குப் போதுமான இரையும் அப் பகுதியில் உள்ளன.

பிலிப்பைன் தீவிக் உவர்-நீர் குளங்களில் பாலை மீனுடன் இறால் வளர்க்கப்படுகின்றது. பாலை மீனும், மலற் என அழைக்கப்படும் மீனும், தாவர ஜந்துக்கள் ஆகலால் இறால் வகையை அங்கு வளர்க்க ஏதுவாக உள்ளது. இலங்கையிலும் பாலை மீனுடன் உவர் நீரில் வளர்க்கக்கூடிய இறால் இனங்கள் உள்ளன.

இலங்கையில் விற்றிராறு என்னும் இடத்தில் நடத்தப்பட்ட உவர்-நீர் பரிசோதனைகள் பாலை மீன் பண்ணைகள் வளர்ப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் தென்படுவதை வெளிப்படுத்தியது. பரீட்சார்த்தமாக நடத்தப்பட்ட பரிசோதனையில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பு 1600 முதல் 1720 வரை மீனைத் தந்தது. இந்த விகிதத்தை ஏனைய நாடுகளின் விகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நன்நோக்காகும். பிலிப்பைன் தீவில் உள்ள இலலோ நகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள மீன் பண்ணையில் இரசாயனப் பசளைகள் மூலம் நடத்தப்பட்ட பரீட்சையில் ஒவ்வொரு 2.41 ஏக்கருக்கும் 13,000 மீன் பெறப்பட்டன. மற்றும் போர்மோசா, தைவான் போன்ற நாடுகளின் பரீட்சார்த்தங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் உற்பத்தி அளவு மிகவும் வரவேற்கத்தக்க நிலையில் உள்ளது.

பின்வரும் தகுதி வாய்ந்த பகுதிகளில் உவர்—நீர் மீன் பண்ணைகளை இலங்கையில் ஆரம்பிக்க முடியும்.

| | |
|---|---|
| மன்னர் | 2000 ஏக்கர் |
| ஆனையிறவு | 8000 ஏக்கர் |
| முல்லைத்தீவு | 3000 ஏக்கர் |
| மட்டக்களப்பு | 1000 ஏக்கர். |

மேற்கூறிய 14,000 ஏக்கர் நிலத்தில் 7,500 தொன் முதல் 15,000 தொன் வரையிலான பாலை மீனும் இருலும் அபிவிருத்தி அடையும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. போர்மோசா முறைகளை இங்கு கையாண்டால் 1,500,000 ரூபா முதல் 3,000,000 ரூபா வரை, (இருக்தல் ஒரு ரூபா வீதம்) வருமானத்தைப் பெறலாம். இதனைவிட சுமார் 2000 பேருக்கு வேலை வசதியையும் அளிக்க ஏதுவாக இருக்கும்.

ஒருவர் 10 ஏக்கர் நிலத்தில் உவர் நீர் மீன் பண்ணைகள் நடத்துவாராயின் வருடமொன்றில் ஏக்கர் 6,000 ரூபா வரையில் வருமானத்தை அவர் பெறலாம். சுமார் 1000 ரூபா செலவே இக்காலவரையில் ஏக்கர் ஒன்றிற்கு இருக்கும். எனவே, அவர் 5,000 ரூபா மேலதிக வருமதியை அதாவது இலாபத்தை அடைய முடியும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

* * * *

" நேர்மையே நிறைந்த செல்வம் "

" வாய்மையே வாழ்வளிக்கும் "

" இன்பம் எங்கே என்று அலையாதே
அதன் இருப்பிடம் உனது இதயந்தான் "

—ஓர் அறிஞன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பின்மை பற்றிய சில கருத்துக்கள்

சோ. வன்னியசிங்கம் M. Sc., (Econ) (London)., B. Com. London.
பொருளியல் விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி

இந் நாட்டின் பொருளாதாரத் துறையில் முக்கிய பிரச்சினையாகத் திகழ்வது வேலையில்லாத்திண்டாட்டமே. யுத்த காலத்திற்கு முந்திய 1938-ம் ஆண்டு முடிவில் இலங்கையில் வேலை இணைப்பு இலாகாவில் (Employment Exchange) தங்கள் பெயர்களைப் பதிந்து வைத்தவர்களின் எண்ணிக்கை பதினாறாயிரம். யுத்த காலத்தில் வேலை வாய்ப்புப் பெருமளவில் கிடைத்தமையால் இவ்வாறு பெயர் பதிந்து வைத்தோரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து 1944-ம் ஆண்டில் ஒரு ஆயிரமாக விழுந்து விட்டது. பின்னர் வருடா வருடம் இத் தொகை அதிகரிக்கத் தொடங்கி 1957-ம் ஆண்டு முடிவில் ஒரு இலட்சம் என்ற மட்டத்தைத் தாண்டி விட்டது. 1966-ம் ஆண்டு முடிவில் இந்த எண்ணிக்கை இரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் ஆக உயர்ந்து விட்டது.

மேலே தரப்பட்ட எண்ணிக்கைகள் இலங்கையில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் நிலைமைக்கு ஒரு குறி காட்டியாக அமையுமேயன்றி, வேலையில்லாத் திண்டாட்டத்தின் பரிமாணத்தை அளக்கிறதாக அமைய மாட்டாது. அதாவது 1966-ம் ஆண்டு முடிவில் வேலையில்லாது இருப்பவர் ஆக 240,000 தான் என்று சொல்ல முடியாது. தங்கள் பெயரை வேலை இணைப்பு இலாகாவில் பதிவதினால் வேலை கிடைக்கும் என்று நம்புவதற்கில்லை. பெயர் பதிந்த தொகையில் ஒரு மிகச் சிறிய தொகையினருக்கு மட்டுமே அந்த இலாகா வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கின்றது. மேலும் ஒவ்வொரு 3-மாத முடிவில் பதிவைப் புதிப்பிக்காவிட்டால் பெயர் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டுவிடும். எனவே பெயர் பதிவது பயனற்ற அலைச்சல் என்ற கருத்து நிலவுவது இயல்பு. இதன் காரணமாக உண்மையாக வேலையில்லாது இருப்பவரின் எண்ணிக்கை வேலை இணைப்பு இலாகாவில் பெயர் பதியப் பெற்றவரின் எண்ணிக்கைதான் என்று சொல்வது பெரும் தவறு.

வேலையில்லாது தவிப்பவரின் எண்ணிக்கை ஒரு புறமிருக்க, போதியளவு வேலையில்லாது தமது ஆக்கச் சக்தியைப் பூரணமாகப் பயன்படுத்தாது இருப்பவரின் எண்ணிக்கையும் கணிசமானதே. உதாரணமாக சிறு அளவு விவசாயத்தில் ஈடுபடுபவர்கள் 12 - மாதமும் போதியளவு வேலை வாய்ப்பைப் பெறுவதில்லை. தங்கள் ஆக்கச் சக்தியைப் பூரணமாக உபயோகிப்பதில்லை. எனவே, பல அம்சங்களையும் ஊன்றி நோக்கின் இலங்கையில் 10 லட்சம் பேரளவில் வேலை செய்யும் வாய்ப்பைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருது இருக்கின்றனர் என்று கூறுவது மிகையாகாது: சர்வதேச தொழில் துறை நிறுவனத்தின் நிபுணர் சிலர், சில வருடங்கட்கு முன்னர், இலங்கையின் நிலைமையை ஆராய்ந்த பொழுது வேலையில்லாது இருப்பவரின் எண்ணிக்கை வேலை இணைப்பு இலாகாவில் பெயரைப் பதிந்து வைத்திருப்பவரின் எண்ணிக்கையைப் போல் பல மடங்காக இருக்கும் என்றே அபிப்பிராயப் பட்டனர்.

வேலையற்றிருப்பவரின் எண்ணிக்கை நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதைச் சற்றுக் கவனிப்போம். இலங்கையின் சனத் தொகை 110 லட்சம் இதில் சரி அரைவாசிப் பேர் வரையில் 18-20 பராயத்திற்கு உட்பட்டவர்கள். அதாவது வேலை செய்யும் வயதை அடையாதவர்கள். ஒரு சிறு தொகையினர் 65 - வயதிற்கு மேற்பட்டு வேலை செய்யும் சக்தி யற்றவராயுமிருப்பர். எஞ்சியவர்களே வேலை செய்யும் சக்தியைக் குறிக்கும் வயதினர். இவர்களுள் வீட்டுக் கருமத்திலேயே ஈடுபட வேண்டிய நிலையில் இருக்கும் பெண்களின் எண்ணிக்கையும் அடங்கும். எனவே அன்னாரையும் வேறுபடுத்தியே ஊதியம் பெறக்கூடிய உழைப்பில் ஈடுபடக்கூடியவர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்க முடியும். இந்த எண்ணிக்கை இவ்வளவுதான் என்று வரையறுத்துச் சொல்வது மிகவும் கடினமெனினும் அத்தொகை மொத்த ஜனத்தொகையில் ஒரு சிறு பின்னமே என்று சொல்வது ஆட்சேபனைக்கு அப்பாற்பட்டது. அத்தொகையில் 10 இலட்சம் பேர் வரையில் வேலைவாய்ப்பு இல்லாது இருக்கின்றனர் என்பதைக் கருத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

பிரமன் ஒரு மனித ஜன்மத்தைப் படைக்கும் பொழுது ஒரு வாயுடன் இரண்டு கைகளையும் சேர்த்தே படைக்கிறுன் என்று கூடார்த்தமாகப் பாரம்பரியப் பொருளியல் நூலார் கூறினர். அதாவது மனித சரீரத்திலே வாய் என்ற உறுப்பு நுகர்ச்சியைக் குறிக்கும்; கைகள் நுகர்ச்சிக்குத் தேவையான பொருளாக்கச் சக்தியைக் குறிக்கும். விரித்துக் கூறினல் இயற்கை அமைப்பு நுகர்ச்சிக்குத் தேவையான பொருட்களை உருவாக்குவதற்கு வேண்டிய அடிப்படைச் சக்தியையும் மனிதனிடமே கொடுத்திருக்கிறது என்பது பொருள். ஆனல் வேறு சாதனங்களின் உதவியின்றிய வெறுங் கைகளைக் கொண்டு கணிசமான பொருளாக்கத்தைத் தருவிக்க முடியாது என்பது கண்கூடு. அடிப்படைச் சாதனமான மனித சக்தியைப் பூரணமான வகையில் பயன் தரக்கூடிய வழியில் உபயோகிப்பதானல் இதர ஆக்கச் சாதனங்களும் பொருத்தமான பொருளாக்க அமைப்பும் செவ்வனே தருவிக்கப் பட்டிருத்தல் வேண்டும். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் பயிர்ச் செய்கைக்கு வேண்டிய நீர்ப்பாய்ச்சன வசதியும் அணைக்கட்டுகளும், போக்குவரத்துச் சாதனங்களும் ஏற்கனவே அமைக்கப் பெற்றிருந்தால்தான், நெற் செய்கையை தக்க பயன் தரக்கூடிய விதத்தில் நடாத்த முடியும். இவ் வாய்ப்புக்களும் போதியளவு வயல்களும் இல்லாவிடில் வேலை செய்வதற்குத் தயாராக இருக்கும் வெறும் ஆட்பலத்தைப் பயன் படுத்த முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது. அதேபோல இதர ஆக்க சாதனங்களான உழவு இயந்திரம், கால் நடைகள், வாகனுதி போன்ற வையும் மனித சக்தியைப் பயன் படுத்துவதற்கு இன்றியமையாதனவாகும். எனவே இதர ஆக்கக் காரணிகளும் பொருத்தமான பொருளாக்க அமைப்பும் இல்லாத நிலைமையில் தனிப்பட்ட மனிதன் தனது சொந்தமான மனித சக்தியைப் பயன் படுத்த முடியாது. இந்த நிலைமையைத்தான வேலையிலாத் திண்டாட்டம் என்று கூறுகிருேம். வேறும் ஓர் உதாரணத்தை எடுத்துரைப்போம்.

ஒரு ஊரில் ஒரு நெசவு ஆலை இருந்தால் நூற்றுக்கணக்கான தனிப்பட்ட ஆண்களும் பெண்களும் அங்கு வேலை செய்து துணி உற்பத்தியில் ஈடுபட முடியும். தனிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பாகும்; சமுகத்திற்குப் பொருளாக்கமும், அதாவது துணி உற்பத்தியும், பெருகும். தனி மனிதனுக்கு வருவாயும் மொத்தத்தில் பொருளாக்கமும் கூடுகின்றது. ஆனுல் ஆலை ஒன்று இல்லை என்ருல் அவ்வளவு வேலை வாய்ப்பும் பொருளாக்கமும் இல்லாமலே இருக்கும். எனவே சாதாரணமாக எவ்வளவுக்கு எவ்வளவு வேலை வாய்ப்புக் கூடுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு பொருளாக்கமும் அதன் காரணமாக வாழ்க்கைத் தரமும் உயரும். 10 இலட்சம் பேர் வரையில் வேலை வாய்ப்பு இன்றி இருக்கின்றனர் என்ருல் அதற்குரிய அளவு பொருளாக்கம் குறையும். பொருளாக்கம் குறைந்தால் வாழ்க்கைத் தரமும் குறையும் என்பது சொல்லாமலே தெளிவாகும். எனவே, வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமூக ரீதியில் நோக்கினுல் வாழ்க்கைத் தரத்தைக் குறைப்பது தான் பெரும் பாதகமான விளைவு; தனிமனிதன் என்ற ரீதியில் பார்த்தால் தனி மனிதனும் அவன் குடும்பமும் உழைப்பில்லாமல் வருவாயற்று சீவிக்கக் கஷ்டப்படுவதுதான் கண்ணில் முதன் முதலாகப் புலனுகும். இரு தரப்பு விளைவுகளும் மிகவும் பாரதூரமானவையே.

வேலையில் ஈடுபடுபவர்களுடைய தொகை கூடினுல் பொருளாக்கமும் கூடும் என்பது பொதுவான துணிபு. ஆனுல் ஒவ்வொரு சமயத்திலும் வேலை வாய்ப்புக்கூட பொருளாக்கமும், அதாவது சந்தைப்படுத்தக் கூடியதும் நுகர்ச்சியாளன் விரும்பிக் கொள்வனவு செய்வதுமான பொருளாக்கம் கூடும் என்று சொல்வது துர்லபம். உதாரணமாகக் கடற்கரையில் ரோந்து சுற்றும் பொலிசுப்படைக்கு மேலும் ஒரு ஆயிரம் பேரை அதிகரித்தால், ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். ஆயிரம் குடும்பங்கட்குக் கணிசமான வருவாய் கிடைத்து அவர்கள் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை நடத்துவர். ஆனுல் 1000 கூடுதலான பொலிசுப் படையினர் ரோந்து சுற்றுவதனுல், சந்தையில் கொணடுவந்து விற்பனை செய்யக்கூடிய பொருளாக்கம் கூடுவதாகாது. வேறும் ஒரு உதாரணத்தைக் கூறுவோம். மீன் பிடிக்கப் போகும் ஒவ்வொரு மீன் பிடிகாரனுக்கும் அடையாள அட்டை ஒன்றை வழங்கி அவன் மீன் பிடிக்கப் போகும்பொழுது அந்த அட்டையைக் காவிக்கொண்டு போகவேண்டும் என்று விதிவைத்து அதை அமுல் நடத்துவதற்குப் பொலிசுப் படையைப் பெருக்கினுல் அடையாள அட்டை தயாரிப்பதிலும் அதற்குத் தேவையான நிழலுருவப் படங்களை எடுப்பதிலும் இன்னும் தொடர்பாய பல அலுவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் செய்வதிலும் கூடுதலான வேலை வாய்ப்பும் அவ்வாறு வேலை வாய்ப்புப் பெற்ற குடும்பங்கட்குப் பண வருவாயும் கிடைக்கும். ஆனால் அரசாங்கம் வழங்கும் அட்டைகளுடன் வருகிறான் வலைஞன் என்ற காரணத்தினால் கூடுதலான மீன்கள் அவன் வலையை நாடி வரமாட்டாது. கூடுதலான மீன்கள் பிடிபட்டுச் சந்தைக்குக் கொண்டுவரப்பட மாட்டாது. பெரும்பாலும் அட்டைகளைப் பொலிசு மாத்தையாவுக்குச் சமர்ப்பித்து அவரின் கருணையுள்ள அனுமதியைப் பெற்றுக் கடலுக்குச் செல்வதில் ஏற்படும் காலதாமதம் பிடிக்கப்படும் மீன்களின் தொகையைக் குறைக்கும் என்பதே நிச்சயமானது.

வேறும் ஓர் உதாரணம் உபயோகமானது. ஒரு சில நூறு பேர் இந்தியாவிலிருந்து இலங்கையுள் கள்ளமாக நுழைகிறார்கள் என்ற காரணத்தினால் இலங்கையில் இருக்கும் ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டை வழங்குவதென்று சட்டமியற்றி அமுல் நடாத்தினால் சுமார் பதினொரு லட்சம் நிழலுருவப் படங்கள் எடுத்தாக வேண்டும். எத்தனையோ இலட்சம் மனுப்பத்திரங்கள் நிரப்பப்பட்டு அல்லது தயாரிக்கப் பெற்று, அத்தனை "ஃபைல்கள்" அரசாங்க அலுவலகங்களில் நிர்வகிக்கப்பட்டு ஆக வேண்டும். பல்லாயிரக் கணக்கான சிப்பந்திகள், ஆணையாளர்கள், வேலையிலமர்த்தப்படல் வேண்டும். இன்னுந் தொடர்பாய எண்ணிறந்த அலுவல்களையும் செய்து முடிப்பதில் பல ஆயிரக்கணக்கானோர்க்கு வேலைவாய்ப்பும், அவர்கள் குடும்பங்கட்கு வருவாயும் கிடைக்கும். ஆனால் சந்தைப்படுத்தக்கூடிய பொருளாக்கம் அனுவளவாகுதல் கூடியிருக்க மாட்டாது. அதற்குப் பதிலாகப் புதிதாக அரசாங்கத்தின் செயலால் வேலை வாய்ப்பும் வருவாயும் பெற்றவர்கள் கிடைத்த பணத்தைக் கொண்டு பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யச் சந்தையை நாடுவர். வரவு - செலவு துண்டு விழுந்து பற்றுக் குறையில் இயங்கும் அரசாங்கங்கள் அரசாங்க நடவடிக்கைகளை அதிகரிப்பதால் ஒரு சிறு அளவு வேலை வாய்ப்பைப் பெருக்கிய போதிலும் விலை வாசியேற்றத்தை உருவாக்குவதனால் விளையும் தீமை பன் மடங்கு கூடியதாகும். எனவே, சந்தைப்படுத்தக்கூடிய பொருளாக்கம் பெருகக் கூடிய வகையில் உழைப்புச் சந்தர்ப்பத்தை, அதாவது வேலை வாய்ப்பை, உருவாக்குவதே இலட்சியமாக அமையவேண்டும்.

இத்தகைய வேலை வாய்ப்பை உருவாக்குவதற்குச் செய்தாக வேண்டியன யாவை என்ற வினா எழுகின்றது. மேலே நாம் கண்ணுற்றவாறு பொருத்தமான பொருளாக்க அமைப்பும் இதர ஆக்கச் சாதனங்களும் போதியளவில் தருவிக்கப் படல் வேண்டும். அந்த நிலைமை ஏற்படுவதற்கு முதலீடு அத்தியாவசியம். முதலீடு பெருகுவதற்குச் சேமிப்பு அவசியம். சேமிப்புப் பெருகுவற்கு நுகர்ச்சி மட்டம் குறைதல் வேண்டும். அதாவது சமுகத்தில் சிக்கன வாழ்வே இலட்சியமாகி கிடைக்கக்கூடிய ஒவ்வொரு ரூபாவும் சேமிப்பாகத் திரட்டப் பெற்று ஆக்கச் சாதனங்கள் உருவாக்கப் பெறுவதிலும் பொருளாக்க அமைப்புப் பூர்த்தி செய்யப் படுவதிலும் செலவாக்கப் படவேண்டும். இடாம்பீக வாழ்வு நிராகரிக்கப்படல் வேண்டும். நமது சமூகத்தில் நடைபெறுகின்ற திருவிழாக்கள், வாண வேடிக்கைகள், கோலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கள், பூமாலைகள், விருந்து வைபவங்கள், விவாக சோபனங்கள் முதலியவற்றில் அழிக்கப் படும் பணம், ஆக்கச் சாதனங்கள் உருவாக்குவதிலும், பொருளாக்க அமைப்பை நிறைவு படுத்துவதிலும் செலுத்தப்படல் வேண்டும். ஏன்? நம் சமூகத்தில் கோவில்களுக்குக் கட்டப்படும் தேர்கள், திருப்பணிகள் ஆகியவையும் பொருளாதார நோக்கில் கண்ணுறும் பொழுது தப்பான வழியில் நடைபெறும் செலவுகளே. அனைத்தையும் நமக்கு அளிக்கின்ற ஈசுவரனுக்கு நாம் தேர்கட்டுவதும், கோவில் கட்டுவது மென்பது விந்தையான விடயமே. கோவில்கள் போன்ற கலைச் செல்வங்களை உருவாக்குவது ஈசுவரனுக்கு நாம் செய்யும் காணிக்கை யன்று; நமது சமூக வாழ்வு மலர்ந்து பூரணத்துவம் பெறும் பொழுது நமது கலையார்வமும் கலாச்சாரத்தில் உள்ள அபிமானமும் இவ்வாறு பிரதி பலிக்கப் படுகின்ற தென்பதுதான் உண்மை. நம் சமூக வாழ்வு பூரணத்துவம் பெறும் பொழுதுதான் அத்தகைய கலைச் செல்வங்கள் உருவாக்கப்படுவது இயல்பு. ஆனால் நம் சமூக வாழ்வு ஊழலில் சிக்குண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் தலை விரித்தாடியும், பெருந்தொகை மக்கள் ஏழ்மையில் கட்டுண்டும் அல்லல் படும் நிலைமையில் ஒரு சிலர் இன்றைய விலைவாசி ஏற்றத்தைப் பயன் படுத்தி, வியாபாரத்தில் அமித லாபம் பெற்றோ அல்லது உயர்ந்த உத்தியோகங்களில் அல்லது லஞ்சம் வாங்குவதனால் பணத்தைத் திரட்டி ஈசுவரனுக்குக் கோலாகலமாகக் காணிக்கைகள் வழங்க முன்வருவது அதர்மத்தின் சிகரமென்றே கூற வேண்டும். நம் சமூகத்தில் நம்முடன் வாழும் சகோதரர்கட்கு வேலை வாய்ப்பும் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய பொருளாக்கமும் பெருகுவதற் குகந்தவாறு ஆக்கச் சாதனங்களை உருவாக்குவதில் செலவு செய்வார்களேயானால் அவர்கள் தமக்கும் மற்றையோர்க்கும் பயன் படும் வகையில் தமது பிரயத்தனத்தையும் பணத்தையும் செலவு செய்த பெரு மக்கள் எனப் போற்றப்படுவர்.

இதேபோல நம் சமூகத்தில் நகைகள் செய்வதில் செலவாகும் தொகைகளும் பொருளாதாரக் கண்ணோக்கில் கவனிக்கப்படும் பொழுது தவறான வழியில் செலவாகும் தொகை யென்றே கணிக்கப்படல் வேண்டும். நகைகள் சேமிப்புக்கு வழிவகுக்கின்றன வெனினும் அச்சேமிப்பைப் பொருளாக்கம் பெருகக் கூடிய வகையில் முதலீடாக மாற்றாமல் ஆக்கமற்ற சொத்துக்களைப் பெருக்குவதிலேயே வழி நடாத்தக் காரணமாக அமைகின்றன. அது விரும்பத் தக்க தொன்றன்று.

பொருளாக்கமும் வேலை வாய்ப்பும் ஒருங்கே பெருகக் கூடியவாறு முதலீடு பெருகுவதற்கு வேறுமோர் வாய்ப்பு அமைத்தல் வேண்டும். இன்றைய பொருளாக்க அமைப்பு பெருமளவில் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தையும் தொழில் நுட்ப வளர்ச்சியையும் பயன் படுத்தியே நடைபெறல் வேண்டும். அத்தகைய முன்மாதிரியான வகையில் முதலீடும் பொருளாக்க நடவடிக்கையும் நடைபெறுவதற்குத் தொழில் நுட்பம் படைத்த தொழிலாளர் போதியளவில் வேண்டும். தொழில் நுட்பம் பல ரகங்களையும் வெவ்வேறு மட்டங்களையும் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். பல்வேறு தொழிற்துறைகட்குப் பல்வேறு ரகமான தொழில் நுட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம் வேண்டும். இறுதியில் ஒவ்வொரு தொழிற்துறைக்கும் வேண்டப்படும் தொழில் நுட்பம் அவ்வத் தொழிற் துறையில் வேலையில் ஈடுபட்டே பெற முடியுமெனினும் பல்வேறு தொழிற் துறைக்கும் வழிநடாத்தக்கூடிய அடிப் படைத் தொழில் நுட்பமும் அதற்கு வேண்டிய கல்வியும் பயிற்சியும் தொழில நுட்பக் கல்லூரிகளிலும் சாதனு பாட சாலைகளிலும் பெருமளவு பெறமுடி யும். தொழில் நுட்பக் கல்வியை விஸ் தரித்து நாட்டின் பல பாகங்களிலும் அக்கல்வியையும் பயிற்சியையும் அளிக் கும் வசதியைச் சமூகம் உருவாக்கி ஞல் வேலை வாயபபுப் பெறுவதற் கும் பொருளாக்கம் வளர்ச்சியடைவ தற்கும் சாதகமாக அமையும். தொழில் நுட்பம் படைத்த தொழிலாளி ஒரு வன் இயங்கும் பொழுது தொழில நுட்பமற்ற பல தொழிலாளிகட்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். தொழில் நுட் பமும் செய்திறமையும் வாய்ந்த தொழி லாளிகளின் அளிப்புப் பற்ருக்குறையே பொருளாதார வளர்ச்சியில் பின்தங் கிய நாடுகளில் முதலீடு பெருகுவதற் குக் குந்தகமாக அமைகின்ற தென்பது அபிவிருத்தித்துறைப் பொருளியல் நிபு ணர்கள் பலரின் கருத்து. முதலீடு செய பவன் தர்மம் செய்ய முன்வரவில்லை. ஆதாய நோக்குடனேயே முதலீடு செய் கின்ருன். அவ்வாறு ஆதாய நோக்கு டன் கருமமாற்றுபவன் தன் தொழில வெற்றிகரமாக இயங்குவதற்கு வேண டிய சூழல் உண்டோ என்றே முத லில் ஆராய்வான். தொழில் நுட்பம் படைத்த தொழிலாளிகளின் அளிப்புப் பற்ருக்குறை என்ருல் அவன் தொழில் முனைவதற்கு முன்வரமாட்டான்.

ஜெர்மனியின் பொருளாதார வரலாற்றில் காணப் பெற்ற ஒரு அம் சதத்தை ஈண்டு நோக்குவோம். ஐரோப்பாவில் தொழில் துறை வளர்ச் சியில் முதன்முதல் அபிவிருத்தியடைந்த நாடு பிரிட்டன்தான். பிரிட்டனில் தொ ழிற் பயிற்சியும், தொழில் நுட்பக் கல்வி வசதிகளும் ஒரு விநோதமான முறை யில் பிணைக்கப்பெற்றிருந்தன. அதா வது ஒரு இளைஞன் ஒரு குறிப்பிட்ட தொழிற் துறையில் தொழில்நுட்பம் பெற விரும்பிஞல் பெரும்பாலும் அத் துறை யில ஒரு தொழிலாசிரியனிடம் வேலைக் கமர்ந்து அவனுடைய சீடனுகவேகற் றுத் தேர்சசி பெற்றுத் தராதரம் பெறல் வேண்டும். இதை ஆங்கிலத்தில் (Apprentice) சிஷ்யன் முறை என்று கூறு வர். தொழில்நுட்பக் கல்லூரியில் பெறும கல்வியிலும் பார்க்க பயிற்சியில் பெறும் தேர்ச்சியே முக்கியம் என்று கருதப் பட்டது. இந்தமுறை காலகெதியில் தொழில் நுட்பம் படைத்த தொழிலாளி களின அளிப்புப் பெருகுவதறகுக் குந் தகமாக அமைந்தது. ஏனெனில் தொழில் நுட்பம் படைத்த இளைஞர்களைப பெரு மளவில் உருவாக்கிஞல் தமக்குப் போட்டி கூடும் என்ற பீதி தொழிலாசி ரியனைப் பிடிப்பது. இயல்பே எனவே தொழிலாசிரியர்களும் அத்தொழிலாசிரி யர் சங்கங்களும் தேர்சசி அளிக்கும் முறையைமிகவும் கடுரமான நிபந்தனை களைக் கொணடதாக அமைத்தனர். ஆஞல் ஜர்மனியிலோ தொழிலாசிரியனி டம் தேர்ச்சிபெறுதல் என்ற முறைக்கு மதிப்புக்கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாகத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அடிப்படைத் தொழில்நுட்ப அறிவையும் தேர்ச்சியையும் புகட்டி ஆயிரக்கணக் கான இளைஞர்களை வெளியேற்றினர். வெளியேறும் பொழுது அவர்கட்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமோ என்று கூட ஐயப்படத்தக்கதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்தொழில் நுட்பம் பெற்ற தொழிலாளிகளின் அளிப்பு கிடைப்பதற்கேற்றவாறு முதலீடும் தொழில் முயற்சியும் பெருகத் தொடங்கியது. ஜர்மனியின் தொழில் வளர்ச்சியும் பிரமிக்கத்தக்கதாக முன்னேறியது. தங்கு தடையின்றித் தொழில்நுட்பக் கல்வியும் தேர்ச்சியும் பெறுவதற்கு வழிவகுத்தமையே ஜர்மனியின் தொழில்துறை வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது என்று பொருளாதார வரலாற்றாசிரியர் பலரின் கருத்து.

தொழில் நுட்பக் கல்லூரிகளையும் சாதணா பாடசாலைகளையும் (Vocational Training Centres) பெருமளவில் நாடெங்கிலும் தாபித்து வளருஞ் சந்ததிக்குத் தொழில் நுட்ப அறிவையும் அடிப்படைத் தேர்ச்சியையும் கொடுக்கச் சமூகம் முன்வருமேயானால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் பொருளாக்கத்தைப் பெருக்கவும் கூடிய ஒரு பெரிய சாதனையைச் செயல் படுத்தினதாக அமையும்.

* * * *

## பொது மறை

"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

"வினையால் வினையாக்கிக் கோடர் நனைகவிழ்
யானையால் யானையாத்தற்று"

—பொய்யாமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் இந்துப்பல்கலைக் கழகமும் இந்துப்பல்கலைக் கழகமும்

## I

சு. இ. கனகநாயகம்

இந்நாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மறைவின்பின் தமது ஆற்றலையும் உடல்பொருள் ஆவி அனைத்தையும் சைவக்கலைகளின் வளர்ச்சிக்காக அர்பணஞ் செய்த புகழ்மிக்க பெரியாரும் சமயம் கல்வி அரசியல் ஞானம் என்னும் இவைகளைக் கசடறக் கற்றுத்தேர்ந்தவரும் காலஞ்சென்ற மதிப்பிற்குரிய பெரியார் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே. இலங்கையில் சர்வசலாசாலை ஒன்று தாபிக்கப்படவேண்டும் என்று முயற்சி செய்த மேதாவிகளில் முன்னணியில் நின்றவரும் இவரே. அக்காலத்தில் சட்டநிரூபணசபையிலும் சர்வகலாசாலை விசாரணைக் குழுக்கள் முன்பும் சர்வகலாசாலைத் தேவையைப்பற்றிப் பெருமிகமாக எடுத்துரைத்தவருமிவரே. சர்வகலாசாலை இலங்கையின் எப்பகுதியில் தாபிக்கப்படவேண்டுமென்னும் போராட்டத்தில் கொழும்பிலேயே சர்வகலாசாலை இடம்பெறவேண்டுமெனத் தீவிரமாக வாதாடியவரும் இவரே. இவருடைய இச்சிறந்த கல்வித் தகைமையையும் மதிநுட்பத்தையும் பிற்கால சம்பவங்கள் நிரூபித்தன. இன்று கொழும்பில் மூன்று சர்வகலாசாலைகள் தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தகுதியெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராதனையில் உள்ளது ஒன்றே ஒன்றுதான். 1913-ம் ஆண்டில் இராமநாதன் பெண்கள் பாடசாலையையும் கொழும்பில் சர்வகலாசாலை மாணவர்கள் கழகத்தையும் இலங்கை அரசாங்கம் உருவாக்கிய அதேகாலத்தில் 1921-ம் ஆண்டில் ஆண்களுக்காகப் பரமேஸ்வராக் கல்லூரியை இப்பெரியார் ஆரம்பித்து வைத்தார். பரமேஸ்வராக் கல்லூரியின் நிர்வாக அமைப்பை 1925 ம் ஆண்டின் 6-ம் இலக்கச் சட்டத்தில் சட்டநிரூபணம் செய்து வைத்தனர். சர்வகலாசாலைப் பட்டத்தேர்வுக்கான மாணவர்களைச் சர்வகலாசாலை மாணவர் கழகத்திலும் பரமேஸ்வரக்கல்லூரியிலும் பயிற்றிவந்தனர். இதனைக் கண்ணுற்று 1922-ம் ஆண்டு இலண்டன் சர்வகலாசாலைப் பயிற்சிகளுக்கு ஆயத்தம் செய்யும் முயற்சியினை யூனியன் கல்லூரிஎன்னும் பெயரில் யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று கிறித்தவ திருச்சபைகள் தொடக்கி வைத்தன. ஆயினும் நிதி இன்மையினாலும் ஆதரவின்மையினாலும் நேர்ந்த சிறிதுகால நெருக்கடியின்பின் இது கைவிடப்பட்டது. 1940-ம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கைப்பல்கலைக்கழகம் நீண்டகாலக் கருவின் பேறாக உதயமானது. அதன் பல்கலைத் துறைகளும் முதலில் கொழும்பிலும் பின்னரே பேராதனையிலும் அமைக்கப்பட்டன. இரு பிரபல பௌத்த குருமாரைத் துணைவேந்தர்களாகக் கொண்டு 1959-ல் இருபிரிவேனாக்கள் பல்கலைக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டன. அனுராதபுரம் புனித நகரில் பௌத்தகுருமாருக்கென ஒரு பல்கலைக் கழகம் தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்னரே இந்துப் பல்கலைக்கழக இயக்கம் காலஞ்சென்ற மூதவை உறுப்பினர் கலாநிதி சு. நடேசன் உட்பட பல இந்துக்கல்வி தாபனங்களின் அதிபர்கள் ஒன்று சேர்ந்து திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களைத் தலைவராகவும் காலஞ்சென்ற திரு. ரி. முத்துக்குமாரு எம். ஏ. அவர்களைக் காரியதரிசியாகக் கொண்ட இயக்கம் அமைக்கப்பட்டது. இவ்வியக்கத்துக்குக் கிடைத்த மக்களின் அமோக ஆதரவைக் கண்ணுற்ற காலஞ் சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தனிப்பட்ட முறையிலும் பகிரங்கமாகவும் இவ்வியக்கத்தின் குறிக்கோளை ஆதரித்தார் வித்தியோதய பல்கலைக்கழக ஆரம்ப வைபவத்தின்போது இலங்கை அரசாங்கம் இந்துப்பல்கலைக் கழகமொன்றினை விரைவில் அமைக்கத் தீர்மானித்துள்ளதென அவர் உறுதியளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளையில் தமிழரசுக்கட்சி தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கமொன்றினை கிறித்தவ பாதிரிமார்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்து ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்கள் தொழிற்துறைப் பிரமுகர்கள் வர்த்தகர்கள் ஆகியோரிடமிருந்து அதற்கான நிதியைத் திரட்டியது. அத்துடன் சுதந்திர இலங்கைச் சமஷ்டிநாடுகளின் தமிழ்ப்பகுதியில் சுதந்திரமான பல்கலைக்கழகமாக இதுவே ஆகுமென்றும் இதன் தலைமை அலுவலகம் திரிகோணமலைப் பகுதியிலுள்ள உப்பு வெளியில் அமையுமென்றும் அறிவித்தது. அரசாங்கம் இப்பல்கலைக்கழகப்பட்டங்களை மறுப்பினும் சர்வகலாசாலைக்குரிய தத்துவமளிக்க மறுப்பினும் தொடர்ந்து செயற்படுவதாகக் கூறினர். கேணிவாரற பெரு வெளி நிலத்தைவாங்கி அதில் சில வருடங்களுக்கு முன்னரே அத்திவாரக்கல்லை நாட்டினர். இக்கனவுலகப் பல்கலைக்கழகச்சுற்றுடலில் ஆடுகள் வெறும்'புல்லைத்தானும் காணாது தேடி அலைகின்றன. இதன் துணைவேந்தர்களாக வரவிலிருந்த மூவர்களில் ஒருவர் சிறந்த வருவாய்தரும் தொழில்தேடி வெளிநாடு சென்றார். இன்னொருவர் இவ்வியக்கத்தின் தலைமையினின்றும் நீங்கிவிட்டார். மூன்றாமவரோ இறுதியாக உண்மையினை உணர்ந்து பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்திற்கே தேவை என்கிறார். தமிழ் மக்கள் கடந்த பத்துவருடங்களாக இதற்காக ஆற்றிய சகல ஒத்துழைப்புக்களினதும் பயனையும் விளைவுகளையும் நிதிக்கணக்கு விபரங்களையும் இவ்வியக்கத்திடமிருந்து அறியக் காத்திருக்கின்றனர்.

இவ்வியக்கத்துக்கு அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்காக, நடத்திய பிரசாரத்தின் போது யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் முதன்முதலாக வைத்த கூட்டம் என் நினைவுக்கு வருகிறது. அங்கே அக்கூட்டத்திற்குச் சமுகமளிக்கும்படி வெவ்வேறு சமயக் கல்லூரிகளின் அதிபர்கள், முகாமையாளர்கள், பல்கலைக் கழகக் கல்வியில் ஆர்வமுள்ளவர்கள் அழைக்கப் பட்டிருந்தனர். உயர்நீதிச்சபை காரியாலயத்திலிருந்து ஒருவரும், இன்னொருவருமாக இரு நியாயவாதிகள் இயக்கத்தின் நோக்கங்களை விவரிப்பதற்காக சமுகமாயிருந்தார்கள். அங்கே கூடியிருந்தவர்கள் மாதவீதம் பத்து ரூபா கொடுத்து அங்கத்தவர்களாய் சேரும்படி கேட்கப்பட்டார்கள். பொது மக்களின் மனதில் எழக்கூடிய விளக்கக்குறைவுகளை நீக்குவதற்காக இரு கேள்விகளைக் கேட்டேன்.

(1) இவ் இயக்கம் ஒரு முற்போக்கு ஸ்தாபனமா அல்லது சமஷ்டிக்கட்சியுடன் இணைக்கப்பட்ட ஒன்றா?

(2) இவ் இயக்கம் இருபதாம் ஆண்டளவில் இருந்த ஐக்கிய கல்லூரிக்குப் புத்துயிர் அளிக்க முன்வருகின்றதா? அப்படியானால் மிஷனறி சங்கங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் ஒரு முயற்சியா?

ஆணித்தரமாக இவை மறுக்கப்பட்டவுடன் அமைப்பாளர்களாலும் அன்றைய தற்காலிகத் தலைவரினாலும் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. மற்றவர்களோடு நானும் சந்தாப் பத்திரங்களுக்கு கைச்சாத்திட்டதோடு எனது வங்கியிலிருந்து மாதம் பத்து ரூபா பெற்றுக் கொள்வதற்கு நிரந்தர உத்தரவும் கொடுத்தேன். ஒன்பதாம் மாத முடிவில் மாதம் பத்து ரூபா வீதம் கொடுக்கும்படி நான் அளித்த உத்தரவை ரத்துச் செய்யும்படி எனது வங்கிக்கு அறிவித்தேன். இடைக்காலத்தில் நடந்த சம்பவங்கள் இயக்கம் சமஷ்டிக்கட்சியின் அரசியல் வளர்ச்சிக்கான ஒன்று என்பதையும் சைவசமயம்' இந்து நாகரீகம், பண்பாடு தமிழரின் நுண்கலை, சங்கீதம், நாடகம் என்பன புத்துயிர் பெறுவதற்கும் பாதுகாப்பு அளிக்கப்படுவதற்கும் எதிரிடையானது என்பதையும் அத்தாட்சிப் படுத்தி விட்டன. வடக்கிலுள்ள இந்தக் கல்லூரிகளும், பாடசாலைகளும் (சைவ பரிபாலன சபையிலிருந்து எடுக்கப்பட்ட மிகக்கூடிய தொகையான நூற்றி எண்பத்திரண்டு பாடசாலைகள்) 1960-ம் ஆண்டு அரசாங்கத்தாலே எடுக்கப்பட்ட பொழுது ஒரு இந்து பல்கலைக் கழகம் உடனடியாக நிறுவப்படாவிட்டால், இந்து வாழ்க்கை முறைகளும் பண்பாடும் சமயமும் அந்நிய பண்பாடுகளினாலே விழுங்கப்பட்டுவிடும் என்று உணரப்பட்டது. இந்து பல்கலைக் கழக இயக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு காலம் சென்ற கலாநிதி மேதை சு. நடேசன் அவர்களாலே இதே நோக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்காக அளிக்கப்பட்ட இராமநாதன் அவர்களின் நிதியும், சொத்துக்களும் அதனை ஸ்தாபிப்பதற்குப் போதுமானவை என்று எடுத்துக் காட்டப்பட்டபொழுது அரசாங்கம் தானகவே முன்வந்து வேண்டிய ஆதரவு கொடுப்பதாக உறுதியளித்து வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களைப் போன்ற இராமநாதன் பல்கலைக்கழக மசோதா கலாநிதி சு. நடேசன் அவர்களாலும் வேறும் சிலராலும் ஆக்கப்பெற்று சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டபொழுது சட்ட அமைப்பாளரினதும் உயர்நீதிசபையினதும் ஆலோசனை பெற்றபின் அது அங்கீகரிக்கப் பட்டது. இந்தப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நியாயமான வருமானத்தைக் கொடுக்கக் கூடிய 120 லட்சம் பெறுமதியுள்ள இராமநாதன் சொத்துக்களும் அரசாங்கத்தினாலே சுவீகரிக்கப்பட்டன. 1963-ம் ஆண்டிலிருந்து பிரதி வருடமும் வரவு செலவு மசோதாவிலே பத்து ரூபா அடையாள மான்யம் கிரமமாக அரசாங்கத்தால் வைக்கப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டும் வருகிறது. 1965-ம் ஆண்டு கலாநிதி சு. நடேசன் அவர்கள் இறந்த அதே வருஷம் திரு. டட்லி சேனநாயக்கா அவர்களின் தலைமையில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. சமஷ்டிக் கட்சி தேசத்தின் ஒற்றுமைக்காகவெனவும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவெனவுங்கூறி ஆட்சியில் பங்குகொண்டது. தேசிய அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்திலுங்கூட இராமநாதன் பல்கலைக் கழகத்திற்குரிய பத்துரூபா அடையாள மான்யம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. நாங்கள் வசிக்கும் தர்மத்வீபத்தில் முன் எப்பொழுதும் நடைபெறாத நூதனமொன்று அதன்பிற்பாடு நடைபெற்றது. பல்வேறு தலைப்புகளின் கீழ் கொடுக்கப்படும் வரவு செலவுத்திட்ட விபரங்களில் பத்து ரூபா அடையாளமான்யம் மாயமாக மறைந்துவிட்டது. அதிர்ஷ்ட வசமாக ஒரு கழுகுக் கண்ணின் பார்வைக்கு அது தென்பட்டு விட்டது. யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டது. புதினப் பத்திரிகைகளும் இஃது எங்ஙனம் நேர்ந்ததுவெனத் தங்கள் ஆட்சேபங்களைக் கிளப்பின. யாழ்ப்பாணப் பிரதிநிதி இம்மாய மறைவுக்குக்காரணமாக இருந்த இரண்டு கால் எலியைப் பொறியில் அமர்த்தும் ஒரு நுணுகிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர். இது ஒரு ஆயிரம் பொன் பரிசிலுக்குரிய கேள்வியாகும். அது யார் என்பது ஒருவருக்குமே தெரியாது. கடைசியில் பிரதம மந்திரி 1966-ம் ஆண்டு ஆவணி மாதம் 18-ம் திகதி யாழ்ப்பாணப் பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தில் இரண்டாவது அச்சுப்பதிப்பில் பத்து ரூபா அடையாளமான்யம் இடம் பெறும் என உறுதியளித்தார். இந்த அடையாளமான்யம் வருடாவருடம் கரிசனையும் ஆர்வமுமற்று வெளிவருகிறது. சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் மூன்றாவது வரவு செலவுத் திட்டத்திலும். அது இடம்பெற்றுள்ளது. தேசிய ஐக்கியத்திற்குப் பத்துயிரூட்டும் புண்ணியவான்கள் அடையாளமான்யத்தை அன்போடு செய்து வருகின்றார்கள். முன்னேற்றத்தின் விரோதிகள் விழித்தனர். இந்து சர்வகலாசாலையை உடனே வெளிப்படையாக எதிர்த்தனர். அவர்களின் கூற்றுக்களில் ஒன்று கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பாதகம் என்பதாகும். மற்றது கிழக்கு மாகாணம் தமிழ்ப்பிரதேசத்திற்குப் பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கப்படாதுஎனமாமிகிறது என்பது. மூன்றாவது ஒரு அங்கத்தினர் பட்டப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் யாழ்ப்பாணத்து மகளிரின் நல்லொழுக்கம் பாதிக்கப்படும் என்று கூறியுள்ளார். இவையெல்லாவற்றுக்கும் மேலாக திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களால் கேட்கப்பட்டபடியால் இந்தப் பல்கலைக்கழகம் ஆக்கப்படக்கூடாது என்பதே அவர்கள் கருத்து. மந்திரி சபையின் உடன்சபையொன்று உயர்தரக்கல்வி விசாரணைக்காக அமைக்கப்பட்டது. அவர்கள் விசாரிக்கத் தொடங்கியதிலிருந்து பரமேஸ்வராக் கிளைத் தளம் (Campus) பற்றி எதுவும் கேள்விப் பட்டதில்லை. தொழிற்கல்வியைப் பல இடங்களிலும் பரப்பி அமைக்கும் திட்டத்தின் சார்பாக, நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் தனது தொகுதியைச் சுற்றி ஏதேனைக் காந்ததுபோல பரமேஸ்வராக் கல்லூரியில் கண்வைத்து அங்கு அதிபரைச் சந்தித்து அக் கல்வி இலாகா உத்தியோகத்தர்களுடன் அவர்களுக்குக் காட்டினார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தொழில் நுட்பக் கல்லூரிக்கு அல்லது கனிஷ்ட பல்கலைக் கழகத்திற்காக அக் கட்டிடங்களை விரும்புவாரானுல்; அடுத்த தேர்தலுக்கு இன்னெரு தொகுதியைத்தான் பார்க்கவேண்டும் என்று சொல்லப்பட்டார். கனிஷ்ட பல்கலைக்கழகம் பட்டாளத்தவரின் கட்டிடங்களில் ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கலாநிதி சு. நடேசன் அவர்களின் திதியைக் கொண்டாட இராமநாதன் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்ட பகிரங்கக் கூட்டத்தில் அவர்களின் வாழ்க்கையையும் சேவையையும் பற்றிப் பேசுவதற்கு திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் Q.C. அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். அவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள் சைவத்தையும் இலௌகீக கல்வியை வளர்ப்பதற்கு பெறறிருந்த பெறற்கரிய ஆற்றலையும் மகிமை வாய்ந்த ஸ்தாபகரின் சிந்தனைகளும் நோக்கங்களும் நிறைவேற்றப் படுவதற்குக் கலாநிதி நடேசன் அவர்கள் செய்த பகீரதப் பிரயத்தனங்களைப் பற்றியும், இராமநாதன் இந்து பல்கலைக் கழகம் எப்பொழுதே அமைக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியதைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

தற்போதைய கல்விமந்திரி அவர்கள், யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது, வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அவர்களுககு அளிக்கப்பட்ட வரவேற்பில், பரமேஸ்வரக் கல்லூரியைப் பல்கலைக்கழக ஆயத்தக் கல்லூரயாக உயர்த்துவதாக வாக்களித்தார். யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் அவரை வரவேற்றுப் பேசியபோது இந்துப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு சேர்.பொன். இராமநாதன், ஆறுமுக நாவலர், நாவலர் கந்தையா ஆகியோர் விட்டுச்சென்ற சொத்துக்களையும், நிதிகளையும் உபயோகப் படுத்தலாமென்றும் அதை நடத்துவதற்குரிய சேவையையே அரசாங்கம்பொறுக்கவேண்டி வருமென்றும் சுட்டிக் காட்டினர்.

பழைய திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலை மூடப்பட்டு, ஆசிரிய மாணவர்களும், பேராசிரியர்களும் நல்லூர் ஆசிரிய கலாசாலைக்கு அனுப்பப்பட்டார்கள். அதிபர் வகையின்றி இளைப்பாறினர். சில வருடங்களுக்கு முன்பு கல்வி இலாகாவைச் சேர்ந்த புதுமை விரும்பிய ஒருவர், பள்ளிக்கூடங்களைத் தரப்படுத்த அதாவது ஒரு வேளை யாழ்ப்பாணப் பள்ளிக்கூட தொகைகளைக் குறைக்க விரும்பினர். நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் வண்ணர்பண்ணையிலிருக்கும் புகழ்படைத்த நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையை மூட முயற்சித்தார்.

கடைசியாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். பெரிய தருமச் சொத்தை விட்டுச் சென்ற இராமநாதனின் பேரப்பிள்ளைகளுட் சிலர், அச்சொத்து தங்களுக்குச் சொந்தமென கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தொடரும்படி புத்திசொல்லப்பட்டிருக்கிருர்கள்.

1930-ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் இறந்த அவர், இன்று உயிருடன் இருந்தால், இக்காலத் தமிழ் மக்களைப் பற்றி என்ன நினைப்பார்?

ஆகையால், வடபகுதியிலுள்ள ஆன்ருேர் இந்துப் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு எதிர்ப்பவர்களைப் போராடி விரட்டுவதுடன் மிக விரைவில் அது நிறுவப் படுவதற்கு ஊக்கத்தையும், ஆதரவையும் அளிப்பது தவிர்க்கமுடியாத கடமையாகும்.

"எழு, விழி, ஓயாதே
கருமம் முற்றுப் பெறும் வரைக்கும்"

இராமநாதனுடைய உயிலிலும், தர்மநிதி இறுதியிலும் உள்ள வாசகங்கள் தம்முட்டாமே பேசிக் கொள்ளுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமான் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின்

## மரண சாதனத்திற் காணப்படும் வாக்கியங்கள்

### மரணசாதனத் திகதி: 21-7-1923

பரமேசுவரக்கல்லூரி அதிகாரசபையினருக்கு நான் கொடுத்து ஈகை செய்வது......

சைவநெறி வழியே நின்று சைவசமயக் கொள்கைகளைச் சைவப்பிள்ளைகளுக்குப் போதனை செய்வதை ஆதரிப்பதற்காகவும் தமிழ்க்கல்வியை விருத்திசெய்வதற்காகவும், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், தாயுமான சுவாமிகள் ஆகியோர் பாடிப் பதிந்த பக்திப் பாடல்களை வாயினுலும், வாத்தியங்களினுலும் பாடுவதை விருத்தி செய்யவும்......

எந்த நோக்கத்திற்காக இராமநாதன், பரமேஸ்வராக் கல்லூரிகள் தாபிக்கப்பட்டனவோ, அந் நோக்கங்களை மேலும் உயர்த்துவதற்கு மேற்கூறிய இரு கல்லூரிகளின் அதிகார சபையினரால் நம்பிக்கைப் பொருளாக வைத்திருக்கவும்......

(நோக்கங்களை 1925-ம் ஆண்டின் 7-ம் இலக்க பரமேஸ்வராக் கல்லூரிச் சட்டத்தின் 10-ம்பிரிவில் காண்க.)

நம்பிக்கைப் பொறுப்பாளரை நியமிக்கும் 1913-2-21 திகதியுடைய 4886ம் இலக்க உறுதியிலும், 1913-11-5 திகதியைக் கொண்ட இலக்க உறுதியிலும் காணப்படுவன.

சைவ மகளிர் கல்விக்காகவும் சைவர்களுடைய ஆத்மீக மதியூக நல்லொழுக்கத் தேவைகளை முன்வைத்த சைவ மகளிர் கல்விக்காகவும் நம்பிக்கைப் பொறுப்பாளர் தகுந்ததெனக் கருதும் இச்சாதனத்தில் கூறப்படும் நம்பிக்கைகளுக்கும் தொடர்புடைய மற்றும் நோக்கங்களுக்கும்......

ஆங்கிலத்திலும், தமிழிலும் சாதாரணமாக வழங்கப்படும் போதனைகளுடன் இக்கல்லூரியிற் படிப்பித்த சில வேதங்கள், ஆகமங்கள், தர்ம சாத்திரங்கள், மகாபாரதம், இராமாயணமாகிய இதிகாசக் கதைகள், புராணங்கள், தேவார திருவாசகப் பாடல்களும் சாதாரணக் கல்வியுடன் இடம்பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் பல்கலைக்கழகமும் இந்துப் பல்கலைக்கழகமும்

## II

"அஸ்திகா"

நாடாளுமன்றத்தில் இன்று விவாதம் நடந்து கொண்டிருக்கும் இவ்வாண்டு வரவு செலவு மதிப்பீட்டில் காலஞ் சென்ற சேர் பொன்னம்பலம் இராமநாதனின் பெயரில் யாழ்ப்பாணத்தில் நிறுவ இருக்கும் பல் கலைக்கழகத்திற்கு அடையாள வாக்குப் பணம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றமை எவ்வகையான பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்ற கேள்வியைப் புதிதாகக் கிளப்பியுள்ளது. குருட்டுத்தனமான கட்சிப் போராட்டங்களினால் மேலும் தூண்டப்பட்டு, இதுவிடயம் வாக்குவாதத்திற்குரியதாகி விட்டது. எங்கள் எதிரிகளை மடக்கி அவர்களின் விவாதங்களை மேற்கொள்ளும் நோக்கமாக, இந்தவிடயம் இங்கு அலசி ஆராய எடுக்கப் படவில்லை. இந்த விடயம் தமிழ் மக்களின் வருங்காலத்திற்குக் காத்திரமானது; முக்கிய மானது. ஆகவே தேவையற்ற வாக்குவாதம் வேண்டா. என்றாலும்; எங்களை எதிர்ப் போர் இந்தவிடயத்தைக் கண்ணியத்துடனும் அணுகுகிறார்களல்லர்; இது விசனத் திற்குரியதாகும். அன்றியும் இத்தருணத்தில் தங்களுக்கு ஒத்துவராத நல்லவாதங்களை எடுத்துரைப்போர் மேல் குறைகுற்றம் சுமத் தவும் தலைப்பட்டுள்ளார்கள். நாங்கள் கூறு வதுபோல் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டால் தங்கள் செல்வாக்குக் காற்றோடு காற்றாய்ப் பறந்து விடுமென்பதிற் சந்தேகமில்லை என்று அவர்களுக்குத் தெரியும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் கொள்கை நிலை தெளிவானது. உறுதியானது; நுண்தொழிற்கலை மிக்கதும், வான் வழியுகமுமான இக்காலத்தில் பல்கலைக்கழக மானது படிப்புமாத்திரம் நிறைந்த ஆண்களையும் பெண்களையும் உருவாக்கிவிடுவதுடன் அவர்கள் நோக்கமும் தீர்க்கதரிசனமு முடையவர்களாக மிளிரவுஞ் செய்தல் வேண்டும்.

படிப்பு மாத்திரம் நிகழுமிடம் பல்கலைக் கழகமன்று. அது பண்பாடும் கலாசாரமும் நிறைந்த இடமாகும். ஆண்களையும் பெண் களையும் செம்மைப்படுத்தும் நிலையம் அது. மனிதரை உருவாக்கும் கடமைதான் இன்று இந்த நாட்டில் பல்கலைக்கழகங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பொறுப்பாகும். நாங் கள் இன்று மனிதரை உருவாக்குகின்றோமா? ஒரு சில பகுதிகளைக் கிளிப்பிள்ளைபோல் உருப்போடும் வெறும் மக்களை உருவாக்கு கின்றோமா? அல்லது திருந்திய உணர்ச்சி, நோக்கச் சீர்திருத்தம், இயற்கை, சமூகம் இவற்றை விளக்குவதில் மேம்பாடு அளிக்கின்றோமா? இவைதான் பல்கலைக் கழகங்களின் கடமைகளைப் பரீட்சிக்கும் பிர தான முறைகளாகும். தமிழர்களைப் பொறுத் தமட்டில் இவற்றை எவ்வாறு விமரிசையாக அடைதல் கூடும்?

இவ்வித பெறுபேறுகளைப் பாரிய கட்டி டங்கள் தளபாடங்கள் இவற்றின் மூலம் பெறுதல் முடியாது. முதற்றரமான பல்கலைக் கழகத்திற்கு இவையுந்தேவைதான். ஆனால் இவை சூழலையோ சமய பாரம்பரியத் தையோ ஈடுசெய்ய முடியாதவை. எங்கள் சமயம் எனும்போது தமிழ் மக்களின் பெரு வழக்குச் சமயமாகிய இந்து சமயத்தையே பிரதானமாகக் குறிக்கின்றோம். எங்கள் சமயமாகிய இந்து சமயம் மானிடப் பிறவி எடுத்த ஒவ்வொருவரையும் தெய்வீக ஒளிப் பிழம்பின் பொறியாகக் கருதவேண்டு மென்று ஆதிதொட்டு போதித்துவந்துள்ளது. "தத்துவம் ஆசி" "அதுவேதான்" என்கின்றன உபநிடதங்கள். இந்தப் போத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னகள் மாத்திரம் போதா. இப்போதனைகள் யாவும் வேதாகமங்களிற் பொதிந்து கிடந்தால் மாத்திரம் போதாது. மக்களின் நாளாந்த வாழ்க்கையில் நிதரிசனமாகக் காணப்படுதல் வேண்டும். இவ்வகை வாழ்க்கையிலிருந்து நாம் வெகுதூரம் விலகிவிட்டோம். மக்களின் மனதிலும் இருதயத்திலும் மாற்றம் ஏற்படுதல் வேண்டும். அரசியலில் மாத்திரமின்றி சமூக பொருளாதார விடயங்களிலும் சனநாயக முறை அனுட்டிப்பவர்களாக இருத்தல் வேண்டும். இந்த வித சனநாயகமாற்றத்தை ஏற்படுத்தல் முக்கியமானது. சனநாயக மனநிலை, சமயம், ஞானதத்துவம் இவற்றுடன் சேர்ந்த மனிதப்பண்பு, இவற்றில் பெருநோக்கு என்பன மிளிர்தல் வேண்டும். "சம்வார" என்ற நச்சு மரத்தில் ஒப்பிடமுடியாத இருகனிகளிருக்கின்றன என்று ஒரு அரிய செய்யுள் கூறுகின்றது. நூல் நயமும் நல்ல மனிதரின் சகவாசமுந்தான் அந்த இரு கனிகள்.

பேரிலக்கியக் கனிகளை நீங்கள் நுகர வேண்டுமாயின், அவற்றை நீங்கள் வாசித்தல் வேண்டும். கதைகளை வாசிப்பதுபோல் அவற்றை வாசியாது கண்ணுங் கருத்துமாக வாசித்தல் வேண்டும். எங்கள் சந்ததியினர் தங்கள் வாழ்க்கை என்னும் தீவிர பிரயாணத்தில் நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை இழந்துவிட்டனர்; அதனால் எங்கள் மூதாதைகளின் பேரிலக்கியங்கள் எங்கள் மேற் செலுத்தும் செல்வாக்கு பயனற்றதாகிவிட்டது. எங்கள் சமூகத்தில் சனநாயகக் கொள்கைகள் எங்கள் மனப்பழக்கம், நடத்தைமாதிரிகளாக அமைய வேண்டுமேயானால் சமூகத்தின் இயல்பையும் தனிப்பட்டவரின் குணத்தையும் மாற்றுகின்ற கொள்கைகள் அவைகளானால், பேரிலக்கியங்களையும் எங்கள் சமயம், தத்துவஞானங்களையும் நாம் படித்தல் வேண்டும். மேலைத்தேசத் தத்துவ ஞானி ஸ்கோப்நோர் என்பவர், இவ்வித படிப்பே ஆத்மாவிற்கு ஆறுதல் அளிக்குமென்று கூறியுள்ளார். பெரும் விஞ்ஞானிகளும் நுண்தொழிற்கலைஞர்களும், பொறியியலாளர்களும் எங்களுக்குத் தேவைப்படுமாறு போல் சமய அறிவியலாளரும் தேவையானவர்களே. இரக்கமும் கடவுட்பயமும் இன்றிப் படித்தவர்களாயிருப்பது பேய்த்தன்மை போன்றது. ஆகவே, எந்தப்பல்கலைக்கழகமும் படிப்பறிவுள்ள ஆண்களையும் பெண்களையும் உருவாக்கி வெளியனுப்பிக் கொண்டிருக்குமாயின் அது உண்மையான பல்கலைக்கழகமாக அமையாது. அனுப்பப்படும் ஒவ்வொருவரும் வருந்தும் மக்கள் மேல் இரக்க சிந்தனையுடையவராயிருக்கவும் பயிற்றுதல் வேண்டும். இதனைமுற்றாக உணர்ந்தே எங்களுக்கு இந்துப்பல்கலைக்கழகந்தான் வேண்டுமென்று பாடுபடுகின்றோம். ஏனெனில் அங்குதான் உபநிடதங்கள், ஆகமங்கள், தேவாரங்கள் இவற்றின் தன்மைகள் வெகுவாய் நுழைந்து செறிந்து நன்மையை அளிக்கும்.

விருட்சங்களைத் தறித்தும், மிருகங்களைக் கொன்றும், இரத்த ஆறு பாயவிடும் ஒருவன் மோட்சத்திற்குப் போவானாகில் எப்படியொருவன் நரகத்திற்குப் போகமுடியும்? இந்துப்பல்கலைக்கழகம் கேட்பதன்மூலம் நாங்கள் எங்கள் சகோதர சகோதரிகளாகிய மற்றும் மதத்தைச் சார்ந்த தமிழ்ப் பேசும் மக்களைப் புறக்கணிக்கின்றோமல்லேம். நாங்கள் மற்றவர்கள் மேல் எங்கள் நம்பிக்கைகளைத் திணிக்க விரும்புவதில்லை; மற்றவர்கள் தங்கள் நம்பிக்கைகளை எங்கள்மேற் திணிப்பதையும் விரும்புவதில்லை. இந்துப் பல்கலைக் கழகம் கோரும் எங்கள் கருத்தை யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவராகிய கலாநிதி எமிலியானசுப் பிள்ளை கத்தோலிக்கராகிய தங்களைக்கூட இக் கோரிக்கை பாதிக்க மாட்டாதென்று துணிவுடன் இதனை வரவேற்றுள்ளாரென்றால் இந்தக்கோரிக்கை பெருமக்களால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றதென்பது புலனாகின்றது. கொழும்பிலுள்ள கத்தோலிக்க அக்குவைனஸ் பல்கலைக் கழகம் கத்தோலிக்கத் திருச்சபையினால் நடாத்தப்பட்டாலும் அங்கு எல்லாச் சமயத்தையுஞ் சார்ந்த ஆண்களும் பெண்களும் பயின்று வருவது யாவருமறிந்ததே. இதே போன்ற பல்கலைக் கழகத்தை வடக்கில் வைத்துப் பார்த்தால் அனுகூலம் தராதென்பதில் என்ன சந்தேகம். அக்குவைனஸ் பல்கலைக் கழகம் அங்கு படிப்பிக்கும் பாடங்களையோ அல்லது போதிக்கும் ஆசிரியர்களையோ மட்டுப்படுத்தவில்லை. அவ்வாறாயின் இந்துக்களாகிய எங்களுக்கு எங்கள் சமயச் சீர்திருத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விருத்தி செய்யக்கூடிய பல்கலைக் கழகத்தை நடாத்தும் தருணம் மறுக்கப் படுவானேன்?

இந்த விதமான நோக்கங்களை ஊக்க வெகு உதவியாகவும் சாதகமாகவும் இவ்வித நன்னோக்கங்களுக்காக இராமநாதன், ஆறுமுகநாவலர், மழவராயர் போன்றவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கள் நமக்கு உதவியாக இருக்கின்றன. இப்போது மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டிருப்பவையாகிய சொத்துக்கள், இவை சேர். பொன்னம்பலம் இராமநாதன் விட்டுச் சென்றவை. தனிப்பட்ட முறைகளுக்குச் செலவிடப்படுமாயின் இராமநாதனின் பெரு விருப்பு கேலிக்கிடமாக முடியுமன்றோ! அரசாங்கத்தின் பொறுப்பில் பரமேஸ்வரக் கல்லூரியின் நம்பிக்கைப் பொறுப்பாக உள்ள இராமநாதனின் சொத்துக்கள் சைவப்பிள்ளைகளின் சைவ சமயப் படிப்பிற்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், தாயுமானவர் இவர்களின் இன்னிசைக்கீதங்களைப் பயில்வதற்காகவும் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற ஆசை காரணமாகவே ஒதுக்கப்படலாயிற்று.

இன்னும் பல்கலைக் கழகமென்னும் போது, ஆங்கு கலை, விஞ்ஞான, மருத்துவ, பொறியியல் ஆகிய சகல துறைக் கல்விகளும் இடம்பெறுமென்பது வெளிப்படை. குறிப்பிட்ட ஒரு துறைக் கல்வி மாத்திரமே என மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக் கழகம் என்று ஒன்று கிடையாது. பல்கலைக் கழகத்தை உருவாக்கிய பின் வசதிகள், வாய்ப்புக்கள் கிடைக்கும்போது தேவையெனக் காணும் துறைகளை மேலும் அமைத்துக்கொள்ளவும் அதற்கு அதிகாரமுண்டு. இந்துப் பல்கலைக் கழகம் என்னும் போது தனியாக இந்துக்களுக்கு மட்டும் உரியதென்றும், சமய சம்பந்தமான கல்விக்கே யுரியதென்றும் கூறுவது உண்மையை மறைத்து எதிர்த்துக் கூறுஞ் செயலாகும். அண்மையில் பௌத்த மதச் சார்புடையனவாக இருக்கவேண்டுமென்று இரு பிரிவேனுக்களைப் பல்கலைக் கழகங்களாக மாற்றியமைத்துள்ளனர். சில வருடங்களுக்குள்ளாக அவை பூரணமான பல்கலைக் கழகங்களாகி வருகின்றன. நாம் கண்முன்னதாகக் கண்டுள்ள இவ் வுண்மைகளையுணர்ந்தாயினும் நம்மவராகிய தமிழ்ப் பெருமக்கள் இந்துப் பல்கலைக் கழக ஆக்கத்திற்குப் பூரண ஆதரவு கொடுத்துதவ வேண்மென்பது வெள்ளிடை மலையாகும்.

அன்றியும் கடந்த ஏழு ஆண்டுகளாக இத்தகையதோர் இந்துப் பல்கலைக்கழகத்தை அரசாங்கம் தமிழ் மக்களுக்குத் தந்துதவ முன்னின்றும், அரசாங்கந் தந்துவ விரும்பாதவொன்றினைப் பெறுவோமென நினைந்து கைக்கெட்டியதனையும் பெருது விடுதல் புத்திபூர்வமானதா? அரசாங்கம் தர முன்னிற்கும் இப் பல்கலைக் கழகத்தைப் பெறுதற்குச் சகல தமிழ் மக்களும் ஏகோபித்த குரலில், ஒன்றுபட்டு நிற்றலே "சொல்லாமலே செய்வர் பெரியர்" என்னும் வாக்கியத்தின் வழியமையும் பெற்றியதாகும். இந்துப் பல்கலைக்கழக ஆக்கத்தை எதிர்ப்பது அதனையோ, அதன்வழியாகக் காலப்போக்கில் பூரணப் பல்கலைக் கழகமாக மாறுமொன்றினையோ வராமற்றடுக்குமே தவிர வேறெதனையுந் தராது.

ஆகவே, நாமெல்லோரும் ஒன்றுகூடி இந்துப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவ ஆவன செய்து வேதாகம வழிநின்று பயில விரும்பும் மாணுக்கருக்கு இடமளித்து அதனை வளர்ப்போமாக.

* * * *

"சிந்தனைக்குப் பின் செய்யப்படும் செயல் சிறப்புடையது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. வில் திரு. ஜீ. ஜீ.

A. S. வஸ்தியாம்பிள்ளை

அன்று செப்டம்பர் மாதம் 21-ம் திகதி 65 ஆண்டு பிற்பகல் 3-00 மணி; ஐக்கியநாடுகள் பொதுச்சபைக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இத்தாலிய நாட்டுத் தூதுகோஷ்டியின் தலைவரான திரு பான்பானி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டி ஐக்கியநாடுகள் சபையில் இலங்கைத் தூதுகோஷ்டிக்குத் தலைமைதாங்கிச் சென்ற யாழ்ப்பாண எம் பீ. திரு. கணபதிப்பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம் அவர்களின் சிம்மக்குரல் முழங்கியது இதுகாறும் இறங்குமுகமாயிருந்த இலங்கையின் பெருமை அந்த ஒரு குரலின் ஒலியோடு திரும்பவும் மதிப்பும் சிறப்பும் பெற்றுயர்ந்தது. நியூயோர்க் நகரில் உள்ள உலக சமாதான ஸ்தாபனத்தில் தமிழன் குரல் ஒலித்துக்கொண்டே இருந்தது, கணீர், கணீரென ஆங்கிலச்சொற்கள் உதிர்ந்தன எங்கும் ஒரே அமைதி; சபையில் இருந்தவர்கள் யாவரும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். பரிச்சயமானகுரல்; பழக்கமான ஒலி; ஆற்ரேட்டம் போன்று ஆங்கிலப் பதங்கள் கரைபுரண்டோடின; ஐ. நா. சபையின் புதிய உறுப்பினர்களாகச் சேர்ந்த சிங்கப்பூரையும், மாலதீவையும் திரு. பொன்னம்பலம் வரவேற்றுப் பேசினுர். அது பேச்சா! ஆங்கில பாஷையை அறிந்த ஒவ்வொருவரும் மூக்கின்மேல் விரலை வைத்து ஆச்சரியத்தினுல் கண்களை அகலத் திறந்துகொண்டு சிலையாக அமர்ந்து கேட்டு இரசித்துக்கொண்டு இருந்தார்கள் அந்தப் பேச்சை.

பேச்சு முடிந்ததுதான் தாமதம் ஒரு மந்திரத்தால் கட்டுண்டது போலிருந்த அந்த மாசபையினர் ஏகோபித்துக் கரகோஷம் செய்து தமது மகிழ்சியையும் இரஸனையையும் தெரிவித்தனர். திரு பொன்னம்பலத்தின் பேச்சு ஐ. நா. சபையின் பொதுச்சபை மண்டபத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் வெண்கல நாதமாக எதிரொலித்தது. எல்லோரும் சொக்கினரென ஒரு பத்திரிகை நிருபர் குறிப்பிட்டுள்ளார். 117 உலக நாடுகள் கூடிய இச்சபையில் இதற்கு முன்பு எப்போதுமே ஒரு கன்னிப்பேச்சு இப்படியான வரவேற்பையும், பாராட்டுதலையும் பெற்றதில்லை. இலங்கையில் அமெரிக்காத் தூதுவராயிருந்த செல்வி பிரான்சிஸ் வில்லின் இப்போது அமெரிக்கப் பிரதிநிதிகள் கோஷ்டியில் ஒரு உறுப்பினராக ஐ. நா. சபைக்கு வந்துள்ளார். திரு. பொன்னம்பலம் பேசிவிட்டு உட்கார்ந்துதான் தாமதம் செல்வி வில்லின் திரு. பொன்னம்பலம் அமர்ந்திருந்த இடத்திற்கு ஓடோடியும் சென்று அவர் கையைப் பற்றிக் குலுக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே பிரமாதம், பிரமாதம் தங்களைப்பற்றி நான் மிகவும் பெருமையடைகிறேன் என்றார். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார்கள். ஜீ. ஜீ. கற்றவர்; ஆகவே அவரது புகழ் இலங்கையுடன் நின்று விடாது கடல் கடந்து சென்றுள்ளது. இலங்கையின் ஒப்பாரு மிக்காருமற்ற நாவரசனைக பிரகாசிக்கும் திரு. கணபதிப்பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம் தன் பேச்சு வன்மைக்கு நிகரை வேறெங்குமே காணமுடியாதென்பதை வெளிநாடுகளிலேயே பல தடவைகள் நிரூபித்துள்ளார். சில ஆண்டுகளுக்கு முன் சாம்ராஜ்ஜிய பாராளுமன்ற மாநாடொன்றில் கலந்து கொள்ள ஜீ. ஜீ. வெளிநாடு சென்றார். யானைவரும் பின்னே அதன் மணிஓசை வரும் முன்னே என்பதற்கொப்ப ஜீ. ஜீ. மாநாடுக்குப் போவதற்கு முன்னதாகவே அவரது புகழ் அங்கு சென்று விட்டது விளைவாக ஜீ. ஜீ. உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் பொழுது கனடாவின் முன்னை நாள் பிரதமர் திரு. டீபன்பேக்கா எழுந்து "எமக்கெல்லாம் தரப்பட்டதுபோல் இந்த அறிவுக்களஞ்சியத்திற்கு அரைமணி நேரம் கொடுப்பது அறிவுக்கும் திறமைக்கும் மதிப்புக் கொடுக்கும் செயலாகாது. ஆகவே இவருக்கென மேலதிகமாக 15 நிமிடங்கள் கொடுக்கப்படல் வேண்டும்" எனக் கேட்டு மேலதிக நேரத்தைப் பெற்றுக் கொடுத்தார். ஆஸ்திரேலிய நாட்டு முன்னை நாள் பிரதமர் இலங்கை வந்தபோது காலஞ்சென்ற திரு. டி. எஸ் சேனநாயகாவிடம் சென்று ஜீ. ஜீ. யைப்பற்றி இந்நாடு உண்மையில் பெருமையடைய வேண்டுமென்று கூறியிருந்தார். சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்குப் பின்பு பொதுவாக இலங்கைக்கும், சிறப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கும் ஓர் ஒப்பற்ற தலைவனாக விளங்கினார். தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் முற்றும்ப் பறிபோன காலத்தில் சோல்பரிக் குழுவுக்கு முன்பு, ஆணித்தரமாக நியாயங்களை எடுத்துப் பலநாள் வாதிட்டுச் சொற்போர்புரிந்து, இழந்த உரிமைகளுக்கு ஒரு வகை வாழ்வு கண்டார். அதுவே சோல்பரி அரசியற் சட்டத்தில் 29-ம் ஆவது பிரிவு. சேர். பொன். இராமநாதனுக்குப் பின்பு உரிமை முழக்கமும் உரிமைப் பேறும் ஆக்கமும் உண்டாக்கிச் சிங்கள மக்களோடு சரிநிகர் சமமாக வாழும் நிலைமையை உருவாக்கிய பெருமை இப்பெரியாரையே சாருமன்றோ.

"வாழ்க்கை என்பது முள்ளிறைந்த பாதையுமல்ல
சொகுசான பஞ்சணையுமல்ல, மனமே
அதனை நிர்ணயிக்க வேண்டுமாகையால்
திருப்தியை எதிலுங்காண்பவர் அமைதியை நிச்சயம் பெறுவர்"

—ஓர் அறிஞன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பிரதேசத் தொழில் முன்னேற்றமும் அதற்கான வழிவகைகளும்

இ. யோகராசா

இயற்கை வளங்கள் நிறையவுள்ள ஒரு நாடு அவற்றை அதன் மக்களின் நல னுக்குப் பயன் படுத்த வேண்டுமென்பது அகில உலகமும் ஏற்றுக்கொண்ட உண்மை. ஒரு நாட்டின் இயற்கை வளங்களை இரண்டு விதங்களில் பயன்படுத்தலாம்.

(1) மூலவளங்களை நேரடியாக ஏற்று மதி செய்வது.

(2) உள்நாட்டிலேயே அவற்றை செய்மு றைப் படுத்துவது அல்லது அவற்றை உற் பத்திப் பொருள்களாக்குவது. இலங்கை யிலும் குறிப்பாக வடஇலங்கையில் உள்ள மூலவளங்களை பயன்படுத்திக் கைத்தொழிலை விருத்திசெய்வதில் உள்ள செயல் முறை கள், கஷ்டங்கள் ஆகியவை பற்றிச் சுட்டிக் காட்ட முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உற்பத்திசெய்யும் கைத்தொழில் நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. அவை ஆரம்பகாலத்தில் பரம்பரைக் கைத்தொழில் களாகவே இருந்துவந்தன. மரங்களிலும் தேங்காய் சிரட்டைகளிலும் கடல் சிப்பிகளி லும் நுட்பமான அழகுமிளிரும் வேலைப்பாடு கள் செதுக்கப்பட்டு வந்தன. இயந்திர சாத னங்கள் பற்றியோ இயந்திரக் கருவிகள் பற்றியோ எதுவும் அறியாத அந்தக் காலத் தில் அவை முழுக்கமுழுக்க குடிசைக் கைத்தொழில்களாக இருந்தன.

வடபகுதியிற் பல கிராமங்களில் ஆடை கள் நெய்வதும் சேலைகளுக்கும் வேட்டிக ளுக்கும் சாயம்போடுவதும் அந்தக் காலத் தில் பிரபலமான தொழில்களாக விளங்கின. சீவல் தொழிலாளர்களும் அவர்களின் குடும் பங்களும் பனங்கட்டி தயாரித்து வந்தனர். பனங்கிழங்கிலிருந்து ஒடியல்மா தயாரிப் பது மற்றும் பனைஓலை, நார் ஆகியவை களிலிருந்து கூடை, பெட்டி, சுளகு, பாய் ஆதியன முடைவது, தென்னந்தும்பிலிருந் தும் கயிற்றுப்பாய், வாசல்களில் கால் துடைக்கும் கால்மிதி தயாரிப்பது எள்ளி லிருந்து எண்ணெய் வடிப்பது முதலியவை பரம்பரைக் குடிசைக் கைத்தொழில்களிற் சிலவாகும் பெரிய அளவிலோ அல்லது நடுத் தரமானதாகவோ தொழில் நிறுவனங்கள் எதுவும் இப்பகுதியில் 19-ம் நூற்றுண்டில் இருக்க வில்லை இலங்கையின் நீண்டகால கைத் தொழில் விருத்தியைக் கருத்திற் கொண்டுஎன்னவிதமான கைத்தொழில்கள் அதிகபயன்தரக்கூடியவை என்பதுபற்றியும் உற்பத்திக்கு எவ்வித நுட்பமுறைகளைப் பயன்படுத்தி ஊக்கமளிக்க வேண்டும் என் பது பற்றியும் 1920-ம் ஆண்டு முதல் விவா திக்பட்டு வருகிறது.

கனரகத் தொழிலா சிறு கைத்தொழிலா அமைக்கப்படவேண்டு மென்பதிலும்; பெரிய உற்பத்தித் தொழிலா, பாவனைப்பொருள் உற் பத்தித் தொழிலா அமைப்பது என்பதிலும்; உற்பத்தியை அதிகரிப்பதற்கு மூலதனத் தூண்டுதல் அளிப்பதா என்பதுபற்றி நிர் ணயிப்பதுசம்பந்தமாகவும் இரண்டுவிதமான யோசனைகள் இதே சமயம் தெரிவிக்கப்பட் டன. விருத்தியடையும் தொழில்கள் இலே சான தொழில்களிலேயே கவனம் செலுத்த வேண்டுமென்றும், முக்கியமாக இறக்குமதி யாகும் பொருள்களுக்கு ஈடு செய்யக்கூடிய வையாக இருக்க வேண்டு மென்றும் (ஏனெனில், இவை அபிவிருத்தான, சக்தியையும்கூடவே கொண்டு வருகின்றன என்பது) ஒருசாரார் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில்மயப் பிரச்சனைக்கு இலேசு ரகத் தொழில் எந்தவித தீர்வும் தரமாட்டா தென்றும் மூலாதார அல்லது பாவனைப் பொருள் உற்பத்தித் தொழில்கள்தான் தொழில் அபிவிருத்திக்கு பயனுள்ள, சாத்தியமான அஸ்திவாரம் என்பதும் மற்றொரு சாராரின் அபிப்பிராயம்.

பரம்பரைக் கைத்தொழில், செய்முறைத் தொழில் ஆகியவைகளிலிருந்து நவீன தயாரிப்புக் கைத்தொழில் வரை சுமார் மூவாயிரம் கைத்தொழில் நிறுவனங்கள் இங்கு இருக்கின்றன. இவற்றில் நூற்றுக் கணக்கானவை செய்முறைக் கைத்தொழில்களும், பரம்பரைக் கைத்தொழில்களுமாகும். பத்துச் சதவீதமானவையே நவீன தயாரிப்புக் கைத்தொழில்கள் என்று வகுக்கக் கூடியவை. இவற்றுள் பெரும்பாலானவை இலேசுரக, சிறியரக கைத்தொழிற் பிரிவுக்குள்ளேயே அடங்கும்.

தொழில் நிலையம் அமையவேண்டிய இடத்தைத் தெரிவு செய்வது பொருளாதார விருத்திக்கு முக்கியமானதாகும். இதற்குக் கணிசமான அளவு திட்டமும், கட்டுப்பாடும் தேவை. ஒரு தொழிலைத் தொடங்குவதற்கான இடத்தைத் தெரிவு செய்வதிற் சில சமயங்களில் இயற்கையும், பூகோள சாத்திரமும் முக்கிய பங்கு பெறுகின்றன. தொழில் நுட்ப, பொருளாதார, சமூக அம்சங்களே பெரும்பாலும் தொழிலுக்கான ஓர் இடத்தைத் தெரிவு செய்வதில் நடைமுறையில் கணிக்கப்படுகின்றன. கைத்தொழிற்றுறையில் இணைந்து வாழும் மனப்பான்மையை இது விருத்தி செய்ய உதவுமாதலால் அது சிக்கனத்துக்கு வழி வகுப்பதும் இயல்பே. ஓர் இடத்திற் குறிப்பிடத்தக்க அளவில் தொழில்கள் அமைந்து விட்டால், விருத்தியடையாத இடங்களை விட விருத்தியடைந்த இடமே மேலும் தொழில்களைக் கவரக் கூடிய தகுதியைப் பெறும்.

நிதானமான கைத்தொழில் வளர்ச்சியே தேவையென அரசாங்கம் தனது கொள்கையாகக் பிரகடனம் செய்திருக்கிறது. இதற்கு கைத்தொழில்களை திட்டமிட்ட முறையில் பரவலாக்கப்படவேண்டியது அவசியம். எனினும் அபிவிருத்தி குறைந்த பகுதிகளுக்கு கைத்தொழில்கள் போய்ச் சேருவதற்கு ஊக்கமளிக்க அரசாங்கத்துக்கு உதவிபுரிய தனியார் துறையினர் உறுதியான முயற்சிசெய்ய வேண்டும். அபிவிருத்தி குறைந்த பகுதிகளில் கைத்தொழில்கள் ஆரம்பிக்க விரும்புபவர்களுக்குக் கவர்ச்சியான தூண்டுதல் அளிக்கப்படுமானால், சட்டம் கொண்டு வருவது கூட விரும்பத் தக்கது. இந்த வகையில் பிராந்திய முறையில் திட்டமிடுவதில் முன்னணியில் நிற்கும் பிரித்தானியாவின் அனுபவங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்வது பயனளிக்கக் கூடியது. பிராந்தியங்களை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு, பார்லோடு கமிஷன் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு இரண்டு பிரிவான சட்டங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் உருவாக்கியது. 1945-ம் 1948-ம் ஆண்டின் உள்நாட்டு தொழிற்சட்டம் இருக்கிறது. 1947-ம் ஆண்டின் நகர, நாட்டு அமைப்புத் திட்ட சட்டமுந்தான் பிராந்திய அபிவிருத்திக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுத்த சட்டவடிவங்களாகும்.

பெரியநகரங்களிலும் நாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் கைத்தொழில்கள் குவிந்து கிடப்பதாலும் கைத்தொழில் சனத்தொகை குவிந்திருப்பதாலும் சமூக, பொருளாதார மற்றும் துறைகளில் என்னவிதமான பாதகங்கள் ஏற்படுகின்றன என்பது பற்றி ஆராயவும், தேசீய நலனைக் கருதிக் குறைகள் எதுவும் இருந்தால் அவற்றை நீக்குவதற்கு என்னவிதமான வழிவகைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்க 1937-ம் ஆண்டில் சேர். மொண்டேகுபார்லோ தலைமையில் ஓர் அரச விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை ஒன்றாக இணைக்கவும் அவற்றை மேற்பார்வை செய்யவும் திட்டங்களைத் துரிதப்படுத்தவுமான முழுப் பொறுப்பும் இப்பொழுது கைத்தொழில் அமைச்சிடமேயுள்ளது. கைத்தொழில் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு கைத்தொழில் கடற்றொழில் அமைச்சிலுள்ள கைத்தொழில் அபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்திப் பிரிவிடமே தங்கியுள்ளது. கைத்தொழில் சாத்தியங்களுக்கு மூலதனமிடுவோருக்கு "வழிகாட்டி" என்ற தலைப்பில் அமைச்சின் கைத்தொழில் அபிவிருத்திப் பகுதி பிரசுரம் ஒன்றை வெளியிட்டு கைத்தொழில் வாய்ப்புக்கள், சில திட்டங்களுக்கு பூர்வாங்க மதிப்பீடு, தேவையான மூலதனம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்தது. இந்தப்பிரசுரம் இரண்டு தொடர்களாக வெளியிடப்பட்டன. தனியார் துறையினர், வெளிநாட்டு மூலதனம், நிதிவரித் தூண்டுதல்கள், தீர்வைச்சலுகை, இறக்குமதிக்கட்டுப்பாடு ஆகியவைகள் அடங்கிய முதல் பிரசுரம் 1961-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. முயற்சியுள்ள அல்லது முதலீடு செய்யக் கூடிய ஒருவர் கைத்தொழில் துறையில் இறங்குவதற்கு முதல் முடிவு செய்ததுமே அவருக்கு உதவி அளிப்பதை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதுதான் இரண்டாவது தொடர் பிரசுரமாகும். இதுவும் 1961-ம் ஆண்டிலேயே வெளியிடப்பட்டது. இறக்குமதிசெய்யப்படும் பல்வேறு பொருள்களின் இறக்குமதி பற்றிய உத்தியோகபூர்வமான புள்ளி விபரங்கள், இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் அளவையும் தொகையையும் அறிந்து கொள்வதற்கு மட்டுமல்லாது வருங்கால சுபீட்சத்துக்கும் ஒரு வழிகாட்டியாக உதவுகிறது. முயற்சியுடைய பலர், இந்தத் தகவல்களை ஏற்கனவே நமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வெற்றிகரமான கைத்தொழில்களை ஆரம்பித்துள்ளனர். இன்று அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் பிரிவுகள் 1034 உள்ளன. அரசாங்கம் அங்கீகரிக்கும் திட்டம் வருவதற்கு முன் 430 கைத்தொழில் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. 1963-ம் ஆண்டுக்கும் 1966-ம் ஆண்டுக்குமிடையில் 964 கைத்தொழில் பிரிவுகள் செயல்படத் தொடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இவை இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. இவை தவிர இன்னும் இருபது அரசாங்க கூட்டுஸ்தாபனங்களும் உள்ளன.

1961-ம் ஆண்டிலிருந்து கைத்தொழில் துறையில் ஈடுபடவேண்டுமென்னும் ஆர்வம் பொதுமக்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. இதன் பயனாக கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் கோரிப் பெருந்தொகையான விண்ணப்பங்கள் வந்து குவிந்துள்ளன. இப்போது கைத்தொழில் துறைகள் பெரும்பாலும் நிறைந்து விட்டன. என்றாலும் உள்நாட்டிலும் கிராக்கியுள்ள சில பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய சிறிய வாய்ப்பு இருக்கிறது. நம்பிக்கையுடன் முதலீடுசெய்யக் கூடியவர்கள் மீண்டும் சந்தர்ப்பத்தை இழந்துவிட மாட்டார்களென்ற நம்பிக்கையுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கிராக்கியுள்ள, உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய சில பொருள்கள் பற்றியவிபரங்கள் பின்னால் தரப்படும்.

ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் கைத்தொழில் மயமாக்குவதில் கவனம் செலுத்தியதன் மூலம் இந்த நாட்டில் கைத்தொழில் துரித வளர்ச்சி பெறுவதற்குப் பெரும் பணியாற்றியிருக்கின்றன. கைத்தொழில் அமைப்பு முறை மாறிவிட்டது. முக்கியத்துவமளிக்கும் முறையின் மூலம் புதிய உருவ அமைப்பில் கைத்தொழில் அபிவிருத்தி திட்டமிடப்படுகிறது. புதிய அமைப்பின்கீழ்ப், பின்வரும் புதிய கைத்தொழில்களுக்கு அங்கீகாரமளிக்கப்படுகிறது.

(1) விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாதனங்களை தயாரிக்கும் தொழில்கள்.

(2) உள்நாட்டு மூலவளங்களைக் கொண்டு உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் கைத்தொழில்கள்.

(3) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான கீழைத்தேயப் பொருள்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.

(4) வெளிநாட்டு மூலதனத்துடன் இங்கு ஆரம்பிப்பதற்கான கைத்தொழில்கள்.

முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கும் ஒரு சமுதாய அமைப்பில் விவசாய இரசாயனம், இயந்திரங்கள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனங்களுக்குக் கிராக்கி மிக அதிகம். விவசாயத்துறையில் விஞ்ஞான நுட்பங்கள் அதிக அளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் பூச்சி, கிருமிநாசினி, களைகொல்லி பாவனையும் முன்னேற்றமான முறையில் அதிகரித்திருக்கிறது. எழுபது இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சுமார் மூவாயிரம் தொன் இரசாயனப் பொருள்கள் இந்த வகையில் இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே, இத்துறையில் புதிய தொழில்களுக்கு நிறைய வாய்ப்பிருக்கின்றன.

இரண்டுகோடியே ஐம்பது இலட்சம் ரூபாய்க்கதிகமான மதிப்புள்ள வவசாய இயந்திர சாதனங்களும, வவசாய உபகரணங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. விவசாய அபிவிருத்தியில் பயன்படுத்தப்படும் பல தரப்பட்ட உபகரணங்களையும ஒரு பிரிவுமட்டும் தயாரிப்பது என்பது கஷ்டமான காரியம். சிறு கைத்தொழில் துறையினர் பலர் பின்வரும் உபகரணங்களை வெற்றிகரமாகத் தயாரிக்க முன்வரலாம்.

அலவாங்குகள், கோடரிகள், கிண்டும் முள்ளுகள், ரப்பர் வெட்டுக் கத்திகள், சீவல் கத்திகள், அரிவாள்கள், கலப்பைப் பகுதிகள், வதைப்புக் கருவிகள், நீர் குழாய்கள், சிறிய உழவு இயந்திரங்கள் அல்லது கிண்டும் இயந்திரங்கள்.

இந்த உபகரணங்களை உற்பத்தி செய்வதற்கான தொழில் நிறுவனங்கள் எதையும் அமைப்பதற்கு முன்னர், முயற்சியுள்ள எவரும், அரசாங்கத்துக்குச் சொந்தமான, உலோகப் பொருள் கூட்டுத்தாபனத்தினதும் எஃகு கூட்டுத்தாபனத்தினதும் உற்பத்தித் திட்டங்கள் பற்றி அறிந்து கொள்வது விவேகமாகும்.

## கண்ணாடிப் பொருள்கள்

உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களைக் கொண்டு புதிய கைத்தொழில் துறைகளில் ஈடுபடுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கின்றது. பல்வேறு வடிவங்களிலும் உருவங்களிலும் பல விதமான அளவுகளிலும் பல்வேறு உபயோகத்துக்கும் அவசியமாகின்றன. இக்கண்ணாடிப் பொருள்கள் யாவும் இப்பொழுது இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஜாம், பழரசம், எண்ணெய், மதுபானம் ஆகியவைகள் அடைப்பதற்கான கண்ணாடிப் புட்டிகளை (போத்தல்கள்) உற்பத்தி செய்ய முடியும். இது தவிர மருத்துவத் தொழிலுக்குத் தேவையான பல்வேறு அளவுகளையுடைய போத்தல்கள் வருங்காலத்தில் அதிக அளவில் தேவைப்படும். இப்பொழுது இலங்கையில் கண்ணாடித் தொழிற்சாலைகள் இரண்டு இருக்கின்றன. அவை போத்தல்கள், தம்ளர்கள், சிமினிகள் ஆகியவைகளை உற்பத்தி செய்வதுடன் நின்று விடுகின்றன வேயன்றி, இந்நாட்டுக்குத் தேவையான பலதரப்பட்ட கண்ணாடிப்பொருள்களை உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருக்கவில்லை. கண்ணாடித் தகடுகளும் கட்டிடத் தொழிலுக்கு வேண்டிய கதவு, யன்னல் கண்ணாடிகளையும் இங்குள்ள கண்ணாடித் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யவில்லை. வட இலங்கையில் உள்ள ஒரு ரக மணலிலிருந்து கண்ணாடிப் பொருள் தயாரிக்க முடியுமா என்பதுபற்றிப் பல தடவைகள் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இலண்டன் இம்பீரியல் கழகம் நடத்திய ஆய்வுகளின்படி வட இலங்கையின் வடக்குப் பகுதியில் கண்ணாடிப் பொருள்கள் உற்பத்திக்கு உபயோகமான ஒரு ரக மணல் பெருமளவில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது என்று கைத்தொழில் விசாரணைக்குழுவின் அறிக்கை கூறுகிறது. இது 1922-ம் ஆண்டில் அரசாங்க அறிக்கை என வெளியிடப்பட்டது. பருத்தித்துறையில் காணப்படும் மணல் அதிகம் கலப்பில்லாதது; கண்ணாடி தயாரிப்பதற்குத் தகுதியானது. அந்த மணலின் ரசாயன, யந்திர கலவைகள் நடுத்தர ரக கண்ணாடிப் பொருள்கள் தயாரிப்பதற்குத் திருப்திகரமானது.

சில வருடங்களுக்கு முன்னர் ஹங்கேரியைச் சேர்ந்த நிபுணர்கள் நடத்திய ஆராய்ச்சியும் கண்ணாடிப் பொருள் தயாரிப்பதற்கான மணல், வட இலங்கையில் பெருமளவில் உள்ளது என்பதை உறுதிப் படுத்தியது. ஓர் அடி ஆழமுள்ள ஒரு ஏக்கர் பரப்பிலிருந்து மூவாயிரத்து இருநூறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன் மணல் எடுக்கலாம். கண்ணாடித் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான முதலீடு மூன்று லட்சம் ரூபாய் வரையில் தானிருக்கும்.

### மரவள்ளி

மரவள்ளிக் கிழங்கிலிருந்து மாவுச்சத்துப் பொருள் தயாரிக்கலாம். இதற்கு நல்ல சந்தர்ப்பமிருக்கிறது. இத்தொழிலைத்தொடங்குவதற்குத் பத்தாயிரம் அதிகமான மூலதனம் தேவைப்படமாட்டாது.

### பனம் சீனி

50 வருடங்களுக்கு முன்னர் வட பிரதேசத்தில் செழிப்புள்ள சீனித்தொழிற்சாலையொன்று இருந்தது. இதை ஜெர்மனியர் ஒருவர் ஆரம்பித்தார். முதலாம் உலக யுத்தம் காரணமாக தொழிற்சாலை மூடப்பட வேண்டியதாயிற்று. சிறிய அளவில் இப்பொழுது பனம் சீனி வடபகுதியில் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. புளிக்காத புதுக் கள்ளும் இயந்திர சாதனங்களுந்தான் தேவை. இதற்குத் தேவையான பணம் பத்தாயிரத்துக்கு அதிகமாகாது.

### சர்க்கரை

கரும்புச் சாற்றிலிருந்தும் புதுக்கள்ளிலிருந்தும் இலாபகரமாக சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய பிரிவுகள் அமைக்கலாம். ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகமாகாமல் பத்துக் கலன் கொள்ளக்கூடிய, இயந்திர சாதனங்களை வாங்கலாம். இவற்றுடன் ஒரு சீவல் தொழிலாளியின் குடும்பம் பத்துக்கலன் கொள்ளக்கூடிய கருப்பஞ் சாற்றிலிருந்தோ, புதிய கள்ளிலிருந்தோ சர்க்கரை உற்பத்தி செய்ய முடியும்.

### விநாகிரி, ஊறுகாய்

விநாகிரி தயாரிப்பது, வெங்காயம், மிளகாய், ஊறுகாய் தயாரிப்பது. தேவையான பொருள்கள்: புளித்த கள்ளு, வெங்காயம், மிளகாய். தேவையான உபகரணங்கள்: தொட்டி கொதிதண்ணீரை உறையவைக்கும் கருவி. இவற்றுக்கு ஏற்படக்கூடிய செலவு சுமார் 5000 ரூபாய்.

### துடைப்பமும் பிரஷ்களும்

துடைப்பங்களும் தூசி தட்டும் நிலம் கழுவும் பிரஷ்களும் தும்புக்கயிறு, தென்னந் தும்பு, ஈக்கில், கங்குமட்டை ஆதியமூலப் பொருள்களிலிருந்து தயாரிக்கலாம். இதற்கான உபகரணங்கள் சுமார் ஐயாயிரம் ரூபாய்க்கு வாங்கலாம்.

### மணிலா சுருட்டுகள்

சிகரட் குடிப்பதால் ஆரோக்கியத்துக்குக் கெடுதி என அமெரிக்காவில் டாக்டர்கள் குழு ஒன்று அறிவித்ததைத் தொடர்ந்து முன்னேற்றமடைந்த நாடுகள் பலவற்றில் மணிலா சுருட்டுக்குப் பெருமளவில் கிராக்கி அதிகரித்திருக்கின்றது. மணிலா ரக சுருட்டுகள், வெளிநாட்டாரின் சுவைக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்டால்,அந்நியசெலாவணியைச் சம்பாதிப்பதற்கு ஒரு சிறந்த சாதனமாக விளங்கும்.

### பழம், பழரசம் டப்பாவில் அடைத்தல்

மாம்பழங்கள், நுங்கு சுவை மிகுந்தவையாக இருப்பதால், அவற்றை ஏற்றுமதி செய்வதற்கென டப்பாக்களில் அடைப்பதற்கான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகள் ஆரம்பிக்கப்படலாம். உள் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மட்டுமல்லாமல் ஏற்றுமதி செய்வதற்கும பப்பாப்பழ ஜாம், தக்காளிப்பழ ரசம், எலுமிச்சை ரசம் இலாபகரமான போத்தல்களில் அடைக்கலாம். எமது பழங்களின், காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் உறுதியான முயற்சியுடன டப்பாக்களிலும் போத்தல்களிலும் பழங்களையும் பழரசங்களையும் அடைக்கும் தொழில்களை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

உணவைக்கெடாமல் பாதுகாத்து வைப்பது மிக முக்கியமான கைத்தொழில். இது பரம்பரைக் கைத்தொழில் பலவற்றின் வளர்ச்சிக்கு உதவுகிறது. உதாரணமாக, பெட்டிகள், கண்ணாடிகள், தகரங்கள் முதலியன அடைக்கும் யந்திர கருவிகள் தயாரிப்பது அச்சடித்த 'லேபல்கள்' தயாரிப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்பாக்களில் அடைக்கப்பட்ட பழங்கள், காய்கறிகள், ஜாம், நெல்லி, சட்னி, ஊறுகாய் ஆகியவைகளுக்கு உள்நாட்டில் கிராக்கியிருப்பதுடன் வெளிநாட்டிலும் அவைகளுக்குக் கிராக்கி அதிகரித்து வருகிறது. டப்பாக்களில் அடைக்கும் தொழில் இலங்கையில் பெருமளவில் விஸ்தரிக்கப்படலாமென்றும், இவற்றுக்கு உள்நாட்டில் கிராக்கியிருப்பது மட்டுமல்லாமல், விசேஷமானஏற்றுமதிகளுக்குக் குறிப்பாகப்பலதரப்பட்ட சட்னிகள், டாலர் பகுதிகளில் அதிக சந்தர்ப்பம் இருப்பதாக உலக வங்கிக்குழு ஒன்று தெரிவித்திருந்தது.

## கடல் உணவுகள்

மீன்பிடிக் கூட்டுத்தாபனம் சில திட்டங்களை உருவாக்கியிருப்பதால், மீன்கள் மற்றும் கடல் உணவுகளைக் கெடாமல் வைப்பதற்கும் பதனிடுவதற்கும் பெரிய அளவிலான கைத்தொழில் பிரிவுகள் அமைப்பது விவேகமானதல்ல. என்றாலும் ஊறல் மீன்கள், இருல் ஆகியவைகளை டப்பாக்களில் அடைக்கும் தொழில் அபிவிருத்திக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

## கருவாடு

கருவாடு தயாரிப்பதும் மீன்களைப் பதனிடுதலும் இலாபகரமான தொழில் என்பது பலருக்குத் தெரியாது. இதற்கான ஒரு பிரிவை அமைப்பதற்கு ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவு ஏற்படாது.

முன்னரே குறிப்பிட்டதுபோலக் கைத்தொழில் முக்கியத்துவத்துக்கு ஏற்ப அரசாங்கம் அங்கீகாரமளிப்பதும் தொழில் தொடங்கிய முதல் ஐந்து வருட காலத்துக்கு வரிவிலக்கு அளிப்பது போன்ற கவர்ச்சிகரமான வரிச் சலுகைகளும் தனியார்களும், தொழிலதிபர்களும் ஆயிரக் கணக்கில், புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்குக் கைத்தொழில்அமைச்சிடம் அங்கீகாரம் பெறுவதற்கு வந்து நிற்கச்செய்திருக்கிறது. வடபகுதியில் 38 உட்பட ஆயிரக் கணக்கான புதிய தொழில்களுக்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

இந்தக் கைத்தொழில் நிறுவனங்கள் பின்வரும் பிரிவுகளாக அமைகின்றன:

(1) அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிறுவனங்கள். 24 யுனிட்டுகள்.

(2) 1962 ஜனவரி 1-ம் திகதிக்கு முன் உற்பத்தியை ஆரம்பித்தவை யென்று அறிவிக்கப்பட்டவை ஆனால் மேலே (1-ல்) குறிப்பிடப்படாதவை. 10 யுனிட்டுகள்.

(3) 1965 ஜனவரி 1-ம் திகதிக்கு முன் உற்பத்தியைத் தொடங்கியுள்ள அரசாங்கத்தின் அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளாமல் நிறுவப்பட்ட கைத்தொழில் நிறுவனங்கள்.

4 யுனிட்டுகள்.

மொத்தம் 38 யுனிட்டுக்கள்

தற்போதைய சூழ்நிலையில் வடபிரதேசத்துக்கு மட்டும் தனிப்பட்ட எந்த ஒரு நபராலும் ஒரு கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்வது சாத்தியமான காரியமல்ல. இது அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய காரியம். எப்படியிருந்த போதிலும் கொழும்புப் பகுதியில் கைத்தொழில்கள் தொடங்கும் யோசனைக்கு அரசாங்கம் ஆதரவு அளிப்பதாய் இல்லை. முக்கியமான மாகாணங்களில் கைத்தொழிற் பேட்டைகளை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வட மாகாணத்தில் ஏற்கனவே இருந்து வரும் கைத்தொழில்களுக்கும், புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க விரும்புகிறவர்களுக்கும் நன்மையளிக்கும் விதத்தில் விரைவில் கைத்தொழிற் பேட்டை அமைக்கப்பட விருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுதானில்லை

தம்பி சுப்பிரமணியன்

1. சிறந்திருந்தார் வையகத்திற் சிறப்புப் பெற்றார்
செந்தமிழாற் கலைவளர்த்தோர் தமிழ ரென்று
தெரிந்திருக்கும் தமிழ்மூச்சே பேச்சாய்த் தேங்கும்
தமிழுக்கோர் தீமையெனில் அதனைப் போக்க
விரைந்துதுடித் தெழும்பண்பு விளங்கும், திண்டோள்
விறுவிறுக்கும் என்றெல்லாம் மொழிவார்; ஆனால்
நிறைந்தெங்கள் காங்கிரசோ டொன்று சேர்ந்து
நிற்கின்ற வொருகுணந்தான் அவர்பா லில்லை.

2. அறிவிருக்கும் எம்மிடையே ஆங்கி லத்தை
அளந்துகண்ட தெளிவிருக்கும் தமிழன் பண்புச்
செறிவிருக்கும் பொறையிருக்கும் தமிழுக் காகத்
தொண்டுசெயும் முனைப்பிருக்கும் புத்தி சொல்லுந்
திறமிருக்குந் திறலிருக்குந் தியாகஞ் செய்யுந்
தெம்பிருக்கும் என்பார்கள் ஆனால் அந்தோ
அறநெறியிற் காங்கிரசோ டொத்து மைக்கே
அந்தநல்ல வொருகுணந்தா னவர்பா லில்லை.

3. பெருவாரி வளமிருக்கும் பெருமை யோடு
போற்றிடுவோம் புவியெல்லாந் தமிழை யென்ற
திருவுளமும் இருக்குதென்பர் பேச்சி லெல்லாம்
தெளிவிருக்கும் கோடைமழைபோற் பொழிய
அறிஞர்குழாம் எங்களிடம் அதிகம் என்பார்
ஆனாலும் தமிழனென்ற உணர்ச்சி தன்னை
உருவாக்கிப் பலன்காணக் காங்கிரசோடு
ஒத்துழைக்கும் ஒருகுணந்தா னவர்பா லில்லை.

4. மக்களுக்காய் வாழ்வுக்காய் நாட்டுக் காக
மாய்கின்றோம் திட்டங்கள் தீட்டு கின்றோம்
தக்கபடி உரிமையெல்லாம் பெறுவ தற்குத்
தயங்கிடோம் தலைசாயோம் என்றே யெங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கண்டுப் பாகுபோற் கழறு வார்கள்
காரியங்கள் வெற்றியென்று கரைவார், ஆனால்
பக்குவமாய் காங்கிரசோ டொத்து நின்று
பணிபுரியும் ஒருகுணந்தா னவர்பா லில்லை.

5. எங்களது பலம் பெரிது பாரும் என்பார்
எதுவரினும் தலைசாயோம் தூக்கு மேடை
தொங்குமொரு பஞ்சுமெத்தை துயில்வோ மிங்குச்
சொல்லுமொரு பீரங்கிக் குண்டு பேசும்
எங்களுக்குக் கைப்பந்து என்றே யெங்கும்
எடுத்தியம்பி வீருப்புப் பேசுவார்கள்
மங்களமாய் காங்கிரசு தன்னோ டொத்து
மாட்சிபெறும் நற்குணந்தா னவர் பாலில்லை.

6. ஆதலினால் தமிழ்மக்கள் எப்போர் தாமும்
அன்புடனே நிறைந்தொருங்கு கூடி நின்று
சோதரர்போற் சேர்ந்தடம்பன் கொடிபோ லொத்து
சொல்லுரிமை யெல்லாம்பெற்று நன்கு வாழ
நிதிநிலை செழித்தோங்கக் காங்கி ரசின்
நிழலிலே சேர்ந்துநீர் வருக வென்று
ஆதரவாய்த் தமிழரசார் தம்மை யிங்கு
அன்புளத்தால் கரம்நீட்டி அழைக்கின் றேமே.

கல்வி

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

—தெய்வப்புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள்!

"ரவி"

மாறிவரும் இந்த உலகின் சரித்திரத்தில் ஒரே இன மக்களே வாழும் ஒரு நாட்டைக் காண்பது அரிதிலும் அரிது. இதனால் சிறுபான்மையினர் பிரச்சினை இல்லாத ஒரு நாட்டைக் காண்பதும் அரிதே.

சிறுபான்மையினர் பிரச்சினை என்றால் என்ன? இன்றைய அகன்ற சர்வதேச சமுதாய அமைப்பில் பல இன மக்கள் வாழும் நாடுகளில், பொதுவான எல்லைப் பிரதேசங்களுக்குள் அடைபட்டு வாழும் மக்களில் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் எண்ணிக்கையை விடக் குறைவான தொகையிலுள்ள மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தியும், தங்கள் நலனுக்காக மோதிக் கொள்வதற்கானகளமும் அமைத்துக் கொள்கின்றனர். இதுதான் சிறுபான்மையினர் பிரச்சினையென்பதற்குள்ள பொதுவான அர்த்தம்.

சில நாடுகளில் இன வேற்றுமையுடன் மற்றும் மொழி, மத வேறுபாடுகளும் சேர்ந்து பெரிது படுத்தப்பட்டு விடுகின்றன. இது போன்ற பல் வேறு வேற்றுமைகளுடன் இணைந்து உதயமாகும் சிறுபான்மையினர் பிரச்சினை மிகக் கடுமையானதாக இருக்கும்.

இந்த வகையில்தான் இலங்கைத் தமிழரின் பிரச்னையும் சேர்கிறது. இலங்கைத்தீவில் பெரும் பான்மையினராக சிங்களவர்களிடமிருந்து இலங்கைத் தமிழர் இனத்தால் மட்டும் வேறுபட்டிருக்க வில்லை. மொழியாலும் மதத்தாலும் கூட வேறுபட்டுள்ளனர். தமிழர்களில் பெரும் பாலானோர் இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்கள். சிங்கள மக்களில் பெரும் பாலானோர் பௌத்தர்களாவர்.

என்றாலும் இலங்கைப் பிரச்சினை காலத்தாலோ, சாத்திரத்தினாலோ ஆழப் பதிந்துவிடவில்லை. இப்பிரச்சினை தலைதூக்கி முப்பது வருடங்கள் தானாகின்றன. எனினும் இந்த முப்பது வருடங்களுள் நிலைமை சீரடைவதற்குப் பதிலாக மோசமடைந்திருக்கிறது. இதற்குக் காரணம் வேறுபாடு பல இடங்களுக்கும் விரிந்து பரந்ததோ அல்லது வேறுபாடுகள் நீக்கப்பட முடியாததோ அல்ல, இப்பிரச்சினையை குழப்பியடித்ததே நிலைமை மோசமானதற்குக் காரணமாகும்.

இலங்கைத்தீவு அந்நியரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது, கைப்பற்றியவருக் கெதிராக கைப்பற்றப்பட்ட இனங்களுக் கிடையிலிருக்கக் கூடிய பொதுவான ஓர் இணைப்பு தேசிய இனங்களுக் கிடையில் இருந்தது. இதை வகுப்பு சௌசன்யம் என்று சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவு இன ஐக்கியம் என்று சொல்லக்கூடியதாக இருந்தது. இந்தப் பொதுவான இணைப்பு மேலும் வலுப் பெறுவதற்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியர் இந்த நாடு முழுவதையும் ஒரே மொழியில் அதாவது ஆங்கில மொழியில் நிர்வகித்தது மற்றொரு காரணம். மொழியினுல் வலுப்பெற்ற இணைப்பு மொழியினுல் இரு சமூகங்களுக்கிடையிலும் இருந்த வேறுபாடு களைத் தூரத்தே வைத்திருந்தது.

ஆனுல் அந்நியரின் .ஆட்சிக்கு முடிவு காலம் வந்து கொண்டிருக்கிற தென்பது தெளிவானதும் சமூகங்களுக் கிடையில் குறிப்பாக, இந்த நாட்டிலுள்ள இரு பெரும் சமூகங்களுக் கிடையிலும் அச்சமும் தங்களுக்குள்ளே யான வேறு பட்ட நலன்கள் பற்றிய ஆர்வமும் தலை தூக்க ஆரம்பித்தன.

இதர சிறுபான்மைச் சமூகத்தவர்கள், அதாவது பறங்கியர், முஸ்லிம்கள் ஆகியோரைப் பொறுத்த அளவில் அவர்களுடைய பிரச்சினைகள் வேறுவித மானவை. இந்த இரு சமூகத்தவரும் நாட்டின் நாலா பக்கங்களும் பரவி வாழ்கின்றனர். தங்கள் உரிமைகளில் பெரும் பான்மைச் சமூகத்தவர் அத்து மீறித் தலையிடுவதை உறுதியாக எதிர்க்கக் கூடிய நிலையிலோ, எதிர்ப்பை நீடிக்கக் கூடிய நிலையிலோ அவர்கள் இருக்கவில்லை. இதனுல் தங்களுக்குக் கூடிய நல்ல சந்தர்ப்பத்தை எவ்வளவுக் கெவ்வளவு பயன் படுத்த முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு பயன் படுத்த வேண்டியிருந்தது. அவர்களுக்குள்ள ஒரே மார்க்கம், பறங்கியர் பலர் ஆஸ்திரேலியா சென்று குடியேறியது போன்று, தங்களுக்கு அதிக சாதகமான இடங்களுக்குச் சென்று குடியேறுவது அல்லது அரசியல் சந்தர்ப்ப சூழ் நிலைக்கேற்ப பெரும் பான்மைச் சமூகத்தவருடன் விட்டுக் கொடுத்து அவர்களுடன் சேர்ந்து பயன் பெறலாமென முஸ்லிம்கள் நினைப்பது போல் தோன்றும் வழியைப் பின்பற்ற வேண்டும்.

ஆனுல் தமிழரின் நிலையோ வேறுபட்டது. சரித்திர காலந்தொட்டு, தமிழர்கள், மற்றவர்களைத் தவிர்த்து, நாட்டின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கணிசமான ஒரு பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இந்தப் பிரதேசங்கள் தமிழரின் பாரம்பரியமான பகுதியென்பது யாவராலும் ஏற்றுக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட விஷயம்.

இலங்கையில் தமிழர்கள் இரண்டாவது தனிப் பெரும் சமூகமாக இருக்கின்றனர். இந்த நாட்டின் புறம்பான ஒரு பகுதியில் அவர்கள் தனித்துவத்துடன் வாழ்கின்றனர். சிறுபான்மையினரில் பெரும் பான்மையினராக இருப்பதுடன் நாட்டின் ஒரு பகுதியில் தனித்துவத்துடன் வாழும் பாதுகாப்பும் தமிழர்களுக்கு இருப்பதால், இதர சிறு பான்மைச் சமூகங்களைப் போன்று தமிழர்களின் பிறப்புரிமையில் பிறர் கால் வைக்க முடியாது.

இந்த நாட்டுக்குப் பிரிட்டிஷார் சுதந்திரம் வழங்குவதற்கு முன்னரே, தமிழர் தமது பிறப்புரிமையில் யாரும் தலையிடுவதற்கு விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பதற்குச் சான்றுகளிருந்தன. தமிழர்களின் இந்த உணர்வு உறுதியாகி, அந்தச் சமயத்திலேயே பாராளுமன்றத்தில் சம பலப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை எழுப்பினர்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளைச் சமாளித்து மழுப்புவதற்காக சோல்பரிக் கமிஷனர்கள் இங்கு வந்தனர். இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்பை உரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கிய சிற்பிகள் இந்த சோல்பரி கமிஷனர்கள்தான். இங்கு அவர்கள் விசாரணை நடத்த வந்து சேர்ந்த சமயம், சர்வ சிங்கள மந்திரி சபை இருந்தது. இந்த மந்திரிசபைதான், அன்று தமிழர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகித்த ஒரேயொரு கட்சியான தமிழ்க் காங்கிரஸ், சோல்பரி கமிஷனர்கள் அமைக்க உத்தேசிக்கும் எந்த பாராளுமன்றத்திலும் பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு ஐம்பது ஸ்தானங்களும் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு ஐம்பது ஸ்தானங்களுமாக, ஐம்பதுக்கு ஐம்பது சமபலப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தக் காரணமாக இருந்தது.

நெருக்கடியான சந்தர்ப்பமெதிலும், பெரும்பான்மைச் சமூகத்தினர் அடக்குமுறைச் சட்டங்கள் எதையும் கொண்டுவந்து நிறைவேற்ற எத்தனித்தால், சிறுபான்மைச் சமூகத்தினரின் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்து வாக்களித்து அந்தச் சட்டத்தை நிறைவேறாமல் செய்ய முடியும் என்பதுதான் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ. ஜீ பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது என்னும் சமபலப்பிரதிநிதித்துவக் கோரிக்கையை வற்புறுத்துவதற்கு நோக்கமாக இருந்தது.

திரு. பொன்னம்பலத்தின் கோரிக்கைக்கு சோல்பரி கமிஷனர்கள் சாதகமாகச் செவி மடிக்கவில்லை. பிரதேசவாரியாகப் பிரதிநிதித்துவமளிக்கும் பிரிட்டனின் பாரம்பரிய முறையைப் பின்பற்றி, பாராளுமன்றத்தில் பெரும்பான்மைச் சமூகத்தவருக்குப் போதிய வாக்குப்பலம் கிடைக்கக்கூடிய முறையில் சோல்பரி கமிஷனர்கள் சிபார்சு செய்தனர்.

மனநீதியற்ற பெரும்பான்மையினருக்குச் சட்டத்தை நிறைவேற்றும் சக்தி அளிக்கப்படுவதால், சிறுபான்மையினருக்கு ஏற்படக்கூடிய அபாயம்பற்றி சோல்பரி கமிஷனர்கள் உணராமல் விட்டனர் என்பதல்ல.

இனம், மொழி, மதம் என்ற குறுகிய எல்லைக் கோடுகளை உடைத்தெறிந்து விரிந்த, பரந்த தேசியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட, இங்கிலாந்திலுள்ளது போன்றஒரு கட்சி முறையை இங்கு விருத்தி செய்யக்கூடிய சாதகமான அரசியல் சூழ்நிலை இங்கு இருப்பதாக கமிஷனர்கள் நினைத்தனர். சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினர் அடக்கி ஒடுக்க முற்பட்டால், அதைக் கட்சி அரசியல் முறைமை எதிர்த்து சமாளித்து விடும் என அவர்கள் கருதினர்.

ஆனால் அவர்கள் நம்பிக்கை யாவும் பொய்யாய், கனவாய்ப் போய்விட்டன. இந்த நாட்டில் கட்சி அரசியல் முறை பிடிபட்டாலும் கூட, அது குறுகிய வகுப்புவாத முறையிலேயே அமையுமென்பதையும் பரந்த அடிப்படைக்கொள்கையில் அமையமாட்டாது என்பதையும் சோல்பரிக் கமிஷனர்கள் உணர முடியாது போய்விட்டது.

சகல சமூகங்களும் பிரதிநிதித்துவம் வகித்த ஒரு கட்சி, அதாவது ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்ததுடன், புதிய அரசியல் அமைப்பின் கீழ் இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் 1947-ம் ஆண்டில் முழு நம்பிக்கையுடன் கூடியது.

முதலாவது பாராளுமன்றத்தின் பாதிவாழ்வுக் காலத்தில் திரு. ஜீ. ஜீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலம் தமது சகாக்களுடன் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து கொள்ளத் தீர்மானித்தார். ஆனால் தமிழ்க்காங்கிரஸின் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதென்று அவர் முடிவு செய்திருந்தார். அந்த நேரத்தில் உண்மையான தேசியக் கட்சி என ஒன்று இருந்ததானால் அது ஐக்கிய தேசியக் கட்சிதான் என்பதே இதற்குக் காரணம்.

பாராளுமன்றத்தில் சமபலப் பிரதிநிதுத்துவம் வேண்டுமென்ற கொள்கைக்காக உக்கிரமாக, தீவிரமாக பிரசாரம் செய்துவந்த திரு. பொன்னம்பலம், ஐக்கிய தேசியக் கட்சியுடன் நியாயமான முறையில் இணைந்து செயல்படுவதில்தான் இலங்கைத் தமிழருக்கு விமோசனம் உண்டு என்று உணர்ந்தார். இதைப் பெரும்பாலான தமிழர்கள் ஆதரித்தனர். இதே சமயம் மற்றும் பலர், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயலாற்றுவதைக் கண்டிக்கத் தலைப்பட்டனர். இதன் விளைவாக காங்கிரஸில் வேறுபாடு தோன்றியது. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தலைமையில் காங்கிரஸிலிருந்து பிரிந்து வெளியேறிய கோஷ்டியினர் தங்களை இலங்கை சமஷ்டிக் கட்சியினர் எனக் கூறிக்கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சியைக் கண்ட 1956-ம் வருடம் இந்த நாட்டின் துர்ப்பாக்கிய வருடமாகவும் அமைந்தது. சில காலமாகவே குமைந்து கொண்டிருந்த சர்ச்சை ஒரு நெருக்கடியாக உருவெடுத்தது.

நாட்டின் நிர்வாக மொழிபற்றியது தான் இந்த சர்ச்சை. தேசிய மொழிகளில் நாட்டின் நிர்வாகத்தை நடாத்த வேண்டுமென்ற விஷயம் பல வருடங்களாகவே விவாதிக்கப்பட்டிருந்தது. ஆங்கிலத்தை நிர்வாக மொழி என்ற அந்தஸ்திலிருந்து நீக்கவேண்டுமென்பதன் அவசியத்துக்கு இணங்கிய ஐக்கிய தேசியக் கட்சி, ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களமும் தமிழும் நிர்வாக மொழிகளாக இருக்க வேண்டுமென்றும் சிங்கள மொழி மட்டுமே நிர்வாக மொழியாக்கப் படக்கூடாதென்றும் கருதியது.

சிங்களம் மட்டுமே நாட்டின் நிர்வாக மொழியாக இருக்கவேண்டுமென்ற கொள்கையைக் கொண்ட, முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தூண்களில் ஒருவராகவிருந்த (காலஞ்சென்ற) திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகாவின் தலைமையிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கு, நாட்டின் சிங்களம் பேசும்பகுதிகளில், சில இடங்களில் செல்வாக்கு அதிகரித்து வருவதனால் ஏற்பட்ட தூண்டுதல் காரணமாக, ஐக்கிய தேசியக்கட்சியும் 1955 ~~1965-ம்~~ ஆண்டில், கொழும்பை அடுத்த, புராதன பட்டினமான களனியில், கூடிய அதன் ஆண்டு மகாநாட்டில், தனது கொள்கையையும் முற்றாகமாற்றிக் கொண்டு, சிங்களமட்டுமேதான் தனது கொள்கையும் என்று பிரகடனப் படுத்தியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தக் களனிமகாநாட்டுத் தீர்மானம்; நாட்டில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. உடனடியாகத் தோன்றிய விளைவுகளில் ஒன்று வடக்கிலும் கிழக்கிலும் சமஷ்டிக் கட்சி வரப்பெற்றதும், ஐக்கியதேசியக் கட்சியுடன் சிறிது காலம் தொடர்பு கொண்டிருந்ததற்காக தமிழ்க்காங்கிரசுக்கு 'துரோகிகள்' என்று நாமம் சூட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியதுமாகும். இதில் வேடிக்கை என்ன வென்றால் ஐக்கிய தேசியக் கட்சியின் களனிமகாநாடு நடைபெறுவதற்கு முன்னரே ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் பிரிந்து விட்டன என்பது தான்.

'சிங்களம் மட்டும்' என்பதே தங்கள் கொள்கையென ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்ததைத் தொடர்ந்து, அதன் விளைவாக வடக்கிலும் கிழக்கிலும் சிங்களத்துவேஷம் அலைபோல பெருகிவந்தது. இதனால் தமிழ்க்காங்கிரஸ் பெரிதும் பாதிக்கப்பட்டது.

களனி மகாநாட்டுக் கொள்கை மாற்றத்தினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இலாபம் எதுவும் கிடைக்கவில்லை. பாராளுமன்றத்தில் ஒரு காலத்தில் எண்ணற்ற பிரதிநிதிகளைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சியினர் 1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் எட்டு ஸ்தானங்களை மட்டுமே பெற்றனர்.

தமிழரின் தலைவிதி சமஷ்டிக் கட்சியிடம் இருந்தது. பெரும்பான்மைச் சமூகத்துடன் இணைந்து வாழ்வது மெதுவாக ஆனால் அழிவதற்கு நிச்சயமான பாதை என்ற அடிப்படையில் திரு. பொன்னம்பலத்தின் மீதும் தமிழ்க்காங்கிரஸின் மீதும் பழிசுமத்தப்பட்டதற்கு சொல்லக்கூடிய பதில் இது தான். பாராளுமன்றத்தில், ஐக்கிய தேசியக் கட்சிக்கு முன்னர் இருந்த, எதையும் சாதிக்கக்கூடிய பெரும்பான்மைப்பலத்தையும், பாராளுமன்றத்தில் எதிர்த்துக் கொண்டிருப்பது பயனற்ற அரசியலாகுமேயொழிய பலனளிக்கக் கூடியதாக இருக்கமாட்டாதென திரு. பொன்னம்பலமும் தமிழ்க் காங்கிரசும் நம்பினர். இந்நிலையில், தமிழ் மக்களின் பொருளாதார, அரசியல் சீரமைப்புக்கு பெரும்பான்மைச் சமூகத்துடன் நியாயமான முறையில் சேர்ந்து உழைப்பதுதான் ஒரே வழியென உணர்ந்தனர். உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழ்க் காங்கிரஸ் கொண்டிருந்த தொடர்பு முடிவடைந்த காலத்தில், தமிழ் சமூகம் அடைந்த சாதனைகளையும் அனுபவித்த சலுகைகளையும் நினைத்துப் பெருமிதமடையக் கூடியதாக இருந்தது.

இதற்குமாறாக சமஷ்டிக் கட்சியின் சாதனைகளைப் பார்க்கையில் தேவையற்ற இரத்தம் படிந்த, பலனற்றவையாகவே காட்சியளிக்கின்றன.

சமஷ்டிக்கட்சி இரண்டு விதமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. நாட்டிலுள்ள இதர சமூகங்களுடன் அது கொண்டுள்ள உறவைப் பொறுத்தவரையில், தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களில் தமிழையே உத்தியோக மொழியாகக் கொண்ட சமஷ்டி அமைப்பையுடைய இலங்கையே தங்கள் கொள்கை என்று கூறுகிறது. ஆனால் யாழ்ப்பாணக்குடா நாட்டிலும் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பேசும் பகுதிகளிலும் அது வேறுவிதமாகக்காட்டிக்கொள்கிறது. இப்பகுதிகளில், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி என்ற தனது தமிழ்ப்பெயரை, இலங்கையில் சுதந்திரமான தமிழ் நாடு அமைப்பது என்பதாகக் காட்டிக் கொள்கிறது.

சமஷ்டிக்கட்சியினரின் இந்தமுரண்பட்ட, ஒன்றுக்கொன்று தொடர்பற்ற நிலைபற்றி அது ஒரு போதும் தெளிவாக்காத காரணத்தினால் அதன் அரசியல் நேர்மை பற்றி, பெரும்பான்மையினரின் ஏகதேச ஏகாதிபத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கை விரும்பாத, பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த நிதான புத்திபடைத்தவர்களும் கூட அநுதாபத்தை விடுவித்து சந்தேகக் கண்கொண்டுநோக்க வழிவகுத்திருக்கிறது. வேறுபல விஷயங்களிலும் கூடச் சமஷ்டிக்கட்சியின் போக்கு சந்தேகத்துக்கு இடமளித்திருக்கின்றது தமிழ் மொழிக்கு சமஅந்தஸ்து, தமிழ் பேசும் மாகாணங்களில் பிரதேச ஆட்சி, தமிழரின் பாரம்பரியமான பிரதேசங்களில் தமிழர் அல்லாதவரைக் குடியேற்ற அனுமதிப்பதில்லை ஆகிய கட்சியின் கொள்கையைப் பிரச்சினைகளில் விட்டுக் கொடுப்பதில்லை என்ற உறுதியான நிலையைக் கொண்டிருப்பது சமஷ்டிக் கட்சி.

என்றாலும், பாராளுமன்றத்தில் எண்ணிக்கைப் பலம் அதற்கு இருந்தும் கூட, தமிழ் வாக்காளர்களுக்கு அது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி விட முடியுமென ஒருபோதும் நினைக்க முடியாது. தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இந்நாட்டிலுள்ள இரு பெரும் அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியினுடைய அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுடைய பலத்தையும் ஆதரவையும் சமஷ்டிக் கட்சி நாடவேண்டியதாக வேண்டும்.

நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலையில், இரு பெரும் அரசியல் கட்சிகளும் தங்களுக்குள் உள்ள அதிகாரப் போட்டிக்கான போராட்டத்தில், தங்களின் முன்னேற்றத்துக்காகப் பாராளுமன்றத்தில் கணிசமான அளவு பெரும்பான்மைப் பலத்தை வலுப்படுத்துவதற்கு சமஷ்டிக் கட்சியை உபயோகித்துக் கொள்வது தங்களுக்குப் பாதுகாப்பு எனக் கருதுகின்றன. சமஷ்டிக் கட்சி அளிக்கும் சேவைக்கு பிரதி உபகாரமாக, இடைக் கிடை நாக்கை நனைத்து விடுவார்களேயொழிய அதற்கு அதிகமாக எதுவும் செய்து விடமாட்டார்கள்.

இன்றைய அரசியல் அமைப்பு முறையில், பெரும்பான்மைச் சமூகத்தவரின் ஆதரவிலே தங்கியிருக்கும் ஓர் அரசியற் கட்சி, சமஷ்டிக் கட்சியின் நோக்கத்துக்கு இணங்கினால், அதன் அரசியல் வாழ்வே முடிவுக்கு வந்துவிடும்

கடந்த பத்து ஆண்டுகளில் சமஷ்டிக் கட்சித் தலைவர்களின் நடவடிக்கைகள் அவர்களின் ஆதரவாளர்களின் உயிர்களையும் குருதியையும் இரண்டு தடவைகள் மோசமாகப் பாதித்துள்ளன. 1956-ல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்படுவதை எதிர்த்து பாராளுமன்றத்தின் முன்னால் காலிமுகத் திடலில் சாத்விகப் போராட்டத்தைச் சமஷ்டிக் கட்சியினர் ஆரம்பித்த பொழுது, நாடு பூராவிலும் இக் கலவரங்கள் மூண்டது முதற் தடவையாகும். இரண்டாவது தடவை 1958-ல் மோட்டார் வாகனங்களின் இலக்கத் தகடுகளில் சிங்கள 'சிறீ' எழுத்துப் பொறிக்கப் படுவதை எதிர்த்து சமஷ்டிக் கட்சியினர் எதிர்ப்பு இயக்கம் ஆரம்பித்த பொழுது முன் எப்போதும் கண்டிராத வகையில் நாடு பூராவிலும் கொலையும் கொள்ளையுமான இரத்தக் களரி ஏற்பட்டது.

வடக்கு கிழக்கிலுள்ள வாக்காளர்களின் முன் தமிழ் இனத்துக்காகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை அர்ப்பணித்துக் கொண்ட வீரர் களாகக் காட்டிக் கொள்ள சமஷ்டிக் கட்சித் தலைவர்களுக்கு இந்த நடவ டிக்கைகள் பயன் படுவதாக பாரபட்ச மற்ற அரசியல் அவதானிகள் கருது கின்றார்கள். காலத்துக்குக் காலம் பயங்கர விளைவுகளை அறுவடை செய் ததுதான் காலத்துக்குக் காலம் மேற் கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை களின் பலன் என்பது கண்கூடு.

தற்பொழுது, 1965-ல் நிறுவப்பட்ட தேசிய அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சமஷ்டிக் கட்சி இணைந்து இருக்கின்றது. ஆனால் இந்த இணைப்பு சமஷ்டிக் கட்சி—தேசிய அரசாங்கம் ஆகிய இரு சாராருக்குமே சுமுகமா னதாக இல்லை யென்பது வெளிப்படை. சனப்பிரதிநிதிகள் சபையில் சமஷ்டிக் கட்சியின் வாக்குப் பலம் தேவைப்பட்ட போதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும் பான்மை சிங்கள ஆதரவாளர் களைப் பொறுத்தவரை அதன் சங்கட மான கோரிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எக்கச்சக்கமான நிலைமையை ஏற்படுத்துவதாக இருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி அளித்து வரும் வெகுமதிகள் பெரிதாகவும் இல்லை, விரைவாகவும் இல்லை என்று சமஷ்டிக்கட்சி கருதுகின்றது இந்த நிலைமையில் தமிழரின் நிலை என்ன என் பதுதான் கேள்வி அதற்கு ஒருசிலர் தான்மறுமொழி அறிவார்கள்.

*　　*　　*　　*

## நமக்கொரு தலைவன்

'நாட்டிலே நம்மைக் காக்க
　　நலம்பல ஈய எங்கள்
கேட்டினை ஓட்டி எங்கும்
　　கேண்மையால் இன்ப மூட்ட
நாட்டிடை ஒருவன் உள்ளான்
　　நாமெலாம் பொன்னன் என்போம்
கூட்டணி யாகி அன்னோன்
　　கொள்கையால் வெற்றி கொள்வோம்''

இ. நா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி இந்துப் பல்கலைக்கழகத்தைத் தாபித்த

# பண்டிற் மதன் மோகன் மாளவியா

முன்னாள் இந்திய தேசியக் காங்கிரசுத் தலைவர் அவர்கள் கூறியவற்றுள் சில

இந்தியாவில் இப்பொழுது ஐந்து சர்வகலாசாலைகள் இருக்கின்றன. கல்கத்தா, பம்பாய், சென்னை, லாகூர், அலகாபாத் சர்வகலாசாலைகளே அவை. பெரும்பாலும் இவைகள் யாவும், லண்டன் சர்வகலாசாலை மாதிரியில் "பரீட்சிக்கும் சர்வகலாசாலை" களாகவே அமைந்துள்ளன.

முதற்றரமான, தகுந்த திட்டமிட்ட, முறையான போதனைக்கு மாணவர்களைக் கட்டாயப் படுத்தாமல், மாணவர்களுக்கு வெறும் பரீட்சை வைக்கும் திட்டம் - நுண்மாண் நுழைபுல, தொழில் நுட்ப அறிவையும், உண்மையை உணர்ந்தும் அவதானிக்கும் திறனையும் கெடுத்தும் மனப்பாடமாக்கு, முறையையே விருத்தி செய்திருக்கின்றதென்பது கடந்த ஐம்பதாண்டு காலத்தில் இந்தியா கண்ட அனுபவ ரீதியான உண்மை

இதுதவிர, அறிவை மட்டும் விருத்தி செய்வதற்கு மேலாக, தனிமனிதனின் நலனுக்கும் மிகமுக்கியமான பண்பாட்டை, குணம்சங்களை உருவாக்கி விருத்தி செய்வதற்கு "பரீட்சிக்கும் சர்வகலாசாலைகள்" மிகக் குறைவான சேவையே புரிய முடியும்.

இந்தியாவின் தேசிய வளங்களைப் பயன்படுத்தி, தேசீயக் கைத்தொழில்களைப் பாதுகாக்கவும், அவைகளுக்குப் புத்துயிரளிக்கவும் அதன் மூலம் தேசிய பொருளாதாரத்தைப் பெருக்கவும்; பொது விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவைப் பரவலாக்கவும் உத்தேச சர்வகலாசாலை உதவும் என்று முன்னர் கூறப்பட்டது கைத்தொழில் முன்னேற்றம் மட்டும் எந்த மக்களுக்கும் சந்தோஷத்தையும் சுபீட்சத்தையும் அளிக்கமாட்டாது. அத்துடன், அவர்களைச் சமூகத்தின் மத்தியில் உயர்த்தியும் வைக்க மாட்டாது சந்தோஷமும், சுபீட்சமும், சமூகத்திலுயர்ந்த நிலையும் கிடைப்பதற்கு லோகாயுதத்தைவிட தார்மீக வளர்ச்சிதான் அதிக அவசியம். மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையும் விசுவாசமான ஒத்துழைப்பும் இல்லாமல் கைத்தொழில் சுபீட்சத்தைக்கூடப் பெரியஅளவிற் பெற முடியாது இந்த நோக்கத்துடன் மக்கள் ஒன்று சேர்ந்தால்தான் இந்த நோக்கத்தை அடைய முடியும் இந்தப் பண்புகள், தங்கள் நடத்தையில் நேர்மையும் கடவுள் வழிபாட்டில் கண்டிப்பான ஒழுங்கு முறையும், உண்மைக்கு விசுவாசமாகவும் உள்ள மக்களிடமே உறைந்திருக்க முடியும். இப்படியான மக்களை உயிர் வாழும் சக்தியாக விளங்கும் ஒரு மாபெரும் சமயத்தின் கட்டுப்பாடான வழி நடத்தலுக்குட்பட்ட ஒரு சமுதாயத்தில்தான் காணமுடியும். ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் அதன் சமயத்தைப் பேணிப் பாதுகாத்து வருகிறது. இதற்கு இந்துக்
கள் விதிவிலக்கல்ல  உண்மையில் இந்துக்களைப்போலத் தங்கள் சமயத்தில்
ஆழ்ந்த பக்தியும் அன்பும் கொண்டவர்கள் உலகில் இல்லை.

மிகத் தொன்மையானதும், மிக மிக விரிந்து பரந்ததும், அதைப் பின்
பற்றுபவர்கள் அதனுடன் ஆழ்ந்த பக்தியும் அன்பும் கொண்டு போற்றதுமான
சமயம் இது. ஒரு சமயத்தின் ஆசிரியர்களுக்கு அந்தச் சமயக்கல்வி அளிக்கவேண்
டியதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவம் மிகத்
தெளிவானது. இந்தப் புனித பணிக்குத் தகுதியானவர்களுக்குக் கல்வியளிக்க,
திருப்திகரமான வசதிகள் செய்து கொடுக்கப்படாவிட்டால், நல்ல கல்வியறிவில்
லாத, படிக்காதவர்களும், தகுதியற்றவர்களுமே பெரும்பாலும் இந்த இடத்தை
நிரப்புவர். இது சமயத்தின் நோக்கத்துக்கே தீங்காவதுடன் சமூகத்துக்கு
நஷ்டமுமாகும் இதுபோன்ற நிலையை ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுக
ளிற் காணமுடியாது. அந்த நாடுகளில் கல்வியில் சமயமும் ஒரு பகுதியாக
இருக்கவேண்டுமென்பது ஒரு விதிமுறையாகவே உள்ளது.

இந்து சமூகத்தின் சமயத் தேவைகளைத் திருப்திப் படுத்துவதற்குத்
தகுந்த வசதிகளைச் செய்வதற்காக, இந்து சமய ஆசிரியர்களுக்குத் தகுந்த
போதனையளிக்கும் பொருட்டு சர்வகலாசாலையில் பெரிய பாடசாலையையோ
கல்லூரியையோ ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆசிரியர்கள்
நல்ல ஆழ்ந்த, கல்விஞானம் பெறுவதுடன், தங்கள் புனிதமான பக்தி நூல்
களில் விசேஷமான புலமையும் திறனுய்வும் பெற வேண்டுமென்றும் இவை
தவிர உலகிலுள்ள இதர சமயங்களின் மகத்தான நெறி முறைகள் பற்றியும்
ஒப்பிட்டு ஆராய்ந்தறிய வேண்டுமென்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்து சமூகத்தின் மாபெரும் தேவைகளில் ஒன்ருன அல்லது மாபெரும்
தேவையான, இந்துச் சர்வகலாசாலை நிலையான நன்மை தரக் கூடியதும் என்றும்
பயன் தரக்கூடியதுமான ஒரு ஸ்தாபனமாக வாழ்ந்தும், வளர்ந்தும் வரும்.
இந்தச் சர்வகலாசாலை அறிவின் மேன்மைக்கு ஒரு நிலையமாகவும் சன்மார்க்க
உணர்வின் ஊற்ருகவும் மட்டுமல்லாது, இந்தியாவிலுள்ள, மாட்சிமை தங்கிய
மன்னரின் பிரசைகளில் மிகப் பெரும் பாலாருக்கு அறிவும் ஞானமும் பரப்பி,
அவர்களின் முன்னேற்றத்துக்கும், சுபீட்சத்துக்கும் தெம்பூட்டுவதற்கும் அரசாங்
கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும், இந்த ஸ்தாபனம், பணிவுடன் உதவி
புரியும்.

1911-ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் வெளியிடப்பட்ட காசி இந்துச்
சர்வகலாசாலைத் திட்ட வரலாற்று விளம்பரம்.

1904-ம் ஆண்டு காசியில், மேன்மை தங்கிய காசி மகாராஜா தலை
மையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், காசியில் ஓர் இந்துச் சர்வகலா
சாலை அமைக்கப்பட வேண்டுமென்ற யோசனை முதன் முதலாகக்
கொண்டு வரப்பட்டது. இந்தச் சர்வகலாசாலையின் அமைப்பு விதி முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பற்றிய வரலாற்று விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 1905-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விநியோகிக்கப்பட்டது. 1905-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31-ந் திகதி காசியில் ஒரு கூட்டம் நடந்தது. இக் கூட்டத்தில் அநேகமாக, இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்தையும் சேர்ந்த கல்விமான்களும் இந்து சமூகத்தின் பிரதிநிதிகளும் சமூகமளித்திருந்தனர். காசி இந்துச் சர்வகலாசாலை பற்றிய வரலாற்று விளக்கப் பிரசுரம் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. 1906-ம் ஆண்டு ஜனவரி மாதம் அலகாபாத்தில் நடந்த இந்துசமயக் காங்கரசிலும் இது பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. சக்திக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாகச் சென்ற வருடம் வரை இந்த முயற்சி வருடா வருடம் தள்ளி வைக்கப்பட்டு வந்தது. நீண்ட காலமாக வளர்ந்து வந்த நோக்கத்தை அடைவதற்கான முயற்சிகள் ஜனவரி மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உத்தேச சர்வகலாசாலையில், தங்கியிருந்து கல்வி கற்பதற்கும், நவீன முறைப் போதனை சர்வகலாசாலையாகவும் இருக்கவேண்டு மென்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது, இந்தியாவில் இது போன்ற சர்வகலாசாலைகள் எதுவும் இல்லை. இப்பொழுது இந்தியாவிலுள்ள ஐந்து சர்வகலாசாலைகளும் பெரும்பாலும் பரீட்சிக்கும் சர்வகலாசாலைகளாகவே இருக்கின்றன. படிப்பும் பரீட்சையும் மட்டுமல்லாது, சர்வகலாசாலை வாழ்வின் உன்னத இலட்சியங்களை உணர்ந்து கொள்வதற்கு விடுதி விட்டுப் படிக்கும் சர்வ கலாசாலையின் அவசியத்தை, கடந்தகாலத்தில் இந்தியாவும், இக் காலத்தில், முன்னேற்றமடைந்த மேற்கிந்திய நாடுகளும் அறிந்து கொள்வதால் இந்தச் சர்வகலாசாலை அமைப்பு முறை திருப்தியளிக்கக் கூடியதாக இருந்தது.

## நோக்கங்கள்

(1) குறிப்பாக இந்துக்களுக்கும் பொதுவாக அகில உலகுக்கும் நன்மையளிக்கும், இந்துக்களின் பண்பாட்டையும், சிறந்த சிந்தனைகளையும், பழம்பெரும் இந்திய நாகரிகத்தின் மகத்தானதும் சிறந்ததுமான அனைத்தையும் பாதுகாக்கவும் பிரபல்யப்படுத்தவும் ஒரு மார்க்கமாக இந்து சாஸ்திரங்களினதும், சமஸ்கிருத இலக்கியங்களினதும் படிப்பை முன்னேற்றுவது.

(2) சர்வகலாசாலையின் சகல பகுதிகளிலும் கலையிலும் விஞ்ஞானத்திலும் படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் முன்னேற்றமளிப்பது.

(3) சுதேசியக்கைத்தொழில் வளர்ச்சிக்கும்; நாட்டின் மூலாதார வளங்களை விருத்தி செய்வதற்கும் விஞ்ஞான தொழில் அறிவு பெரும் உதவியெனக் கணிக்கப்பட்டிருப்பதால் அந்த விஞ்ஞான தொழில், நுட்பத்தொழில் அறிவை, அவசியமான சாதனுபயிற்சியுடன் இணைத்து முன்னேற்றுவதும் பரப்புவதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) சமயத்தையும்; நீதி நெறியையும் கல்வியின் ஓர் உட்பிரிவாகச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இளைஞர்களிடம் நற்பண்பை வளர்ப்பது.

சர்வகலாசாலை பின்வரும் கல்லூரிகளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

(1) வேத சாத்திரப் பகுதியுடன் சேர்ந்த ஒரு சமஸ்கிருதக் கல்லூரி

(2) ஒரு கலை இலக்கியக் கல்லூரி

(3) விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று

(4) விவசாயக் கல்லூரி

(5) வர்த்தகக் கல்லூரி

(6) வைத்தியக் கல்லூரி

(7) இசை, நுண்கலைக் கல்லூரி

சட்டப்படிப்புப் பீடம் ஒன்று பின்னர் அமைக்கப்படும்.

## போதனுமொழி

ஆங்கிலமொழி மூலம் போதனையளிக்கலாம். ஆனால் சுதேச மொழிகள் படிப்படியாக அபிவிருத்தியடைந்ததும், எந்தப் பாடங்களிலும், பயிற்சிகளிலும், அவைகளில் ஒன்றையோ, ஒன்றுக்கு மேற்பட்டவையையோ, போதனுமொழியாக உபயோகிக்க அனுமதிக்கலாம் என்பதும் அப்படி அனுமதிப்பது நடைமுறைச் சாத்தியமா, உபயோகமானதா என்பதும் சர்வகலாசாலையின் அதிகாரத்துக்குட்பட்ட விஷயம். சர்வகலாசாலையே அதைத் தீர்மானித்துக் கொள்ளலாம். என்றும் உலகமெங்கும் உபயோகத்திலுள்ள ஆங்கிலமொழி, தேசிய மொழிகளோ, தேசிய மொழியோ போதனுமொழியான பின்னரும் கூட, இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படும்.

1915-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ந் திகதி சாம்ராஜ்ய (இம்பீரியல்) சட்டசபைக்கூட்டத்தில் கௌரவ சேர் ஹார்கோர்ட் பட்லர், காசி இந்து சர்வகலாசாலை மசோதாவைக் கொண்டுவருவதற்கு அனுமதிகோரினர். இப்பிரேரணை மீது பண்டித மதன் மோகன் மாளவியா பேசுகையில் பின்வருமாறு சொன்னர்-

"உத்தேச சர்வகலாசாலை ஒரு சமயச் சார்பான சர்வகலாசாலையாகுமென்ற காரணத்தினுல் தாங்கள் இது விஷயத்தில் விலகி நிற்பதாக கௌரவ அங்கத்தவர்கள் இருவர் தெரிவித்தனர். அமைப்பில் சமயச் சார்புடையதாக இருப்பதால், அது பிரிவினை மனப்பான்மையை வளர்க்க அல்லது வலுப்படுத்தக் கூடும் என்று எனது நண்பர்களான திரு. குஸ்னுவியும் திரு. சேத்தல் வாட்டும் அச்சம் தெரிவித்திருந்தனர். பிரபு, இந்த சர்வகலாசாலைச் சமய சார்பான ஒரு ஸ்தாபன சமய பேதமுடையதல்ல. குறுகிய சமய பேதத்தை இது வளர்க்கமாட்டாது; ஆனுல் மனிதனுடன் மனிதன் சகோதர உணர்வுடன் நடந்து கொள்வதற்கு சமய உணர்ச்சியையும் தாராள மனப்பான்மையையும் வளர்க்கும். சமய பேதமுள்ள சர்வகலாசாலைகளும், சமய சர்வகலாசாலைகளும், நமது அரசாங்க சர்வகலாசாலைகளில் கட்டாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக்கல்வி இல்லாதிருந்த போதிலும், இந்த நாட்டில் சமயபேதம் வளர்வது தடுக்கப்படவில்லை. இந்துக்களாக இருந்தாலும் சரி, முஸ்லிம்களாக இருந்தாலும்சரி, காசி இந்து சர்வகலாசாலையிலும் சரி, அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலையிலும் சரி சமயத்தின் உண்மைகளை, உண்மையான தத்துவங்களைக் கல்வியில் உள்ளடக்கிப் போதிப்பது, அவர்களை அவர்களுடைய சமயத்துக்கும், அவர்களுடைய இறைவனுக்கும், அவர்களின் அரசனுக்கும், அவர்களின் தேசத்துக்கும் உண்மைபாகவும் விசுவாசமாகவும் நடக்கக்கூடிய மனிதர்களை உருவாக்குமென்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இது போன்ற சர்வகலாசாலைகளில் படித்துப் பயிற்சி பெற்று வெளியேறும் மாணவர்கள், இப்போதுள்ளதை விட, ஒரே தாய்நாட்டின் புதல்வர்கள் என்ற உணர்வுடன் ஒருவரை ஒருவர் அணைத்து மகிழும் காலத்தை நான் எதிர்பார்த்திருக்கிறேன்.

உத்தேச சர்வகலாசாலையில் இந்து மாணவர்களுக்குக் கட்டாய சமயக்கல்வி அளிக்கும் அம்சத்துக்கும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அம்சத்தை நீக்குவது இந்தத்திட்டத்தின் உயிர்நாடியையே அறுப்பதற்கு ஒப்பாகும். சமயத்தின் செல்வாக்கைக்கண்டு சிலர் அஞ்சுவது வருந்தத்தக்கது. அவர்களுடைய கருத்தை நானும் பகிர்ந்து கொள்ள முடியாதென்பதற்காக வருந்துகிறேன். சமயத்தின் செல்வாக்கு என்றும் நிலைத்திருக்கும். உண்மையான சமய உணர்ச்சி எங்கே சரியாக ஊட்டப்படுகிறதோ அங்கே ஆணவம் நீங்கி மேன்மையான பண்பு வளரும் என்பது எனது நம்பிக்கை. எங்கே இறைவன்பால் அன்பு செலுத்தப்படுகிறதோ அங்கே மனிதன்மீதும் வெறுப்பு நீங்கி அன்பும் அதிகரிக்கிறது. எனவே, கட்டாயச் சமயக்கல்வி அளிக்கப்படுவது. இந்து மாணவர்களுக்கு மட்டுமல்லாது, புதிய சர்வகலாசாலைக்குப் போகும் இதர மாணவர்களுக்கும்கூட நல்லதற்கே வழிகாட்டும் என்று கூறவிரும்புகிறேன்

சர்வகலாசாலைக்குப் பேராசிரியர்களைத் தெரிவுசெய்வதில் சமயம் ஒரு தகுதியின்மையாக இருக்காது சர்வகலாசாலையில் மாணவர்கள் சேர்வதற்கு சமயமோ, வகுப்போ தடையாக இருக்க மாட்டாது. உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சிறந்த, நல்லாசிரியர்களை எடுக்கவேண்டுமென்பதே எங்கள் நோக்கம். இதற்கு இனமோ, வகுப்போ இடையூறாய் இருக்க மாட்மாட்டாது. எங்கள் மாணவர்கள், தங்கள் காலிலேயே நின்று எவ்வளவு ஞானமும் கல்வியும் பெற முடியுமோ அவ்வளவும் பெறவேண்டுமென்பதே எங்கள் அவா.

1911-ம் ஆண்டில் முஸ்லிம் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற கருத்துப் பலமாக வற்புறுத்தப்பட்டது. அதற்கு அனுதாபமும் ஆதரவும் தேடுவதற்காக மேன்மை தங்கிய ஆகாகான் அவர்கள் நாட்டில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டார். இந்த வகையில் நமது பொதுவான லட்சியம் ஈடேற முன்னோடிகளாய் உழைத்த நமது முகமதிய சகோதரர்களுக்கு இந்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம் நிறுவுவதில் நாம் பெற்றுள்ள ஒரு பகுதி வெற்றி குறித்து கடமைப்பட்டவர்களாய் இருக்கின்றோம்.

உத்தேசப் பல்கலைக்கழகக் கல்விப் போதனையில் சமயம், முக்கிய இடம் பெறும். சமயத்தின் உயிரோட்டமான சக்தியில் நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அரசாங்கம் கடந்த அறுபது ஆண்டுகளாக நாட்டில் மேற்கொண்டு வரும் கல்வி முறையில் சமயபோதனைக்கு எதுவித ஏற்பாடும் இல்லாதது தான் துரதிஷ்டமான பல விளைவுகளுக்குக் காரணம் என்று நான் நம்புகிறேன். சமயபோதனையில் காசி சர்வகலாசாலையின் செல்வாக்கு ஏனைய ஸ்தாபனங்களாலும் உணரப்படும் என்பதிலும் ஒரு சில ஆண்டுகளில் மக்களாலும், அரசாங்கத்தாலும் ஆதரவளிக்கப்படும் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்விப் போதனையில் சமயபாடம் மிக முக்கிய இடம் பெறும் என்பதிலும் எனக்கு நம்பிக்கை உண்டு.

உலகின் இதர பாகங்களில் உள்ள மாணவர்களுக்குச் சமமான மேதாவிகளான மாணவர்களை இந்தச் சர்வகலாசாலை உருவாக்கும் என்பது மட்டுமின்றி, மேன்மையான வாழ்க்கை நடத்தவும், கடவுள்மீது அன்பு செலுத்தவும், நாட்டின்மீது அன்பு கொள்ளவும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் என்பதிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. அதற்காகப் பிரார்த்திக்கின்றேன்.

❋ ❋ ❋ ❋

"உண்மையான சமய உணர்ச்சி எங்கே சரியாக ஊட்டப்படுகிறதோ
அங்கே மேன்மையான பண்பு வளரும்"

— பண்டிற் மாளவியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தலைவர்

"வி. கே. பீ."

சர்வ சிங்கள மந்திரி தனது தர்பாரை நடத்திய காலம் அது.

சர்வமும் சிங்களர்க்கே என்ற ஆர்வம், தேசாபிமானம் என்ற போர்வையில் வேரூன்றத் தொடங்கிய காலம் அது.

சேர். பொன்னம்பலம் இராமநாதனால் அன்றொரு நாள் அரசியல் மரண ஓலை ஒன்று வர்ணிக்கப்பட்ட டொனமோர் அரசியல் திட்டத்திற்கு ஓர் இறுதிகாண இருந்த காலம் அது.

சர்வ சிறுபான்மை மக்களையும் வந்தார் வரத்தாராக்கவும், விந்தனை வேடர்களாக்கவும், சிங்கள வகுப்பு வாத வெறியர்கள் சூழ்ச்சி செய்யும் திட்டங்களில் இறங்கிய காலம் அது.

தமிழ் மக்கள் தங்கள் திறன் மறந்து, செயல் மறந்து, கூனிக் குறுகத் தலைப்பட்ட காலம் அது.

அந்த நேரத்தில், அந்த ஆபத்தான வேளையிலே திடீரெனக் கேட்டது ஒரு வீர கர்ச்சனை.

பிறந்த பொன் நாட்டிலே பேரும், புகழும் பெற்று வாழ்ந்த நாட்டிலே, ஒரு இனத்திற்கு மற்றும் எல்லா இனங்களும் அடிமையாக வாழ்வதா? - இறந்து விடுவதே மேல் என்றது அந்தச் சிம்ம கர்ச்சனை.

பருத்தித்துறையிலிருந்து பண்டைப்புகழ் வாய்ந்த தெய்வேந்திர முனைவரை பாராண்ட ஈழத் தமிழினம் அன்று பஞ்சைகளாய் பராரிகளாய்ப் பிறர்க்கடிமைகளாய்ப் பணி புரிவதா என்றது அந்தச் சிம்ம நாதம்.

தமிழ் மக்கள் கோழைகளாய், குன்றலாகாது. காளைகளாய்க் களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்றது அந்தப் பாஞ்சசன்னியம்.

அடல் ஏறின் பேரொலி கேட்டதும் விழித்தான் ஈழத்தமிழ்மகன்.

"தமிழன் என்று சொல்லடா. தலை நிமிர்ந்து நில்லடா" என்று மார்பு தட்டி வீறு கொண்டெழுந்தான்.

தன்மானமுள்ள தமிழினம் முழுவதும் ஒன்று திரண்டது.

இத்தன்மான உணர்ச்சியை, இத்தமிழின உணர்ச்சியை, இத்தமிழ் வீர உணர்ச்சியை, இத்தமிழ்ச் சுதந்திர உணர்ச்சியைத் தட்டி எழுப்பியவன் யாரோ? அந்தத் தமிழர் சிங்கம் யாரோ? அந்த வீர சுதந்திர புருஷன் யாரோ?

அவர்தான் எங்கள் தலைவர் - அரசியல் தீர்க்கதரிசி - அறிஞர் - மாமேதை ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

அறிவு, ஆற்றல், அஞ்சாமை, ஆண்மைத்தனம், கல்வி, சொல்வன்மை, இராஜ தந்திரி அரசியல் தீர்க்கதரிசனம், மேதகைமை, உழைப்பு, கண்ணியம், மொழிப் பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, தலைமைப் பண்பு ஆகிய அத்தனை பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு தலைவனை நம்மினத்துள் காண்கின்றோம் என்றால் அது ஜீ. ஜீ. பொன்னம்பலம்தான்.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றாள் எங்கள் ஔவைப்பாட்டி. ஆனால், நான் இன்று சொல்வேன் "அரிது அரிது அறிஞர் ஆதல் அரிது, எள்ளு, ஏன்? அறிஞன் எத்தகையவன்? ஒருவனிடம் அறிவு இருக்கும் ஆனால் ஆற்றல் இராது. அறிவும் ஆற்றலும் உடையவனே அறிஞன் ஆவன். அப்படியா என்று விடாதீர்கள். இன்னும் உண்டு அறிஞனாவதற்கு, ஒருவன் பட்டங்களுக்கு மேல் பட்டங்களாய் அடுக்கியுள்ள கல்வியுடையவனாய் இருப்பான். ஆனால், ஐயோ பாவம், அவனிடம் கருத்து என்பது மருந்துக்கும் இராது. எனவே, கல்வியும் கருத்தும் உடையவனே அறிஞன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவான். அறிஞனுக்கு அத்துணையும் போதும் என்று நினைத்து விடாதீர்கள். அறிஞனிடம் அறிவு, ஆற்றல், அஞ்சாமை, சொல் வன்மை, செயல் வன்மை, தீர்க்கதரிசனம் ஆகிய ஆறு பண்புகளும் அமைந்திருத்தல் வேண்டும். அவன் தான் அரசியல் அறிஞன். அவன் தான் அரசியல் மாமேதை. அவன் தான் அரசியல் தீர்க்கதரிசி. அவன் தான் தலைவன்.

திரிகாலங்களையும் உணர்ந்தவன் தீர்க்க தரிசி. நடந்ததை நினைவிற் கொண்டு நடப்பதைச் செயலிற்கொண்டு நடக்கப் போகின்றதைக் கருத்திற்கொண்டிருப்பவன் தீர்க்கதரிசி. நடந்ததைக் கொண்டு நடக்கின்றதைத் தெரிவுபடுத்துவதிலும், நடந்து போகின்றதற்கேற்பச் செயல் முறைகளை வரையறைப்படுத்திக்கொள்வதிலும், ஈடுபாடு கொண்டிருப்பவன் தீர்க்கதரிசி. நேற்று நடந்தது என்ன என்று தெரிந்திருந்தால் இன்று நடக்கிறதைச் செம்மைப்படுத்த முடியும். நாளை நடப்பது என்ன என்று தெரிந்தால்தான் இன்றே அதற்குரிய அத்திவாரத்தைப் பலப்படுத்த முடியும். இத்தகைய ஆற்றலைக் கொண்ட அரசியல் தீர்க்கதரிசி தான் ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

1944ம் ஆண்டு ஆவணி மாதம் இருபத்தொன்பதாம் திகதி கொழும்பு நகர மண்டபத்திலேயே பல்லாயிரமக்கள் முன்னிலையிலே குரல் எழுப்பினர் எங்கள் தீர்க்கதரிசி ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள்.

“தமிழ் மக்களாகிய நாங்களும் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்கள் ஆகிய யாவரும் இந்தப் பெரும்பான்மையோர் ஆட்சியை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏற்கவும் மாட்டோம். இது எங்கள் முடிந்த முடிபு. தன்மானத்தோடு தன்மதிப்போடு இந்த நாட்டில் வாழ்வதென்று திட சங்கற்பஞ்செய்துள்ளது தமிழினம். அந்த இனத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் இதை நான் இங்கு கூறுகின்றேன். ஆனாலும், உரிமையோடு சொந்த நாட்டிலே குடியிருப்பவராக ஈழ நாட்டில் நாம் பிறந்தோம். அதேயன்றி எந்த ஆண்டானுக்கும் அடிமைகளாக நாம் பிறக்கவில்லை என்பதை நான் ஞாபகப் படுத்த விரும்புகின்றேன். கடலாதிக்கம் பெற்ற ஐரோப்பிய கடற்படை அரசுகளாயகி பறங்கியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், வருகைக்கு முன்னர் தமிழராகிய நாம் எந்த அந்நிய ஆட்சிக்கும் அடங்கி வாழ்ந்ததில்லை.”

இந்த அரசியல் தீர்க்கதரிசன மொழிகளின் உண்மையை இன்றும் நாம் அனுபவித்துக் கொண்டு வருகின்றோம். கிட்டி முறித்துச் சிலர் பாய்ந்ததால், ஒற்றுமை குலைந்ததால், இன்னும் எத்தனை காலத்திற்கு நாமும் நமது சந்ததியாரும் அனுபவிக்கப் போகின்றோமோ ஈசனுக்குத் தான் தெரியும். இன்று தமிழ் இனம் மட்டுமல்ல, மற்றும் ஏனைய சிறுபான்மை இனங்களும் படும் இன்னல்களை, அல்லல்களை, துயரங்களை அன்றே உணர்ந்து, அவற்றை முன்னதாகவே மாற்றிக்கொள்வதற்காகத்தான் அன்றைக்கே, கால் நூற்றுண்டுக்கு முன்னதாகவே தீர்க்க தரிசனத்துடன் எங்கள் ஜீ. ஜீ. சமபலப்பிரதிநிதித்துவம் அல்லது ஐம்பதுக்கைம்பது கோரிக்கையை அரசாங்க சபையில் ஒன்பது மணிநேரங்களாக விளக்கி வைத்தார். சோல்பரிக் கமிஷனர்கள் முன்பாக அந்தச் சமபலப்பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் திட்டத்தைச் சமர்ப்பித்தார். இந்த ஐம்பதுக்கைம்பது கோரிக்கையை சிங்கள வகுப்பு வாதிகள் “பணுட்டப் பணுய்” என்று எள்ளிநகையாடியிருக்கலாம். எட்டாப்பழம் என்று அஞ்சிய தமிழர் சிலர் கிட்டாதாயின் வெட்டன மற என்று கூறிச் சந்தர்ப்ப சூழ்நிலையறியாது மனந்தளர்ந்து நிலை குலைந்திருக்கலாம். வேறும் சிலர் ஐம்பதுக்கைம்பதுக்கு அண்மையில் அறுபதுக்கு நாற்பது தேட முற்பட்டிருக்கலாம். ஆனால் உண்மை, தீர்க்க தரிசனம் என்ற ஒன்று உண்டு. அது அன்று வகுப்புவாத வெறியுலோ, தனிப்பட்ட குரோதங்களாலோ வேறு காரணங்களாலோ கண்மூடி மறைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் காலம் என்னும் பெரும் திரை நீக்கப்பட்டதும் வருங்காலச் சரித்திராசிரியர்கள் ஐம்பதுக்கைம்பதில் தீர்க்கதரிசனத்தை அப்படியே ஆமோதிப்பார்கள் என்பது திண்ணம். இத்தறுவாயில் நீங்கள் என்னைக் கேட்கக்கூடும் அத்தகைய கோரிக்கையை விடுத்த தீர்க்கதரிசியான ஜீ. ஜீ. எப்படி சேனுநாயக்காவின் அமைச்சராக இருக்க உடன் பட்டார் என்று? முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான கேள்வி. அடுத்து நடந்த சம்பவங்களை விளக்கும்போது அங்கும் ஜீ. ஜீயின் தீர்க்கதரிசனம்தான் உடன்பாட்டிற்குக் காரணம் என்பது தத்ரூபமாக விளங்கும்.

சோல்பரிக் கமிஷன் திரு. ஜீ. ஜீயின் கருத்தை தீர்க்கதரிசனத்தை உண்மையில் ஏற்றுக்கொண்டது. இதற்குச் சான்ருகப் பெரும்பான்மையருக்கு இந்த நாட்டை ஆட்சி செய்யும் உரிமை எத்துணை உண்டோ, அத்துணை உரிமை நியாயமான பிரதிநிதித்துவம் ஆட்சிப் பொறுப்பில் சிறுபான்மையருக்கும் இருத்தல் வேண்டும் என்ற முரணுரையைச் சோல்பரிக் கமிஷனின் அறிக்கையில் பரக்கக் கண்டு கொள்ளலாம். இந்த முரணுரையை உண்மையை ஒப்புக்கொண்டும் சோல்பரிக் கமிஷன் அதற்கு ஏற்ற மருந்தை அறிக்கையில் வழங்கவில்லை. அதற்குப் பதிலாகக் காலாகாலத்தில் அந்த மருந்து உருவாகட்டும் என்று விட்டு விட்டார்கள்.

சோல்பரி வெள்ளையறிக்கை அரசாங்க சபையில் விவாதிக்கப்பட்டது. ஜீ. ஜீ. சீமையில் இருந்தார். தமிழ்ப்பிரதிநிதிகள் சரணடைந்தார்கள். அதிலும் ஒருவர் மனத்தை அடக்கிக் கொண்டு வாழா இருந்தார். தனித்தவரானுர் திரு. ஜீ. ஜீ. ஒருமரம் தோப்பாகுமா என்று சிங்கள அரசியல்வாதிகள் கேலி செய்தனர். ஆம், தனிமரம் தோப்பாகும்-பாலைவனத்தில் பேரீஞ்சு உணவையும், நிழலையும் தாகசாந்தியையும் கொடுக்கும் என்று உணர்ந்தவர் அரசியல் தீர்க்கதரிசி ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

அஞ்சினுரா ஆண்மைச் சிங்கம்? இல்லவே இல்லை. மலை கலங்கினுலும் நிலைகலங்காதவனன்ருே தலைவன்?

சீமையிலிருந்து திரும்பிய ஜீ. ஜீ. க்கு வெள்ளவத்தையில் வைத்துத் தமிழ் மக்கள் ஒரு வரவேற்பளித்தார்கள். வெறுங்கையராய் வந்த ஜீ. ஜீ. என்ன சொல்ல வைத்திருக்கின்ருர் என்று அங்கு கூடியிருந்த மக்கள் யாவரும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தனர். பேச எழுந்தார் தலைவர் திரு. ஜீ. ஜீ. "தளபதி தோற்ருல்தான் யுத்தத்தில் தோல்வி" என்ருர். கூடியிருந்த சனத்திரளின் கரகோஷமும் பேராரவாரமும் வானைப் பிளந்தது. இதை நான் கண்ணுரக் கண்டவன். காதாரக்கேட்டவன். உண்ணப்பரிப்புக் கொண்டவன் என்ற முறையிலேயே இங்கு எடுத்துச் சொல்கின்றேன். இந்த ஒரு வசனத்திலுள்ள அரசியல் தீர்க்கதரிசனத்தை அஞ்சாநெஞ்சமும் ஆண்மைத்தனமும், சொல் வன்மையும் கொண்ட ஒரு தலைவனேயன்றி வேறு எவன்தான் சொல்ல முடியும்? இரண்டாவது மகாயுத்தத்தில் பல அரசாங்கங்களில் பிரிட்டன் தோற்று வெளியேறும்போது என்ன சொன்ஞர் அஞ்சா நெஞ்சன் சேர்ச்சில்? 'வெற்றிகரமாகப் பின்வாங்குகின்ருேம்' என்ருர். ஜீ. ஜீ. சொன்னதற்கும், சேர்ச்சில் சொன்னதற்கும் உள்ள ஒற்றுமையைச் சற்றே சிந்தியுங்கள். ஆனல் பிரிட்டிஷ் மக்கள் ஒருவர் கூடி விலக்கின்றிச் சேர்ச்சில் ஆணைப்படி நடந்தார்கள்-யுத்தத்தில் வெற்றியும் கண்டார்கள். ஆனல் இங்கோ தோல்வியைக் கண்டதும் ஜீ. ஜீ. யின் தலைவர்களும் மற்றவர்களும் துடை நடுக்கம் கொண்டார்கள். நிலை தளர்ந்தார்கள். அழிவுப்படலத்தை உண்டாக்கிவிட்டு அரசியல் வானிலிருந்தும் மறைந்து விட்டார்கள்.

தேர்தல் நடந்தது. வெற்றிவீரனுக ஏழு துணைவர்களுடன் ஜீ. ஜீ. பாராளுமன்றம் புகுந்தார். தளபதி தோற்கவில்லை. யுத்தத்திலும் தோல்வி ஏற்படவில்லை. மீண்டும் பாராளுமன்றத்தில் வந்த யுத்தம் தொடங்கியது. சிறுபான்மையருக்கும் பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் இருக்கவேண்டும் என்பதை முதலமைச்சரான சேனுநாயக்கா உணர்ந்தார். சில சிறுபான்மைக் "குவிஸ்லிங்"களை வைத்து ஆட்சி நடத்த முடியாதென்பதையும் முற்றுமுழுக்க அறிந்து கொண்டார். தமிழ்க் காங்கிரஸுக்கு அமைச்சரவையில் இடமளிக்கவும் முன்வந்தார். திரு. செல்வநாயகத்தை அமைச்சராக்குவது என்று தமிழ்க்காங்கிரஸ் முடிவு செய்தது. ஆனல் அரசியல் தீட்சண்யமிக்க சேனுநாயக்கா, திரு. செல்வநாயகத்தை ஏற்றுக் கொள்ளத்தயாராயில்லை. இதனுல்தான் தீர்க்கதரிசியான ஜீ. ஜீ. அமைச்சர் அவையில் இடம் பெறவேண்டி வந்தது. இதுதான் நடந்ததே யன்றிப் பட்டம்பதவிக்காக ஜீ. ஜீ. எவருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் சரணுகதி அடையவில்லை. அமைச்சர் அவையில் தமிழர் இடம் பெருது நாட்டில் எதுவும் பெற்றுக் கொள்ள முடியாது என்ற நச்சரிப்பும் தமிழ் மக்களிடமிருந்து அலையலையாக வந்து கொண்டுமிருந்தது. சேனுநாயக்காவின் கருத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டதோடு ஜீ. ஜீ. யையும் ஏற்குமாறு பணித்தனர். யாழ்ப்பாணம் முற்றவெளியிலே இது சம்பந்தமாக நடந்த பொதுக்கூட்டத்திலே எள்ளுப்போட்டால் எள்ளுவிழாத சனத்திரளின் மத்தியிலே, இந்த முடிபை ஏற்றுக்கொண்டார் திரு. செல்வநாயகம். ஏற்றுக் கொண்டது மல்லாமல் "கண்ணைக் கட்டிக்கடலில் விழச் சொல்லி எங்களை எங்களுடைய தலைவன் கேட்டால் நாங்கள் விழுவதற்குத் தயார்!" என்றும் அந்த கோணங்களுக்கு திரு. செல்வநாயகம் சொன்னுர். அன்று சேனுநாயக்காவின் அமைச்சரவையில் ஜீ. ஜீ. சேர்ந்த போது ஐக்கிய தேசியக் கட்சியாகச் சேரவில்லை என்பதையும் நான் இங்கு சொல்லித்தானுக வேண்டும். தமிழ்க்காங்கிரஸ் தலைவனுகவே சேர்ந்தார். கூட்டுமந்திரி சபையே அமைக்கப்பட்டது.

பின்னர் சமட்டிக்கட்சி தோன்றியது. மொழிப் பிரச்சினைகிளம்பியது. பல்வேறு முட்டாள் தனமான கோரிக்கைகளும் ஒப்பந்தங்களும் நடைபெற்றன. இவற்றையெல்லாம் அவ்வப்போது தவறு தவறு என்று எச்சரித்து வந்தார் அரசியல் தீர்க்கதரிசியான ஜீ. ஜீ. பொன்னம்பலம். ஆனுல் அரசியல் அரிச்சுவடியும் தெரியாத அநாமதேயப் பேர்வழிகள் யாது காரணம் பற்றியோ மேலோங்கத் தொடங்கினுர்கள். ரஸ்கின் என்ற பெரும் புலவரும் அறிஞருமானவர் பிரிட்டனில் கடந்த நூற்ருண்டில் வாழ்ந்துவந்தார். அநேக பெரிய மனிதர்கள் அவரிடம் வந்து புத்திமதி கேட்டுச் செல்வார்களாம். ஆனுல் அவருடைய தந்தையாரோ ரஸ்கினிடம் வருகிறவர்களிடம் போகிறவர்களிடமெல்லாம் "என்பிள்ளைக்குக் கொஞ்சம் புத்தி சொல்லிப் போங்கள்!" என்று சொல்லிவைப்பாராம். அதே போன்றும் இங்கும் சில தந்தையர்கள் அரசியல் தீர்க்கதரிசியும், அறிஞனும் மாமேதையுமான ஜீ. ஜீ. க்குப்புத்தி சொல்லிவைக்கவும் முற்பட்டார்கள். இன்ருவது அந்த அறிவிலித்தனத்தை உணர்கின்ருர்களோ இல்லையோ யார் கண்டார்! ஆனுல் தமிழ்மக்கள் இப்போது விழிப்படைந்து விட்டார்கள் என்பதைக் காண்கிருேம்.

தளபதி இருக்கின்ருர் தலைவர் இருக்கின்ருர் அவரைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது தமிழ் மக்களின் கடமை.

வாழ்க! எங்கள் தலைவர் வாழ்க!

("அரசியல் அவதானி" என்பவர் எழுதும் "எங்கள் தலைவர்" என்ற நூலிலிருந்து திரட்டப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உடுப்பிட்டி சிவா"

இராஜகளை பொருந்திய தோற்றம். கம்பீரமான உருவம். சிங்கநாதம். எவரிடத்தும் அன்போடு பழகும் இனிய சுபாவம். கருத்து மாறுபாடுகொண்டவர்களும், கனிவோடு "தம்பி சிவா" என்று அழைக்கும் படியான வாழ்வு. எந்நேரமும் இறைவணக்கம் செய்யும் ஆவல். இவை எல்லாம் ஒருங்கு சேர்ந்தவர்தான் எங்கள் உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள்.

தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம், கட்சிவேற்றுமை கடந்த தமிழ் மக்கள் இயக்கமாக, மாற்றம் பெற்றபோது பல கட்சியினரும் முன்னின்று உழைத்தார்கள். அப்போது ஆரம்பித்த கட்சியினரைவிட திரு. சிவா மிக உக்கிரகமாக, தூய்மையோடு, சொந்தச் செலவிலேயே பல தொண்டுகள் புரிந்தார். "உடுப்பிட்டிச் சிவாவின் அருகில் வெடிகுண்டு. மயிரிழையில் உயிர் தப்பினுர். சத்தியாக்கிரகிகளுக் கிடையில் கொந்தளிப்பு". என்ற செய்திகள் பத்திரிகையில் வந்தபோது அனைவரும் பதறினர்.

மானம்! மானம்! என்றே யாழும் இசை பரப்பும் தமிழ் மறக் குலத்தின் தாய்மைக்குப் பங்கம் நேரக்கூடும் என்று கருதிய நிலையில், ராணுவக் குண்டர்கள் முரட்டு நோக்கத்தைப் புரிந்துகொண்ட உடுப்பிட்டிச் சிங்கம் அங்கே பாய்ந்து சென்றுர். இரு கைகளையும் அகல விரித்து, "தாய்க் குலத்தை நான் வெளியேற்றும் பொறுப்பை ஏற்கிறேன். அவர்களை ஒன்றும் செய்யாதீர்கள்" என்று கேட்டார். அவர்கள் காலினுல் உதைத்தும் கம்பினுற் தாக்கியும் சுயநினைவிழக்கும்வரை அடித்து வீழ்த்தினர்.

சட்டத்திற்கு அடங்கிய, ராணுவ கெடுபிடிக்கு அஞ்சிய இலங்கைத் தமிழ், முஸ்லிம், ஏன் சிங்களரிற் பலர்கூட "சிவா" என்ருயினரோ என்று ஏங்க வைத்தார்.

குறையிரந்த தெய்வம் அவரைக் காப்பாற்றியது. கண்ணுடி, மேலுடை இழந்து அடிபட்ட தழும்புகளோடு வந்து பாராளுமன்றத்தில் அவர் பேசிய பேச்சு அனைவரது மனத்திலும் பதிந்தது.

சிற்றம்பல முதலியார், இராசவாசல் சின்னத்தம்பி முதலியார் ஆகிய இரு பெரு முதலியார்ப் பட்டம் பெற்ற மணியகாரர்களின் பேரனுகப் பிறந்து, வறுமையின் சாயலை அறியாவாறு வளர்க்கப்பட்ட திரு. சிவா மற்றவர்கள் எதிர்பார்த்ததற்கு எதிரான திசையில் நீச்சலடித்தார்.

இளம் உள்ளத்திலேயே, இல்லாமை இல்லாது போக வேண்டும்; ஏழையென்றும் அடிமையென்றும் எவனும் இருக்கமுடியாது; சாதித் திமிர் அடக்கப்பட வேண்டும் என்ற எண்ணங்களைக் கொண்டவராக வளர்ந்தார்.

சமுதாயத் தொண்டை விரும்பியிருந்த நேரத்தில் — அரசியலில் ஈடுபட எண்ணுதபோது, பல நண்பர்கள் அ. இ. த. காங்கிரஸிற் சேர்ந்து போட்டியிட அழைத்தனர் ஒப்புக் கொண்டாரேனும் எந்த ஒரு கட்சியுடனும் சேர்ந்து கொள்ளும் முடிவு இருக்கவில்லை.

வேட்பாளராகப் பதிவு செய்தபின் — பல நாள் யோசனை செய்து தேசியவாதம் பேசவேண்டிய பெரும்பான்மை மக்கள் வகுப்புவாதச் செயலை நாடும்போது தேசியம் பேசி — தேசியக் கட்சியொன்றில் இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறென எண்ணி, அ. இ. த. காங்கிரஸின் அங்கத்தவரானார். அன்று தொட்டு இன்றுவரை அதன் முன்னோடியாக இருந்து வருகின்றார்.

இராணுவக் கெடுபிடியை எதிர்த்து அடிபட்ட போது, எக்கச் சக்கமாக அகப்பட்டு அடி வாங்கிவிட்டு, தியாகி வேடம் போடுகிறார் என்று பேசிய வர்கள், வல்வைப்பொலிஸார் பொதுமக்களைத் தாக்கினார்களாம் என்றுஅறிந் ததும் — ஒருவர் சுடப்பட்டு இறந்துவிட்ட ஏக்கமான சூழ்நிலையில் — மற்றெ வரும் வராதபோது நடு இரவிலே சென்று சமராடியமையை அதனோடு சம் பந்தப்பட்டவர்கள் புகழ்ந்தபோது வாயடங்கினார்கள்.

முள்ளில் ரோசா வென்றால் முகரக்கூடாதா? மாற்றார் பணி சிறப் பென்றால் பங்கு கொள்ளக் கூடாதா? இந்த வகையில் தமிழரசு சத்தியாக் கிரகப் பணியிற் பங்கு கொண்டதைக் குறித்துக் குறைப்படும் — கட்சி மாறும் போக்கு என்போர்க்கு என்ன சொல்ல முடியும். இந்தத் சிறந்த பண்புதானே அவரை இன்று எவரெஸ்டில் "மேர்க்கூறி" விளக்கு என்னும் படி செய்திருக்கின்றது.

அவருக்குப் பகைவரே கிடையாது. அவரைப் பகைத்தவர்களை அண்டி விசாரித்தால் அற்ப காரணம் காட்டுவர் "இரண்டுபேர் வந்தோம் அவரை முதலிற் பார்த்துச் சிரித்தார். என்னை முதலிற் பார்த்திருக்கக் கூடாதோ"? இப்படிக் கேட்டுப் பகைக்கும் சிறுமதியோர் சிலரைத் தவிர வேறு எவரும் அவரைப் பகைத்தறியார்.

சட்டக் கல்லூரியில் நடந்த விவாத அரங்கில் தங்கப்பதக்கத்தை பெற்ற இளமை தொட்டே சொற்போர் அவருக்குப் பிடித்தமான ஒன்று. கௌரவ மொண்டேகு ஜெயவிக்கிரம, கௌரவ பிலிப்-குணவர்த்தன முத லிய அமைச்சர்கள், "உடுப்பிட்டி எம். பி. பேசும்போது மட்டும் எதிர்க்கட்சி யினரும் கண்ணியமாக இருந்து காது கொடுத்துக் கேட்பது ஒரு சிறப்பு. அவருடைய சிங்கநாதம் சபையை அதிர வைக்கும்" என்று புகழ்ந்திருக் கும் போது அவரை - அவர் பேச்சைப்பற்றி நாம் என்ன சொல்லக் கிடக்கிறது?

அண்மையில் அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழக அழைப்பை ஏற்று அங்கே சென்று சொற்பொழிவு நிகழ்த்திப் பலநாட்டுப் பாராளுமன்ற உறுப் பினர்களின் பாராட்டைப் பெற்று மீண்டபோது, பகைகொண்ட மாற்றுக் கட்சியினர் வயிறெரிந்தது போகட்டும்; பண்புள்ளங்கள் போற்றிய பசுமை இன்னமும் மாறவில்லையே.

ஏழைகள் எத்தனையோ பேர் தமது கட்சியின்வழக்கறிஞராக இவரை ஏற்பாடு செய்து வெற்றி பெற்றபின், பணம் கொடுக்க, அதை ஏற்க மறுத் தார். "இதை ஒரு நல்ல பணிக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறினார்" எனச் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

இத்தகைய சிறந்த தியாகியை, மது மாமிசம் தொட்டறியாத பண்பாளனை, அரசியற் சாணக்கியனை, ஜீ. ஜீ. யின் வழியில் நடைபயி லும் உரவோனை, பல்லாண்டு வாழ்ந்து பலநலமும் பெற்று, நற்றமிழர்க்கு ஏன் இலங்கைக்கே தொண்டாற்ற வேண்டுமென ஆசி கூறி வாழ்த்து கிறோம்.

**வாழ்க சிவா! வளர்க பணி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மவீரர் சிவா

"நண்பன்"

வாழ்க நீ வள்ளல் இந்த வவுனியாத்
 தொகுதி தன்னைச்
சூழ்பகை வறுமை பொய்மை
 சுரண்டல் என்று இவற்றை நீக்கி
ஆழ்கடற் புவியின் மீதிங்கு
 அமரர் நாடாக் கிவைத்தாய்
தாழ்வினை வென்ருய் எங்கள்
 சிவா இன்பந் தழைக்க வாழி!

வவுனியா மாவட்டத்தில் வாழும் மக்களின் அங்கீகாரம் பெற்ற தலைவனுன திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள் 1926-ம் ஆண்டு மார்ச் மாதம் இருபத்தாரும் நாள் பிறந்தார். தண்ணீரூற்று மிஷன்பாடசாலை, முள்ளியவளை இந்துப் பாடசாலை, முல்லைத்தீவு ரோமன் கத்தோலிக்க பாடசாலை போன்ற பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியைப் பயின்ருர் அவர் தனது பன்னிரண்டாவது (12) வயதிற் பிரவேச பண்டிதர் பரீட்சையிற் சித்திபெற்ருர் இளம் சிவசிதம்பரம் பதின்மூன்ருவது வயதில் முள்ளியவளை இந்துப் பாடசாலையினுல் நடாத்தப்பெற்ற பேச்சுப் போட்டியில் 'புகழேந்திப் புலவரை''ப் பற்றிப் பேசி முதலிடத்தைப் பெற்றமைக்காகத் தங்கப் பதக்கம் பரிசில் பெற்ருர். பின் திருகோணமலை இந்துக் கல்லூரியிற் சேர்ந்து, தமது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பிற் பயின்றுவந்தார். விளையாட்டுத் துறையில் நிபுணத்துவம் பெற்று விளங்கிய இளைஞர் சிவா, இந்துக் கல்லூரியில் உதைபந்தாட்டக் குழுவின் தலைவராகவும் கடமையாற்றினுர். பின்னர் பருத்தித்துறை சென்று இலண்டன் மெட்ரிக்குலேசன் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்ருர்.

கிராமப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தராக இரண்டாண்டுகள் பயிற்சி பெற்று, இறுதித் தேர்வின்போது ஐம்பத்தாறு (56) மாணவர்களுள் இரண்டாவது இடத்தைப் பெற்ருர். ஒன்பது ஆண்டுகளும் மூன்று மாதங்களும் வவுனியா மாவட்டத்தில் உழைத்து வாழும் விவசாய மக்களுடன் உத்தியோகக் கடமைகளைச் செய்ய ஒட்டி உறவாடி வந்ததன் பயனுக இப்பகுதியையும், பகுதி மக்களையும் நேசிக்கவும் அவர்களின் பிரச்சினையை ஆராய்ந்து தீர்வு காணவும் தக்க மன உறுதியைப் பெற்ருர். வன்னிப் பிரதேசத்தில் வாழ்க்கை வசதிகள் அற்று வாழ்ந்த மக்கள் மத்தியிற் பிறந்து அவர்களுடன் சேர்ந்து உழைத்து அவர்களுக்காகத் தொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாற்றி வந்ததன் பெறுபேருகத் தனது தொழிலைக் கைவிட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற உறுதி பூண்டார் இன்னும் ஒன்பது மாதங்கள் அரசாங்க சேவையிற் தொடர்ந்து இருந்திருப்பின் அவருக்கு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் உரிமை கிடைத்திருக்கும். ஆனல் இந்த நிலைமைக்கு மாருக 1959-ம் ஆண்டு ஏற்பட்ட இடைத் தேர்தலின்போது வவுனியாத் தொகுதிக்கு ஓர் அபேட்சகராகத் தன்னை முன் வைத்தார். உப தேர்தல் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து 1960 மார்ச் மாதத்தில் இடம் பெற்ற பொதுத் தேர்தலிற் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றி கண்டார். இவரது சேவையை வீ. சி. ஒ. வடிவில் அனுபவித்த பொது மக்கள் தமது அங்கீகரிக்கப்பட்ட தலைவராகப் - பாராளுமன்றப் பிரிதிநிதியாக - இவரை ஏற்றுக் கொண்டதில் அதிசயமில்லை அதைத் தொடர்ந்து நேர்மையும், கடின உழைப்பும் மிக்க வவுனியாப் பகுதி வாக்காளரின் அன்பைத் திரு சிவசிதம்பரம் பெற்று விட்டார் இளையவர்கள் அன்பாக "அண்ணன்" என்றும், முதியவர்கள் பண்புடன் "தம்பி" என்றும் முறை கொண்டாடும் அளவிற்கு அனைவர்க்கும் தோழனுகவும் அமைந்து விட்டார். திரு சிவசிதம்பரம், சமூக சேவையாளனுகத் திகழ்ந்து பொது சன சேவையில் ஆரம்பத்தில் அக்கறை காட்டினுர் சிவா தண்ணீரூற்றுக் கிராம முன்னேற்றச் சங்கம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவர்களாக இருந்து அருந் தொண்டாற்றியுள்ளார். இவர் தலைமை வகித்த இரண்டரை ($2\frac{1}{2}$) ஆண்டுக்கால எல்லைக்குள் தண்ணீரூற்றுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (56,000) ஐம்பத்தாருயிரம் ரூபா இலாபமாகப் பெற்று வவுனியாப் பகுதியிலுள்ள மூன்று தேவஸ்தலங்களான வற்ருப்பளையம்மன், புதூர் நாகதம்பிரான், ஊற்றங்கரை விநாயகர் போன்ற ஸ்தாபனங்கள் அவரின் பெரு முயற்சியாற் பொதுத் தேவாலயங்களாக ஆக்கப்பட்டன. இதன் பலாபலன்களை இந்து மக்கள் நன்கு உணர்வர்.

முல்லைத்தீவிலுள்ள ஓர் 'உயர் குடியிற் தோன்றிய இவர் அக்குடும்பத்தின் கட்டுப்பாட்டுடன் இணைந்த சாதிப் பாகுபாடுகளை உதறித் தள்ளி, வவுனியாத் தொகுதியின் சாதாரண குடி மக்களுடன் சரி நிகர் சமானமாக வாழ்ந்து வருகின்ருர். எனவே, இவர் இப்பகுதிவாழ் தொழிலாளர், விவசாயிகள் ஆகியோரின் தோழனுகக் கொண்டாடப்படுகின்ருர் திரு சிவா நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் பிரதேசம் இரண்டாயிரத்து நூறு (2100) சதுர மைல்களை உள்ளடக்கியது. பலவழிகளிலும் சூறையாடப்பட்டு வரும் மக்கள் வாழும் இப்பகுதி புகழ் மிக்கது, பழமை வாய்ந்தது. இங்கு வாழும் மக்கள் மத்தியில் கல்வித் துறையிற் பின் தங்கிய நிலை காணப்படுகிறது. ஆனல் முன்னேற வேண்டுமென்ற திடமான நம்பிக்கையும் இவர்களுடைய உள்ளத்தில் நிலைத்திருப்பதை நாம் காணலாம். மக்களின் நம்பிக்கை தலைவரின் உள்ளத்தில் உரம் பெற்றுச் சுடராகக் கொழுந்து விட்டெரிகிறது. அவருடைய வார்த்தையிற் சொல்லப் போனல் "வன்னி இரப்பாரில்லாத நாடு இங்கு கல்விப் பசிதான் உண்டு" என்று இறுமாந்து இரக்கம் தவழவும் கூறுவார். அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிலும் செயலிலும் மக்களின் துயர் துடைத்து முன்னேற்றம் காணும் ஆர்வம் பிரதிபலிக்கும்.

கல்வித் துறையில் இவர் மூன்று மகாவித்தியலயங்களை நிறுவுவதில் வெற்றி கண்டுள்ளார். கொட்டிற் பாடசாலைகள் அகன்று நவீன கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகாவித்தியாலயங்களுக்கு விஞ்ஞான ஆய்வு கூடங்கள் பெற்றுத் தந்துள்ளார். இவர் பதவியேற்ற கால எல்லையில் வவுனியா மாவட்டத்தில் (16) பதினறு ஆசிரியர்கள் உள்ளூராசிரியர்களாக இருந்தனர். இன்று இருநூற்றைம்பதிற்கு (250) அதிகமான ஆசிரியர்கள் உள்ளூரில் ஆசிரியத் தொழில் பார்க்கின்றனர். இவர்களுள் நாற்பது சதவீதத்தினர் (40%) இக்கால எல்லையிற் பயிற்சி பெற்றுள்ளனர். சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் (100) நூற்றுக்கதிகமான சிறு குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. நீர்ப்பாசனச் சிறு திட்டத்தின் கீழ் பண உதவி பெற்றுத் தண்ணீரூற்றுக் கேணியையும் திருத்தியமைத்தார் பதினைந்து (15) பெரிய குளங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் இவர் தெரிவு செய்யப்பட்டதன் பின் புனரமைப்புச் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1959-ல் நாற்பத்தாருயிரம் ஏக்கர் நிலம் நெற்பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்பட்டிருந்தது. ஆறு ஆண்டுகளின் பின் இன்று ஒரு லட்சம் ஏக்கர் நிலம் நெற் செய்கைக்குட்படுத்தப் பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பகுதியிற் பேராற்றிற்குக் குறுக்கேயமைக்கப்படும் அணைக் கட்டையடுத்து ஓர் உப நீர்ப்பாசன அலுவலகமொன்றை அமைக்குமாறு வற்புறுத்தினர். முப்பத்தைந்து (35%) வீதத்தினர் நிலமற்ற குத்தகைக் கமக்காரர்களாக வாழ்ந்த நிலைமைக்கு முடிவு கட்ட வேண்டுமென்ற வைராக்கியம் சிவாவினுள்ளத்திலிருந்தமையால், இன்று நிலமற்ற விவசாயிகள் என்ற நிலை மாற்றி அனைவர்க்கும் நிலம் பெறத் தகுந்த வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தினர். "அனைவரும் வாருங்கள் எமது சுகதுக்கங்களிற் பங்குகொள்ளுங்கள். இப்பகுதியிற் குடியேறி அண்ணன் தம்பிகளாக வாழ்வோம் வாருங்கள்" என்று நேசக் கரம் நீட்டி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்.

கூளாமுறிப்பில் சிறு தொழிற் கூட்டுத்தாபனத்தாரின் உதவியுடன் ஓட்டுத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

மேடைமீது நின்று பேசிவிட்டு வாய்ச் சொல்லின் வீரராகத் திகழாது "கர்மவீரராக" அண்ணன் சிவசிதம்பரம் விளங்குகின்றார். புதுக்குடியிருப்பிலிடம்பெற்ற நான்கு நாட் சிரமதானத்தில் இரண்டாயிரத் (2000) திற்கதிகமான மக்கள் கலந்து கொண்டனர். எட்டுமைல் நீளவீதியொன்றைச் செப்பனிடும் முயற்சியிற் "புள்டோசர்" ஒன்றும் எழுபதுக்கதிகமான உழவு யந்திரங்களும் ஈடுபடுத்தப்பட்டன. இருபத்தெண்ணாயிரம் (28,000) ரூபா பெறுமதியான வேலை நிறைவேற்றப்பட்ட இச்சிரமதானத்தில் நடுநாயகமாக நாடாளுமன்ற உறுப்பினர் திகழ்ந்தார்.

தமிழுரிமைக்காக வவுனியாக் கச்சேரி முன்றலிற் பொது மக்களை அணி திரட்டித் தொடர்ந்து இடம் பெற்ற போராட்டத்தினிறுதியில் அவசரகாலச் சட்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் பிறப்பிக்கப்பட்ட நிலையின்படி "பஞ்சோட்டை"ப்பட்டாள தலைமைக்காரியால யத்தில் அடைபட்டுத் தமிழுக்காகத் தவம் கிடந்தார். பட்டாளப்பாசறையிற் சாகும்வரை உண்ணாவிரதம் அனுட்டிக்க வேண்டுமென்ற கொள்கையை அவர் முன்வைத்தார். இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமேயாகில் தமிழுரிமைக்கான நியாயத்தை உலகம் திரும்பிப்பார்க்க வாய்ப்பேற்பட்டிருக்கும். அன்றியும் அவர் அடைபட்ட அறையின் சுவர்களில் புத்தர், இயேசு, காந்தி ஆபிரகாம் லிங்கன் போன்றோரின் திரு உருவப்படங்கள் தீட்டப்பட்டிருந்தன. இது அவரின் உள்ளத்திலழுந்திக் கிடந்த உயரெண்ணங்களையும் உத்தமர்களையும் பிறரறியவாய்ப் பேற்படுத்தித் தந்தன.

வவுனியாப் பிரதிநிதியின் வீரம் செறிந்த உரைகளை மலேசியாவினிடம் பெற்ற தமிழ் மகாநாட்டின் போதும், தெஃராவில் இடம் பெற்ற உலக நாடுகள் பாராளுமன்ற மகா நாட்டின் போதும் உலகம் அங்கீகரித்தது. இவற்றுற் தனக்கும், தாயகத்திற்கும் தன்னிகரில்லாப் பெருமையை அவர் தேடித்தந் துள்ளார்.

மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கும் சிவா அவர்களின் சிங்களப் பேச்சைச் செவியுற்ற இலங்கைப் பிரதமர் அவர்களே பாராட்டியுள்ளார். கடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து தமிழ்க் காங்கிரஸ் கட்சியிற் சேர்ந்து அயராது உழைத்துவரும் திரு. சிவசிதம்பரம் அவர்கள் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியின் தலைவராக நற் தொண்டாற்றி வருகிறார். இவரின் சேவையை அங்கீகரித்த தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் அவரின் அண்மைக்காலச் சுற்றுப்பயணத்தில் ஓர் ஒலிப்பதிவுக்கருவியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

தமிழார்வமும் பண்டாரவன்னியாவின் தேசப் பற்றும் மறத்தமிழன் மன உறுதியும் உருவெடுத்துச் சிவசிதம்பரமாகத் திகழ்கிறது. வன்னிவாழ் விவசாய மக்களின் வாழ்வின் இருளகற்றும் உதய சூரியனாக என்றென்றும் நிலைபெற்றுத் தொண்டாற்றுவார் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ. இ. க. கா. கொழும்புக் கிளை

### 1962 - ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டவர்கள் ( 23 - 12 - 62 )

தலைவர்: திரு. எஸ். சரவணமுத்து

உப தலைவர்கள்:

திரு. ஈ. பி. செல்லையா   திரு. ஆர். ஆர். நல்லையா   திரு. கே. ராஜதுரை

கௌரவ செயலாளர்: திரு. பி. ஜே. அலோஸியஸ்

உதவிச் செயலாளர்: திரு. கே. கே. கனகராசா

கௌரவ தனாதிகாரி: திரு. சி. வாமதேவன்

செயற்குழு:

| | | |
|---|---|---|
| திரு. கே. சின்னையா | திரு. ஏ. எஸ். நடராசா | திரு. ஆர். யோகராசா |
| திரு. எஸ். சங்கரசிவம் | திரு. எஸ். டி. பாலராசா | திரு. எம், சிவசிதம்பரம் |
| திரு. ரி. சிவசிதம்பரம் | திரு. எம். சிவானந்தன் | திரு. ஏ. தெட்சணாமூர்த்தி |

1960 மார்ச்சிலும் ஜூலையிலும் நடந்த பொதுத் தேர்தல்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் முன்னேற்றத்துக்கு ஒரு பெரிய தடையை உண்டாக்கிவிட்டன. "தமிழரசுத் தந்தை" யின் சிந்தனையால் தமிழ் இனம் மயக்கமடைந்து போயிற்று. கதையோடு கதை இந்தச் சிந்தனை ஊறல்கள் சீனுவின் 'மாயோவின் சிந்தனை' களைப் போன்றன. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் ஒப்பற்ற தலைவரான ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. அவர்கள் கூறிய அரிய புத்திமதிகளுக்குத் தமிழினம் செவி சாய்க்க மறந்துவிட்டது. தனியாட்சியின் கீழ் இருந்து கொண்டு பெரும்பான்மையார் எவ்வளவு தூரம் எமக்கு ஒத்தாசை செய்கிறார்களோ அவ்வளவு தூரம் அவர்களுக்கு ஒத்துழைப் பளிக்கலாமென்றும், அரசியல் வரம்புக்குட்பட்ட கிளர்ச்சியை உரிமையைப் பெறுவதற்கு நடத்தலாமென்றும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் புத்தி புகட்டினார்கள். அது செவிடன் காதிலே ஊதிய சங்கு போலாயிற்று. காலஞ்சென்ற சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் பின்னர் தமிழரின் உரிமைகளுக்காகத் தனித்து நின்றே வாதாடி வந்த அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர் ஜீ. ஜீயே தமிழ்ச் சமுதாயம் சீரழிந்து போவதை எண்ணித் துயரடைந்த போதிலும் அவர் மனஞ் சோராது வாதாடினார். டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட முதலாவது அரசாங்க சபையிலே தமிழருக்குப் பிரதிநிதித்துவமில்லாது 1931 இல் தமிழர் அரசியற் தற்கொலை புரிந்த காலத்தில் அவர் முன்வந்து அந்தக் கொடிய நிலையிலிருந்து தமிழரைக் காப்பாற்றினார்.

சமட்டிக் கட்சியென்று சிங்களருக்குத் தலையையும், தமிழரசுக் கட்சியென்ற பெயரோடு தமிழருக்கு வாலையும்காட்டிக் கொண்டிருந்த சமட்டிக் கட்சி தமிழ் பேசும் மக்களை வெளியேற முடியாத குருட்டுப் பாதையில் வழி நடத்திவந்தது இதை நன்கு உணர்ந்த கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலுமிருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுக்குக் கொழும்பிலே ஒரு கிளை ஸ்தாபனத்தை அமைத்தனர்.

1961 ஆம் ஆண்டு செப்டம்பரில் கொழும்புக் கிளை, கொழும்பு அப்புக்காத்தான திரு. சுப்பையா சரவணமுத்துவின் தலைமையில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டது. அந்தக் காலந்தொட்டு இச்சங்கம், இரட்டை நாக்குள்ள சமட்டிப் பண்டிதர்களின் போக்கிலித்தனத்தையும், கோணங்கிக் கூத்தையும் மகாசனங்களுக்குப் பகிரங்கப்படுத்தி வந்தது. சுதந்திரனின் கூக்குரலை அடக்கப் பலதடவை வாக்குப்போர் செய்தும், பத்திரிகைப் பிரசாரஞ் செய்தும் வெற்றி கண்டது. மேலும் தமிழ் பேசும் பிரதேசங்களிலே அங்கங்கு ஒட்டித் தப்பியிருந்த சமட்டிக் கூடுகளையும் சிதைத்தது. இதற்குக் கொழும்புக்கிளை பலப்பட முயற்சிசெய்ய வேண்டியிருந்தது. நமது பிரசாரக்குழு இந்தச் சமட்டிக் கோமாளிகளின் வேஷத்தைக் கலைத்து அவர்களின் உண்மைக் கோலத்தைக் காட்டப் பெருமுயற்சி செய்து வெற்றிபெற்றது. இம்முயற்சிகளின் பயனாக மக்கள் உண்மையை உணரக்கூடியதாயிருந்தது. காங்கிரசின் நற்பெயரையும், ஆதரவாளரின் ஊக்கத்தையும், கொழும்புக் கிளை தன் நிகரற்ற தொண்டினால் உயர்த்தி விட்டதோடு, மக்களுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமட்டிக் கட்சியின் பாசாங்கை அம்பல மாக்கி விட்டது.

இந்தச் சமட்டிக்கட்சி பொய்யிலே பிறந்தது. அற்ப சொற்பமான பொய்யல்ல; அருவருக்கத்தக்க நம்ப முடியாத துரோகத்தன்மையும் வஞ்சனையும் நிறைந்த பொய். கேட்போர் குருதியை உறையச் செய்து, ஆவேசமடையச் செய்யும் அபாண்டமான பொய். இதற்கு ஒரு பெரிய உதாரணம்: அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவரான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ சி. 1948 இல் டி. எஸ். சேனநாயகா மந்திரி சபையிலே பதவி ஆசையும் - தன்னலமுங் கொண்டே சேர்ந்தாரென்பது, இந்தக் கூற்றைப் பொய்யென நிரூபிப்பதற்குப் பத்திரிகைகளிலே கடிதங்கள் வெளிவந்தன. அவற்றின் பயனாகச் சமட்டிக் கட்சியின் இரும்பு மனிதர் ஒருவர் பொய்தான் என்பதை ஒத்துக் கொண்டார். இது சமட்டிக் கட்சியின் வாடிக்கையான வியாபாரக் கச்சவடங்களில் ஒன்று. அதன் பிரசாரப் பண்டங்களில் ஒரு தினுசு. இந்தச் செப்படுவித்தையை அம்பலப்படுத்தியது கொழும்புக் கிளையே.

கொழும்புக் கிளை இவ்வாறு நடத்திவந்த தொண்டுகளின் பயனாகவும், உணர்ச்சியைத் தூண்டக்கூடிய அறிவுரைகளினாலும், உந்தப்பட்ட யாழ்ப்பாண வாலிபர்களும் ஏனைய பகுதிகளிலுள்ள வாலிபர்களும் இச்சங்கத்தில் சேர்ந்து தொண்டு செய்ய முன் வந்தனர். 1963மார்ச் மாதத்திலே யாழ்ப்பாணம் முற்றவெளியில் கூடிய பிரமாண்டமான கூட்டம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் வாலிபர் முன்னணியினால் கூட்டப்பட்டது. எல்லாரையும் எப்பொழுதும் ஏமாற்ற முடியாதென்று எச்சரிக்கையை இக் கூட்டம் தமிழ்ச் சமூகத்தை உருக்குலையச் செய்த புரளிக்காரருக்கு விடுத்தது.

கொடிகளிலே எழுதித் தூக்கிக்கொண்டு திரிந்த சுலோகங்களினால் தமிழ் மக்களைப் பயமுறுத்தியும், துவேசமடையச் செய்தும் அடக்கி ஒடுக்கித் தம்பக்கம் சேர்த்து வைத்திருந்த சமட்டிக் கும்பலின் ஊழையிடுதலில் எவ்வளவு ஏமாற்றவித்தையடங்கியுள்ளதென்பதை எமது பிரசாரம் சுட்டிக்காட்டிவிட்டது. மகாத்மாகாந்தியடிகளின் பெயரைச்சொல்லி அவர் பெயருக்கே அவமானத்தைக்கொண்டு வரும் முறையில் செயல் புரிந்து வந்த சமட்டிகள் தாம் செய்யும் வஞ்சனையை அறிந்திருந்தும் ஆனந்தமாகப் பொய்ப்பிரசாரத்தை நடத்தினர். அடியார் கூட்டம் வாய் பொத்திக்கொண்டு ஒதுங்கி நின்றது. காந்தீயச் சத்தியாக் கிரகத்தின் உண்மையான தன்மை என்ன என்பதைக் கடைசியாக நாங்களே சமட்டித் தந்தைக்கு எடுத்து உரைக்கவேண்டியதாயிற்று. ஈழத்துக் காந்தியெனத் தன்னைக் கொண்டாடிக் கொண்டிருந்த தந்தைக்கு எமது அறிவுரை அவசியமாயிற்று.

சந்திரனைப் பார்த்து ஊழையிட்டுக் கொண்டிருந்த சமட்டிப் பைத்தியங்களின் மனப்பிராந்தியைத் தெளிவிக்க நாம் செய்த பிரசாரம் பெரிதும் உதவிற்று. அதிகாரத் திமிர் தலைக்கேறிய களிமண் மூளைகள் ஒருவாறு விஷயங்களை நிதானமாகச் சிந்திக்கக் கற்றுக்கொண்டன. 1963 ஆம் ஆண்டு முடிவதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே சமட்டிகளின் கோணங்கிக் கூத்து ஒருவாறு குறையத் தொடங்கிற்று. ஆனால் அவர்களின் பித்தலாட்டமும், மாருட்டமும், வாய்ப்பந்தலும், அவர்களுடைய பத்திரிகை எழுத்துக்களிலே இருந்து வந்தன. விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை யெனவாவது சொல்ல வேண்டாமா?

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நடத்திய தீவிரமான பிரசாரத்துக்கு நாமும் சிறிது உதவி செய்துள்ளோம். நமது நெற்றியிலிருந்து வடிந்த சிறு துளிகள், பெரிய காங்கிரசின் பிரசார வெள்ளத்திலே கலந்து, தமிழர் உரிமைகளைக் காப்பாற்ற வந்துள்ள தான் தோன்றித் தலைவர்களை மூழ்கடிக்கப் போகிறது. அது வரையில் அவர்கள் பாட்டிகதைகளைச் சொல்லிக் கொண்டும் மாவட்ட சபைகள் பற்றிய பொரிமாவை வாயிலே போட்டு மென்றுகொண்டுமிருப்பார்கள்.

தமிழரசுக் கனவு கலைகிறது. அரசுக் கட்டில் அதில் ஏறு முன் கானல் நீர்போல மறைகிறது. கனவுப் புலம்பல் மாறுவதற்கு இரண்டொரு நிமிஷம் செல்லவேண்டமா?

421/90 டார்லி வீதி,
கொழும்பு.

பி. ஜே. அலோசியஸ்
கௌரவ காரியதரிசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
## திருகோணமலைக் கிளை

### முன்னாள் உறுப்பினர்

*தலைவர்* : ஜே. பி. துரைநாயகம்

*செயலாளர்* : காலம் சென்ற முகாந்திரம் த. பாலசுப்பிரமணியம்.

*பொருளாளர்* : காலம் சென்ற சி. ஆறுமுகம்.

### இப்போதைய உறுப்பினர்

*தலைவர்* : திரு. கு. செபமாலை

*இணைச் செயலாளர்கள்* : திரு. நா. தர்மசிகாமணி.
திரு. த. சின்னையா.

*பொருளாளர்* : திரு. ஏ. கே. கணேசபிள்ளை.

மற்றும் 15 பேர் கொண்ட செயற்கமிட்டியும் உண்டு.

சோல்பரி ஆணைக்குழுவினர் சமர்ப்பித்த அரசியல் திட்டத்தில் அதிருப்தியடைந்த தமிழ்ப் பேசும் மக்கள் உரிமைகளைப் பெறும் நோக்கத்துடன் நமது நாட்டிலே ஒப்பாரும் மிக்காரும் இல்லாப் பெருந்தகையான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், அவர்கள் தலைமையில் தமிழ் காங்கிரஸ் என்னும் கட்சியை இலங்கையின் பலபாகங்களிலும் நிறுவினர்.

இதன் எதிரொலியாக இலங்கையிற் சரித்திர முக்கியத்துவம் பெற்ற திருகோணமலையிலும் இக்கட்சியின் கிளை 1947-ம் ஆண்டு நிறுவப்பட்டது. அன்று திருகோணமலை நகரமே ஒரு விழாக்கோலம் பூண்டிருந்தது.

அன்று கூடிய கூட்டத்தில் அனேக பெருமக்கள் பேருரைகள் ஆற்றினார்கள். கிளையின் தலைவராக திரு. ஜே. பி. துரைநாயகம் வழக்கறிஞர் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். கட்சிச் செயலாளராகக் காலம் சென்ற முகாந்திரம் த. பாலசுப்பிரமணியம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் ஒரு மத்திய குழுவும் நிர்மாணிக்கப் பட்டது.

1947-ம் ஆண்டு முதல் கட்சி அடிப்படையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்ட திரு. எஸ். சிவபாலன் அவர்கள் 3000 க்கும் அதிகமான வாக்குகளால் வெற்றிவாகை சூடி முதல் முதல் கட்சிக்குப் பெருமை தேடித்தந்தார். திரு. சி. சிவபாலன் அவர்கள் கட்சியை விட்டு அபிப்பிராய பேதத்தால் வெளியேறியபின் கட்சியின் நடவடிக்கைகள் படிப்படியாகக் குறைய ஆரம்பித்தன.

இன்று கட்சிக்கிளைத் திரு. கு. செபமாலை ஆசிரியர் அவர்களின் தலைமையில் ஓரளவு இயங்கி வருகின்றது. இக்கிளை எமது தலைவருக்கு 1966-ம் ஆண்டு மாசி மாதம் 12-ந் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் தலைவர் அவர்கள் ஆற்றிய பெருமைமிக்க செயல்களுக்காகத் திருகோணமலைச் சரித்திரமே கண்டறியாத வகையில் ஒரு மாபெரும் வரவேற்பு அளித்துக் கௌரவித்தது.

திருகோணமலை மக்களில் அதிகமானோர் எமது கட்சியின் நடவடிக்கைகளை இன்று ஆதரிக்கச் செய்கின்றார்கள். வருங்காலத்தில் எமது கட்சிக்கும் இங்கு உரிய இடம் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உடுவில் மாவட்டக் கிளையின் நிர்வாக அறிக்கை

உடுவில் தொகுதியில் சென்ற தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு ந. சிவநேசன் அவர்கள் மேற்படிப்புக் காரணமாக 8-12-65 இலங்கையை விட்டு வெளிநாடு சென்றுர்.

இதையடுத்து சென்ற தேர்தலில் எமது கட்சிக்கு 5500 வாக்களித்த மக்கள் சார்பிலும், பொது மக்களின் நலனைப் பாதுகாக்கவும் காங்கிரஸ்மகா சபையின் சட்டத்துக்கு இணங்க அ. இ த. கா. உடுவில் மாவட்டக்கிளை 21-12-65-ல் மானிப்பாய் சீ. ரி. மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கூட்டத்திற்கு உடுவில், இணுவில், தாவடி, ஏழாலை, சுன்ஞகம், கந்தரோடை, சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, சண்டிலிப்பாய், மானிப்பாய் கிராமங்களின் பிரதிநிதிகள் 500 பேர்வரையில் சமுகம் அளித்திருந்தனர்.

மேற்படி நிர்வாக சபைக்கு 100 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். இன்று 2000 அங்கத்தவர்கள் 11 கிராமங்களின் கிளைகளில் அங்கம் வகிக்கின்றனர். அன்று தொடக்கம் இன்றுவரை 30 நிர்வாக சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. இக் கூட்டங்களில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1. முக்கியமாக இணுவில் தெற்குக் கிளையின் வேண்டுகோளுக்கு இணங்க யா/இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை கட்டிட அபிவிருத்திக்கும், விளையாட்டு மைதானத்துக்கும் தோட்டப் பாவிப்புக்காகவும் $46\frac{1}{2}$ பரப்புக் காணி சைவ வித்தியாவிருத்தி சங்கத்திடமிருந்து மேற்படி வித்தியாசாலைப் பாவிப்புக்காக திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் உதவியால் பள்ளிக்கூடத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பாடசாலையை ஓர் மகாவித்தியாலயமாக மாற்ற திரு. பொன்னம்பலம் வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறுர்.

2. தாவடிக் கிளையின் வேண்டுகோட்படி சுருட்டு உற்பத்தியாளரின் ஐந்துவீத உற்பத்திவரியை நீக்கித்தரும்படி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு. மு. சிவசிதம்பரம், திரு. தா. சிவசிதம்பரம் கௌரவ நிதி மந்திரியையும் வருமானவரி இலாகா ஆணையாளரையும் சந்தித்துப் பேசியதன் காரணமாக நிதி மந்திரி 1967—1968 வரவு செலவு திட்டத்தில் இவ்வரியை நீக்குவதாக வாக்குறுதி அளித்தார். அதன் பயனுகச் சுருட்டுத் தொழிலுக்கு உற்பத்திவரி 5 வீதத்திலிருந்து 1 வீதமாக்கப்பட்டது.

3. இணுவில் மத்திய கிளையின் வேண்டுகோட்படி இராமநாதன் பரமேஸ்வராக் கல்லூரிகளையும் சேர்த்து ஒரு இந்து கலாச்சார பல்கலைக்கழகமாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை வலுப்படுத்த பிரசாரக் கூட்டம் இணுவில் ஏழாலை, சுன்னுகம், உடுவில், நவாலி, மானிப்பாய் ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டது. இதன் பயனுக 1967-68 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இந்து கலாச்சார பல்கலைக் கழகத்து அடையாள மானியம் ஒதுக்கப்பட்டுளது.

4. உடுவில் தொகுதியிலுள்ள பொற்தொழிலாளர் சேர்ந்த கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்து இக்குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பரம்பரை தொழிலாளருக்கு ஊக்கமளிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படி கூட்டுறவு ஆணையாளருக்கு மனுக்களை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு மு. சிவசிதம்பரம் மூலம் அனுப்பியுள்ளனர்

5. இணுவில், உடுவில், ஏழாலை, நவாலியிலுள்ள கிளைகளின் வேண்டுகோட்படி அவ்வவ் விடங்களிலுள்ள உப தபாற்கந்தோர்களிலிருந்து நேரடியாகக் கடிதங்கள் கொடுபடவேண்டுமென்று மனுக்கள் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மூலம் தபால் தந்தி இலாகாத் தலைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

6. உடுவில், ஏழாலை கிராமங்களில் உள்ள அரசினர் மருந்துச்சாலைகளில் பிரசவ தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தேவையான சிகிச்சை நிலையம் ஒன்று நிறுவ ஒழுங்குசெய்து தரும்படி சுகாதார மந்திரி அவர்களுக்கு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மூலம் மனுச் செய்யப்பட்டுள்ளது.

7. உடுவில் தொகுதியில் வேலையில்லாத் திண்டாட்டத்திலிருக்கும் படித்த வாலிபருக்கு குடியேற்றத்திட்டத்தில் இடம் எடுத்துக் கொடுக்க திரு. மு. சிவசிதம்பரம் ஏற்ற நடவடிக்கை எடுத்து வருகிருர்,

8. உடுவில் கிளையின் வேண்டுகோட்படி எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் காலியாகும் 10 செனற் உறுப்பினர்களுக்குப் பதிலாக குறைந்தது இரண்டு செனற்சபை அங்கத்தவர்கள் காங்கிரஸ் கட்சியில் அங்கம் வகிக்கவேண்டும் என்று திரு. பொன்னம்பலம் ஊடாக பிரதம மந்திரியை கேட்டுள்ளது. இவ்விஷயத்தில் திரு. பொன்னம்பலம் கவனம் செலுத்தி வருகிருர்.

9. இனமொழி வேற்றுமைகள் அதிகரித்தும் தொழிலாளர் வர்க்கத்தைப் பிரித்தும் தேசிய ஒற்றுமை, பொருளாதார சமுதாய முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாகவும் இருக்குமென்ற நம்பிக்கையால் அ. இ. த. கா. உடுவில் மாவட்டக்கிளை வன்மையாக மாவட்ட சபை நிறுவும் 1967-ம் ஆண்டு சிம்மாசனப் பேச்சைக் கண்டிக்கிறது.

10. அண்மையில் வல்வெட்டித்துறையிலும், கல்முனையிலும் நடந்த கலவரத்தில் உயிர்துறந்தவர்களின் உறவினருக்கும் காயமடைந்தவர்களுக்கும் நஷ்டமடைந்தவர்களுக்கும் அ. இ. த. கா. உடுவில் மாவட்டக்கிளை ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இச்சம்பவங்களை பூரணவிசாரணை செய்ய ஓர் குழுவை நியமித்து எதிர்காலங்களில் இவ்வித சம்பவங்கள் நிகழாவண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டுமென்று உடுவில் மாவட்டக்கிளை கோருகின்றது.

இப்படிக்கு
சி. பொ வ. மா. க. முதலியார்
காரியதரிசி
அ இ. த கா. உடுவில் மாவட்டக்கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் காங்கிரசுக்கு எமது நன்றி

— சி. முதலியார் (காரியதரிசி சுருட்டுத் தொழிலாளர் சங்கம்) —

வட மாகாணத்தின் முக்கிய கைத்தொழிலில் சுருட்டுத்தொழிலும் ஒன்றே. இத்தொழிலை நம்பி சுமார் பத்தாயிரத்துக்கு மேலான தமிழ் மக்கள் சீவித்து வருகிருர்கள். 1964-ம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் விதித்த விற்பனவு வரி சுருட்டுத் தொழில் மீதும் சுமத்தப்பட்டது. வருமானம் வரியிலும் பார்க்க மிகக் குறைந்ததால் முதலாளிகள் தொழிலை நிறுத்தவேண்டியதாயிற்று. இதனுல் பாதிக்கப்படுகிறவர்கள் தொழிலாளிகளே அன்றி முதலாளிகள் அல்ல.

இச்சமயத்தில் வட பகுதிச் சுருட்டு முதலாளிகள் தமிழரசுக் கட்சியின் உதவியுடன் இவ்வரியை நீக்குவதற்கு முயற்சி எடுத்தனர். பெருந்தொகைப் பணத்தையும் அதற்காகக் கொடுத்தனர். ஆனுல், அதற்கு நேர்மாருக 1966-ம் ஆண்டில் வரி ஐந்து வீதமாக உயர்த்தப்பட்டது. மூன்று வீதமாக இருந்தவரி ஐந்து வீதமாக அதிகரிக்கப்பட்டால் எப்படி இருக்கும்? சில முதலாளிகள் தொழிலைக் கைவிட்டனர். இப்பரிதாப நிலையையடைந்த தொழிலாளிகள் தமது சங்கத்தைத் தாவடியில் கூட்டித் தம்மை எதிர்நோக்கி வரும் ஆபத்தை சங்கத்திற்கு விளக்கினுர்கள்.

இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் அ. இ. த. காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி. அவர்களிடமும் உடுப்பிட்டி, வவுனியாப்பிரதிநிதிகளிடமும் துணைக் காரியதரிசி தா. சங்கரப்பிள்ளை அவர்களிடமும் இதுபற்றிக் குறிப்பிட்டோம். அவர்கள் கௌரவ நிதியமைச்சர் யூ. பி. வன்னியநாயகா வருமான வரி ஆணையாளர், கமிசனர் சிற்றம்பலம் ஆகியோரைப் பலமுறை பேட்டி கண்டனர். அமைச்சர் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக வாக்குக் கொடுத்தார்.

இதையடுத்து 15 இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தூது கோஷ்டி திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் 1967-ம் ஆண்டு ஜுலை மாதம் 2-ம் திகதியன்று நிதி அமைச்சரைப் பேட்டி கண்டது. இப்பேட்டிக்கான ஏற்பாடுகளை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களே செய்துவைத்தார். அதன்பேருக நிதி அமைச்சர் இவ்வாண்டு வரவு செலவு திட்டத்தில் வரிநீக்கப்படும் என்று வாக்களித்தார்.

அதன்படியே இப்பொழுது விற்பனவு வரி 1 சத வீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது சுருட்டுத் தொழிலை நம்பி வாழ்பவர்களுக்கு இது எவ்வளவோ ஆறுதலைக் கொடுக்கிறது. இருந்தாலும் இவ்வரியை முற்ருக நீக்குவதற்குச் சங்கம் தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் முயற்சி எடுத்துவரும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேம்.

கடைசியாக, இவ்வரியை நீக்குவதற்குத் தீவிரமாக எம்மோடு முயற்சி செய்த தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களுக்கும், அவருக்குப் பக்கத்துணையாக நின்று உதவி செய்த உடுப்பிட்டி, வவுனியா பா. உறுப்பினர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம். சுருட்டுத் தொழிலை நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கான தொழிலாள மக்களும் கூடவே உங்களுக்கு நன்றி செலுத்துகிருர்கள் என்பதையும் தெரிவிக்கிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ. கே. எஸ். & சன்ஸ்

நகைகளுக்கும் வைரங்களுக்கும்

## "நகை மாளிகை"

வட இலங்கையின் மிகப்பெரிய நகை வியாபாரிகள்

Dial: **519** Cables: **MAGUDHOOM**

# A. K. S. & SONS

**MANUFACTURING JEWELLERS & DIAMOND MERCHANTS**

## « JEWEL HOUSE »

**63, 65, Kannathiddy, JAFFNA.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Telephone:* **308** *Telegrams:* **" SANGARBROS "**

# A. S. Sangarappillai & Bro.,

IMPORTERS & EXPORTERS

GENERAL MERCHANTS, COMMISSION AGENTS,

&

GOVT. CONTRACTORS.

**162, 164 & 166, Hospital Road,**

**Grand Bazaar.**

**JAFFNA.**

*Stockists and Distributors of*

**ELEPHANT HOUSE MINERAL WATERS,**

**FROZEN MEAT, ICE CREAM PREPARATIONS & CAKES.**

Milk Board Long Life Sterilized Milk,

Chocolate and Vanilla Flavoured and Plain Full Cream,

Nutritional Milk Foods and Poultry Foods.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்: 585.

நம்பிக்கை, நாணயம், நயம் மிக்க
நவ நாகரிக நகைகளுக்குச்
சிறந்த ஸ்தாபனம்

# கே. என். எம். மீருன்சாஹிப்

## தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, : : யாழ்ப்பாணம்.

Dial: 585.

# K. N. M. Meeran Sahib

## JEWELLERS

SOVEREIGN PALACE

KANNATHIDDY — JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகும் பிரகாசமும் உழைக்கும் திறனும்

ஒருங்கே அமையப்பெற்றவை

**'யாழ் மார்க்'**

**அலுமினியப் பாத்திரங்கள்**

# யாழ் மெட்டல் இண்டஸ்ரீஸ்

250, 252 கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: **7049**

# Yarl Metal Industries

250, 252 K. K. S. ROAD,

JAFFNA.

T'Phone: 7049

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எழுத்துலக மன்னன் 'கல்கி'

பீடியுலகச் சக்கரவர்த்தி 'கல்கி'

ஈடு இணையற்ற இன்பம் தரும் இலங்கை பீடி
புகைக்கப் புகைக்க உற்சாகம் தரும் திறம் பீடி
கைதேர்ந்த வேலையாட்கள் தயாரிக்கும் உயரிய பீடி

# கல்கி பீடித் தொழிற்சாலை

79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.

தொலைபேசி: 78946

பணிவான சிறந்த சேவை!
தரம்மிகு சிறந்த பொருட்கள்!!

அரிசி, நெல் மற்றும் சகல விதமான சாய்ப்புச் சாமான்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்

சுலபமாகவும் மலிவாகவும் பெறவேண்டின்

வருகை தருக

# சி. சின்னத்துரை & பிறதர்

[ ஏற்றுமதியாளர் & இறக்குமதியாளர் ]
39, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 284

தந்தி: 'கல்கி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மில்க் வைற் நீல சோப்

மேலுறைகளைக்
கவனித்து
வாங்குங்கள்.

நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியானது

தயாரிப்பவர்கள்:-

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை,**

**யாழ்ப்பாணம்.**

தொலை பேசி: **7233**

*With the best Complements of*

# S. V. MURUGESU

**154, Hospital Road, Jaffna.**

*BRANCHES:*

NELLIADY, KILINOCHCHI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடித் தொழிலாளர்களுக்குத் தேவையான

**மீன்பிடி வலைகள்-நைலோன்,**

**நைலோன் நூல்கள்,**

**குறுலோன் நூல்கள்,**

**கயிறுகள், கம்பாகம்கள்**

**திசை கருவிகள்,**

**மெர்க்குரி எஞ்சின்கள்**

**மற்றும் எங்களால் தயாரிக்கப்படும்.**

J. B. நைலோன் புடைவைகள்; பலவித வண்ணங்களிலும், பலவித சிறப்பான தினுசுகளிலும் தங்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்.

**நேரில் தொடர்பு கொள்ளவும்.**

# ஜபார்ஜி பிறதர்ஸ்

**218, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 409

**161, குமார வீதி,**
**புறக்கோட்டை,**
**கொழும்பு.**
**78501**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் கைக் கடிகாரங்கள்

## சுவர்க் கடிகாரங்கள்

சரியான நேரங் காட்டத் தவறுகின்றனவா?

# ரதி வாச் வேக்ஸ்

அன்ட்

## ஸ்டோர்ஸ்

குறிப்பிட்ட தவணைக்குள் சிறந்த முறையில்
செப்பமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

- *றலி சயிக்கிள்*
- *றேடியோ பற்றறிகள்*
- *சயிக்கிள் உபகரணங்கள்*
- *கைக் கடிகாரங்கள்*
- *சுவர்க் கடிகாரங்கள்*

**விற்பனையாளர்கள்:**

# ரதி வாச் வேக்ஸ்

அன்ட்

## ஸ்டோர்ஸ்

44, 46 கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

**தொலைபேசி எண்: 7103**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*for* QUALITY PHOTOGRAPHS



GNANAMS

JAFFNA. PHONE: 7067

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தி; பிள்ளையார்　　உ　　தொலை பேசி: 7166



# யானை மார்க் குளிர் பானங்கள்

ஏஜண்ட்: பிள்ளையார் ஸ்ரோர்ஸ்　　உரிமையாளர்: க. இராசதுரை

31, மானிப்பாய் வீதி,　　யாழ்ப்பாணம்.

யானை மார்க் சோடாக்களும் மற்றும் சுத்தமான தயிர், மோர், வெண்ணெய், மோர் மிளகாய், வற்றல், வடகம், அப்பளம் இவையாவும்

எங்களிடம் தொகையாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுடைய ஆடர்களை உடனுக்குடன் கவனித்து எங்கள் வான் மூலம் எல்லா இடங்களுக்கும் சப்ளை செய்கிறோம். உங்களுடைய தேவைகளுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

31, மானிப்பாய் வீதி,　:　யாழ்ப்பாணம்.

சிறந்த அச்சுவேலைகளுக்கும்

பாடநூற்களுக்கும் மற்றும் உபகரணங்களுக்கும்

புகழ்பெற்ற ஸ்தாபனம்

## கலைவாணி அச்சகம்-கலைவாணி புத்தக நிலையம்

யாழ்ப்பாணம்　—　கண்டி

தொலை பேசி: 221　　7196

தந்தி: " கலைவாணி "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயத்திற்கும் ! நம்பிக்கைக்கும் !!

ஹாஜியார்ஸ் நகை மாளிகை

யாழ்ப்பாணம் — கொழும்பு

தந்தி:

'VIEMEMES'

654 — தொலைபேசி — 6941

Visit

"RAJGOPAL'S"

Tele { Grams: 'RAJGO'
Phone: 7168
Resi: 7069

LEADING TEXTILES IN THE NORTH

For

The Latest and New Designs of

SILK & COTTON SAREES

We Also Stock

READY MADE SLACKS, SHORTS, SHIRTS
LADIES BLOUSES AND ALL KINDS OF
HOSIERY

"Rajgopal's"

36/1, Grand Bazaar — JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T,Phone: 657

# V. M. Shanmugam Bro.,

**47, K. K. S. ROAD — JAFFNA**

*Dealers in:*

- FOODSTUFFS
- SUNDRIES
- OILMAN STORES

&

**Commission Agents**

Transporters of Goods between
**Jaffna and Colombo.**

*Branch:*

**CITY ARECANUT COMPANY.**

**74, Old Moor Street,**
**COLOMBO.**

T' Phone: **2860**

**வடமாகாணத்தில்** *

பலசரக்கு வகைகள்
சாய்ப்புச் சாமான்கள்
உணவுப் பொருட்கள்
பால்மா வகைகள்

**மலிவாக எந்நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.**

# வி. எம். சண்முகம் சகோதரர்கள்

★ பிரபல கமிஷன் ஏஜண்டுகள் ★

**47, கே. கே. எஸ் வீதி : : யாழ்ப்பாணம்**

கிளை: **74, பழைய சோனகத் தெரு,**
**கொழும்பு** தொலைபேசி: **2860.**

யாழ்ப்பாணம் - கொழும்பு நகரங்களுக்கிடையில்
பண்டங்களை ஏற்றுமதி இறக்குமதி வசதி
செய்து கொடுக்கப்படும்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

249865

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

University of Jaffna
249865
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org